# தெய்வீக வாழ்க்கைச்சங்க

## வெள்ளி விழா மலர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A. S. SITHAMPARAPPILLAI

உங்கள் இடங்களின் மங்கள சூரியன் 27

# மெய்கண்டான் திருக்குறட் கலண்டர்

தமிழுலகில் முதன்முதல் வெளிவந்தது.

## அறிஞர் அன்பும் ஆதரவும் ஆசியும் பெற்று

உங்கள் இடங்களின் மங்கள சூரியனாக என்றும் விளங்குவது.

ஆங்கில-தமிழ்-அறபுத் தேதிகள், திதி, நட்சத்திரம், யோகம், விரத விசேஷங்கள் தினக்கரும நற்குறிப்புகள், தேவ உற்சவாதிகள், திருநாட்கள், திருக்குறள், கருத்துரை, திருக்குறட்சாரம், அறிஞர் மணிமொழிகள் முதலிய பலவும் கொண்டுள்ளது.

# மெய்கண்டான் தமிழ்-ஆங்கில டயறிகள்

மிகவும் பிரயோசனம் உள்ளன.

கையடக்கமான அளவும் அழகும் உறுதியும் உள்ளன, பலவித அழகிய கலிக்கோ, றெக்சின், பிளாஸ்ரிக் முதலியவற்ருல் அழகுறச் செய்யப்பெற்றவை.

## கண்ணுக்கும் கருத்திற்கும் விருந்தளிப்பவை.

---

*For*

- Anything in Commercial, Artistic or Multi-Colour Printing
- Calendars & Diaries of Various Sizes & Designs
- Fine Art, Religious & Fancy Pictures
- Printing Types in Tamil, English & Sinhalese
- Plastic Purses, Wallets, Hand Bags, Document Cases, Book Covers Etc.

*Contact*

# THE MEIHANDAN PRESS

161, SEA STREET, COLOMBO. (Phone: **79141**)

**Branches:**

10, STANLEY ROAD, JAFFNA.
Phone: 236

79, BARBER STREET, COLOMBO.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலிபான் பிஸ்கோத்துக்கள்

இன்றி

எந்த வைபவமும் நிறைவெய்தாது

கோதுமை மா, வெண்ணெய், மாகரீன்,

சீனி, தேம்பாகு, குளுகோஸ், பாற்பவுடர்,

மால்ற், சுத்தமான காய்கறி வகைக் கொழுப்பு

முதலிய உயர்ந்த ரகமான பொருட்களையுடைய

கலவையையுடையதாயும்

எல்லாவித சுவைக்கேற்றவாறும் தயாரிக்கப்பட்டுள்ளது.

## மலிபான் பிஸ்கோத்து
## தயாரிப்பாளர்கள்

11, வான்ரூயென் வீதி,

கொழும்பு-13.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்த ரக ஜவுளி வியாபாரத்தின்
முன்னணியில் விளங்குபவர்கள்

# கஸ்தூரி

நவநாகரிக பட்டுச் சேலைகள், சேட்டிங்-சூட்டிங் துணிகள் இன்னும்
பலரக ஆடைகளும், சாரங்கள் கம்பாயங்களும்
குறைந்த விலையில் கிடைக்கும்.

**கஸ்தூரி பளையகாட் கொம்பனி,**
63, இரண்டாம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11.



*Telegrams:* **"PERINBAM"** *Telephone:* **4114**

## Y. P. M. Manickavasaga Nadar & Co.,

**PAPER MERCHANTS**

P. O. BOX 1400.

**58, Maliban Street,**

**COLOMBO-11.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீடி புகைக்கும் நண்பர்களுக்கு

# ஓர் அரிய நற்செய்தி!

ரத்தினு பீடி கம்பெனியாரால் புதிதாக
தயார் செய்யப்பட்ட

# ஸ்பெஷல் ரத்தினு பீடி

**உங்களின் ஆவலைப் பூர்த்தி செய்யுமுகமாக**

## 20 பீடி கொண்ட பெக்கெட்டில்

பெரிய சைஸ் பீடியும், சிறிய சைஸ் பீடியும் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு இந்தியாவில் உற்பத்தியாகும் திறம் அக்குல் புகையிலையால் காரம், மணம், குணம் அமையப் பெற்ற ஸ்பெஷல் ரத்தினு பீடியை எமது பார்வையின் கீழ் உங்கள் விருப்பத்திற்கேற்றவாறு தயார் செய்யப்பட்டு வெளிவருவதால் இன்றே ஸ்பெஷல் ரத்தினு பெக்கெட் பீடியை உங்கள் **வாடிக்கைக் கடைகளில் ஸ்பெஷல் ரத்தினு பெக்கட் பீடியைக் கேட்டு வாங்கிப் பாவியுங்கள்!**

*பீடிகளின் விலைகள் பின்வருமாறு:—*

20 பீடி கொண்ட பெரிய ஸ்பெஷல் ரத்தினு பீடி பெக்கட் – சதம் 45.
20 பீடி கொண்ட சிறிய ஸ்பெஷல் ரத்தினு பீடி பெக்கட் – சதம் 20.

*இன்றே வாங்கிப் பாவியுங்கள்!* எங்கும் கிடைக்கும்.

*உரிமையாளர்:–*

# கே. எஸ். எஸ். அன் சன்,

**கம்பளை அன் அல்வாய்.**

கம்பளை போன்: **325.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்திரா கிரைண்டிங் மில்ஸ்

அரைப்பாளர்! விற்பனையாளர்!!

நவீன சுகாதாரமுறைப்படி தயாரிக்கப்பட்ட

- உயர்ந்தரக மிளகாய்த் தூள்
- மசாலைத் தூள்வகைகளும்
- சிறந்த கோப்பி, அரிசி, கடலை,
- குரக்கன் மாவகைகளும்

சில்லறையாகவும் – மொத்தமாகவும் இங்கே விற்கப்படும்.

மொத்த வியாபாரிகட்குத் தகுந்த கழிவு உண்டு.

✶

## சந்திரா கிரைண்டர்ஸ்

40, பேராதனை வீதி கண்டி.

கிளை:- 118, நியு சென்றல் மார்க்கட், கண்டி

## ஜோதி ஸ்டோர்ஸ்,

நிர் 14, அம்பகமுவ ரோட்,
நாவலப்பிட்டி.

எங்களிடம் தங்களுக்குத் தேவையான தினுசுகளில்:

✶ சகல வெண்கலப் பாத்திரங்கள்
✶ அலுமினியப் பாத்திரங்கள்
✶ டிரங்குப் பெட்டிகள்
✶ சாப்புச் சாமான்கள்

மிக மிக மலிவான விலையில் கிடைக்கும்.

ஒரு முறை விஜயம் செய்து பார்த்தால் உங்களுக்கு உண்மையும் திருப்தியும் ஏற்படும்.

✶

சாமான்களுக்கு உத்தரவாதம்.

தயவுசெய்து விஜயம் செய்யும்படி அன்புடன் அழைக்கிறோம்.

புரோப்பரைட்டர்ஸ்:-

வ. முத்துப்பழனித் தேவர்
ரா. சு. முருகேஸ் பிள்ளை

அன்பர்களின் அறிவுப் பசிக்கு
அறிவமுதூட்டும்

## ஒரே இடம்

## முஸ்லிம் ஹோட்டல்

### புத்தக நிலையம்
### கண்டி.

அறிவியல், அரசியல், விஞ்ஞான நூல்கள்
பொருளியல், பௌதிக ஏடுகள்
சமய–சரித்திரச் சுவடிகள்
கதை–கவிதைப் புத்தகங்கள்
இன்றைய எழுத்துலகச்
செல்வங்கள் அனைத்துக்கும்.

✶

உங்கள் வருகையை வழி நோக்குகிறோம்

සෙල්වන් කැෆේ Selvan Cafe

## செல்வன் கபே

50, 52, பேராதனை வீதி,
கண்டி.

உணவுப்பிரச்னை – – உணவுப்பிரச்னை
கண்டியில்

சிறந்த முறையில் நவீன வசதியுடன்
குறைந்த செலவில் ருசியான உணவுக்கு

## செல்வன் கபே க்கு

விஜயம் செய்யுங்கள்!

பலவித ருசிமிக்க ✶பலகாரம் ✶சிற்றுண்டி ✶சாப்பாடு முதலியனவற்றிற்கு சிறந்த இடம் –செல்வன் கபே– என்பது ஆதரவாளர்களின் நம்பிக்கை.

## செல்வன் கபே

50, 52, பேராதனை வீதி கண்டி.

உரிமையாளர்;

பொ. செல்வத்துரை
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

✶ ஆத்மீக வாழ்வில் வழிகண்ட அரும்பெரும் ஜோதியைப்போல்

✶ வாழ்க்கை வளம்பெற ஆடை அலங்காரவகைகள் அளிப்பவர்கள் எஸ். பி. கே.

✶ ஒருமுறை விஜயம் செய்தால் அகமகிழ்வீர்கள்

✶ நவநாகரீக ஜவுளி ஆடைகளுக்கும் உகந்த இடம் S. P. K.

**யாவருக்கும் திருப்தியளிக்கும் - -**

**- - வகையில் எல்லாவகை பிடவைகளேயும்**

மொத்தமாகவும் சில்லறையாகவும் அளிப்பவர்கள்

||

## S. P. K. சுப்பையா பிள்ளே அன் பிரதர்ஸ்

28, திருக்கோணமலே வீதி,

**கண்டி.**

தந்தி: ''ESPIKEBROS'' டெலிபோன்: 577

## அ ஜ ந் தா
## ஹாட்வெயர் ஸ்டோர்ஸ்

43, கொழும்பு வீதி,

கண்டி.

✶ தோட்டப் பகுதிகளுக்கும்

★ புதிதாக வீடு கட்டுபவர்களுக்கும்

வேண்டிய எல்லா விதமான சாமான்களும்

**சகாயமான விலேயில்**

**கிடைக்கும்.**

★

போன்: 398.

தந்தி: அஜாந்தா.

## ஜோதி மஹால்

58, கொழும்பு வீதி, கண்டி.

ஸூட் கேஸ்

டிரங் பெட்டிகள்

அன்பளிப்புகளுக்கு வேண்டிய எல்லா விதமான பொருட்களும்

முடிமயிர் வகைகள்

சப்பாத்து வகைகள்

— முதலியன —

**சகாயமான விலேக்கு**

**கிடைக்கும்.**

போன்: 7007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியும் உத்தரவாதமும் மிக்க அதி உன்னத

## கட்டிடச் சாமான்

தோட்ட வேலைக்கான எல்லாவித
கருவிகளும், சுவர்கள், கார், லொரி,
முதலிய வாகனங்கள்
மேசை, நாற்காலி
முதலிய தளபாடங்கள்.

அழகுடன் திகழ வகை வகையான
— புகழ்மிக்க —
I. C. I. ஸ்தாபனத்தாரின்
அதி உன்னத தீந்தைகள் (பெயிண்ட்)

திறமை மிக்கதும் திருப்தி நிறைந்ததுமான சகல கட்டிடச் சாமான்களும்

மலைநாட்டுத் தலைநகராம் கண்டியில் தலைசிறந்த வர்த்தக நிலையம்

## நெஷனல் டிரேடிங் கோர்ப்பரேசன்

# NATIONAL TRADING CORPORATION

**10, Trincomalie Street : : : KANDY.**

Phone: 7158 Telegrams: 'NATRADCOR'

---

## " கலைவாணி "

ஆரம்பப் பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை பாவிப்புக்குரிய

தமிழ்
சிங்களம்
ஆங்கிலம்
சமஸ்கிருதம்

புத்தகங்களும் மற்றும் சகல வாசிகசாலைப் புத்தகங்களும்
ஒருங்கே கிடைக்கப்பெறும்.

## கலைவாணி புத்தக நிலையம்

பாடநூற் பிரசுரிப்பாளா

130, திருக்கோணமலை வீதி, கண்டி.
290, காங்கேசன்துறை வீதி, யர்ழ்ப்பாணம்.
10, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி 7196
தொலைபேசி 221
தொலைபேசி 221

சகல விதமான அச்சுவேலைகளுக்கும்: தந்தி ''கலைவாணி''

# கலைவாணி அச்சகம்

10, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்திக்கு அடுத்தது சுத்தம்
சுத்தம் சுகம் தரும்!




தயாரிப்பாளர்;-

**மில்க்வைற் சோப் தொழிற்சாலை**

527, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

---

உளத்திற்களிக்கும் திவ்விய நூல்கள்
நிறைந்த கலைக்கோயில்
எங்களது

**விவேகானந்தா புத்தகசாலை**

அறிமுக அட்டை முதல் அழகொழுகும்வண்ண வடிவுடைய சுவரொட்டிவரை

புத்தகமா? புதுமை மிளிர் அஞ்சல் தாள்களா?

எதுவாயினும் அச்சிடும் அச்சகம்

**விவேகானந்தா அச்சகம்**

வருக!

**விவேகானந்தா**

அச்சகம் புத்தகசாலை,

யாழ்ப்பாணம்.

தந்தி: 'பிறின்டேர்ஸ்' தொலைபேசி: 517

---

# சீப்சைட்

186, 188, கே. கே. எஸ் றேட்,
யாழ்ப்பாணம்.

சகலவித பிடவைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்

Phone: 479. Cable: CHEAPSIDE

# CHEAP SIDE

DIRECT IMPORTERS OF TEXTILES
IN ALL VARIETIES

**186, 188, K. K. S. ROAD,
JAFFNA.**

---

**செ. சிவக்கொழுந்து அன் சன்,**
52, பெரிய கடைத்தெரு,
யாழ்ப்பாணம்.

ஆயுர்வேத அரிய மருந்துகள் தயாரிப்புக்கு அரிதும் பெரிதுமான

கஸ்தூரி, கோராசனை, குங்குமப்பூ
புனுகு, ஐவ்வாது, பச்சைக்கற்பூரம்

ஆதியனவற்றை தெரிந்தும்
தெளிவாகவும் சுத்தமாகவும்
நம்பிக்கையோடு பெறக்கூடிய

இடம்

**சிவக்கொழுந்து மருந்துக்கடை**

மனத்திற்கிதமளிக்கும் அத்தர், பன்னீர், ஊதுபத்திகள் முதலியவற்றுடன் கூந்தல் வளர, சிரரோகம் நீங்க, இதர, உடல்நோய் நீங்க, எண்ணெய் வகை, தைலவகைகளும் கிடைக்கும்.

C. SIVAKKOLUNTHU & SON
NATIVE DRUGGISTS
52, Grand Bazaar, .... JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதாசிவம்ஸ்

எங்களிடம்

எல்லாவிதமான கைத்தறிசேலை, சித்தை,
வேஷ்டி ரகங்களும், சூட்டிங், சேட்டிங்
முதலியவைகளும்
—மற்றும்—

ரேடியோ, சுவர்க்கடிகாரம், கைக்கடிகாரம்,
பேனா, முதலியவைகளும்

மலிவான விலைக்கு
— மொத்தமாகவும், சில்லறையாகவும் —
பெற்றுக்கொள்ளலாம்.

நிர். 9, அட்டன் வீதி, :::: இனிகத்தேனை.

# “ஜயந்தீஸ்”

எங்களிடம்

* எல்லாவித ஜவுளிகளும்
* சாப்புச் சாமான்களும்
* பாட்டா சப்பாத்துகளும்

மொத்தமாகவும் சில்லறையாகவும்

சகாயமான விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

## நியூ ஜயந்தி ஸ்டோர்ஸ்

12, அம்பகமுவ வீதி,
நாவலப்பிட்டி.

# ஜயந்தி
## கிரைண்டிங் மில்ஸ்

கொச்சிக்காய், மசாலை, கோப்பி,
கேப்பை, பயறு,
சோளம், உளுந்து

முதலிய தானியங்கள்
குறிப்பிட்ட நேரத்தில்
அரைத்துக் கொடுக்கப்படும்.

வியாபாரிகட்கு தக்க கமிஷன்
வழங்கப்படும்.

✶

நிர் 8, கம்பளை பின் வீதி,
நாவலப்பிட்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறவாதீர்கள்!

அழகுக்கு அழகு செய்வது ஆபரணம்!

தரத்தில் உயர்ந்த வைரங்களுக்கும்

கவர்ச்சிகரமான நகைகளுக்கும்

**பட்டக்கண்ணு ஆச்சாரி** அன் சன்ஸ்,

(ப. குமாரசுவாமி)

நகை மாளிகைக்கு விஜயஞ் செய்யுங்கள்.

100, புதிய செட்டித் தெரு, கொழும்பு-13

தொலைபேசி 5431

அறுசுவை உண்டிக்குச் சிறந்த இடம்

ராஜேஸ்வரி

* சாலச் சிறந்த சைவ உணவு
* உற்சாகம் தரும் குளிர் பானம்
* விதவிதமான சிற்றுண்டிகள்

அத்தனையும் செய்யக் காத்திருக்கிறது

ராஜேஸ்வரி

* நிறைந்த திருப்தி
* அன்புடன் உபசரிப்பு

அத்தனையும் செய்யக் காத்திருக்கிறது

ராஜேஸ்வரி

விருந்து வைபவங்களுக்குரிய ஆடர்கள் விசேஷமாக கவனிக்கப்படும்.

நேரில் வாருங்கள் அல்லது எழுதுங்கள்.

**ராஜேஸ்வரி பிராமணாள் ஓட்டல்**

(கோட்டை புகையிரத ஸ்தானத்திற்கு எதிரே)

69, நோரிஸ் ரோட், கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுக்கு அழகு செய்ய நவநாகரீக

## ஆடைகள் தேவையா?

தேர்ந்து எடுக்க

இன்றே விஜயம் செய்யுங்கள்

நாகரீகத்திற்கு ஏற்ற

**சாரிகள்!**

கவர்ச்சிமிக்க

**கம்பாயங்கள்!**

மற்றும் சிறந்த ரக

**ஜவுளி**

தினுசுகள்

கிடைக்குமிடம்:

**நடராசா ஸ்டோர்ஸ்,**

24, வார்ட் பிளேஸ்,

பொரல்ல — கொழும்பு–7

**ரஞ்சனு ரெக்ஸ்ரைல்ஸ்,**

354, பேஸ்லையின் வீதி,

டெமற்றகொடை - கொழும்பு–9

## "A. P. S." Welcomes you

*For your Forage Requirements*

*ANIMAL & POULTRY FOOD ✶ POULTRY MEDICINES ✶ VITAMIN-FEEDS & SUPPLEMENTS ✶ CEYLON OILS & FATS CORPORATION PRODUCTS ETC.*

# A. P. S.

**No. 63, Wolfendhal Street COLOMBO-13.**

T'phone: 6151. T'grams: "FOULTRY"




# மெவிகார் பாம்

தலைவலி, தலையிடி கபாலம், பல்வலி, வாத நோய், பிடிப்பு, சுளுக்கு, வீக்கம்,

தசை நெரிவு, இருமல், ஜலதோஷம்

முதலிய வியாதிகளுக்கு கைகண்ட ஔஷதம்

பிரசித்தி பெற்ற எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

ஏகவிநியோகஸ்தர்கள்;

**க வி செ ம் ஸ்**

19, செட்டியார் தெரு,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொத்தமாகவும், சில்லறையாகவும்,

நம்பிக்கைக்கும், நாணயத்திற்கும், உயர்ந்த புது ரக ஜவுளிகளைத் தெரிவுசெய்வதற்கும், போட்டா போட்டி விலையில் ஜவுளிகளை வாங்குவதற்கும்

புகழ்வாய்ந்த ஸ்தாபனம்

# சாரதாஸ்

196, மெயின் வீதி, -- கொழும்பு-11.

தொலைபேசி: 2740 தந்தி: கஸ்தூரி

---

## பொதுமக்களுக்கு நினைவிருக்கட்டும்

- கல்யாணமா
- பிறந்தநாளா
- பள்ளிதிறக்கும் நாளா
- திபாவளிப் பண்டிகையா
- பொங்கல் திருநாளா
- நத்தார்ப் பண்டிகையா
- தமிழ் சிங்கள புதுவருடப் பிறப்பா

காரணம் எதுவாகிலும் உங்களுக்கு சிறந்த ஜவுளிகளைத் தெரிவு செய்ய

# சாரதாஸ்

96, 98, யோக் வீதி, கோட்டை.

தொலைபேசி: 4378 தந்தி: கஸ்தூரி

---

## உங்களுக்கு தேவையான . .

பெனாரிஸ், பெங்களூர், மனிபுரி, பியூர் காஸ்மீர், ஜுனியர் காஸ்மீர், கொட்டன் டெக்கா சாரிகளுக்கும், மற்றும் சில்க், சித்தை, கிலேஸ் கொட்டன் வகையும், ஆண்களுக்கேற்ற சூட்டிங், சேட்டிங்களும், புதிதாகத் தருவிக்க பட்டுள்ளது.

இன்றே விஜயம் செய்யுங்கள் !

# சாரதாஸ்

கம்பளை ரேட், நாவலப்பிட்டிய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடவை விற்பனையிற் புகழ்பெற்ற ஸ்தாபனம்

# குண்டன்மால்ஸ்



எங்கும் புகழ் பெற்ற

எலைட் சுப்பர்லோன் ஜோர்ஜெட்

எல்லோரும் விரும்பும் எண்ணிறந்த சேலை
கள்; மற்றும் எல்லாவித ஜவுளி வகைகளையும்

மலிவு விலைகளில் விற்பது

# குண்டன்மால்ஸ்

110, 114, மெயின் வீதி - - கொழும்பு.

---

*Shop at*

# SARASWATHY'S

*and Satisfy.*

★ Lata & Mala Manipuri Sarees, Indian Voile Sarees, (Kashmir Design). ★
★ Pure Kashmir Sarees, Pure Manipuri Sarees, Bangalore Sarees, Cotton ★
★ Dacca Sarees. Fancy Japan Poplins, Indian and Japan Fabrics (in modern ★
★ designs). ★
★ Worsted Suitings. Indian Dacron, Japan Suitings, English Tussore, Bed- ★
★ sheets and Shirtings available in moderate prices. ★

*Visit us at once.*

## SARASWATHY TEXTILES

55, SECOND CROSS STREET, COLOMBO-11.

*T'phone: 6131.* *T'grams: "TEXSARAS"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வி. ஜி. சன்ஸ்

அன்றுட தேவைகளுக்கேற்ற

— நவநாகரீக —

## ஜவுளி திணுசுகளுக்கு

இன்றே

எமது ஸ்தாபனத்திற்கு

விஜயம் செய்யுங்கள்!

*

**V. G. SONS,**

132, Keyzer Street, Pettah,

COLOMBO 11.

## உங்களுக்கு

## தேவையான

## பிடவைகளுக்கு

விஜயம் செய்யுங்கள்!

# பஷீயகாட்ஸ்

76, கொழும்பு வீதி, கண்டி.

*For*

**All your requirements**

IN

GROCERIES

PATENT MEDICINES

TOILET PREPARATIONS

Etc. Etc.

*Visit*

**K. M.**

**Arsymeeya Pillai & Sons**

347, Main Street,
Kaymans Gate
PETTAH
COLOMBO 11.

Telephone: 4586 Telegrams: MATHY

*It pays you*

*to Consult us*

*for*

ANYTHING & EVERYTHING

*in*

*Photography*

Studio

# PHOENIX

KANDY.

Dial: 633.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது இலங்கையில் முதன் முறையாக
சமிப்பிக்கும்
( மிகப் பெரிய விதமான )

# பிஸ்கோத்துக்கள்

வந்துள்ளன.

சுகாதாரமானதும் உயர்தரமானதுமான பிஸ்கோத்துக்களைத்
தயாரிக்கும்

# வில்லியம்ஸிறுல்

தயாரிக்கப்பட்டவை.

## கலண்டர்களில்

சித்திரங்கள் அடங்கிய ஒரே கலண்டர்

# லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டரே!

இரகுநாதையர் அவர்களின் வாக்கிய பஞ்சாங்க கணிதத்துடன்

- ★ சரித்திர சம்பவங்கள்
- ★ சகல சமய திருநாட்கள்
- ★ பெரியார் வாழ்க்கை விபரங்கள்
- ★ விஞ்ஞான பொதறிவு விஷயங்கள்

ஆகியனவற்றினை விபரிக்கும் சித்திரங்களும் ஒருங்கே அமையப் பெற்றது

இப் புதுமைக் கலண்டர்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் ஓர் புதிய சாதனை!





வீடு கட்டும் பிரச்சினை தீருவதற்கு

— விஞ்ஞானமுறையில் தயாரித்த —

## 'கொங்கிறீற்'

### கற்கள்

- உறுதியானவை
- துவாரமுள்ளவை
- சந்துகளுக்குச் சாந்துச் செலவு மிகக்குறைவு
- பூச்சு தேவைப்படாது

அழகான கட்டடவேலைகளுக் குகந்தது.

உங்கள் வீடுகளை மிகச்சிக்கன முறையிலும் உறுதியாகவும் அமைக்க மிகச் சிறந்தவை.

| அளவுகள்: | விலை ஒன்றுக்கு: |
|---|---|
| 18x9x6 | ரூ. 1.25 |
| 18x9x5 | ரூ. 1.00 |
| 18x9x4 | .90 |

தயாரிப்பாளர்கள்:-

## ஆனந்தா
## கொங்கிறீற் வேர்க்ஸ்

கொழும்புத்துறை .. .. .. யாழ்ப்பாணம்.

விபரங்கட்கு:-

## ஆனந்தா றேடிங் கொம்பனி

41, மெயின் வீதி ::: யாழ்ப்பாணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரவை எதிர் நோக்குகின்றேம் !

அனங்கையரின் அழகை அற்புதப்படுத்துவது முருகன்ஸ் ஆடைகள்!
ஆடவரின் அழகை அதிகப்படுத்துவது முருகன்ஸ் ஆடைகள்!!
சிறுர்களின் அழகை சீர்படுத்துவது முருகன்ஸ் ஆடைகள்!!!

வாழ்விலே ஒரு நாள் மணநாள்!
வருடத்திலே ஒருநாள் திருநாள்!!

இவ்வையகம் போற்றும் இந்நாட்களை சிறப்புறச் செய்பவை ஆடைகள். கண்ணைப்பறிக்கும் ஆடைகளை, கருத்திற்கிசைந்த வகைகளில் காலத்திற்கேற்ற முறையில் தெரிவு செய்யுங்கள்.

### மங்கையர்களுக்கான:-

✶ காஞ்சிபுரம் ✶ தேவிகா மணிபுரி ✶ பெங்களூர் பட்டு ✶ பியூர் காஸ்மீர் ✶ பாலும் பழமும் டெக்கா ✶ பகட்டான ஜோஜட் ✶ கிளாஸ் நைலான் சாரி வகைகளும் ✶ சீத்தைகள் ✶ கிளாஸ் கொட்டன்கள் ✶ சில்க் வகைகளும்.

### ஆடவர்களுக்கான:-

✶ சேட்டிங் ✶ சூட்டிங் ✶ வேட்டிகள் ✶ சாரங்கள் ✶ சில்க் வகைகள் ✶ ரெடிமேட் கால் சட்டைகள் ✶ கமிஸ்களும்,

### சிறுர்களுக்கான:-

✶ பள்ளிக்கூட யுனிபாம் ✶ கமிஸ்கள் ✶ கால் சட்டைகள் ✶ சொக்ஸ்கள் ✶ ரெடிமேட் சூட்கள் ✶ கவுன்களும்,

இதர வெவ்வேறு வகையருக்களையும், பற்பல தேசங்களிலிருந்து உடனுக்குடன் இறக்குமதி செய்து, பல ஆண்டுகளாக ஆதரவாளர்களை திருப்தி செய்த ஸ்தாபனம் இது ஒன்றே. ஒருமுறை விஜயம் செய்து உண்மையை உணருங்கள். உங்கள் திருப்தியே எங்கள் திருப்தி!

# ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்

— குடும்ப பிடவை ஸ்தாபனம் —

11, கம்பளை வீதி, நாவலப்பிட்டி. போன்:- 338.

## Step in for every description of
## TEXTILES & READY-MADE GARMENTS
# SRI MURUGAN STORES

( FAMILY TEXTILE CENTRE )

No. 11, Gampola Road - Nawalapitiya. Dial 338.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | வணக்கம் | |
| 2. | தேவ ஜீவனம் | 1 |
| 3. | கடிதம் | 2 |
| 4. | வாழ்க | 3 |
| 5. | எப்படிக் காட்டுகின்ருய் | 4 |
| 6. | திவ்விய ஜீவன சங்கத்தின் அடிப்படை இலட்சியங்கள் | 5 |
| 7. | நன்றுந் தீதும் பிறர் தர வாரா | 8 |
| 8. | கடவுள் வணக்கம் | 9 |
| 9. | ஒற்றுமை கண்டு உயர் நிலை அடைக | 10 |
| 10. | தெய்வீக வாழ்க்கை | 12 |
| 11. | தெய்வீக வாழ்க்கைக்கான நல்லுரை | 14 |
| 12. | இறைவனின் திரு அவதாரம் | 16 |
| 13. | உலக மக்களின் உள்ளத்தில் சுவாமி சிவானந்தர் | 19 |
| 14. | சேவையின் சிறப்பு | 22 |
| 15. | பிரம்ம முகூர்த்தம் | 23 |
| 16. | எனக்கும் ஒரு பதி உண்டு | 25 |
| 17. | சந்தேகம் வேண்டாம் | 27 |
| 18. | நந்திகேசுவர அவதாரம் | 29 |
| 19. | தெய்வீக வாழ்க்கை | 32 |
| 20. | மாண்புறு சைவம் | 35 |
| 21. | மெய்யுணர்வு | 36 |
| 22. | ஆரோக்கிய வாழ்விற்கு யோகாசனப் பயிற்சி | 39 |
| 23. | சன்மார்க்கம் | 42 |
| 24. | திவ்விய ஜீவனம் | 45 |
| 25. | தோன்ருத் துணை | 48 |
| 26. | இறைவழிபாடு | 50 |
| 27. | காணும் தெய்வம் | 52 |
| 28. | வழிகாட்டி | 55 |
| 29. | அச்சமே மோட்சத்திற்கு வழி | 56 |
| 30. | பதினெண்மைகள் | 58 |
| 31. | திவ்விய ஜீவன சங்கம் | 61 |
| 32. | ஜீவப் பிரம்ம ஐக்கிய இரகசியம் | 63 |
| 33. | சுவாமி சிவானந்தா வாழ்த்திசைப் பாடல்கள் | 66 |
| 34. | தெய்வீக வாழ்க்கைச் சங்க வெள்ளி விழா | 67 |
| 35. | செயலில் கிறித்துவ மதம் | 68 |
| 36. | பரமாத்மனின் உயர் தோற்றம் | 69 |
| 37. | மதமாற்றமும் மனமாற்றமும் | 70 |
| 38. | ஏசுநாதரின் தோற்றம் | 73 |
| 39. | இலங்கையில் திவ்ய ஜீவன சங்கம் | 75 |
| 40. | தி: ஜீ. ச. கிளைகளின் விசேஷ பணிகள் | 77 |
| 41. | இலங்கையில் நடைபெற்ற வெள்ளிவிழா நிகழ்ச்சிகள் | 85 |
| 42. | திருகோணமலையில் அகில இலங்கைத் தி. ஜீ. ச. வெள்ளி விழாவில் | 89 |
| 43. | வெள்ளி விழா அமுத மொழிகள் | 91 |
| 44. | நான் யார்? | 93 |
| 45. | குரு தேவரைப் பற்றி எம்உள்ளத்தே பதிந்தவை | 94 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்.

ம. சி. இரும்பரப்பிள் உள.
தெல்லிப்பழை. 8.6.1962

# வணக்கம்

ஜனகாதி நால்வருக்கும் இருந்தபடி இருந்து காட்டிய மகாதேவன் தட்சணாமூர்த்திக்கு வணக்கம். தட்சணாமூர்த்திக்கும் முறைப்படி உபதேசித்தருளிய குருநாதன் முருகமூர்த்திக்கும் வணக்கம். இதேபரம்பரையில் குருமூர்த்தமாக எழுந்தருளிய உலக அஞ்ஞானத்தைப் போக்கியருளிய ஞானாசிரியர் அனைவருக்கும் வணக்கம். இத்தனை வணக்கம் எதற்கு? இலங்கைத் திவ்ய ஜீவன சங்கக் கொடியில் பூத்த தொரு மலர். அம்மலரைப் பூமண்டலேஸ்வரர் சுவாமி சிவானந்த குருமகராஜ் அவர்கள் திருப்பாதத்தில் சூட்டுகின்றோம். அதற்கு இத்தனை குருநாதர்களுடைய ஆசியையும் பெற விழைகின்றோம்.

கங்கைக்கரையிலே ரிஷிகேசத்தில் ஆனந்தக் குடீரத்தில் முளைத்த திவ்ய ஜீவன சங்கக் கொடி உலகமெல்லாம் பரந்து கிளைவிட்டுப் பூத்துக்குலுங்கிப் பயன்கொடுத்து நிற்கிறது. இலங்கையில் மலர்ந்த முதல் மலர் என்ற சந்தோஷத்தில் அதனைக் குருதேவரது பாதங்களில் சூட்டும்போது ஒரு தனி மகிழ்ச்சி ஏற்படுகின்றது. குறைந்த காலத்திலே இவ்வளவு பெரிய மலரை மலரச் செய்வதற்கு திவ்ய ஜீவன சங்கங்களிலுள்ள அன்பர்கள் பலரின் ஒத்துழைப்பே காரணம்.

இவ்வரிய மலரைப் பலரும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்வதற்காக விளம்பரங்கள் சேர்க்க வேண்டும் என்ற முயற்சியில் இறங்கினோம். விளம்பரம் சேர்த்தல் நாம் நினைத்ததுபோல் அவ்வளவு இலகுவான காரியமல்ல என்பது விளம்பரம்சேர்க்கத்தொடங்கிய பின்பே அறிய முடிந்தது. சில இடங்களில் விளம்பரத்திற்கு வந்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டவுடனேயே முதலாளியாரே மனேஜராகவும், தொழிலாளியாகவும் மாறியிருந்ததைக் கண்ணுற்றோம். எப்படி இருந்தாலும் விளம்பரம் சேர்த்தே தீருவதென்று கங்கணம் கட்டிக்கொண்டுதமதுமோட்டாரிலேயே இராப்பகலாகச் சென்று உழைத்த அன்பர் இ. சிவஞானஜோதி அவர்களுக்கு திவ்ய ஜீவன சங்கம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. மொழி பெயர்ப்பிலும், விஷயசேகரம் செய்வதிலும் தமதுமுழுஒத்துழைப்பையும்நல்கிய அன்பர்கள் அ. சுப்பிரமணியன், கி. வானமாமலை இருவருக்கும் குருவருளும் திருவருளும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம். இலங்கையிலுள்ள சங்கங்களின் வரலாறுகளைத் தேடி எடுத்து அவற்றை உரிய முறையில் பகுத்து எழுதி உதவிய செல்வி சி. இலக்குமி அவர்களுக்கும் எமது நன்றி உரித்தாகுக. மலர் நல்ல முறையில் அமைவதற்காக எல்லாவழியிலும் அடிக்கடி புத்திமதிகூறி உதவிசெய்த யோகிராஜ் சச்சிதானந்த சுவாமிகளுக்கும் எமது நன்றி உரித்தாகுக. உரிய காலத்திலே கட்டுரைகள், பாடல்கள் அனுப்பியும் விளம்பரங்கள் தந்தும் விளம்பரங்களை

---

இது அ. இ. தி. ஜீ. சங்கத்தார் சார்பில், ஆத்மஜோதி அச்சகத்தில் திரு. நா. முத்தையா அவர்களால்
அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பெற்றது. 18-5-62.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்த்தலில் உதவிபுரிந்த மற்றைய அன்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றோம்.

25 மாதங்களுக்கு முன்னர் விழாவைக் கொண்டாடுவதற்காகப் பலவிதங்களிலும் ஆலோசனைகள் செய்யப்பட்டன. அவற்றுள் முக்கியமானது நாமலிகித ஜெபமாகும். இருபத்தைந்து மாதங்களுக்கும் இருபத்தைந்து லட்சம் நாமங்கள் எழுதினால் அது ஒரு பெரும் சாதனையாகும் என்று அன்பர் ஒருவர் குறிப்பிட்டார். இன்னொரு அன்பர் 25 கோடி நாமத்தை எழுதுவதாக நாம் ஏன் பிரதிக்கினை எடுத்துக்கொள்ள கூடாது.. ஆண்டவனிடம் கேட்பதையாவது கூடுதலாகக் கேட்டுவைப்போமே என்ற கருத்தோடு 25 கோடி நாமம் எழுதுவதாகத் தொடங்கினோம். எமது நினைவு பெரிதாயினும் செயலிலும் அவ்வளவு பின்னடைந்துவிடவில்லை. இன்றுவரை எமது இலக்கு 3 கோடி நாமங்களைத் தாண்டிவிட்டது. கோடி நாமம் எழுதியபோதே இதில் ஈடுபட்ட அன்பர்கள் எல்லோரும் கோடீஸ்வரர்களாக ஆகிவிட்டார்கள். 3 கோடி என்றதுமே பெரிய மகிழ்வாகும். பல ஊரிலுள்ள அன்பர்கள் ஒன்று சேர்ந்து லட்சக்கணக்கான நாமங்களை எழுதியதனாலேயே இந்த மூன்று கோடியை எட்டிப் பிடிக்க முடிந்தது, நாமலிகித ஜெபத்தில் ஈடுபட்ட அன்பர்கள் 25 மாதகாலத்தில் தாம் அடைந்த அநுபவத்தினாலும் நாமருசியினாலும் இதனைத் தொடர்ந்து எழுதிவரவேண்டுமென்று பிரதிக்கினை எடுத்துள்ளார்கள். அப்படியே தொடர்ந்து செய்து வருகின்றார்கள். ஆண்டவன் வேறு அவனுடைய நாமம் வேறு அல்ல. பல ஊர்களில் உள்ளவர்களை ஆண்டவன் நாம ஜெபத்தில் ஈடுபடச் செய்தமையே திவ்ய ஜீவன சங்க வெள்ளிவிழா நிகழ்ச்சிகளில் மிக முக்கியமானது எனலாம்.

நாம் சோர்ந்திருக்கும் போதெல்லாம் குருமகராஜ் சிவானந்த சுவாமிகள் தமது திருவருள் நினைப்பாலும், கடிதமூலமும் உற்சாகமூட்டி வந்தார்கள். அவர்களுடைய பொன்னார் திருவடியில் மலரை வைத்து வணங்குவதோடு எம்மையும் அவருடைய திருப்பணிக்கு ஆளாக்கி கொள்வோமாக.

இங்ஙனம்

மலர் வெளியீட்டுச் சபையினர்.


With Compliments of

C. V. BHATT.

சி. வி. பாற் ஸ்தாபனத்தாரின்

நல்லாசிகள் அன்பர்களுக்கு உரித்தாகுக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யோகிருஜ் சச்சிதானந்த
சுவாமிகள்

சுவாமி சிவானந்த
மகராஜ் அவர்களும்



ஸ்ரீமத் சைதன்யானந்த
சுவாமிகள்



ஸ்ரீ சிவானந்த சச்சிதானந்த
மாதாஜீ





ஸ்ரீ முக்தானந்த மாதாஜீ



ஸ்ரீமத் சுப்பிரமணியானந்த
சுவாமிகள்

அவரது
இலங்கை வாழ்
சீடர்களும்.



ஸ்ரீமத் ஞானனந்த
சுவாமிகள்





மேலே; திருமலையில் சிவானந்த தபோவன அத்திவாரக் கல்லை நாட்டுகிறார் யோகிராஜ்

கீழே:யோகிராஜ், மாதாஜி ஸ்ரீ சுவாமி சிவானந்த சச்சிதானந்தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேலே: தேயிலைத் தோட்டச் சேலை
கீழே: இனிக் குடிப்பதில்லை இது சத்தியம்



மலைநாட்டு மக்கள் மத்தியில் யோகிராஜ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யோகிராஜ் தலைமையில் கீரிமலையில் அந்தர் யோகம் *[சாதனவாரம்]*



யாழ்ப்பாணம் திவ்விய ஜீவன சங்கப் பிரார்த்தனை
மண்டபத்திற்கு யோகிராஜ் அத்திவாரக்கல்லை
நாட்டினர் 1962 பிப்ரவரி 17.



திருக்கோணமலை குருபூர்ணிமா சர்வமத பாதநாடு யோகிராஜுடன்
இஸ்லாமிய, பௌத்த குருமார்களும், கிறிஸ்தவ அன்பரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவ ஜீவனம்

*(கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்)*

எந்த உயிரி னிலும்
இருக்கும் இறைவனுடன்
சிந்தை கலந்தவர்க்கே — கிளியே
தேவ ஜீவனமடி.

கள்ள மனக்குரங்கைக்
கட்டி யடக்கிடினே
உள்ள வெளியினிலே — கிளியே
உண்மை பொலியுமடி.

தாந்தம தென்கின்ற
தடித்த செருக்கறுத்தால்
மாந்தருந் தேவர்களாய் — கிளியே
மாறிப் பிறப்பாரடி.

பயமுந் துயருமின்றிப்
பதறுங் கவலையின்றி
நயனுறு வீரருக்கே — கிளியே
ஞாலம் இனிக்குமடி.

அன்பும் அறம்பொருளும்
ஆத்ம சுதந்தரமும்
இன்ப வழியெனவே - கிளியே
எல்லார்க்கும் சொல்வோமடி.

கரண சுத்தியுடனே
காதலில் ஒன்றுபட்டால்
மரணபயமேனடி — கிளியே
வாழ்க்கை அமுதமடி.

மோக மயக்க மின்றி
மூடப் பொறுமையின்றி
யோகத்திலே வளர்ந்தால் — கிளியே
உலகுவிண் ணுகுமடி.

நமக்குப் பரமனுள்ளே
நல்கும் அருளறிவும்
இமைக்கும் இருவிழிக்கும் — கிளியே
இரவியைப் போலுமடி.

ஈதலும் இன்புறலும்
இதயம் உணருதலும்
வேதமும் ஆகமமும் — கிளியே
விளம்பிடும் உண்மையடி.

## தெய்வ நெறி.

வாழ் வாங்கு வாழும் வாழ்வே திவ்யஜீவனம். தூய்மை, வாய்மை, நேர்மை, சீர்மை, அன்பு — அறம் இவை போற்றி ஆண்டவன் திருவருளுக்கு இலக்காகும் வாழ்வே ஆன்மப் பொதுவில் வளரும் அமரவாழ்வாகும். இந்த உலகின் பத்தையோ, புகழையோ நாடிமனம் அலைந்தால் கவலை பெருகும். கலக்கம் வளரும். அமைதி குலையும். அடங்க அடங்க அமைதி. ஆட ஆட அலைவு. அடங்கு நிலையோகம். அலைவு நிலைபோகம். யோகத்தில் ஏகமாவதே தெய்வ வாழ்க்கையாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி.

3. 2. 62.

ஓம் நமோநாராயணாய

அன்புமிகும் ஆத்மனே!

அன்புக்கடிதம் கிடைத்து ஆனந்தம். ஈழ தேசத்தில் முற்காலத்தில் இராவணன் ஆண்டான். இக் காலத்தில் இறைவனின் தெய்வீக பக்தர்கள் பக்தி, தெய்வீகம், அன்பு, ஆத்மீகம், ஊக்கம், வைராக்யம் இவற்றைப்பெற்று அன்பர்கள் மெய் யறிவிற் திளைத்து நாடெங்கும் ஆத்மீகக் கோட் பாட்டை யடைந்து ஆனந்தமெய்துகின்றனர். ஆத்மீகத் தொண்டர்களைக் கொண்டு தாங்கள் செய்யும் தெய்வீகத் தொண்டு பெரிதும் போற்றத் தக்கது.

''எங்கு ஆத்மீகமின்றி துன்பங்கள் நேருகின் றனவோ அங்கு யான் அவதரிப்பேன்'' எனக்கீதை வலியுறுத்துகின்றது. அஃதேபோன்று தாங்கள் செய்துவரும் அரும் தொண்டால் பலரும் பிணியற் றெழுந்து அந்த ஆத்மீகக் கோட்பாட்டையடைந்து ஆனந்தமெய்துவார்களாக. தாங்கள் வெளியிட இருக்கும் வெள்ளிவிழா மலர் செவ்வனே சிறப்புற்று விளங்கவும், ஆத்மீக அன்பர்கள் நலத்துடன் ஒப்பற்று தேகாரோக்கியம், நித்யம், புஷ்டி அனைத் தும் பெற்றுய்வார்களாக.

அன்பு, நேர்மை, ஆனந்தம், ஐக்கியம் வைராக்கியம் இவற்றைக்கடைப்பிடித்து இறைவனு டன் இரண்டறக் கலவுங்கள்.

எல்லாம் பகவான் ஆசீர்வாதங்கள்.

தங்கள் சொந்த ஆத்மா,

சிவானந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க! தெய்வீக வாழ்க்கைச் சங்கம்

### பல்லவி

வாழ்க தெய்வ வாழ்க்கைச் சங்கம் வாழ்க வாழ்கவே!
மலர்க தெய்வ வாழ்க்கை யெங்கும் வளர்கபொலிகவே!

### அநுபல்லவி

வீழ்க கொடிய அசுரசக்தி, வீழ்க வீழ்கவே!
வெல்க புனித அமரசக்தி, வெல்கவெல்கவே!

### சரணங்கள்

காமக்ரோத லோபமோகக் கங்குல் அழியவே,
கருணை, அன்பு தவழும் இன்பக் காலை புலரவே,
தூய்மை வாய்மை கமழும் ஆத்ம ஜோதி ஒளிரவே,
தொண்டு புரியும் தெய்வ வாழ்வுச் சங்கம் வளர்கவே (வாழ்க)

அன்பு கொண்டு, கடமைசெய்து, அருள்கனிந்திட,
அகண்டபஜனை தியானமோனத் தாழ்ந்து மூழ்கியே,
இன்ப ஞானச்சோதி காணும் நெறியுணர்த்தலே
இலட்சியமாய்க் கொண்டசங்கம் என்றும்வாழ்கவே (வாழ்க)

இமயஜோதி யானஞான குருசிவானந்தர்
இணையிலாத கருணைகொண்டு, அவனிஉய்யவே,
அமரஞான, கர்ம, யோக, பக்திவளர்த்திடும்
அரியதிவ்ய ஜீவனப்பொற் சங்கம் வாழ்கவே! (வாழ்க)

— பரமஹம்ஸ தாசன் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படிக் காட்டுகின்றாய் ?

### பல்லவி

எப்படிக் காட்டுகின்றாய்? பிறர்க்குன் அன்பை
எப்படிக் காட்டுகின்றாய்? நண்பர்க்குன் அன்பை
(எப்படி)

### அநுபல்லவி

அற்புத மாய்ப்புகழ்ந்தோ? அரிய பணிபுரிந்தோ?
அல்லல் அடைந்தவர்க்குன் உள்ளத் துதித்த அன்பை
(எப்படி)

### சரணங்கள்

வெற்றுரை அநுதாபம் மிடி, நோய் தவிர்த்திடுமோ?
வெம்பசித் தீயணைக்க வேதாந்தம் கைதருமோ?
உற்ற துயர்ப்படுவோர்க் குணர்ந்து பரிந்தியன்ற
உதவி புரிந்திடுவ துண்டோ? உன் அன்பினை நீ
(எப்படி)

ஆலயம், பூசை, விழா ஆடம் பரமெதற்கு?
ஆனந்த முத்திபெற அருஞ்சா தனமெதற்கு?
கால்கை மனமொடிந்து கலங்கித் தவிக்கும் ஏழைக்
கடவுள ருக்குருகிக் கடும்பணி புரிந்தாயோ?
(எப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திவ்விய ஜீவன சங்கத்தின் அடிப்படை இலட்சியங்கள்

( ஸ்ரீ சுவாமி சிவானந்தர் அருளியது )

சத்திய நாட்டமும் பரந்த உள்ளமும் கொண்ட சான்றோர் சிலர், ஒரு குறிப்பிட்ட ஆன்மீக நெறியையோ சமயப் பிரிவையோ சார்ந்ததாயிராமல் உலக சமயங்கள் அனைத்தினது சாரத்தையும் தன்னகத்தே கொண்ட ஸ்தாபனமொன்று இருப்பது அவசியமெனக் கண்டனர். அவர்கள் தங்கள் உயர்ந்த கருத்தை என்னிடம் சமர்ப்பித்ததன் விளைவாக 1936ஆம் ஆண்டு திவ்விய ஜீவன சங்கம் நிறுவப் பட்டது.

ஆரம்பத்தில் ஸ்தாபனமெதையும் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இருக்கவில்லை. ஆன்மீக அறிவை அமைதியுடனும் அடக்கத்துடனும் பரப்புவதையே நான் விரும்பினேன். இதற்காகத் தெய்வீக வாழ்க்கை பற்றிய போதனைகளைக் கொண்ட சில துண்டுப் பிரசுரங்களை அச்சிடுவதிலும், எனது நூல்களிற் சிலவற்றை அச்சிடச் சில பதிப்பகங்களுக்கு அனுமதியளிப்பதிலும் திருப்தியடைந்தேன். ஆனால் இப்பணி மேன்மேலும் பல்கிப் பெருக வேண்டும் என்பது இறைவன் திருவுளமாக இருந்தது.

### அனைவருக்கும் பொதுவான ஆன்மீக இல்லம்

இருபதாம் நூற்றாண்டின் உலோகாயுதம் தோற்றுவித்த பிரச்சினைகளான போர், அமைதியின்மை, சமயக் கொள்கைகளின் மோதுதல், சகிப்பின்மை யாவும் மக்கள் உள்ளத்திலே ஓர் ஆன்மீகப் பசியைத் தூண்டிவிட்டன. அதனைத் தீர்ப்பதில் அவர்களுடைய மனச்சாட்சிக்கும் நம்பிக்கைக்கும் முழு அளவு சுதந்திரமளிக்க வேண்டியிருந்தது. மனப் பூர்வமான ஆர்வத்தையன்றி வேறெந்த யோக்கியதாம்சத்தையும் வேண்டாததும், அவரவரது உயர் மனத்தின் ஆணையையன்றி வேறுவிதமான கட்டுப் பாடெதையும் விதிக்காததுமான ஆன்மீக இல்லம் ஒன்று ஒவ்வொருவருக்கும் தேவைப்பட்டது.

ஒவ்வொருவரும் தத்தம் சமயத்தைப் பின்பற்றி வாழ்ந்து, அவரவர் தனிப்பட்ட தன்மைக் கேற்ப வளர்ச்சி பெற வேண்டும். ஒவ்வொருவரும் மற்றவரது கலாசாரத்தையும் ஆன்மீக வாழ்க்கை நிலையையும் மதிப்பவராய், சுதந்திரம், சர்வசமரசம், அன்பு, சகோதரத்துவம், நல்லெண்ணம், பரஸ்பர நல்விளக்கம் ஆகியவற்றோடு கூடிய சூழ்நிலையில் வாழுதல் வேண்டும். இதற்கு ஒரு பொது ஸ்தாபனம் தேவையாயிற்று. ஒரு கிறிஸ்தவர் தமது சமயத்தை மாற்ற வேண்டியிராமல் இன்னும் சிறந்த கிறிஸ்தவராக வாழ வகையிருத்தல் வேண்டும். அதுபோல ஓர் இந்து இன்னும் சிறந்த இந்துவாகவும் ஓர் இஸ்லாமியர் இன்னும் சிறந்த இஸ்லாமியராகவும் வாழ வசதியிருத்தல் வேண்டும். இத்தகைய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே திவ்விய ஜீவன சங்கம் அமைக்கப்பட்டது.

### பொது இலட்சியங்கள்

திவ்விய ஜீவனம் அல்லது தெய்வீக வாழ்க்கை என்பது தினசரி வாழ்க்கையில் யோகத்தை மேற்கொள்வதாகும். ஆன்மீகக் கொள்கைகளை அனுபவ பூர்வமாக அப்பியசிப்பதே யோகம் எனப்படும். இதற்காக நான் எவரையும் காடுகளுக்கோ குகைகளுக்கோ ஓடச் சொல்வதில்லை. நான் எப்போதும் சொல்லி வருவது இதுவே. "ஒருவர்க்கொருவர் உதவிக் கொள்ளுங்கள். ஒருவரோடொருவர் ஒத்துழையுங்கள். ஒருவரையொருவர் புரிந்து கொள்ளுங்கள். ஒருவர்பால் மற்றவர் நல்லெண்ணங் கொள்ளுங்கள். எங்கும் இறைவன் உள்ளதை உணர்ந்து, உள்ளத்திலுள்ள சுயநலத்தை யகற்றி பொதுநல மனப்பான்மையை விருத்தி செய்யுங்கள். இலௌகீக நோக்கைத் தெய்வீக நோக்காக மாற்றுங்கள். மன நோக்கை விசாலப் படுத்துங்கள். உங்களிடமிருக்கக் கூடிய இழிவான தன்மைகளனைத்தையும் தூய்மைப் படுத்துங்கள்." இதுவே திவ்விய ஜீவன சங்கத்தின் புனிதச் செய்தியாகும்.

சத்தியம், அன்பு, தூய்மை ஆகிய இலட்சியங்களைக் கடைப்பிடியுங்கள். அழியாமல் நிரந்தரமாயுள்ள உண்மைப் பொருளே சத்தியம் எனப்படுவது. யாவருள்ளும் உறையும் பொருளாகிய சத்தியத்தை வாழ்க்கையில் வெளிப்படுத்துவது அன்பு. சத்தியமின்றேல் அன்பு பசையற்றதாகும். அன்பு மலர்வதற்குத் தூய்மை அவசியமானது. தூய்மையானவரின் உள்ளத்திலேதான் உண்மையன்பு இருக்க இறைவனிடத்தும் - இறைவனே எங்கும் வியாபித்திருப்பதால் - அவனது சிருட்டியினிடத்தும் அன்பு நிறைந்த இதயத்தினை உடையவனே சத்தியத்தை அறியவும் சத்திய நெறியிலே நடக்கவும் முடியும். எனவே, சத்தியம் அன்பு தூய்மை ஆகியவை திவ்விய ஜீவன சங்கத்தின் அடிப்படை இலட்சியங்களாகும்.

### பிரதானமான அறிவுரை

"சேவை புரியுங்கள்; அன்பு செலுத்துங்கள்; தியானம் பயிலுங்கள்; அனுபூதி அடையுங்கள்; நல்லவராய் வாழுங்கள்; நன்மையே செய்யுங்கள்" இதுவே என்றும் எனது பிரதானமான அறிவுரையாக இருந்து வருகின்றது. இச் சொற்றொடர்கள் உலகிலுள்ள எல்லாச் சமயங்களின் போதனைகளையும் தொகுத்துக் கூறுகின்றன. தெய்வீக வாழ்க்கைக்கு அடிப்படை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாய் உள்ளவை இவையே. இறைவனைத் தியானிப்ப வரது இதயத்திலே அன்பு மலர்கின்றது. அன்பை இயல்பாக வெளிப்படுத்துவது சேவை அதன் பலனு கப் பெறுவது ஆத்மாநுபூதி. தெய்வீக வாழ்க்கை யால் நல்ல தன்மை ஏற்படுகிறது. தெய்வீக வாழ்க்கை என்பதும் நல்லதன்மை என்பதும் ஒன்றுதான். நல் லவனுய் இருப்பதென்றால் நன்மை புரிவது என்பதுதான் பொருள். ஏனெனில், பிறர்க்கு நன்மை செய்யாமல் தன்னளவில் நல்லவனுயிருப்பதா லேயே ஒருவன் நல்லவனுகிவிட முடியாது. இங்ஙன மாக திவ்விய ஜீவன சங்கம் செயன் முறையிலே தீவிரமாயிருப்பதன் அவசியத்தை வலிறுயுத்துகின்றது.

தெய்வீக வாழ்க்கை மானிட சமுதாயம் முழுவ தையும் ஒரு மாபெரும் குடும்பமாக இணைக்கும் பிணைப்பு. இறைவனுடனும் உயிர்களுடனும் உலகுட னும் தமக்குள்ள உறவை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள அது வாய்ப்பளிக்கின்றது. தெய்வீக வாழ்க் கையே ஆத்ம ஞானம் என்னும் புதையலை அடைவ தற்கான திறவுகோல். அது வாழ்க்கை விதிகளை மனி தன் சரியாகப் புரிந்துகொள்ள உதவுகிறது. தெய் வீக வாழ்க்கை என்பது தத்துவ சாத்திரங்களுக்கெல் லாம் அடிப்படை; சமயங்கள் அனைத்திற்கும் தாய்; மானிட சமுதாயம் முழுதும் பின்பற்றுவதற்கான வாழ்க்கை முறை. தெய்வீக வாழ்க்கையின் புனிதக் கொள்கைகளை எங்கும் யாவரிடையும் பரப்புவதே திவ்விய ஜீவன சங்கத்தின் நோக்கமாகும்.

### அனுபவ பூர்வமான பயிற்சி

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகத் திவ்விய ஜீவன சங்கமும் உலகெங்கும் பரந்துள்ள அதன் கிளை களும் ஆயிரக் கணக்கான மக்களின் உள்ளங்களிலே மறுமலர்ச்சியைத் தோற்றுவித்துள்ளன. வெவ்வேறு சமயத்தைச் சேர்ந்தவர்களும் வெவ்வேறு தத்துவக் கொள்கைளை அனுசரிப்போரும் இங்ஙனம் பயன் பெற் றுள்ளனர். இயன்ற அளவு பெருந் தொகையான மக்களுடன் தொடர்பு கொண்டு, அவர்களுடைய இதயங்களிலே தெய்வீக வாழ்க்கையை மலரச் செய்ய இச் சங்கம் அடக்கமான முறையில் முயன்று வந்துள் ளது. சங்கத்தின் உறுப்பினர் அல்லது தொடர்பினர் என்ற முறையில் உண்மையான அக்கறையுடன் இலகு வான சாதனைகளைப் பயிலத் தொடங்கிய பலர் தமது வாழ்க்கையில் மாபெரும் ஆன்மீக மலர்ச்சி ஏற்பட் டிருப்பதை உணர்ந்துள்ளனர்.

இங்கு, தலைமைக் கேந்திரத்தில், உலகின் பல பகுதிகளையும் சேர்ந்த எண்ணற்ற சாதகர்கள் ஒழுக்க நெறி, மனதை ஒருமைப் படுத்துதல், தியானம், யோகாசனம், பிராணுயாமம் ஆகியவற்றை முறையா கப் பயின்று, ஞான யோகம், பக்தி யோகம், ராஜ யோகம், கரும யோகம் என்னும் துறைகளில், கொள் கையளவிலும் அனுபவ பூர்வமாகவும், பயிற்சிபெறச் சந்தர்ப்பம் பெற்றுள்ளனர்.

### ஆரணிய கலாசாலை

தலைமைக் கேந்திரத்தில் 1948 ஆம் ஆண்டு யோக வேதாந்த ஆரணிய கலாசாலை ஸ்நாபிக்கப் பட்டதி லிருந்து இப் பயிற்சியின் போதனைப் பகுதி மேலும் ஒழுங்கு படுத்தப் பட்டுள்ளது. இந்தியாவிலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் ஆயிரக் கணக்கான சாதகர்கள் இக் கலாசாலையிற் பயிற்சி பெற்றுள்ளனர். நேரில் இங்கு வந்து பயிற்சி பெற முடியாதவர்களுக்குக் கடி தப் போக்குவரத்து மூலம் பயிற்சி பெற வாய்ப்ப ளிக்கப்படுகின்றது. ஆறு கண்டங்களிலுமுள்ள சங்கக் கிளைகளும் யோக வேதாந்த நிலையங்களும் ஆராய்ச் சிப் பிரிவுகளும், கிரமமான வகுப்பு நடத்தியும் தலை மைக் கேந்திரத்திற் பயிற்சி பெற்ற தலைவர்களுடன் நேரடியாகத் தொடர்பு பூண்டும் பிரதேச திவ்விய ஜீவன மகாநாடுகள் நடத்தியும் அவ்வப் பகுதியிலுள்ள சாதகர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. தலைமைக் கேந்திரத்திலிருந்தும் கிளைகளின் மூலமும் தொடர்ந்து வெளியிடப்படும் புத்தகங்களும் சஞ்சிகை களும் தெய்வீக அறிவைப் பரப்பும் பணியை இடை விடாது செய்து விடுகின்றன.

மருத்துவ சேவையும் கல்விச் சேவையும் புறக் கணிக்கப் படவில்லை. தலைமைக் கேந்திரத்திலுள்ள பொது வைத்திய சாலையாலும் கண்வைத்தியசாலையா லும் அண்மையிலிருந்தும் சேய்மையிலிருந்தும் வரும் பலர் பயன் பெற்று வருகின்றனர். இளஞ் சிறுர்க ளுக்கான கல்விக் கழகமொன்றும் தலைமைக் கேந்தி ரத்தில் உள்ளது. சங்கத்தின் கிளைகள் தலைமைக் கேந்திரத்தின் உதாரணத்தைப் பின்பற்றி மக்களுக் குப் பாராட்டத் தக்க முறையிற் பணியாற்றி வரு கின்றன.

### ஞானவேள்வி

யாவருக்கும் யான் கூறும் அறிவுரை யாதெனில் ''தெய்வீக வாழ்க்கை வாழுங்கள். தெய்வீக நெறியை மற்றவர்களும் பின்பற்றத் தூண்டும் முன் மாதிரியாக உங்கள் வாழ்க்கை அமையட்டும். தீவிர சாதனை செய்யுங்கள். தெய்வீக வாழ்க்கை உங்களிடமிருந்து சுடரொளி விட்டுப் பரவட்டும். சங்கத்தின் ஒவ்வொரு கிளையும் சத்தியத்தின் திருக்கோயிலாக விளங்கட்டும். அங்கத்தவர் ஒவ்வொருவரும் தெய்வீக வாழ்வின் புனி தக் கோயிலாகத் திகழ்வாராக. இத்துறையில் ஒவ் வொருவரும் ஆற்றுதற்குரிய உயர்பணி ஒன்றுளது. அதுவே தெய்வீக வாழ்க்கையின் புனிதக் கொள்கை களை எங்கும் பரப்புவதாகும். இப் பணிக்காக உங் களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள், இதுவே இத் தருணத்தின் தேவை. மக்கள் உங்களை அணுகும்வரை காத்திருக்க வேண்டாம். எப்போதும் சந்தர்ப்பங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளைத் தேடிப்போவதே எனது முறை. மக்களுக்குச் சேவை புரியச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். தெய்வீக வாழ்க்கையின் கொள்கைகளை வீட்டுக்கு வீடு பரவச் செய்யுங்கள்.'' கொடைகளிலெல்லாம் தெய்வீக அறிவின் கொடையே சாலப் பெரியதாகும்.

கலாசார மறுமலர்ச்சிக்குப் பெரியதொரு தேவை ஏற்பட்டுள்ளது. மனிதனது வாழ்க்கையில் ஆன்மிக உணர்ச்சி மலர்வதிலேயே உண்மைக் கலாசாரம் தங்கியுள்ளது. ஆன்மீக அறிவைப் பெற மக்கள் தயாராயில்லை என்று கூறுவது சரியன்று. 1950ஆம் ஆண்டு எனது அகில இந்திய இலங்கைப் பிரயாணத்தின்போது நான் பெற்ற அனுபவம் இதுவே. நான் சென்றவிடமெல்லாம் மக்கள் தெய்வீக வாழ்க்கையின் புனிதக் கொள்கைகளைக் கேட்டறியக் கூட்டங் கூட்டமாகத் திரண்டு நிற்பதைக் கண்டேன். தங்கள் தெய்வீக மரபுரிமையை அறிந்து கொள்ள அவர்கள் காட்டிய ஆர்வத்தையுங் கண்டேன். அவர்களது பிறப்புரிமையை மறுப்பது மாபெருங் குற்றமாகும்.

### தகுதி வாய்ந்த சாதனம்

உண்மையான சமய உணர்ச்சி மீண்டும் நிலை நாட்டப் படுதல் வேண்டும். சமயமானது மக்களின் இதயங்களிலே மலர வேண்டும். மூடப் பற்றுக்களையும் பிடிவாதக் கொள்கைகளையும் விட்டு சமயத்தின் நயங்களை அறிந்து கடைப்பிடிக்க மக்களிடையே மட்டற்ற ஆர்வம் காணப்படுகிறது. 1953ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் தலைமைக் கேந்திரத்திற் கூட்டப்பட்ட சர்வ சமய சம்மேளனத்திற் கலந்து கொண்ட பிரதிநிதிகளின் பேச்சுக்களிலிருந்து இது தெளிவாயிற்று. நல் விளக்க முள்ளோர் பலரது இதயங்களில், சமய ஒற்றுமைக்கும் ஆன்மீக நிறைவுக்கும் பேரவா ஏற்பட்டுள்ளது. இத் தேவையை நிறைவேற்றுவது அவசியம். சங்கத்தின் கலாசார இயக்கம் இதற்குத் தகுதி வாய்ந்த ஒரு சாதனமாகும். திவ்விய ஜீவன சங்கத்தின் வெள்ளி விழாவைக் கொண்டாட இது ஒரு பொருத்தமான முறையுமாகும்.

கலாசார இயக்கத்தையும் அதனோடு தொடர்புடையோரையும் அதனால் நன்மையடைவோரையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக.

From "The Basic Ideals of the Divine Life Society" Divine Life Vol XXII - No 4.

## எது ஆணவம்?

பிறரிடமிருந்து தன்னைத் தனியாக வேறுபடுத்திப் பிரித்து வைக்கும் உணர்ச்சியை ஊட்டி தனக்கும் மற்றவருக்குமிடையே ஒரு பெரும் தடையை ஏற்படுத்தும் ஜீவாத்மாவின் சுயவலியுறுத்தல் கொள்கையே ஆணவம் அல்லது அகங்காரம். கடவுளிடமிருந்து தான் வேறு என்ற எண்ணத்தை உருவாக்கியுள்ளதும் இந்த ஆணவமேயாகும். மனிதனை அறியாமையில் வைத்துவரும் மாயையின் மறைப்பு சக்தி அது. மனிதனின் கஷ்டங்களுக்கும் பிறப்பு இறப்புக்கும் மூல காரணம் இந்த ஆணவம்தான்.

சரீரம், மனம், புலன்களுடன் தன்னை ஒன்று படுத்துகிறது ஆணவம். ஆணவத்தின் திருவிளையாடல் நிலவு மிடங்களில் எல்லாம், தன்னலம் விருப்பு வெறுப்புகள், காமவிகாரம், கோபம், பேராசை, வஞ்சகத்தன்மை. கர்வம், பொறாமை, மயக்கம், இறுமாப்பு, பணிவின்மை, வேட்கை, பொருள்களின்மேல் பற்று, நாமரூபங்களில் ஒட்டுகை, 'நான் செய்கிறேன், நான் அனுபவிக்கிறேன் என்ற எண்ணம் அனைத்தும் இருந்து வரும்.

(சுவாமி சிவானந்தர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நன்றுந் தீதும் பிறர் தர வாரா'

( பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை )

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பிரசித்தி பெற்ற பாட்டுப் புறநானூற்றில் உள்ளது. அப்பாட்டில் வருகின்றது 'நன்றுந் தீதும் பிறர்தர வாரா என்ற தொடர்.

'தாந்தாம் செய்தவினை தாமே அநுபவிப்பர்' என்ற ஔவையாரின் வாக்கும்,

'பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தம்
கருமமே கட்டளைக் கல்' என்ற வள்ளுவர் வாக்குந்,

தலையங்கத்திற் காட்டிய தொடரோடு ஒத்த கருத்துடைய தெளிவுரைகள்.

பிராரத்தை ஊட்டுவது திருவருள். ஊட்டுவதன் கருத்தறியாது பிராரத்த அநுபவங்களை வெறுப்பதும் விரும்புவதும் ஆகாமியம் விளைதற்கு வழி; பிறவிக்கு வித்து.

சாதகர்கள் ஆகாமியம் விளையாமற் பிராரத்தத்தை அநுபவிப்பர். திருவருள் பிராரத்தை ஊட்டுவதற்கு உபயோகப் படுத்துங் கருவிகளை அவர்கள் விருப்பு வெறுப்புச் செய்வதில்லை.

பட்டினத்துப் பிள்ளையாரின் கரங்கள் பழக்க வாசனையால் வழியிலுள்ள ஒரு தோட்டத்தில் ஒரு பழத்தைத் தீண்டி விட்டன. தோட்டக்காரன் பிள்ளையாரின் அவயவங்களை அடித்துத் தண்டனை செய்து விட்டான். அதனைக் கண்ட மற்றொருவன், பிள்ளையாரின் பெருமையை ஒரு சிறிதே அறிந்தவன். அவன் பிள்ளையாரைத் தன் வீட்டுக்கு எடுத்துச் சென்று எண்ணைபூசிப் பரிகாரஞ் செய்து நடக்கத்தக்க நிலையை வருவித்தான். அந்நிலை வந்ததும் பிள்ளையார் ஒரு நன்றிகூடச் சொல்லாமல் தம் போக்கிற் போய்விட்டார். உபகாரஞ் செய்தவனை வியக்கவுமில்லை; அபகாரஞ் செய்தவனை இகழவுமில்லை.

கைகேசிக்கு மனநிலை திரிந்ததைக் கண்ட மாத்திரத்திலேயே விதியின் விளையாட்டு விளங்கி விட்டது. தசரதனுக்கு அது முடியவில்லை. அவனுடலையே அது பிரித்து விட்டது. இராம இராவண யுத்த முடிவில் தேவ விமானத்தில் தசரதன் யுத்த களத்தில் இறங்கி இராமனைக் கட்டித் தழுவி முத்தமிட்டு, இரு வரங்கள் தம்மிடமிருந்து பெற்றுக் கொள்ளும்படி விரும்புகிறான். அப்பொழுது இராமன், பரதனை மகனாக ஏற்றுக் கொள்ளும்படி முதலாவது வரத்தைக் கேட்டான். தசரதன் உவந்து அந்த வரத்தை நல்கினான். அதன்மேல், கைகேசியைத் தன் சிற்றன்னையாக ஏற்றுக் கொள்ளும்படி கேட்டான். இது இரண்டாவது வரம். அப்பொழுது தசரதனின் கைகள் - இராமனை இறுகத் தழுவியிருந்தவைகள் - அவனை அறியாமலே நெகிழ்ந்து போயின. நெஞ்சம் புழுங்கியது. மூச்சில் உஷ்ணம் உதித்தது. வரத்தைக் கொடுத்தான். கொடுத்த போது இவைகளெல்லாம் நிகழ்ந்தன. தேவ வடிவம் எய்திய போதும், பிராரத்தை அநுபவிக்கிற முறையில் அநுபவிக்கத் தசரதனுக்கு முடியவில்லை.

பானுகோபன் சூரபன்மனின் மைந்தன். அவன் விண்ணுலகைத் தீக்கிரை செய்து, சயந்த குமாரனையும் தேவர்களையுஞ் சிறைப்படுத்தினான். சூரபன்மன் தேவர்களை மீன் சுமக்கும்படி கட்டளை செய்தான். செய்யாதன செய்து தேவர்கள் அலுத்தார்கள்.

'காடு போந்தனன் இந்திரன் பொன்னகர் கரிந்து
பாடு சேர்ந்தது சயந்தனும் சிறையிடைப் பட்டான்
நாடில் விண்பதஞ் செய்கையீது...........'

விண்ணுலகம் அட்டகிரக கூடமாயிற்று. நூற்றெட்டு யுகம் தேவர்களின் சிறைச்சாலையில் வாடினார்கள். அவர்களுக்கு அக்கதி நேர்ந்ததன் காரணத்தைக் கந்தபுராணம் தெளிவுபடுத்துகிறது.

தக்கன் பிரசாபதி. அவன் தேவர்களுக்குத் தலைவன். அவன் ஒருமுறை விதிவயத்தால் மயங்கிச் சிவநிந்தகன் ஆனான். சிவனை இகழ்ந்து ஒரு யாகமுஞ் செய்தான். அவன் அதிகாரத்தை மேற்கொண்டு தேவர்கள் அந்த யாகத்தில் பங்கு பற்றினார்கள். தீமை அதிகரித்தது. அதனை ஊட்டித் தொலைக்கும் பொருட்டே திருவருள் அசுரர்களுக்கு அதிகாரத்தைக் கூட்டி வைத்தது. இந்த உண்மையைத் தேவர்கள் சிறைச்சாலையில் தெட்டத் தெளிய உணர்ந்தார்கள். அதனால் ஊட்டுங் கருவிகளாகிய அசுரர்களில் அவர்கள் வெறுப்புக் கொள்ளவில்லை. தசரதன் போல் அவர்கள் கொதிக்கவில்லை. தாங்கள் தக்கன் அதிகாரத்தில் மயங்கிச் செய்த தப்புக்குத் தண்டனை போதாது என்ற உணர்ச்சியுடன் தவம் புரிந்தார்கள்.

'வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப்படும்' என்றார் தேவர்.

ஒருநாள் சிறைச்சாலையிலே சயந்த குமாரன் தவ விசேஷத்தால் ஒரு கனவு கண்டான். அக்கனவிலே

'கருணைகூர் முகங்க ளாறுங் கரங்கள்பன் னிரண்டுங் (கொண்டே
ஒருதிருமுருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய'

'முழுமதியன்ன வாறு முகங்களும் முந்நான்காகும்
விழிகளி னருளும் வேலும் வேறுள படையின் சீரும்
அழகிய கரமீ ராறு மணிமணித் தண்டை யார்க்குஞ்
செழுமல ரடியுங் கண்டா னவன்றவஞ் செப்பற் பாற்றே'

தேவர்களுக்குப் புலவர்கள் என்பது மற்றொரு பெயர். புலம் - அறிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் வணக்கம்.

( சுதந்திரஜீவன் )

—✶—

காமக்கு ரோதாதி அரவங்கள் தீண்டாது
 கருணைவைத் தென்னை ஆண்டு
கனிமழலைத் தேன்சொரியும் சிறுகுழந்தை உளந்தந்து
 காந்தம்போல் எனையி ழுத்து
தீமைக்கு வாய்ப்பான சிற்றினஞ் சேராது
 திருவருட் பாலை ஊட்டி
தித்திக்கும் பேரின்ப வெள்ளப்பெ ருக்கிலென்
 சிந்தையைத் தோய்த்தெ டுத்துப்
பூமொட்டு முகையவிழ்ந் தாலன்ன மோனத்தின்
 புன்னகைசி லிர்க்க வைத்து
பொங்கிவருஞ் சாந்தியெனுங் கங்கையில் நீராடும்
 புத்துணர்வு தந்த பின்புன்
நாமத்தை யுச்சரித் துயிர்விடும் போதிலும்
 நடுங்காத துணிவை யீந்து
ஞானமணம் நாடெங்கும் வீசவருள் கூருவாய்
 நலமெலாங் கனிந்த வாழ்வே!

எந்தைநின தருள்மாரி என்றுதான் பொழியுமோ
 என்றுளஞ் செழித்து வருமோ
ஏழையே னுன்னைப்பு கழ்ந்திசைக் கின்றநல
 லின்பவாழ் வெய்து வேனோ
தந்தைதன் மைந்த னைத் தண்டித்த போதிலும்
 தாயணைக் காதி ருந்தும்
தன்கரங் கூப்பியழு தன்புடன் நோக்கிடத்
 தயவிலா நெஞ்சு முண்டோ
சிந்தைநொந் தழுதுமுறை செய்யுமென் நிலையுனது
 திருவுளம றிந்தி டாதோ
சிறியதோ ரணுவுமுனை யன்றியசை யாதென்ற
 செம்மொழியு மிழுக்காகுமோ
இந்தநாய்க் குன்கருணை கிடைக்காது போகுமோ
 என்செயல்க ளேது முண்டோ
எல்லாம றிந்தநீ பேரன்பு வாரிநீ
 ஏழைக்கி ரங்குவாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமை கண்டு உயர் நிலை அடைக!

(யோகிராஜ் சச்சிதானந்த சுவாமிகள்)

எங்கு பார்த்தாலும் எதனைப் பார்த்தாலும் வேற்றுமை; வீட்டுள் வேற்றுமை, உடையில் வேற்றுமை, நடையில் வேற்றுமை, படிப்பில் வேற்றுமை, பட்டத்தில் வேற்றுமை, தொழிலில் வேற்றுமை மக்கள், மரங்கள், பிராணிகள் ஏன்? நிலம் நீர் தீ காற்று அனைத்திலுமே வேற்றுமை; பாமரன், பண்டிதன், காடு, நாடு, செடி, கொடி, பசு. புலி மேடு, பள்ளம், கிணறு, சமுத்திரம், தென்றல், புயல் என்று இப்படியே ஒன்றற்கொன்று ஏற்றத் தாழ்வான எத்தனை கோடி வேற்றுமைகள்! அப்பப்பா! ஒரு படைப்பைப்போல இன்னொரு படைப்பு உலகில் இல்லவே இல்லை. ஆம், அனைத்தையும் இறைவன் வேற்றுமையுடன்தான் படைத்தான். இத்தனை வேற்றுமைகளுக்கெல்லாம் அடிப்படையாக ஒற்றுமை ஒன்றிருக்கிறது. இதுதான் சிருஷ்டிப்பின் மகா இரகசியம்.

இந்த உலகமும் உயிர்ப்புகளும் எங்கிருந்து தோன்றின; தோற்றத்திற்குக் காரணமாகிய அனாதி வஸ்து ஒன்றுண்டு. அங்கே வேற்றுமையில்லை. தோற்றத்தின் முடிவு இடத்திலும் வேற்றுமை இல்லை. இடையில் வந்த தோற்றத்திற்றான் எல்லா வேற்றுமைகளும் உள. களிமண் இருக்கிறது. அதனைக் குயவன் பதப்படுத்துகிறான்; பல உருவங்களை உண்டாக்குகிறான். குடம் கூசா. சட்டி முட்டி, பானை பாவை, என்று பலவேறு பெயர்களைப் பெறுகின்றது. அவை உணவு சமைக்கவும், நீர் எடுக்கவும், கர்ப்பூரம் எரிக்கவும், கள்ளிறக்கவும் பலவேறு தொழில்களுக்கு உபயோகப் படுகின்றன. இறுதியில் எல்லாம் உடைந்து அழிந்தால் பின்பும் மண்ணே. இங்கே ஆதியும் முடிவும் ஆகிய இரு இடத்தும் நிலை ஒன்றே. இடையில் வந்த தோற்றத்திலேயே வேற்றுமைகள் காணப்படுகின்றன. இதைப் போன்றதே நாம் காணும் உலகமும். உலகின் தோற்றங்களும், இயக்கங்களும், பலவேறு வேற்றுமைகளைக் கொண்டதெனினும், அவையெல்லாம் ஒற்றுமையிலிருந்து வந்தவையே. பின்பும் அவை ஒற்றுமையில் ஒடுங்குவன.

பொய்த் தோற்றமாகிய வேற்றுமையை நீக்கி ஆதியும் அந்தமும் ஒன்றாயுள்ள உண்மையை உணர்ந்து விட்டோமேயானால், எமது உண்மை நிலையை அறிந்தவர்களாவோம். எமது உண்மை நிலை தூய ஆத்ம நிலையே. ஆத்மாவின் தன்மை எத்தகையது?

நைநஞ் திந்தந்தி சஸ்த்ராணி நைநந் தஹதி பாவக:
ந சைனந் க்லேதயந்த்யாபோ ந சோஷயதி மாருத: ||

பகவத்கீதை அத் 2ல் 23 சு

அச்சேத்யோஅய - மதாஹ்யோஅய மக்லேத்யோ அசோஷ்ய:
நித்ய சர்வகத ஸ்த்தாணு ரசலோ அயம் ஸநாதன: ||

அத் 2-2 23 சு

இவ்வாத்மாவை ஆயுதங்கள் சிதைக்க மாட்டா. தீ இதை எரிக்காது. தண்ணீர் நனைக்காது. காற்றும் உலர்த்தாது.

'இது வெட்டொணாதது; எரிக்கொணாதது; நனைக்கொணாதது; உலர்த்தவும் ஒண்ணாததே. இது அழிவற்றது, எங்குமுளது, நிலைபெற்றது, அசைவில்லாதது, என்றுமுள்ளது' என்பது கீதா வாக்கியம்.

தான் வேறுபட்டும் மாறுபட்டும் தோன்றும் உடம்பல்ல, மனசல்ல, என்பதை அறிந்து தன்னை ஆன்மாவாக உணர்ந்தவன், அவ்வான்மாவிலிருந்து எத்துணையும் வேறுபாடற்ற ஆன்மாவையே அகிலம் முழுவதும் காண்பான். தூய ஆத்ம நிலையை உணர்வதே அநுபூதி அடைவதாகும். முத்தி, பரகதி, நிர்வாணம், கைவல்யம் என்பன வெல்லாம் அப் பேரின்ப நிலையேயாம். இன்பப் பெருநிலையை அடைவதற்கு வழிகாட்டவே மதங்கள் தோன்றின. எல்லா மதங்களும், இறைவனை அடைவிக்கும் பாதைகளே; ஒரு மலையுச்சியை அடைவதற்குப் பல பாதைகள் இருக்கலாமல்லவா? ஒரு பாதை வழியாக நடந்து மெதுவாகச் செல்லலாம். இன்னொன்றிற் 'பஸ்' மூலம் செல்லலாம். வேறொன்றில் புகையிரதத்தில் ஏறி வேகமாகச் செல்லாம். பாதை வேறாகவும் வாகனம் வேறாகவும் இருப்பினும், வேகமாகச் செல்லினும், தாமதித்துச் செல்லினும், எல்லோரும் அடைவது மலையுச்சியையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதை எதுவாஞலென்ன? இலட்சியம் ஒன்று தானே, இதுபோலவே மதங்கள் பலவாகலாம், அவற்றின் கொள்கைகள் பலவாகலாம்: ஆயினும் அவற்ருல் அடையும் இன்பநிலை ஒன்றே. இவற்றைச் சிந்தித்துப் பார்க்காமல் ஒருவன் தான் பின்பற்றிய பாதைதான் சரி; மற்றவர் செல்லும் பாதை பிழை என்று எண்ணிப் பிறரது பாதையை எள்ளி நகையாடித் தமது பாதைக்கு இழுக்க முயல்வது அறிவுடைமையாகாது.

எம் மதத்தை எடுத்து ஆராய்ந்து பார்க்கினும் எல்லாருக்கும் சம்மதமான அடிப்படைக் கொள்கைகளைக் காணலாம்; எங்கும் அன்பு என்னும் பிணைப்பைக் காண்கிருேம். 'அன்பே சிவம்' என்கிறது இந்து மதம்; 'உன்னைப் போல் பிறரையும் நேசி' என்கிறது கிறிஸ்து மதம். 'உனது அயலானை உனது சகோதரன் எனக் காண்' என்கிறது இஸ்லாம் மதம். அஹிம்சையின் அடிப்படையிலே எல்லா மதங்களும் 'கொலை செய்யாதே' என்று கூறுகின்றன. ஜீவகாருண்யத்தை ஆதரித்துச் சேவை என்ற கொள்கை எம்மதத்தில் இல்லை? ஆட்டுக் குட்டியை ஆதரித்துத் துயர் அகற்றினர் யேசுநாதர்; மான் குட்டியின் மனக் கலக்கம் மாற்றினர் நபிகள் நாயகம். புருவின் புண்ணை மாற்ற மருந்திட்டார் புத்தபகவான். பன்றிக் குட்டிகளுக்கு பால் ஊட்டிப் பசியைப் போக்கினர் பரமேசுவரன். இதயத்தில் இறைவனை நினைந்து, ஒருமைப்பட்ட மனதில் உணர்ந்து வழிபடுதல், அருவ உருவ அருவுருவ வழிபாட்டினர் அனைவர்க்கும் பொதுவானதே. இன்னும் மதங்களின் அடிப்படைக் கொள்கைகளை விரிக்கிற் பெருகும். எல்லா மத சாதனையின் முடிவும் நித்திய செல்வமாகிய மோட்ச இன்பந்தானே. அதனைப்பெற எல்லா மதத்தினர்க்கும் இயைந்ததாய், பிறவிப் பிணிக்கு மருந்தாய் அன்பு செய், சேவை செய், கொடுத்துப் பழகு, தூய்மை பெறு, தியானம் பயில், அனுபூதி அடை என்று உபதேசித்துள்ளார் சுவாமி சிவானந்தா.

சுவாமிகள் உண்டாக்கிய எல்லா மதத்தையும் ஒன்று படுத்துகிற சமய சமரச சன்மார்க்க சங்கம் ஒரு அற்புதப் பூங்கொடி எனல் மிகையாகாது. 1936ம் ஆண்டு இருஷிகேசத்தில் அப்பூங்கொடி முளைத்தது. தி. ஜீ. சங்கம் எனப் பெயர் கொண்டது. சேவை எனும் கிளைகளைத் திக்கெலாம் நீட்டித் தேசமெலாம் படர்ந்து செல்கிறது; அன்புத்தளிர்க்கரம் சாதி, மத, தேச, மொழி வேற்றுமையின்றி, ஆர்வமுடன் அழைத்து நிற்கிறது. கொடைமலர்கள் பொலிந்து விரிந்து வேண்டுவார்க்கெல்லாம் அருள்மொழித்தேனை வழங்குகிறது. தூய்மை மனம் திக்கெலாம் வீசுகிறது. தெய்வீக வாழ்க்கையாம் கனி தரும் கொடி நிழலில் வாழ்பவர்களுக்கு மத வேற்றுமையில்லை. தேச வேற்றுமையில்லை. அங்கு ஏழை, பணக்காரன், உழைப்பாளி, சோம்பேறி ஆண், பெண், நற்குணன், துர்க்குணன், கிருகஸ்தன், சன்யாசி அனைவருமே அன்பினல் ஒருள்ளம் பெற்று ஒருவர் நற்கொள்கையை இன்னெருவர் ஏற்று வேற்றுமையகல ஒன்று சேர வாழ்கின்றனர். இத்தனை சிறந்த பூங்கொடியைக் காத்துவரும் சற்குரு சிவானந்தா அவர்களின் திருப்பாதங்களுக்கு எமது தாழ்மையான வணக்கம். தன்னையறிந்து இன்புறும் குருதேவர் காட்டிய பாதையிலே நாமும் நின்று வேற்றுமை காணுது, ஆன்மநேய ஒருமைப் பாட்டுடன் வாழ்வோமாக?

வாழிய சற்குரு! வாழிய வையகம்!
ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## சிறு செயல்கள்

சமய வாழ்க்கை வாழும் ஒருவன் பிரார்த்தனைக் கூட்டத்துக்குச் செல்கையில் வழியிலுள்ளவர்களை இடித்துத் தள்ளிக் கொண்டு விரைகிருன். தன் முரட்டுச் செயலுக்காக மன்னிப்புக்கூட அவன் கேட்பதில்லை. உண்மையில் அவன் சமயப் பண்பு உள்ளவனு? பிரார்த்தனைக் கூட்டத்துக்குச் செல்ல வேண்டும் என்ற சமயச் சார்பான நோக்கத்திற் கூடச் சுயநலமே அவனிடம் தலை தூக்கி நிற்கின்றது. ஒருவன் அடைந்துள்ள ஆத்மீக முன்னேற்றத்தை அவனுடைய சிறு சிறு செய்கைகளைக் கொண்டு மதிப்பிட்டு விடலாம்.

சிவானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா தாயே கலைவாணி
நீ என் நாவைக் காப்பாயே
இம்மானிலத்தின் இனிமை யெலாம்
இருக்குது நாவின் அசைவினிலே

என்று நாவுக்காக வேண்டும் நலமும்

சும்மா யிருக்கத் தெரியாது
சுகத்தைச் சொன்னல் விளங்காது
தாமா லென்றே தடுமாறுமிந்த
தரணியை ஆண்டிடவேண்டுமடி

என்று தாயிடம் முறையிடும் நேர்மை அருளும்

நாமே நமக்கு விரோதி
நாளும் நடக்குதிவ்வாறு உலகினிலே
பூமேற் காமக் 'ரோதமும் நம்மாலே
புனிதக் கற்பும் ஒழுங்கும் நமதாலே

என்ற உண்மைக் காட்சியும் தெளிவும்

இருக்கும்வரை ஈ,மறவாதே
ஈசன் என்றும் உண்டு

என்ற நம்பிக்கையும்

தனக்கென வாழ்தல் தாழ்வு
உனக்கென ஈ உலகில்

என்ற நம்பிக்கையும்

உயிரே போனலும் உண்மை
ஒழுக்கம் உறுதுணை

என்ற வீர உணர்ச்சியும்

படிப்பால் பணிவு. பண்பாலன்பு
பாரினிலே பார்வையில் தெளிவுந் தா

என்ற பிரார்த்தனையும் நல்லவர்களான பக்தர்களின் பரவச நிலையே பாடமாகச் சொல்லித் தரும். இதன்படி நடப்பதுதான் தெய்வீக வாழ்க்கை. ஆத்மஜோதி வழிகாட்டும். வாழ்க்கையில் தெய்வீகம் வாழ்க.

நாம் வாழப் பிறந்தவர்கள்' வாழ்வோம். சாவை நோவை வெல்வோம். சாந்தி சூழ்வோம். ஓம். ஓம். ஓம்.

## காமத்தினும் வலிமை மிக்க பகைவன்

காமத்தை வெற்றி கொள்வதை விடக் கோபத்தை வெற்றி கொள்வது அதிகக் கடினமானது. ஏனெனில் சாதகன் தன்னந்தனியே இப்பகைவனை எதிர்த்துப் போராட வேண்டியிருக்கிறது. காமவசப்பட்டால் சமூகத்தின் நன்மதிப்பை இழந்து விடுவோம் என்ற அச்சம் அதனுடன் மானசீகமாகப் போராட உதவுகிறது. ஆனல் கோபப்படுவதை ஒழுக்கக் குறைவெனச் சமூகம் கருதுவதில்லை. அதற்கு மாருகக் கோபம் என்னும் பகையை ஊக்கிவிட்டு அது சாதகனை அடியோடு அடிமைப் படுத்த உதவுவோர் பலர் உண்டு. பயித்தியக்காரனைத் தூண்டி விட்டு வேடிக்கை பார்ப்பதில்லையா! அதுபோலத்தான். பயித்தியம் பிடித்தவனுக்கும் கோபவசப் பட்டவனுக்கும் அதிக வேற்றுமையில்லை.

## ஆன்மீகப் பாதை

ஆன்மீகப்பாதை ஆரம்பத்திலே கடினமாகத்தான் தோன்றும். சாதனைகள் அலுப்பூட்டுவனவாயும் கவர்ச்சியற்றனவாயும் காணப்படும். நுகர்ச்சிப் பொருட்களைத் தியாகம் செய்வது துன்பமளிக்கும். சிலவேளைகளில் சோர்வும் அமைதியின்மையும் மேலிடும். ஆரம்ப சாதகர்களுக்கு இத்தகைய அனுபவங்கள் ஏற்படுவது இயல்பேயாகும். முயற்சித்து உறுதியுடன் முன்னேறினல் யாவும் சரியாய் விடும். புதிய உற்சாகமும் மகிழ்ச்சியும் தோன்றக் காண்பீர்கள். உங்கள் இதயத்துறையும் பரம்பொருள் தோன்ருத் துணையாய் நின்று உதவுவதை உணர்வீர்கள். அழிவற்ற ஆன்மீக இன்பத்தைச் சுவைப்பீர்கள். சீவன் முத்தர்களும் யோகிகளும் நித்திய சித்தர்களும் அமரபுருஷர்களும் போராடும் சாதகனுக்குக் கைகொடுத்து உதவுவார்கள். சாதகன் இதை நேரடியாக உணர முடியும்.

— சிவானந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீக வாழ்க்கைக்கான நல்லுரை.

## ஸ்ரீ சுவாமி சிவானந்தரின் 69-வது பிறந்த தினத்திற்கு (8 - 9 - 55) அன்னார் அருளிய அறவுரை!

தெய்வத்தின் வடிவமான அன்பர்களே!

கடவுள் எங்கும் இருக்கிறார். எல்லா ஜீவர்களுடையவும், உங்களுடையவும் அந்தரங்கத்தில் அவர் வாசம் செய்கிறார். நீங்கள் உலகத்தில் தோன்றி இருப்பதற்குக் கடவுள் தான் ஆதாரம். அந்தக் கடவுளுக்கு மிகத் தாழ்மையுடன் வணக்கம் செலுத்துகிறேன். அதே கடவுள் உங்களனைவருக்கும் பண்பட்ட உள்ளத்தையும், நிறைத்த அறிவையும், தூய்மையான மனதையும், அடங்கின புலன்களையும் தந்து ஆசீர்வதிப்பாராக! பிரம்மதேஜசுடன் சிறந்து விளங்கும் ஆத்மாவைக் கொண்டுவிளங்குங்கள்.

பணிவும், பகுத்தறிவும் பொருந்திய உண்மை உள்ளம் படைப்பின் ஒவ்வொரு அணுவிலும் ஆண்டவனின் மகிமையைக் கண்டு களிக்கும் அவன் ஒருவனே இருக்கிறான். ஏனையவையெல்லாம் தோற்ற மாத்திரமே. தோற்றம் தான் மாயை. உண்மையே கடவுள்.

சூரியனிலுள்ள வெளிச்சமும் சக்தியும், நீரிலமைந்துள்ள களைப்பை நீக்கும் குளுமையும், பூக்களிலுள்ள மனோரம்யமான சுகந்தமும், மலைகளின் கம்பீரத் தோற்றமும், உணவு வகைகளிலுள்ள சத்துப் பொருள்களும் அவனது பல்வகைத் தோற்றமே. இந்த அண்டத்தைப் படைத்துக் காத்து வரும் உயரிய சக்தி அவனே அதே சக்திதான் அன்பு. அந்த அன்பே கடவுள்!.

அன்பு அனைவரையும் ஒன்று சேர்க்கிறது. அன்பு உங்களை ஒரே உயர்ந்த உறுதிப் பொருளான கடவுளின் அருகே கொண்டு செல்கிறது. ஒற்றுமையில் பலம் மட்டுமல்ல, சாந்தியும் சமாதானமும் நிலவுகிறது. எங்கெல்லாம் இத்தகைய அன்பும் ஒற்றுமையும் போற்றி வளர்க்கப்படுகிறதோ, அங்கெல்லாம் ஆண்டவன் விஷேசமாக விளங்குகிறான் என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.

### உண்மையே உயர்வுறும்.

உண்மையின் உறைவிடமான கடவுளின் பல்வகைச் சக்திகள் எல்லா ஜீவர்களின் உள்ளத்திலும் அன்பை உருவாக்கி ஒற்றுமை சாந்தி, சமாதானம் இம்மூன்றையும் ஏற்படுத்த வகை செய்கிறது. தெய்வீகத்திற்குப் புறம்பான சக்திகள், நிழலின் ஏமாற்றும் தன்மை, இவைகள் ஒற்றுமையின்மையையும், வெறுப்பையும், சமாதானமின்மையையும், கொண்டுவிடுகிறது. தெய்வீகத்திற்குப் புறம்பான சக்திகள் சிறிது காலத்திற்குத் தங்குவதற்குக் கூட ஆண்டவனின் அளவிடற்கரிய அன்புதான் காரணமென்றால் மிகையாகாது! ஆண்டவனின் அருள் ஜோதி உலகத்தில் நிலவும் தீமைகளை நல்லதன் பெருமையை எடுத்துக்காட்ட உபயோகிக்கிறது உண்மையே உயர்வுறும். பொய்மை அல்ல! எப்பொழுதும் வெற்றி தெய்வீகத்திற்கே! வெறுப்பை அன்பு வென்று விடுகிறது, ஒற்றுமையின்மையோ ஒற்றுமைக்குக்கீழ்ப்படிந்து விடுகிறது.

இருதயத்தைத் துருவிப் பாருங்கள். மற்றவர்களை நீங்கள் நேசிக்கவில்லையா? மற்றவர்களால் நேசிக்கப்படுவதற்கு நீங்கள் விரும்புவதில்லையா? உலக மக்கள் சாந்தியுடனும் ஒற்றுமையுடனும் வாழ வேண்டும் என்றும், குட்டிச் சண்டைகளும்பெரும் போர்களும்இல்லாததாக வேண்டும்என்றும், ஒவ்வொருவருடைய உள்ளத்திலும்உணர்ச்சிகள் உண்டாகியிருக்கவில்லையா? அது தான் உங்கள் உள்ளத்திலிருந்து தோன்றும் ஆண்டவனின் பிரதித்வனி! அது தான் உண்மையின் சந்தேசம்!!

### தூய்மை பெறுங்கள்!

இருதயம் பரிசுத்தமின்றியதாக இருப்பதனாலும், மன உறுதிப்பாடு இல்லாத காரணத்

தாலும் மேற்கூறிய லட்சியத்தை அடைய முடியாது மனிதன் தவிக்கிறான். அவன் அவாவினால் நலிவுறுகிறான். தீய எண்ணங்களும் உணர்ச்சிகளும் பகுத்தறிவை மூடிக் கொள்வதனால் அன்பையும் ஒற்றுமையையும் அவன் உணர முடியாது தடுக்கப்படுகிறான்.

சுயநல எண்ணங்களை அகற்றி விடுங்கள். இந்த உலக இன்பங்களுக்கான உணர்ச்சியைக் கொன்றொடுக்குங்கள் அந்த நிமிடமே நீங்கள் பலவானாகி விடுவீர்கள். ஆண்டவனின் சக்தியின் பெரும் பகுதி உங்களை வந்தடையும். உண்மையே உருவான கடவுளின் தன்மையை நீங்கள் நன்கு புரிந்து கொள்வீர்கள். இத்தகைய ஆத்மீக சிகரத்தைச்சேர்ந்தவர்கள் நன்மையின் பெரும் சக்தியாக விளங்குகின்றார்கள்.

சுயநல எண்ணங்கள் பற்றுடைய சிந்தனையால் தவிர்க்கப்பட முடியாதவை, உங்களது ஒவ்வொரு எண்ணமும், சொல்லும், செயலும் ஆக்கத்தை உண்டுபண்ணும் சுயநலப் பற்றின்றிய அன்பின் சக்தி வாய்ந்த தோற்றமாக இருக்க வேண்டியது அவசியமாகும். சுயநலப் பற்றின்றிய அன்பு தெய்வீகமானது; சுயநலப்பற்றுடைய நேசம் பிரயோஜனமின்றியது. தொடர்ந்து சுயநலமின்றிய அன்பைக் கடைப் பிடிப்பதனால் உள்ளம் தூய்மை பெறுகிறது. தூய்மையான உள்ளத்தின் வழியே ஆண்டவனின் அருட்சக்தி பெருக்கெடுத்து ஓடுகிறது. தூய்மையான உள்ளத்தைக் கொண்ட மனிதன் கடவுளின் அவதாரமே! உலகத்தின் ஒப்புயர்வற்ற சக்தி அவன் தான்!! மனித சமூகத்திற்குப் பெரும் அருள் பிரசாதமாக அவன் விளங்குகிறான். அவனிலிருந்து சாந்தி. அன்பு, ஒற்றுமை, இவை ஒளி வீசுகின்றன; மனித சமுதாயத்திற்கான நல் வாழ்வின்வகை செய்கிறவனும் அவனே தான்!!

## நம்பிக்கையே ஆண்டவனைப் பிரதி பலிக்கச் செய்யும்.

உங்களை ஆண்டவனிடமுள்ள பக்தியால் பலப்படுத்திக் கொள்ளுங்கள். வெறும் வாதப் பிரதிவாதங்கள் அறியாமையின் சின்னமே நம்பிக்கை சாந்தியும் சமாதானமும் காண வழி வகுக்கிறது. வீண் பேச்சு ஓய்வின்மையை உண்டு பண்ணுகிறது. எவ்வளவு உருட்டி விழித்தாலும் கண் விழியைக் கண்ணாடியிலன்றிப் பார்க்க முடியாதது போல எவ்வளவுதான் தர்க்கித்தாலும் ஆண்டவனின் தன்மையை உங்களால் புரிந்து கொள்ள முடியாது. கண்ணாடிதான் நம்பிக்கை. நம்பிக்கை ஆண்டவனை பிரதிபலிக்கச் செய்கிறது; அறிவு ஆண்டவனை மறைக்கிறது. பகுத்தறிவென்ற விளக்கை வைத்திருக்கும் கை தான் ஆண்டவன். அந்த அறிவை ஆண்டவனின் தன்மையை அறிவதற்குப் பயன்படுத்துவது அர்த்தமற்றதேயாகும். வேண்டுவது நம்பிக்கையே. ஆண்டவன் இருக்கிறார் என்ற நம்பிக்கை, சன்யாசிகளுடையவும், ரிஷிகளுடையவும் உயரிய மொழிகளில் நம்பிக்கை, இவைகள் அந்தரங்க ஆனந்தத்தை ஏற்படுத்துகிறது. அத்தகைய சாந்த நிலையில் உங்களால் ஆண்டவனைக் கண்டு பிடிக்க முடியும். சாந்தியினுடையவும் அன்பினுடையவும்ஒற்றுமையினுடையவும் அவதாரமாக நீங்கள் விளங்குவீர்கள். உங்களிலிருந்து வெளிப்படும் எண்ணங்கள், மொழிகள் செயல்கள் அனைத்தும் சாந்தியையும் செழிப்பையும் முன்னேற்றத்தையும் கொண்டு உலகத்தையே பெருமளவில் நிரப்பிவிடும் நீங்கள் அனைவரும் சன்யாசிகளாகவும், யோகிகளாகவும், தபசிகளாகவும், ஜீவன் முக்தர்களாகவும் விளங்குங்கள்! உலகத்தில் சாந்தியும் மனிதனின் உள்ளத்தில் அன்பும் நின்று நிலவுமாக! அவனது தெய்வீக சக்தி இந்த அண்டத்தில் இன்றும் என்றும் வெற்றி பெறட்டும்! ஆண்டவன் உங்கள் அனைவரையும் ஆரோக்கியம், நீண்ட வாழ்வு, சாந்தி, முன்னேற்றம், உயரிய ஆனந்தம் இவைகளால் ஆசீர்வதிப்பாராக! ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

## ஒழுக்கமும், பக்தியும்.

உடல் நோயைக் குணப்படுத்துவதற்கு மருந்தும் பத்திய உணவும் தேவைப் படுவதைப் போலப் பிறவிப் பிணியை அகற்றுவதற்குப் பக்தியும் ஒழுக்கமும் அவசியமாகின்றன. பக்தியே மருந்து. நல்லொழுக்கம் உணவுக் கட்டுப்பாட்டைப் போன்றது. நல்லொழுக்கமின்றி ஆன்மீக வாழ்வு சாத்தியமில்லை. ஒழுக்கமின்றிச் செய்யப்படும் பக்தி வெறும் வெளி வேஷமாக முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனின் திரு அவதாரம்

(கி. வானமாமலை)

இவ்வுலகத்தையும் ஏனைய உலகங்களையும் படைத்துக் காத்து வரும் பெரும் சக்தியை இறைவன் என்கிறோம். அவ்விறைவன் தான் படைத்துள்ள சர்வ ஜீவராசிகளிலும் உள்ளுறைந்து நிற்கிறான். அன்பே உருவாக அமையும் இறைவன் அனைவரையும் இன்ப நிலைக்கு அழைத்துவர சதா முயற்சித்துக் கொண்டும் இருக்கிறான். அதற்காக அவ்வப்பொழுது மக்கள் பெரும் அளவில் தவறான வழிச் சென்று அதர்மத்தில் செல்கிற போதெலாம், மனித உருக்கொண்டு இப்பூவுலகில் தோன்றி மக்களுக்கு நல்வழி காட்டுவதாகக் கீதையில் தெரிவிக்கப் படுகிறது.

இதுவரை எத்தனையோ அவதாரங்கள் இவ்வுலகில் தோன்றியுள்ளன. அதிலும் நம் பாரத நாட்டில் தோன்றியுள்ள அவதாரங்கள் எண்ணிறந்தவை. அவை அந்தந்தக் காலங்களில் மக்களுக்கு வேண்டிய நல்வழியைக் காட்டியுள்ளன.

2500 வருடங்கள் முன்னால் மக்கள் தர்மத்தின் பெயரால் அறத்திற்கு மாறான பாதகங்கள் செய்யத் தலைப்பட்டபொழுது இறைவன் புத்தராகத் தோன்றி அன்பு வழியை மக்களுக்குப் போதித்தார். நல்லொழுக்கத்தைக் கடைப் பிடித்து, அன்பு வழியில் நிற்பதே சிறந்த தர்மம் என்றும் மற்றெலாம் வெளிவேஷம் என்பதையும் வற்புறுத்திக் கூறினார்.

சற்றேனும் பற்றின்றிச் சதா ஈசுரத் தியானத்தில் நிற்பவனே அந்தணன் என்பதை வலியுறுத்தினார். அன்பு நெறி உலகெங்கும் பரவத் தொடங்கியது.

ஆனால் அது தோன்றிய இந்தியாவில் சிறிது காலத்திற்குப் பின் சமயத்தின் பெயரால் பல அழிமதிகள் தோன்றலாயின. அப்பொழுது மீண்டும் இறைவன் தமிழ் நாட்டில் 2000 வருடங்கள் முன்னர் திருவள்ளுவராகத் திரு அவதாரஞ் செய்தார். 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அறம்', என்பதையும் 'கொல்லான் புலான் மறுத்தானை எல்லா உயிரும் கைகூப்பித் தொழும்', என்றும் 'அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்துண்ணாமை நன்று' என்றும் அறத்தின் சீரிய பெருமையை தெளிவாகத் தெரிவிக்கலானார். தர்மத்தை இன்னதெனத் தெளிவாகத் திட்ட வட்டமாகத் திருவள்ளுவர் தெரிவித்துள்ளார். இதன் காரணமாகச் சீரழிவுகள் சற்றே குறைந்து சமயம் சிறந்தோங்கியது.

மீண்டும் அதர்மம் தலை தூக்கத் தொடங்கியது. அப்பொழுது ஸ்ரீ சங்கரராக இறைவன் தோன்றி இறைவனின் அத்துவைத நிலையை எடுத்துக் கூறலானார். எள்ளுக்குள் எண்ணெய் போன்று எங்கும் இரண்டறக் கலந்திருக்கும் ஈசுவரனின் தன்மையை அனைவரும் உணருவதற்கான பல்வேறு வழிகளை வகுத்துக் கொடுத்தார்.

திரும்பவும் நம் நாட்டில் மதச் சண்டைகளும் சாதிப் பூசல்களும் தொடங்கின. தம்தம் மதமே உயர்ந்தது என்ற திமிர்வாதம் தலைதூக்கத் தொடங்கினது.

அந்நியர்களின் ஆக்கிரமிப்பு காரணமாக வேறு மதங்கள் நம் நாட்டின் புகுந்ததன் விளைவாக, ஏற்பட்ட இந்தக் குழப்படி நிலையைத் தெளிவுபடுத்த எண்ணி எம்பெருமான் ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்சராகத் தோன்றிச் சமய ஒற்றுமையைப் போதிக்கலானார். எல்லா மதங்களும் பெருமை வாய்ந்தவை என்றும் அனைத்தும் ஆண்டவனை அடையும் பல்வேறு மார்க்கங்கள் என்றும் எல்லா மதங்களுக்கும் அடிப்படையான வேதாந்தப் பாதையை மக்கள் பின்பற்ற வேண்டும் என்றும் பரமஹம்சர் பகர்ந்தருளினர். அவர்களது உயர் செய்திகளை உலகமறியச் செய்ய மற்றோர் அவதார புருடராகத் தோற்றிய ஸ்ரீ விவேகானந்தர் செய்துள்ள பெருந் தொண்டு நாம் அறிந்ததே.

இவ்வரிய அவதாரங்கள் தோன்றித் தோன்றி அவ்வப்பொழுது வழிகாட்டி வந்தும் பாசி மூடின குளம் போன்று மக்களை அறியாமை மீண்டும் மூடிக் கொள்ளத் தலைப்பட்டுள்ளது. சமயத்தின் பெயரால் பித்தலாட்டங்கள் அதிகமாகத் தொடங்கியுள்ளன. வெளிவேடமே உண்மை மதம் என்ற நிலையில் உலகம் செல்லத் தொடங்கி விட்டது. எவ்வளவு பாபத் தொழில்களைப் புரிந்தாலும் இறைவனின் பெயரை ஒருதரம் சொன்னால் போதும் அவை அனைத்தும் தீர்ந்துவிடும் என்ற மூட நம்பிக்கை மிகுந்து விட்டது. இறைவனின் பெயரைச் சொல்லிக் கொண்டே மகா பாதகங்கள் செய்யும் பான்மை பெருவாரியாக ஏற்படத் தொடங்கி விட்டது. போலிச் சமயவாதிகளின் பின் பெருவாரியான மக்கள் சென்று ஏமாந்ததன் விளைவாகச் சிறிது சிறிதாக நாஸ்திகம் தலை தூக்கத் தொடங்கி விட்டது. இந்த நிலையில் கருணை மூர்த்தியான கடவுள் ஜீவர்கள் பால் இரக்கம் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Serve, Love, give, purify, meditate, Realise.



நல்வழி காட்டவேண்டி மனித உருவில் மீண்டும் அவதாரஞ் செய்துள்ளார். அவ்வரிய அவதாரமே ''இமய ஜோதி'' ஸ்ரீ சுவாமி சிவானந்தர் அவர்கள்.

தர்மம் இன்னதுதான் என்பதை நாலே வார்த்தைகளில் ஸ்ரீ சுவாமி சிவானந்தர் தெளிவு படுத்தி விட்டார்கள். "சேவை - அன்பு - தியானம் - தெளிவு'' என்ற நான்கு பதங்கள் நம் மறைநூல்களில் அடங்கியுள்ள கருத்துக்களை எல்லாம் சிறப்புற விளக்குகின்றன.

உலகத்திலுள்ள உயிர்களெல்லாம் இறைவனின் சொரூபம் என்றெண்ணி அவற்றுக்குத் தன்னலமற்ற தொண்டு செய்வதன் மூலமாக அன்பைப் பெருக்கி நின்றால் தியான நிலையை அடைந்து இறை நிலையைப் பெறலாம் என்று சுருக்கமாகத் தெரிவித்துள்ளார்கள். இந்தக் கருத்தை அனைவரும் விளக்கமாக அறிவதற்காக 300க்கும் மேற்பட்ட பெரும் நூல்களையும் அவர் அருளியுள்ளார். இன்றைய மனிதன் இன்பத்தை அடைவதற்கு எவை எல்லாம் தேவையோ அவை அனைத்தும் ஸ்ரீ சுவாமிகளின் நூல்களில் அமைந்துள்ளன. சின்னம் சிறு குழந்தை முதல் முது கிழவன் வரை வாழ்வில் சிறப்புற்றுத் திகழ்வதற்குரிய நடைமுறை வழிகள் அங்கு தெரிவிக்கப் பட்டுள்ளன. அத்துடன் நிற்காது தாமே அறத்தின் உருவாக அமைந்து அன்பின் தோற்றமாக நின்று, மக்கள் பின்பற்ற வேண்டிய உதாரண புருடராகவும் விளங்கி வருகிற குருதேவர் ஸ்ரீ சுவாமி சிவானந்தர் புரியும் அற்புதங்களுக்கு அளவே கிடையாது.

குருதேவருடைய தொடர்பில், உலகில், லட்சக் கணக்கென்ன, கோடிக் கணக்கானவர்கள் வாழ்க்கையில் சிறப்புற்றுத் திகழ்கின்றனர். குருதேவரின் நூல்களே அன்பர்களோடு பேசுகின்றன! அனைவரையும் நல்வழிப்படுத்த விழைகின்றன!! நூல்களின் மூலம் குருதேவர் உலக மக்களுடன் தொடர்பு கொண்டு எல்லோரையும் அறப் பாதையில் செலுத்தி வருகிறார் என்றால் மிகையாகாது.

மரணப் படுக்கையில் கிடந்தவர்கள் எண்ணற்றவர் குருதேவர் கிருபையில் உயிர் பெற்றெழுந்துள்ளனர்! தற்கொலை செய்து கொள்ளப் போனவர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர்! ஒழுக்கத்தில் இழிந்தவர்கள் கை தூக்கி விடப்பட்டுள்ளனர்! வழுக்கி விழுந்தவர்கள் வாழ்க்கையில் முதலிடம் பெற்றுள்ளனர்! பிணியால் பீடிக்கப் பட்டவர்கள் நோய் நீங்கி நலம் பெற்றுள்ளனர்! தீய தொடர்பினால் நலிந்தவர்கள் நலம் பெற்றுச் சிறப்பெய்தியுள்ளனர்! இன்னும் எண்ணற்ற வகையில் குருதேவர் தொடர்பினால் இன்பம் எய்தியுள்ளோரின் தொகையைக் கணக்கிட முடியாது. இங்ஙனம் நலம் பெற்றவர்கள் நாடு, மொழி, மதம், ஜாதி, நிறம் ஆகிய வேற்றுமையின்றி உலகின் எல்லாப் பகுதிகளிலுமுள்ளனர் என்பதோடு அத்தகையவர்களின் தொகை பெருகியும் வருகிறது என்றால் குருதேவரின் அவதார மகிமையைச் சொல்லவும் போமோ!

''அவதார புருஷரால் ஆகாத காரியம் ஒன்றுமே கிடையாது. ஜீவனையும் ஆத்மனையும் குறித்த சூக்ஷ்மமான பிரச்னைகளையெல்லாம் அவர் வெகு சுலபமாகத் தீர்த்து விடுகிறார். அவருடைய போதனைகளை சிறு குழந்தை கூடத் தெரிந்து கொள்ளும். அவர்கள் பலகோடி காலங்களாகச் சேர்த்துள்ள அஞ்ஞானத்தை அகற்றும் ஒளியையுடைய திவ்விய ஞான சூரியர் ஆவார்'' என்று ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்சர் கூறியுள்ளார்.

இன்று சிறு குழந்தைகள் லட்சக் கணக்கில் குருதேவருடைய நூல்களைப் படித்துப் பொருள் தெரிந்து புகழ் பெற்று வருவதிலிருந்தே உண்மை புலனாகிறது. வேதாந்த விஷயங்களை இவ்வளவு தெளிவாகச் சொல்லி மக்களைப் பெருமளவில் நல்வழிப்படுத்திய பெரியார் இதுவரையிலும் வேறு யாரும் தோன்றியதில்லை என்றே கூற வேண்டும். குருதேவரின் நூல்கள் மொழிபெயர்க்கப் படாத மொழியே இவ்வுலகில் கிடையாதென்றால் வேறு என்ன சான்று வேண்டும் அவர் அவதாரம் என்பதற்கு?

இவ்வரிய அவதாரத்தைத் தமது குருவாகப் பெற்றவர்கள் பாக்கியவான்கள் - எப்பொழுது? குருதேவரின் உண்மைத் தன்மையை அறிந்து நடந்தால் தான்! அவரைக் கேவலம் மனிதனாகக் கருதுகின்றவர்கட்கு என்ன பலனுண்டாகும்? அவருடைய சீடர் என்று கூறிக் கொண்டு உலகை ஏமாற்றுகின்றவர்களுக்கு என்ன கதி நேரும்? இவ்வரிய குரு தேவருடன் பல வருடங்கள் இருந்து, நல்லுரைகளைப் பல காலம் கேட்டு, சற்றேனும் திருந்தாது கற்பூரம் சுமக்கும் கழுதை போன்றிருப்பதனால் பலன் யாதுண்டு? இவற்றையெல்லாம் விடப் படுமோசமாகக் குருதேவரின் கிருபையால் ஓரளவு சிறப்பெய்திய பின்னர் அவரது பெருமைக்கு இழுக்கு ஏற்பட வைக்க வேண்டும் என்ற கருத்துக் கொண்டு சுற்றித் திரியும் அறிவிலிகள் அருநரகு அடைவரன்றோ?

''குருவானவர் மகிமை வாய்ந்த கங்கா நதிக்குச் சமமானவர். அந்நதியில் ஜனங்கள் குப்பை கூளங்களையும் வேண்டாத பொருள்களையும் எறிந்த போதிலும் அதன் பவித்திரம் ஒருபோதும் குறைந்து விடுவதில்லை. அதுபோல் நிந்தனைகளாலும் வசைகளாலும் சத்குரு பாதிக்கப் படுவதில்லை'' என்று ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்ஸர் தெரிவிக்கிறார்.

''அவதார புருஷர்களை அறிந்து கொள்வது அரிதான காரியமாகும்'' எல்லையற்ற அகண்ட வஸ்து எல்லைக் குட்பட்ட கண்டத்துள் அடங்கியிருப்பதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பாகும் அவர்களது வாழ்க்கை.

ஸ்ரீ ராமபிரானை அவதாரமென்று அப்பொழுது அவர் காலத்தில் ஏழு ரிஷிகள் மாத்திரமே தெரிந்து கொண்டிருந்தனர்'' என்று கூறும் பரமஹம்சர் மேலும் தெரிவிக்கிறார். "தீபம் தன்னைச் சுற்றியுள்ள பொருட்களை விளக்கிக் காட்டுமாயினும் அதனடியில் எப்போதும் இருட்டாகத்தான் இருக்கும். அதுபோல் அவதார புருஷர்களுக்கு வெகு சமீபத்தில் இருப்பவர்கள் அவரைத் தெரிந்து கொள்வதில்லை. தூரத்திலிருப்பவர்கள் அவ் வவதார புருஷருடைய ஆத்மஜோதியாலும் அசாதாரணமான சக்தியாலும் மனங்கனிந்து இன்பமுறுகின்றனர்.

அவதார புருஷர்கள் சித்திகளைக் காண்பித்து நிற்க மாட்டார்கள். ''சித்திகளைக் கண்டு ஏமாறுதீர்கள்'' என்று உலகிற்கு எச்சரிக்கை விடுக்கிறார் நம் குருதேவர். சித்திகளைப் பிறரிடம் காட்டுவானேன்? ஏமாற்றுவதற்காகத்தானே? ஆனால் இன்று சித்திகளைக் கண்டு நிற்கும் போலி பக்தர்கள் நிறைந்த நம் நாட்டில் குருதேவருடைய உபதேசத்தை உணர்ந்து ஏமாற்றத்தில் சிக்காது தப்பி நிற்கின்றவர்கள் பலர்.

ஈசுவராவதாரமாகத் திகழும் குருதேவர் அடிக் கமலங்களைச் சார்ந்த பின்னர் வேறு நபர்கள் பின்னால் ஓடுவானேன்? அறியாமையால் தானே? அவரிடம் நம்பிக்கை இல்லாததால்தானே! ஆனால் நம்பிக்கை இருப்பதாகக் காட்டுவது ஏமாற்றமல்லவா?

ஆம்! அவதார புருடர்கள் வெளித் தோற்றத்தில் சாதாரணமானவர்களாய், எல்லாருடைய பார்வைக்கும் மனுஷ்ய ரீதியை உடையவர்களாய் இருப்பதால் அவர்களைத் தெரிந்து கொள்வது அரிதிலும் அரிது. இவ்வரிய பேறு எல்லாருக்கும் கிடைக்குமா? 'ஆயிரத்தில் ஒருவருக்குக் கூடக் கிடைப்பது கஷ்டம்' என்று கீதை கூறவில்லையா?

இதுவரையிலும் தோன்றியுள்ள அவதாரங்களின் சிறப்பை யெல்லாம் நம் குருதேவரிடம் காணலாகும். வெவ்வேறு கோணங்களிலிருந்து பார்ப்பவர்கட்குக் குருதேவர் அவரவர்களுக்குரிய முறையில் காணப்படுகிறார். பௌத்தர்களுக்குப் புத்தராகவும், கிறிஸ்தவர்களுக்கு ஏசுநாதராகவும் இஸ்லாமியருக்குப் பைகம்பராகவும், அத்துவிதிகளுக்கு ஸ்ரீ சங்கரராகவும், விசிஷ்டாத்துவைதிகளுக்கு ஸ்ரீ ராமானுஜராகவும், சைவர்களுக்குச் சிவமாகவும் தோற்றுகிறார். எல்லா மதத்தவர்களும் அவரை ஒன்றுபோல் வழிபடுகின்றனர். பிணக்குடைய சமயப் பிரிவினர் அத்தனைபேரும் குருதேவரைத் தம்தம் குருவாகக் கொண்டு ஒற்றுமையுடன் வணங்கி வருகின்றனர். ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா, ஐரோப்பா, ஆஸ்டிரேலியா ஆகிய ஐந்து கண்டங்களின் எல்லாப் பகுதிகளிலும் குருதேவரைப் போற்றும் பக்தர்கள் எண்ணற்றவர் இருக்கின்றனர்.

ஒரே கடவுளை உலகின் பல்வேறு பகுதியிலுமுள்ள மக்களும் எங்ஙனம் ஒரேமாதிரியாக வழிபடுகிறார்களோ, அதேபோல் நம் குருதேவரையும் உலக மக்கள் அனைவரும் ஒரே மாதிரியாகப் போற்றி வருகின்றனர். அனைவரும் தங்கள் தங்கள் வாழ்வில் பற்பல அரிய அனுபவங்களையும் பெற்றுள்ளனர் என்பதை அணுகினால் அறியக் கூடும்.

இப்போ அவதாரம், நம் தமிழ் நாட்டில் தோன்றி 'இமய ஜோதி'யாக உலகெங்கும் பரந்து நிற்பதைத் தெரிந்து உயர் நிலை அடைய அனைவரும் முயலுவார்களாக.

## உலகம் ஒரு பயிற்சிக் கூடம்

ஆன்மீக சாதனைக்கு உலகம் ஒரு தடையன்று. உலகம் மிகச் சிறந்த பயிற்சிக் கூடம். தினசரி அதில் பல அரிய பாடங்களைக் கற்றுக் கொள்கின்றோம். ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் யோக முறையிற் பயன்படுத்த அறிந்து கொண்டால் ஆன்மீகத் துறையில் வெகு விரைவில் முன்னேறலாம்.

— சிவானந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக மக்களின் உள்ளத்தில் சுவாமி சிவானந்தர்

## பழைய பண்பாட்டின் தூதுவர் சுவாமி சிவானந்தர்.

[டாக்டர் ஜோசப் பெபிரஸ்மீ, மேற்கு பர்லின், ஜெர்மனி]

மேலை நாடுகளில் பண்டைய இந்தியப் பண்பாட்டின் அற்புதத் தூதுவராக ஸ்ரீ சுவாமி சிவானந்தர் விளங்கி வருகிறார்.

எங்கள் சொந்த சமய வாழ்வைப் புதுப்பிக்கவேண்டி இந்தியப்பண் பாட்டின் ஆத்மீகப் புத்துயிர்ப்பு, எங்களுக்கு அவசரத் தேவையாக இருக்கிறது.

வெளியுலகை அடக்கி ஆள்வதிலேயே மேலை நாடு முயன்று வந்துள்ளது. அதே சமயம் அன்றும் இன்றும் என்றும் நின்று நிலவும் நித்திய ஆத்மனின் அந்தரங்க உண்மையை தெரிவதிலேயே இந்தியர்கள் நாட்டம் கொண்டுள்ளனர். நித்திய ஆத்மனைத் திரும்பவும் நாங்கள் கண்டு கொள்ள இந்திய முனிவர்கள் எங்களுக்கு உதவி புரிய வேண்டும்; நாங்கள் இந்திய மக்களின் பொருளாதார விஞ்ஞான வளர்ச்சிக்கு உதவுவோம்.

தெய்வீக ஜோதியை நாடி நிற்கும் சகல மதங்களினுடையவும், மனித சமுதாயம் முழுமையினுடையவும் நித்திய சகோதர உணர்ச்சியில் நான் ஸ்ரீ சுவாமி சிவானந்தரை வரவேற்று நமஸ்கரிக்கின்றேன்.

## சிறந்த ஆத்மீகத் தலைவர் சுவாமி சிவானந்தர்

ஹிஸ் எமிஸன்ஸ் கார்டினல்
(டாக்டர் வில்லியம் பிரெங்கிளின் உல்ஸீ, கனடா)

இமயமலைச் சாரலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்கள் தன் காலத்தில் தலை சிறந்த ஆத்மீகத் தலைவர்களுள் ஒருவர் ஆவர். ஆங்கில வைத்தியர் என்ற முறையில் அவர் பல வருடங்கள் வெற்றிகரமாகத் தொண்டு புரிந்துள்ளார். வைத்தியத் தொழில் புரிந்து வருகின்ற நிலைமையிலேயே, மனித சமுதாயத்தைப் புரிந்து கொள்வதில் தூல சரீரத்தை அணுகுவதையும்தாண்டி அப்பாலும் ஏதோ இருக்கிறது என்ற உண்மையை இப்புனிதர் தெரிந்து கொண்டார். அதன் பிறகு ரகசியமாக அமைந்துள்ள இவ்வதிசயத் தன்மை வாய்ந்த சக்தியைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் அவர் தமது வாழ்நாளை ஈடுபடுத்தலானார். அங்ஙனம் செய்வதில் அவர் கடவுளைக் கண்டார்! கடவுளுக்கே தம்மை அர்ப்பணித்த அவர் கடவுள் தன்மையை அடைவதற்கான சுய வளர்ச்சிக்கான வழியைப் பணிவுடன் பின்பற்றி வந்தார். அவர் இப்பொழுது சீரிய துறவியாக திகழ்கின்றார். கடவுளின் உண்மை புதல்வராகச் சிறந்து விளங்குகிறார். அவரது செயல்களே அவரிடம் அமைந்துள்ள ஆத்மீக சக்தியை நிரூபிக்கின்றன.

## ஏழைகளின் தோழன்!

(திரு. டேவிட் கிளாட்டர், மியாமி, பிளாரிடா, அமெரிக்கா)

''இமயஜோதி'' ஸ்ரீசுவாமி சிவானந்தரைக் கண்டு கொண்டால் ஒருவன் தன் வாழ்வின் லட்சியத்தைக் கண்டு கொண்டான் என்பதே பொருள். மனிதனின் மிக முக்கியத் தேவைகளைத் தீர்த்து வைக்கும் தன்மையுடையவரே அவர். யோகமார்க்கத்தில் சென்ற என்னை அது இவ்வரிய மகானின் ஜோதியைக்காண அழைத்துச் சென்றது.

எனக்கு வேண்டிய தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டி உலகில் நான் திரிந்து கொண்டிருந்த பொழுது சுவாமி விஷ்ணு தேவானந்தரைக் கண்டு பதிமூன்று அடிப்படை ஆசனங்களைக் கற்றுக்கொண்டேன். இந்தச் சுவாமியின் மூலம் மிகச் சிறந்த தெய்வீகத் தோற்றமாக விளங்கும் ஸ்ரீ சுவாமி சிவானந்தருடன் தொடர்பு கொள்ளலானேன்.

ஸ்ரீ சுவாமி சிவானந்தர் எனக்கு எழுதிய அருள் கடிதங்கள் அனைத்தும் பிணியால் அவதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுற்றவனுக்குரிய அருமருந்தாக அமைந்தன. அவரது அருட் கரங்கள் என்னை அணைத்துக் காத்து வருவதை அறிந்தேன். காரிருளில் அவரது ஆறுதலளிக்கும் குரலைக் கேட்டேன். அவரது திருவுருவம் காற்றின்முன் செத்தை போன்று தீமையை அறவே இல்லாதாக்கிறது.

இவ்வரிய மகரிஷி என்னுடன் நடக்கிறார்! என்னுடன்வாழ்கிறார்! எனது வாழ்வில் தோன்றிய பல இன்னல்களைத் தீர்த்து வைத்துள்ளார் குருதேவர் ஏழைகளின் தோழனாக விளங்கி வருகிறார்.

* * *

## ஜோதி எங்கிருந்து வந்தது?

(திரு பெர் விந்தர், சோப், ஜப்பான்.)

வானளாவும் மலைகள் சூழ்ந்த நார்வேயின் ஒரு பகுதியில் வயது முதிர்ந்த அறிஞர் ஒருவர் வாழ்ந்து வந்தார். பல விஷயங்கள் அவர் அறிந்திருந்தார். தவிர எதிர்கால நிகழ்ச்சிகளை முன் சொல்லும் ஆற்றலும் அவரிடம் அமைந்திருந்தது. உதாரணமாக ரஷிய ஷார் மன்னனுக்குப் பின் நடக்கும் நிகழ்ச்சியைப் பற்றி அவர் எழுதிய விவரத்திற்கு அரசனிடமிருந்து பதிலும் வந்தது. நான் பள்ளிப் பையனாகயிருக்கையில் எனது சொந்த ஊருக்கு வெளுத்ததலை முடியும் தாடியும் பொருந்திய அம்முதியவர் ஒருசமயம் வந்தார். தனது நீண்ட நரைத்த தாடியுடன் ஊரின் பொது விடத்தில் நின்று கொண்டு பழைய கால தீர்க்கதரிசியைப் போல் தனது வாழ்க்கையின் அனுபவங்களைப் பற்றி அங்குள்ளோருடன் அளவளாவிக் கொண்டிருந்தார். அவர் சொன்ன ஒருவாக்கியம் பசுமரத்திலாணி போல் என் மனத்தில் பதிந்தது. ''இந்தியா! ஒளி தோன்றுமிடம் இந்தியாவே! நான் அதை நம்பினேன். என் மனத்தையும் பறிகொடுத்தேன்''

இந்த ஜோதியை இந்தியா முழுவதும்-ஏன் உலகம் முழுவதுமே பரப்புவதற்காக நமது பெருமை மிகு குருநாதர்தனது வாழ்க்கை முழுவதையுமே அர்ப்பணித்திருக்கிறார். அவர் பலரைத் தம்முடன் தொடர்பு கொள்ளச் செய்து அவர்களுடைய வாழ்க்கையையே மாற்றி விடுகிறார். காலக்கிரமத்தில் அவர்கள் குரு தேவரது அன்பு, சேவை போன்ற குறிக்கோள்களைப் பரப்பும் திருத்தூதர்களாக மாறிவிடுகின்றனர்.

## என் குருதேவரைக் கண்டு கொண்டேன்!

(திருமதி. ஹெர்தா ஷிமிகல், பிரிடோயா, தென்னாபிரிக்கா)

உண்மையை நாடும் எனதுமுயற்சி முப்பது வருஷங்களுக்கு முன்னரே தொடங்கியது. பல பாதைகள் வழியும் சென்றேன். பல ஸ்தாபனங்களிலும் சேர்ந்தேன். புராணப் போதனைகள் பலவற்றையும் ஆராய்ந்தேன். அவை அனைத்திலும் எனக்கோர் செய்தி இருந்தது. அச் செய்தியில் என் வாழ்க்கையில் முன்னேற்றத்திற்கான பல படிகள் நிறைந்திருந்தன. எனினும் அவ்வப்பொழுது நான் முன்னேறிச் செல்ல வேண்டியதாயிற்று. அந்தச் செய்தியிலடங்கியுள்ள வழிமுறைகள் எனக்குப் போதாதவையாயின. இந்நிலைமையில், சென்ற வருடம் நான் பிரிடோரியா தெய்வ நெறிக் கழகத்துடன் தொடர்பு கொள்ளும் பாக்கியம் பெற்றேன். அவ்வரிய கழகம் குருதேவரின் சம்பூர்ண யோகத்தைப் பிரசாரம் செய்து வருகிறது ஸ்ரீ சிவானந்த குருதேவரின் சீடர். சுவாமி பிரம்மானந்தர் [மிக்கேல் லெவியன்] அதன் தலைவராகப் பணியாற்றி வருகிறார். கழகத்தின் செயல் முறைகள் என்னைப் பெரிதும் கவர்ந்தன. குருதேவரின் அகில உலகப் பொதுப் பிரார்த்தனையைக் கண்டு பேரானந்தமடைந்தேன். குருதேவருக்கு உடனே கடிதம் எழுதி அவரது சீடரானேன். ''இமயஜோதி'' ஸ்ரீ சுவாமி சிவானந்தர் பல்லாண்டுகள் வாழ்ந்து அன்பு, ஒளி, அறிவை அவனியெங்கும் பரப்ப ஆண்டவன் அருள் புரிவாராக.

## என் வாழ்க்கை எங்ஙனம் மாறியது ?

(திருமதி டோரி ஹாப், பெர்ன், சுவிட்சர்லாந்த்)

தெய்வநெறிக் கழகத்தின் பத்திரிகையான "Divine Life'' சஞ்சிகையைப் படிக்கும் பொழுதும் மற்றும் ஸ்ரீ சுவாமி சிவானந்தரின் நூல்களின் கடைசிப் பகுதியைக் கண்ணுறும் பொழுதும் குருதேவரிடம் சீடர்கள் கொண்டுள்ள அற்புத பக்தி மிகும் அரிய வார்த்தைகள் என்னை எப்பொழுதும் கவர்ந்து வருகின்றன.

இருபது மாதங்கள் முன்புதான் குருதேவர் என்னைத் தமது சீடையாக ஒப்புக்கொண்டார். அதற்கு முன் இவ்வரிய பெரியார் போன்றவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் நம்மிடையே இருந்து வருவதாக நான் கனவிலும் கருதினேனில்லை. நம்மிடம் அவர்கள் உண்மை அன்பும் பக்தியும் ஏற்படப் பாடுபட்டு வருகிறார்கள் என்பதையும் எண்ணினேனில்லை. என் வாழ்க்கையில் கண்ட ஆத்மீக அனுபவங்கள் மற்றும் குருதேவரின் தன்னலமற்ற அன்பிலிருந்தும் உதவியிலிருந்தும் சற்றேனும் பிரியாத உணர்ச்சியும் என் வாழ்க்கையைப் பெரிதும் மாற்றி விட்டது. நான் ரிஷிகேசத்திற்குச் செல்வேனு என்று எண்ணவே முடியாத நிலையிலிருப்பவன். ஆனால் என் மனத்திலும் உள்ளத்திலும் நான் சதா அங்கிருக்கின்றதாகவே தோன்றுகிறது. ஸ்ரீ சுவாமி சிவானந்தரின் லட்சியமும் போதனைகளும் பூரண வாழ்க்கை வாழப் பெரிதும் உதவி புரிகின்றன. ஏசுநாதரின் போதனைகளை இப்பொழுது நான் முன்னைவிட நன்றாகப் புரிந்து கொள்ள முடிகிறது. குழந்தைக் காலம் முதற் கொண்டே என்னைக் கலக்கி வந்த பல பிரச்னைகளுக்கு இப்பொழுது விடை தெரியத் தொடங்கி விட்டன.

குருதேவரின் பேருதவியால் மரண பயத்தை நான் வெல்ல முடிந்துள்ளது. இவ்வரிய குருதேவருக்கு நான் எவ்வகையில் நன்றி தெரிவித்தாலும் அது போதாது. ஒரு கூட்டிலிருந்து என்னை அவர் விடுவித்ததாகவே எனக்குத் தோற்றுகிறது. மேலும் என்னை அவர் முன்னேக்கிச் செலுத்துவார் என்பது உறுதி. ஆனால் நானும் எனது முயற்சியைக் கைவிடுதல் கூடாது. மேலும் பல வருடங்கள் குருதேவர் இப் பூவுலகில் வாழ்ந்து என்னைப்போன்ற பல்லாயிரக் கணக்கான சீடர்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்று இறைவனை இறைஞ்சுகிறேன்.

## ஆன்மீக முன்னேற்றம்

ஆன்மீக முன்னேற்றம் அகச் சார்புடையது. சாதனை மூலம் நீங்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தைத் திட்டமாகக் கணக்கிட்டறிய உங்களால் இயலாது. இரவு நேரத்தில் சந்தடியின்றி மொட்டு விரிந்து மலராவது போன்று, சாதனைகளால் அகத்தில் சிறுகச் சிறுக ஏற்படும் முன்னேற்றம் வெளியே தோன்றாமல் அமைதியாக நிகழ்கின்றது. எனவே மனந் தளர வேண்டாம். உயர்ந்த வாழ்வு வாழ வேண்டும் என்ற ஆர்வம் ஒருவருக்கு ஏற்படுவதே இறைவனது கிருபையின் திட்டமான அறிகுறியாகும். உளப் பூர்வமான சத்சங்கற்பம், அதாவது உயர்ந்த தூய எண்ணத்தோடு பிறக்கும் உறுதி, இறைவனருளாலேயே தோன்றுகின்றது. இந்த விநாடி நீங்கள் இருளில் உழன்று கொண்டிருக்கலாம். ஆனால் அடுத்த கணம் ஆன்மீக ஒளி உங்களிடம் சுடர் விட்டுப் பிரகாசிக்கக் கூடும். எனவே, இடையறாது சாதனை செய்து வாருங்கள்.

## மனக் கவலை மாற்றும் மருந்து

வாழ்க்கையைச் சரியாகப் புரிந்து கொள்ளுங்கள். இவ்வுலகில் எதுவும் பூரணமானதன்று. முழுமையும் பூரணத்துவமும் இறைவனிடம் மட்டுமே காண முடியும். இறைவனது நீதி முறையில் அசையாத நம்பிக்கை வையுங்கள். இறைவன் எதையும் எமது நன்மைக்கே செய்கிறார். உள்ளத்தை உயர்த்தும் நூல்களை ஓதுங்கள். உள்ளம் உருகிப் பிரார்த்தனை செய்யுங்கள். இறைவனது நாமங்களையும், லீலைகளையும், புகழையும் பாடுங்கள். மனத்திலுள்ள கவலைகளெல்லாம் மறைந்து மகிழ்ச்சி ததும்பும். நிகழ் காலத்தில் வாழுங்கள். தற்போதைய சூழ்நிலையிற் செய்யத் தக்கதைச் செய்து விட்டு மற்றதையெல்லாம் இறைவனுக்கே விட்டு விடுங்கள். உங்கள் நலத்தை அவர் கவனித்துக் கொள்வார். வாழ்க்கையில் எந்த நிலையையும் சமாளிக்கப் போதுமான சக்தி உங்களிடம் உள்ளது. கிரமமான சாதனை மூலம் இத் தெய்வீக சக்தியை வளர்த்துத் தினசரி வாழ்க்கையில் அதனை வெளிப்படுத்துங்கள்.

சிவானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜகத்குரு ஸ்ரீமத் சிவானந்த சுவாமிகளின் அருள்வாக்கு.

# சேவையின் சிறப்பு.

சேவை செய்ய எப்பொழுதும் தயாராக இருங்கள். தூய அன்புடனும், தயையுடனும் பணிவுடனும், சேவை செய்யுங்கள். சேவை செய்யும்பொழுது முணு முணுக்காதீர்கள்! முகத்தைத் தொங்கவிடாதீர்கள்! அப்படியாஞல் உங்களுடைய சேவையைப் பிறர் ஒப்புக்கொள்ள மறுத்துவிடுவார்கள். ஒரு பெரும் சந்தர்ப்பத்தை நீங்கள் இழந்துவிட நேரிடும். சேவை செய்யும் சந்தர்ப்பங்களை எதிர்பாருங்கள். ஒரு சிறிய வாய்ப்பையும் சிதறடித்துவிடாதீர்கள். சந்தர்ப்பங்களை உண்டாக்க முனையுங்கள். சிறந்த சேவைக்கான வழிவகைகளை வகுத்துக்கொள்ளுங்கள். அதற்கான வேலையைச் செய்யுங்கள்.

சேவை செய்வதிலேயே மிகுந்த பக்தி கொண்ட வாழ்க்கையை அமைத்துக்கொள்ளுங்கள். உங்களுடைய உள்ளத்தை சேவா உணர்ச்சியால் நிரப்புங்கள். மற்றவர்களுக்கு நன்மை செய்யும் முறையில் அமையுங்கள். இதற்கு மனத்தூய்மை மிக அவசியம். ஒழுக்கத்தை வளர்க்கவேண்டும். கருணை, நேசப்பான்மை பணிவு, பொறுத்தல், அருள் முதலிய உயரிய குணங்களை வளர்க்கவேண்டும். மற்றவர்களின் அபிப்பிராயம் உங்களுடையதற்கு மாறுபட்டதாக இருக்கும்பொழுது அவர்களுடன் குஸ்திக்குச் செல்லக்கூடாது. மனதின் தன்மை பலதரப்பட்டது. சிந்திக்கும் முறையும் பல வகையானது. கருத்து வேறுபாடுகள் மலிந்து கிடக்கின்றன. கருத்துக்களின் தரமும் பலவாக உள்ளன. அவரவர்களுடைய கோணத்திலிருந்து பார்க்கும்பொழுது தாங்கள் கொண்ட கருத்துச் சரியெனத் தோன்றும். ஆதலால் மற்றவர்களின் கருத்துக்கு இடமளியுங்கள். அவர்களுடைய கருத்துக்களை அனுதாபத்தோடும், சிரத்தையோடும் செவிமடுங்கள். அவர்களுக்கும் இடம் கொடுங்கள். உங்களது அகங்காரவலையிலிருந்து வெளியே வாருங்கள். பரந்த பார்வையைக் கொள்ளுங்கள். தாராள மனப்பான்மையை வளருங்கள். அப்பொழுது தான் வாழ்க்கை வளர்ந்து செல்லும்; இதயமும் பரந்து நிற்கும். மெதுவாகவும், இனிமையாகவும், பணிவாகவும் பேசுங்கள். அதிகமாகப் பேசாதீர்கள். வேண்டாத எண்ணங்களையும் அகற்றி விடுங்கள். கர்வத்தின் சிறு பகுதிகூட உங்களிடம் இருத்தல் கூடாது. கடு கடுப்பும், வெடு வெடுப்பும் தொலையவேண்டும். 'நான்' 'எனது' என்பதை அறவே மறந்துவிட வேண்டும். சுயநலத்தின் சாயை நிலவுதல் கூடாது. சேவையிலே தன்னை அர்ப்பணித்து விடவேண்டும். இந்த யோக்கிய தாம்சங்கள் உங்களிடம் இருக்குமாஞல், நீங்கள் உலகத்திற்கே உயர் ஜோதியாக விளங்க முடியும். உலகத்து உயிர்களுக்கு உயரிய வழிகாட்டியாகச் சிறக்க முடியும். அவர்களுக்கு ஆண்டவஞல் அளிக்கப்பட்ட வரப்பிரசாதமாக ஆக முடியும். உயரிய வாசனை பொருந்திய அருள் நிறைந்த புஷ்பம் தான் நீங்கள். அந்த வாசனை உலகத்தின் நான்கு திசைகளிலும் வீசிநிற்கும். புனிதத் தன்மை பொருந்திய புத்தர்பிரானின் உயரிய அவஸ்தையை நீங்கள் அடைய வழி பிறக்கும்.

சமூகத்திற்கு சேவை செய்யும்பொழுது ஜாக்கிரதையாக இருக்கவும். மேடைப் பிரசங்கம், சமூக சேவை முதலிய எல்லாவிதச் சுயநலமின்றிய சேவைகளும், பெயரையும், புகழையும், தரும். ஆஞல் இந்தப் பெயரும், புகழும் முளையிலே நம்மைக் கெடுத்துவிடும். அவைகளைப் பெரிதாக எண்ணுதீர்கள்; விஷமெனக் கருதுங்கள். மிகவும் பணிவாக நடந்து கொள்ளுங்கள். உங்களதுசரீரத்தின் ஒவ்வொரு அங்கத்திலும் இந்த உயர்குணம் செறிந்து விளங்கவேண்டும். பெயர், புகழென்ற மதுவால் பலர் மயங்கி மதிகெட்டுப் போயினர். அவர்களது முன்னேற்றம் தடைபட்டுள்ளது. ஆதலால் தான் நான் உங்களை மிகவும் ஜாக்கிரதையுடன் இருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

தைரியமுடன் முன்னேறுங்கள்!

வெற்றி நிச்சயம்!

அன்புமிகும் நண்பர்களே! தைரியமாக இருங்கள். வேலையில்லாமல் திண்டாடும் நிலையிலும் சந்தோஷத்தைக் கைவிடாதீர்கள். உண்பதற்கும் உடுப்பதற்கும் இல்லாமல் அவதிப்படும் நிலையிலும் மன நிம்மதியை இழந்துவிடாதீர்கள்! உங்களுடைய அடிப்படையான சுபாவம் சச்சிதானந்தமே! நமது தூல சரீரம் மறையும் தன்மையது. ஆதலால் சிரியுங்கள்! ஆனந்தக் கூத்தாடுங்கள்! ஓம், ஓம், ஓம்! என்று பாடுங்கள். ஆத்மானுபூதி அடையுங்கள்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரம்ம முஹூர்த்தம்.

ஸ்ரீ ஸ்வாமி சிவானந்தஜீ மகராஜ் அவர்கள், ரிஷீகேஸம்.

## உடல் - உயிர் பயிற்சிக்கு நல்ல காலம்.

### உஷா காலத்தின் மேன்மை.

காலை 3–30 மணியிலிருந்து 5–30 வரை பிரம்ம முஹூர்த்த காலம் தியானத்திற்கு ஏற்றது. நிம்மதியான துயிலுக்குப் பின் மனது தூய்மையடைந்திருக்கும் தண்மையாகவும், எந்த ஓசையற்றும் அமைதியாக இருக்கும். மனதில் சாத்வீகம் ஏற்பட்டிருக்கும். இந்த நேரத்தில் சூழ் நிலைகளிலும் சாத்வீகமே பரவியிருக்கும். அகமும், புறமும் ஒருமையுடன் அமர்ந்திருக்கும் தருணமிதுவே.

மனது ஒரு மாசற்ற வெற்றுக்கடிதம்போல் உலக சமஸ்காரங்களை அகற்றியிருக்கும்.விருப்பு வெறுப்புக்களை மனதில் ஊடுருவுவதற்கு வழியேயில்லை. எவ்விதத்திலும் நம் விருப்பம் போல் மனத்தை மாற்றியமைக்க இயலும், தெய்வீக உணர்ச்சி மிக எளிதாக மனதில் நிலை பெறும்.

யோகிகள்,பரமஹம்ஸர்கள்,சந்நியாசிகள் இமயமலையிலுள்ள ரிஷிகள், சத் சங்கத்தை நாடுமனைவரும் இக்காலத்தில் தியானத்திலிருப்பதால் அவர்களின் மனோ சக்திகளின் அதிர்ச்சி அலைகள் உலக முழுவதும் பரவி வரும். இந்த அலைகளின் வெள்ளத்தில் நாம் பெரு நன்மை அடையக்கூடும். தியானம் பிரயாசையின்றி எளிதில் சித்திக்கும்.

காலையில் எழுந்திருக்கும் பழக்கம் உமக்கில்லாவிடில் ஒரு அலாரம் கெடியாரத்தை வைத்துக் கொள்ளலாம். எப்படியாவது விழிப்பது பழக்கமாகிவிட்டால் பிறகு எவ்வித துன்பமுமிருக்காது. உன் மனோ நிலை உனக்குக் குறிப்பறிந்து கீழ்ப்படியும் ஊழியனுகும்.உன்னை தக்க காலத்தில் எழுப்பிவிடும்.

இக்காலத்தில் தியானத்திலிருந்து பயன்படுத்திக் கொள்ளாமல் கொரட்டைவிட்டு தூங்கிக் கொண்டிருந்தால் பெரு நஷ்ட மேற்படும். கும்பகர்ணனைப்போல் தூங்காமல் பரம யோகி ஞான தேவரைப் போல் அயர்வறும் அமரர்கள் அதிபதியை தொழுது வந்தால் மயர்வற மதி நலம் பெறுவீர்.

### நித்திய கர்ம அனுஷ்டானங்கள்.

காலையில் எழுந்தவுடன் மல-ஜலம் கழிப்பதைப் பழக்கத்தில் கொண்டு வா. அப்படிப் பழைய சமஸ்காரத்தில் மலச்சிக்கலிருந்தால் அதையகற்ற விழித்ததும் தியானம் செய். பின் ஒரு குவளை சூடான பால் அருந்தி மல-ஜலம் கழிக்கச் செய். மலச்சிக்கலகலாவிடில் பற்களை நன்ருகச் சுத்தம் செய்து கொள். உடனே ஒரு குவளை வெந்நீர் சாப்பிட்டு ஹடயோக அறிவியலில் இதை 'உஷா பாணம்' எனச் சொல்லப்படுகின்றது. திரி–பல நீரும் அருந்தலாம். இதற்கென திரி பல மாகிய கடுக்காய்-நெல்லிக்காய்–தானிக்காய் வகைக்கு இரண்டு இரவில் ஒரு குவளை நீரில் ஊறவைத்து அந்த நீரைக் குடிக்கலாம். அல்லது இம் மூன்று வகைகளைச் சமதையாக வேண்டுமளவுக்கெடுத்துக் கொண்டு இவைகளிலுள்ள பருப்புக்களை அகற்றித் தனித்தனியாகச் சூரணமாக்கி மூன்று சூரணங்களையும் சமதையாகச் சேர்த்து நீரில் ஒரு சிட்டிக்கையளவு விட்டுச் சாப்பிடலாம்.

இவ்வாருக மலச்சிக்கலை அகற்றி காலை எழுந்ததும் மல-ஜலம் கழித்தபின் பற்களை நன்ருகச் சுத்தம் செய்து சிரசிலிருந்து கால் வரை குளிப்பது நலம். குளிக்கும் போது கீழ்க் குறிப்பிட்டவாறு பன்முறை சொல்வது ஏற்றமாகும்.

'ஓம் நமோ நாராயணுய – ஓம் நமசிவாய'
கங்கா யமுனா சிந்து காவேரி
நர்மதா துங்கபத்ரா கோதாவரி — கிருஷ்ணு
சரஸ்வதி, சந்த்ர பாகா, ஸ்வர்ணமுகி'

குளிர் காலத்தில் குளிப்பதற்கு அசாத்தியமாயிருந்தால் தலையின் பேரிலும் முகத்திலும் நீரால் கழுவிக்கொள்ளலாம்.இது மூளையையும் கண்களையும் குளிரவைக்கும். மூடு பனியாயிருந்து நீரையே தொடுவதற்கு முடியாவிடில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மானசீக ஸ்நானம்' போதும். அதாவது பிரயாகிலுள்ள திரிவேணி, காசியிலுள்ள மணிகர்ணியாவில் குளித்ததாக மனத்தில் நினைத்துக் கொள், பரிசுத்தாத்மாவை மனத்திலமைத்து 'நான் பரிசுத்தாத்மன்' எனப்பலமுறை சொல். இதுவே 'ஞானஸ்நானம்' எனப்படும். இது பாபங்களைத் தகித்துப் பரிசுத்தமாக்கும்.

காலைக் கடன்களை முடிப்பதை விரைவில் நடத்த வேண்டும். இத் தொழில்களிலேயே காலம் கழித்தலாகாது. பிரஹ்ம முஹூர்த்த காலத்தை ஞாபகத்திலமர்த்தினவராய்ச் சீக்கிரத்தில் தயாராகி இந்தக் காலத்திலேயே ஜெபம் செய்.

கீதையையும் சமய நூல்களையும் படி. சித்த,பத்ம, சுகாசனங்களில் ஏதேனும் ஒன்றிலமர்ந்து தியானம் செய். தெய்வீக பேரானந்தத்தின் உச்சத்திற்கு வழிகோலிப்பிரம்மத்தின் மகத்தான நிலையையடை.வாயாக.

சந்தியா காலம்.

மாலை 5 மணியிலிருந்து 6–39 வரை, சூரியன், சந்திரன் (ஒளி மறைந்து இருள் வரும் வரை)சந்திக்கும் நிலைமை. பிரஹ்ம முஹூர்த்த காலம் போலவே சந்தியா காலம் தியானத்திற்கு மேன்மையானது. இவ்விரண்டு காலங்களிலும் சுஷும்ணு நாடி தாரை சுலபமாக வரும். எனவே தியானத்தில் மனம் நிலைத்திருக்க சிறு முயற்சியாலேயே கைகூடும்.இந்தக் காரணத்தால்தான் இக்காலங்களை ரிஷிகள், யோகிகள் புகழ்ந்து பேசுகிறார்கள். ஆத்மீக நூல்களும் அவ்வாறே உரைக்கின்றன.

மூக்கின் இருதுளைகளில் காற்று தாராளமாக உள் புகுந்தும் (பூரகம்) வெளிவந்தும் (ரேசகம்) இருக்குங்கால் சுஷும்ணு நாடி ஒழுங்குபடும்போது அனுகூலமான ஆசனத்திலமர்ந்து தியானித்து ஆத்மானுபவத்தை அடைவாயாக.

நீ தியானத்திற்கு உட்காருமுன் எப்போதும் 'ஓம்' என்னும் பிரணவத்தை 12 தடவைகள் ஒரே நிதானமாக சப்தத்தை எழுப்பி தாழ்த்திவிடு. உடன் தேவனும சங்கீர்த்தனம் பாடு. ஜபம் செய். தியானத்தில் அமர். இப் பழக்கங்களை நீ விரைவில் உன் மனத்தை மேல் நிலைக்குக் கொண்டு வரும். இதுவே உண்மை.

'நீ உலகில் யாத்திரைவாசி, பணி செய்யவே வாழ்வாயாக.'

## நீ ஆன்மாவே
(சுவாமி சிவானந்தர்)

உன்னுள் ஓர் ஆன்மா உண்டு, ஓராமா,
ஆத்மா அல்லது பிரம்மன் அல்லது சைதன்
உடல் உளத்தின் ஆதாரம் (யம்,
அனந்தானந்தமும் அறிவுமாகிய ஆன்மா.

உன்னுள் ஒரு புருஷன் உண்டு, ஓராமா,
அது சத்துச் சித்து ஆனந்தம்,
இவ்வுலகிற்கும் வேதங்களுக்கும் பிறப்
பிடம்,
நித்திய அமைதியும் தூய்மையுமாகிய
ஆன்மா.

உன்னுள் ஒளிகளுக்கொளி உண்டு,ஓராமா,
நித்தியம், தனிமுதல், அனந்தம்,
அனைத்துக்கும் அடிப்படை,
இசைவு, நிறைவாகிய 'ஆன்மாதீதம்'.
உன்னுள் ஓர் அழிவின்றிய சத்துண்டு,
ஓராமா,
உயிர், ஒளி, அன்பாகிய உள்பொருள்,
இந்த நாமரூபங்களின் பின்னணி,
அழகுந் தன்னொளியுமாகிய தலைசிறந்த
ஆன்மா.

உன்னுள் உள்ளாள்வோன் உண்டு, ஓராமா
ஒன்றானவர், சர்வவியாபகமானவர்,
அபின்னமானவர்,
இவ்வுலகின் முக்கிய ஆதாரம்,
பேரொளியும் மேன்மையுமாகிய
ஆன்மாக்களின் ஆன்மா.
உன்னுள் மறைவான ராச்சியாதிபர்
உண்டு, ஓராமா,
உன் எண்ணங்களின் இரகசிய சாட்சி,
விவரிக்கமுடியாத பேரொளியின் பரம்
பிரகாசம்,
அமைதியும் அடக்கமுமாகிய அழிவின்றிய
ஆன்மா.

'நேதி, நேதி'யென்று சுருதிகள் அழுத்தி
அறைகின்றன
நீ இவ்வுடல் உளமன்று,
நீ செயலின்றியவன், நிர்விகாரி,
நீ ஆத்மாவே, 'தத்துவம் அஸி' ஓராமா.
ஓம், சோகம், அல்லது சிவோகம்
என்பதைத்தியானி,
உடல், உளம், பிராணன், புலன்களை மறு,
என்றுந்தூய பிரகாசமான 'பிரம்மன்
நானே' என்றுணர்,
நீ இந்த ஆத்மாவென்றறிந்து பந்தமற்றிரு,
ஓராமா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கும் ஒரு பதி உண்டு

( சுவாமி நிர்மலானந்தா )

உலகுக்கே ஒரு தலைவன் இருக்கிறான். அவன்தான் ஆண்டவன். அவனை பல நாமத்தால் அழைக்கிறார்கள். அன்று பிருந்தாவனக் கோபிகளும் ஸ்ரீ ஸ்யாம சுந்தரனைத்தான் பரம பதியாக வரித்தார்கள். நாம் சகலரும் ஸ்திரிகளே. புருஷன்தான் பகவான். அவனே பதியாவான். நாமும் சதா அந்தப் பதியை மறவாது இதயத்தில் எண்ணி விட்டால் பிரபஞ்ச சுகத்தையும், பரலோக யோகத்தையும் அளிப்பான்.

வட இந்தியாவில் ஒரு பெரிய பணக்காரர் பெரிய மாடி வீடு கட்டி ஆனந்தமாய்த் தன் அழகு மனைவியுடன் வாழ்ந்து வந்தார். அந்த அம்மைக்கு உலக சுகத்தைத் தவிர வேறெதும் தெரியாது. சதா ஆசை நாயகனுடன் உல்லாசயாய் ஆடிப்பாடிக் காலம் கடத்துவாள். ஒருநாள் அந்தச் சீமானின் சீமாட்டி உணவு அருந்தி விட்டு தன் ஆசை நாயகனுடன் மாடிக்குச் சென்று தாம்பூலம் போட்டு வாசனை வஸ்துக்களும் அருந்தி அதி உல்லாசமாய் விளையாடிக் கொண்டு இருந்தார்கள். அந்தச் சமயம் ஒரு மகான் யாத்திரையாக வந்தவர் வெயில் கடுமை சகிக்காது நிழல் தரும் அந்தச் சீமான் வீட்டுக் கீழ்ப் புறத்தில் சாய்ந்து ஓய்வு கொண்டு சர்வ லோக நாயகனின் லீலைகளைச் சிந்தனை செய்து அதே நினைவில் திளைத்து இருந்தார். மகான்களுக்கு அவன் திருவிளையாடல் நடைபெறுவது தெரியத்தானே செய்யும்.

அந்தச் சீமானும் சீமாட்டியும் இந்த உலகில் இல்லாது ஆனந்தக் களிப்பில் மூழ்கிய சமயம் சீமாட்டி தன் வாய்த் தாம்பூல எச்சிலை ஜன்னல் வழியாகத் துப்பினாள். அதே இடத்தில்தான் அந்தப் பரமபுருஷன் மகான் சிந்தனை செய்து கொண்டு இருக்கிறார். அவர் மேல்தான் அந்தச் சீமாட்டியின் எச்சில் பட்டது. அதை அந்த மகான் இது நம் பரம பதியின் கிருபைதான் என்று நினைத்து மனம் அந்த சர்வேசுவரனை விட்டு நீங்காது இருந்தினார். பக்தர்களுக்குக் காணும் காட்சியும், அருந்தும் நீரும் அவன் திரு உருவாய்த்தான் தெரியும். அவர்களுக்கு மண்ணும் பொன்னும் ஒன்றே. பெண்கள் அனைவரும் அவர்கள் கண்ணுக்கு சர்வேஸ்வரியாகவேதான் தெரியும். வேறு எதைக் காண்பார்கள்.

அந்தச் சீமாட்டி தன் எச்சில் துப்பி விட்டு அந்த மகானைக் கண்டு மனதில் இந்தப் பிச்சைக்காரன் ஏன் இங்கு வந்து கிடக்கிறான். இந்த வீட்டுப் புறம் இவர்களுக்குச் சோம்பேறி மடம் போலும். தன் மேல் எச்சில் பட்டும் அசையாது கிடப்பதைப் பார், ஊர் சுற்றி விட்டு அயர்ந்து தூங்குகிறான் என்று பலவிதமாய்த் தான் இன்பத்தை நினைத்து தூற்றுகிறாள். இந்த மகான் தன் உடம்பில் ஏதோ குளிர்ச்சி தெரிவதைக் கண்ட போது அந்தச் சீமாட்டியின் இரைச்சலும் செவியில் பட்டது. மகான் தலையைத் தூக்கி மேலே பார்த்தார். அங்கு ஒரு இளம் ஸ்திரி அலங்காரம் செய்து கொண்டு வாயில் வந்த படி தூற்றிக் கொண்டு இருப்பதைக் கண்டார். தாயே பராசக்தி இந்த அடியான் மீது கருணை போலும். இந்தத் திருவாய் எச்சில் பட வேறு இடம் இல்லாது இந்தப் புண் உடம்பில் பட்டதே பரவாயில்லை. அம்மா நீ சிரஞ்சீவியாய் வாழ்வாயாக என்று வாழ்த்தினார். அப்போது ஏ சோம்பேறி! என் வீட்டுத் தாழ்வாரத்தில் கிடந்ததும் தவிர என்ன திமிர் பார். அவன் பார்வையைப் பார். ஆசீர்வாதம் புரிகிறானும். எழுந்து போகாமல் அடம் பிடிப்பதைப் பார் என்று வசைமாரி பொழிந்தாள்.

அந்தப் பரம மகா புருடன் 'அம்மா தாங்கள் ஏன் கஷ்டப் படுகிறீர்கள்? நீங்கள் வசதியாய் வாழுங்கள். நான் இதோ புறப்படுகிறேன்' என்று எழுந்தார். இதற்குள் அந்தச் சீமாட்டி தன் பதியிடம் விபரத்தைச் சொல்ல அந்தப் பிரபு உடனே தன் அழகு வாணியின் ஆணையை நிறைவேற்ற வேண்டிக் கீழே வந்து அந்த ஞானியை நையப் புடைத்துக் காயப்படுத்தி விட்டு வாயில் வந்தபடி திட்டினார்.

அந்த மகானும் தனக்கு நேர்ந்த இன்னல் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளவில்லை. ஏ! பிரபு பரமபதியே இதுதான் உன் லீலை போலும். ஏனோ; இந்த விளையாட்டு என்று தன் சிரத்தில் வடிந்த இரத்தத்தைத் துடைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக் கண் திறந்தார். எழுந்த போது எழுந்திருக்க இயலவில்லை. சரீர வதையை நினைக்கவில்லை. பகவத் திருவிளையாடலையே கண்டார். இந்த அடியைப் பெற்றும் இந்தப் பிச்சைக்காரன் எழுந்தும் போகவில்லை. ஏதும் செய்யவில்லையே. இது உயிர் இல்லாத பிரேதம் போலும் என்று நினைத்து மாடிப் படிகளில் ஏறி மேலே சென்றான். ஆனால் அவன் உள்ளத்தில் ஏதோ காட்சி தெரிந்தது. மயக்கம் கொண்டு மேல் மாடியிலிருந்து தலைகீழாக வந்து அந்த மகான் திருவடியில் வீழ்ந்தான். மண்டையும் உடைந்தது. மார்பிலும் அடிபட்டது. உயிர் பகவத் சரணத்தைச் சேர்ந்து விட்டது. உடல் மகானின் திருவடியில் இரு தாழ்களையும் பற்றிய வண்ணம் கிடந்தது.

அந்த மகான் 'ஏ! கருணாநிதே ஏன் இப்படி இந்த இளம் வயதில் இந்த ஜீவனைப் பிரித்தாய்?' என்று ஸ்மரித்தார். அந்தச் சீமாட்டியும் தன் பதியின் பரிதாப நிலையைக் கண்டு கோவென்று புலம்பிக் கொண்டு இருந்தாள். அப்போது அந்த மகானிடம் இந்தப் பேதை தங்கள் பால் காட்டிய அக்கிரமத்திற்கு வாழ் நாள் முழுவதும் துக்கப் படவேண்டி வந்ததே என்னை மன்னிக்கவும் என்று வேண்டினாள். அந்த மகான் 'அம்மா நீங்கள் உங்கள் பதியிடம் சொல்லி இந்த உடம்பைக் காயப்படுத்தினீர்கள். ஆனால் என்னுள் விளங்கும் பதி நான் ஏதும் சொல்லாமலே தானே வந்து தன் பக்தன் பால் இரங்கித் தன் கருணையைக் காட்டினான் என்றார்.

இன்றும் நாம் பல அநுபவமான காட்சிகளைக் காணத்தானே செய்கிறோம், பகவான் தலைமைப் பதியாய் இருப்பதால் தன் பக்தனுக்கு யாரும் கஷ்டம் தருவதைப் பார்க்க மாட்டான். உடனே சரியான தண்டனை தருவான். எத்தனையோ மகான்களைப் பலர் இம்சித்த போது அவர்களுக்கும் சரியான பாடம் கற்பித்தான் என்று படித்தோம் அல்லவா? சாதுக்களையும் சந்நியாசிகளையும் மதிக்க வேண்டும். இல்லை அவமரியாதை செய்யக் கூடாது. அவர்கள் மான அபிமானம் அற்றவர்கள். இவைகள் பகவானின் பரீட்சை என்றுதான் எண்ணுவார்கள். ஆனால் கைமேல் நமக்குக் கிட்டும். அவர்கள் இறைவன் அருள் பெறுவார்கள். பரம பதியே சரணம். இப்படியே பரமபதி உலகம் போற்றும் மகான் ஸ்ரீலஸ்ரீ சிவானந்த மகராஜுக்கும் துணை செய்தான்.

இமயத்தில் பிரகாசிக்கும் இமய ஜோதி சற்குருநாதன் ரிஷிகேசம் சொர்க்கா கிராமத்தில் வாசம் செய்த போது வடநாட்டுக்கார நிர்வாகிகளுக்கு இந்தத் தென்னாட்டுச் சாமியாரினால் தானே பெயர் வெளிவருகிறது. நம் ஆச்சிரமத்துப் பெயர் மறைந்து விடும் என்று நினைத்து சற்குருநாதர் பகவத் நாமப் பிரச்சார நிமித்தம் வெளியூர் சென்றபோது அறையில் இருந்த சாமான்களை அப்புறப் படுத்தினார்கள். திரும்பி வந்த போது விபரம் அறிந்து இனி இக் கரையை விட்டு அக்கரை போவதில்லை என்று ஆரம்பித்த ஆனந்த குடீரம்தான் தெய்வீக வாழ்க்கைச் சங்கமே தான் இன்று வெள்ளி விழா கொண்டாடுகிறது. அந்த ஸ்தாபக கர்த்தாவின் திருநாமம் உலகம் முழுவதும் பிரகாசிக்கிறது. பல்லாண்டு பல்லாண்டு வாழவேண்டும் சற்குருநாதர்.

தெய்வீக வாழ்க்கைச் சங்கம் வாழ்க.
ஜெய் குருதேவ். ஜெய் பிரபு.

## பற்றுதலகற்ற கோட்பாடு

கடவுளை அறிய விரும்புவாயானால், கட்டுக் கடங்கா மனோ விகாரங்களை அடக்கி ஆள வேண்டியது அத்தியாவசியமாகும். மனோ நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாகாது. இவ்வாறு கூடா ஒழுக்கத்தால் பற்றுதலறுக்கும் தன்மையை அடைவாய்.

— சிவானந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தேகம் வேண்டாம்!

[ கா. பொ. இரத்தினம் ]

இந்த உலக வாழ்வே கண்கண்ட வாழ்வு. இந்த உலக வாழ்வின் பின் மக்கள் அடையும் நிலை பற்றிப் பலரும் பலவாறு கூறுவர். பல் வகைச் சமயங்கள் தம்முள் மாறுபட்ட கருத்துடையனவாக முரண்படுகின்றன. நரகம் சுவர்க்கம், மறு பிறப்பு முதலியன உண்டு என்பாரும் இல்லை என்பாரும் உளர். கருதல் முதலிய அளவைகளான் அன்றிக் காட்சி அளவையான் இறப்பின் பின் மக்கள் நிலைமையை அறிதல் சாலாது. எனவே, இவ்வுலக வாழ்வே உறுதியானது; ''கண்டதே காட்சி, கொண்டதே கோலம்'' என வாழ்வதே இன்ப வாழ்வு என வாதிடுவாரும் உளர். இதனால் மக்கள் பலருடைய உள்ளத்தில் இவ்வுலகில் நல்வினை செய்ய வேண்டுமா? ஒழுக்கமாகக் கட்டுப்பட்டு வாழ வேண்டுமா? எனும் ஐயங்கள் பிறக்கின்றன. இந்த ஐயங்களால் அறிவு சிறக்காமல் உணர்ச்சி பிறழ்ந்து மக்கள் பலர் தம்மையும் சமுதாயத்தையும் கெடுக்கின்றனர்.

இத்தகைய ஐயங்களை உடையவர்களுக்குச் சிறந்த முறையில் கோப்பெருஞ் சோழன்எனும் அரசர் அறிவுரை கூறியிருக்கிறார்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் அவர் கூறிய இந்த அறிவுரை அன்றும் இன்றும் என்றும் பொருத்தமுடையதாக மிளிர்கிறது; அறிவுக்கு விருந்தாகத் தருக்கத்துக்கு இசைந்ததாக உள்ளத்தைப் பிணிப்பதாக இருக்கிறது. படிக்கப் படிக்க அரசரின் பேருள்ளத்தைவும், ஆராய்ச்சித் திறனையும், உண்மையை உணரும் ஆற்றலையும் புலப்படுத்துகிறது.

இவ்வுலகத்து மக்கள் ஒவ்வொருவருடைய வாழ்வுக்கும் ஓர் உயர்ந்த குறிக்கோள் இருத்தல் வேண்டும். எவ்வகைத் தொழிலைச் செய்து எந்நிலையில் வாழ்ந்தாலும் இக்குறிக்கோள் இன்றியமையாதது. இக்குறிக்கோளின்றேல் மக்கள் வாழ்வு மலர்ந்து சிறந்து ஓங்கவழியில்லை; அவர்களுடைய தனி வாழ்வும் சமுதாய வாழ்வும் இசைந்துஇடர்ப்பாடின்றிஉயர முடியாது. எனவே இறப்பின் பின்பிற உலகில் மறு பிறப்பில் பெறும் நன்மைகளைநம்பாதவர்களுக்கு இவ்வுலகில் அவர்கள் அடைய வேண்டிய சிறப்பை அரசர் சுட்டிக் காட்டு கிறார். அவர் கூறும் சிறப்பு-குறிக்கோள்- தமிழினம் 'விழுமியது; இன்றியமையாதது' எனக் கொண்ட குறிக்கோளேயாகும். எனினும் இதை அவர் நம் உள்ளத்திற் பதிய வைக்கும் முறை ஈடிணையற்ற முறையாகவுளது.

''யானை வேட்டை மிகவும் அரிய செயல். துணிவும் வீரமும் மிக வேண்டிய செயல். அபாயம் நிறைந்த செயல். இத்தகைய வேட்டைக்குப் போகும் ஒருவன் யானை வேட்டையாடி வெற்றி பெறவும் கூடும். காடை முதலிய பறவைகளை வேட்டையாடுதல் மிக இலகுவான செயல். எவரும் எவ்வகை அபாயமுமின்றிச் செய்யத் தக்க செயல். காடை வேட்டையாடச் சென்றவன் வெற்றி அடையாமல் வெறுங்கையுடன் திரும்பவுங் கூடும்.

எனவே, அரிய பெரு முயற்சிகள் இலகுவில் பயன் தர மாட்டா என்றோ இலகுவான சிறு முயற்சிகள் உறுதியாகப் பயன் தரும் என்றோ கூறல் முடியாது. ஆகவே, இலகுவிற் பயனடையலாம் என்று சிறு முயற்சிகளை மட்டும் நாட வேண்டாம். பெரு முயற்சிகளை விரும்புங்கள். உள்ளும் முயற்சிகள் யாவும்-விரும்பும் வினைகள் யாவும் பெரியனவாயிருத்தல் வேண்டும்.

உயர்ந்த விருப்பத்தையுடையவர்கள்தான் உயர்ந்தவர்கள். இத்தகையோர் செய்யும் முயற்சிகளால் பயன் உண்டாகுமானால் அவர்கள் மேலுலகில் அதனை அனுபவிப்பார்கள். அவ்வாறு ஒருலகில்லை. அப்படி அனுபவிக்கவும் மாட்டார்கள் எனின் மறுபிறப்பிலாகுதல் அவர்கள் அனுபவித்தல் கூடும். அப்படி மறு பிறப்புமில்லை; மறு பிறப்பு இருந்தாலும் அப்பிறப்பில் அவர்கள் அதன் பலனை அனுபவிப்பார்கள் என்பதற்கு என்ன சான்று உண்டு. என்று வினவினுல் அதனையும் விட்டு விடுவோம் இப்பிறப்பிலேயே அவர்கள் தம் பெரும் செயலால் பெரும் புகழை நிறுவலாம்; இமய மலையின் உயர்ந்த சிகரம் போல உயர்ந்து நிலைத்து விளங்கும் புகழை ஈட்டலாம். இறக்கும் பொழுது பழி சுமக்காத உடம்போடு இறக்கலாம். இவ்வுலகத்திலே பெறும் இப்புகழும் பழியின்மையும் கண்கண்ட பயன்களாக இருக்கும். எனவே சந்தேகம் வேண்டாம்.

எவ்வகையாக ஆராய்ந்தாலும் பெரும் முயற்சி செய்தலே மக்களுக்குக் குறிக்கோளாக இருத்தல் வேண்டும். இக்குறிக்கோளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயல்வோர் மறு உலகமோ மறு பிறப்போ இல்லை என்பார்களாயினும் அவர்களுடைய உயிருக்கு இவ்வுலகில்; இப்பிறப்பில் இசை உண்டு; உடம்புக்குப் பழி செய்யாத உடம்பு என்ற பெயருண்டு'' என்று அரசர் கூறுகிறார்.

''இந்த உண்மைகளை உணராமல் நல்வினைகளைச் செய்தற்குப் பல ஐயங்களை எழுப்புகிறவர்கள் அறிவில் அழுக்கு இருக்கிறது. உள்ளத்தில் துணிவு இல்லை'' என்றும் அரசர் சுட்டிக் காட்டுகிறார்.

இனி அவருடைய பாடலைப் படிப்போம்.

''செய்குவங் கொல்லோ நல்வினை எனவே
ஐயம் அருஅர் கசடு ஈண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவில்லோரே;
யானை வேட்டுவன் யானையும் பெறுமே,
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே
அதனால்
உயர்ந்த வேட்டத்து உயர்ந்திசினோர்க்குச்
செய்வினை மருங்கின் எய்தல் உண்டெனில்
தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கூடும்;
தொய்யா உலகத்து நுகர்ச்சி இல்லெனின்,
மாறிப் பிறப்பின் இன்மையுங் கூடும்;
மாறிப் பிறவாராயினும், இமயத்துக்
கோடு உயர்ந்தன்ன தம் இசை நட்டுத
தீது இல் யாக்கையொடு மாய்தல் தவத்
தலையே''

(அருஅர்-நீங்கார்; கசடு-அழுக்கு; ஈண்டு-செறிந்த காட்சி-அறிவு; குறும்பூழ்—காடை; வறுங்கை-வெறுங்கை; வேட்டத்து-விருப்பத்தையுடைய; உயர்ந்திசினோர்க்கு-உயர்ந்தோர்க்கு: எய்தல்-நுகர்தல்; தொய்யா உலகம்-சோர்வில்லாத இன்ப உலகம்; கோடு-சிகரம்; இசை-புகழ்; யாக்கை-உடம்பு; தவ-மிக; தலையே-சிறந்ததே.)

## ஆன்மீக உணவு

உடலுக்கு உணவு தேவைப்படுவது போல உயிருக்கு உணவு தேவை. பிரார்த்தனை, ஜபம், சங்கீர்த்தனம், தியானம் முதலிய ஆன்மீக சாதனைகளே உயிருக்குத் தேவைப்படும் உணவு. குறிப்பிட்ட நேரத்தில் வயிற்றுக்கு உணவு கிடைக்கா விட்டால் அமைதியை இழந்து விடுகிறோமல்லவா? சில நாட்கள் தொடர்ந்து பிரார்த்தனை, ஜபம் முதலியவற்றைக் கிரமமாகச் செய்து வந்த பின், ஒரு நேரம் அவற்றைச் செய்யாமல் விட்டாலும் அத்தகைய அமைதியின்மை ஏற்படும். உடலைப் போலவே உயிருக்கும் வேளா வேளைக்கு உணவு தேவைப்படுகிறது. சொல்லப்போனால் உடலை விட உயிருக்குத்தான் உணவு அதிக முக்கியமானது. தூல சரீரத்தின் வளர்ச்சிக்கு உணவு எப்படி அவசியமாகிறதோ? அதுபோல சூக்கும சரீரத்தின் வளர்ச்சிக்கு ஆன்மீக உணவு அவசியம். ஜபம் தியானம் ஆகியவற்றை நீங்கள் கிரமமாகச் செய்து வராவிடில் சூக்கும சரீரம் பலவீனமடைந்து விடும். அப்போது தீய எண்ணங்களையும் தீய சமஸ்காரங்களையும் எதிர்க்கும் சக்தி குறைந்து விடும், சாதனைகளில் மிகக் கிரமமாக இருப்பதன் அவசியத்தை இப்போது உணர்கிறீர்களா?

## மனிதன் உயர்த்தும் மாபெரும் சக்தி

தன்னலமற்ற சேவையே மனிதனை உயர்த்தும் மாபெரும் சக்தி என்பது உனது உறுதியான நம்பிக்கை. மனிதனது குணவியல்பை எல்லா வழிகளிலும் வளர்த்து, அவனுக்கு மனிதத் தன்மையை அளித்து அவனிடம் தானாகவே ஆன்மீக விழிப்பு ஏற்பட அது உதவுகின்றது. சேவையின் மூலமே நற்குணங்களை வளர்க்க முடியும். அடிப்படையான நற்குணங்களில்லாவிடில் ஆன்மீக அனுபவம் வெறும் கனவாகவே இருக்கும். சகிப்புத் தன்மை, சமத்துவம், கருணை, சகோதரத்துவம், அனுசரித்துப் போகும் பண்பு, பணிவு, பரந்த மனப்பான்மை ஆகிய உயர் குணங்களைப் பற்றற்ற சேவை புரிவதன் மூலமே வளர்க்க முடியும். வைரம் சுய ஒளியுடன் பிரகாசிப்பதற்குப் பட்டை தீட்டப் படுவதைப் போல, பக்குவமடையாத சாதகன் பற்றற்ற சேவையின் மூலம் பல்வேறு வகையான மனப்பான்மைகளைக் கொண்ட மக்களுடன் பழகி, உராய்ந்து, பண்பாடடைவது அவசியமாகும்.

சிவானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நந்திகேசுவர அவதாரம்

( ஸ்ரீமாதாம்பா — ஈங்கோய்மலை )

எந்த மதத்தினரின் சந்தேகங்களேயும் எளிதில் அகற்றுகின்ற எமது ஸமாஜ குருஜீ (ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமி அத்வயானந்த சரஸ்வதி) அவர்களிடம் சிவபக்தர்கள் சிலர், தங்களுக் குற்ற அநேக ஐயங்களை நீக்கிக் கொண்ட பின்னர், நந்திகேசுவரரைப் பற்றிய சரிதத் தைச் சொல்லியருள வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்காக, குருஜீ அவர்கள் சொல்லிய நந்தியின் சரிதத்தை இங்கே எழுதுகின்றேன். இது சிவ புராணத்திலுள்ளதென்று கூறினுர்கள்.

சிலாதர் என்னும் முனிவர் ஒருவர் இருந் தார். அவர் பெரிய தர்மாத்மா. அவர் தன் பிதிருக்களின் கட்டளைப்படி, உதரத்தில் உதிக் காமலும், மரண மற்றவனும், நல்ல விரத சீலனுமான ஒருபுத்திரனை அடைய விரும்பினுர். இதற்காகத் தவம் புரிந்து தேவேந்திரரை மகிழ்வித்தார். ஆனுல், தேவேந்திரரானவர் எதிர் தோன்றி, ''இத்தன்மைய புதல்வனை அளிப்பதற்கு எனக்கு சக்தியில்லை. நீர் சர்வே சுவரரையும், மகாசக்தி சாலியுமாக இருக்கின்ற மகாதேவரைக் குறித்துத் தவம் செய்யுங்கள்'' என்று சொல்லிச் சென்றுவிட்டார்.

தேவேந்திரரது வசனங்களைக் கேட்ட சிலாத முனிவர் சிவபெருமானைக் குறித்துத் தவம் இயற்றினுர். இவரது பெருந்தவத்தினுல் சந்தோஷ மடைந்த பரமன், சிலாதர் முன்னே காட்சியளித்தார். ஆனுல், மகா சமாதிநிலையை அடைந்துள்ள சிலாதர், தன்முன் இருக்கின்ற சிவபிரானைக் கண்டிலர். இவரது நிலையை அறிந்த முக்கண்ணர், சிலாதரைத் தட்டி யெழுப்பினுர். சமாதி நிலையினின்று விழிப் படைந்த சிலாதர், கங்காதரரைத் துதித்து வணங்கினுர். பின்னர், ஈசுவரர் கேட்ட வர மருள ஆயுத்தமாயிருப்பதை அறிந்து கேட்கத் தொடங்கினுர். 'பிரபுவே! தங்களுக்கு ஒப்பான வனும், மரணமில்லாதவனும், உதரத்தில் உதிக்காதவனும் ஆன ஒரு புத்திரனை விரும்பு கின்றேன்' என்று விண்ணப்பித்துக்கொண்டார்

தன் பக்தர்களது விருப்பத்தை மகிழ்வுடன் நிறைவேற்றும் சிவபெருமான் சந்தோஷ மடைந்து, முனிவரைப் பார்த்துச் சொல்லு கின்றுர். 'முனிவரே! முன்பு பிரம்மா, முனிவர் கள், தேவர்கள் ஆகிய அனைவரும் நான் அவ தாரம் எடுக்க வேண்டுமென்று தவம் செய்தார் கள். ஆகையால், முனிவரே! நான் எல்லா உலகங்களுக்கும் பிதாவாக இருந்தாலும், நீர் எனக்குப் பிதாவாக இருப்பீராக! நான் உமக்கு உதரத்தில் உதிக்காத சுதனுக இருப்பேன். அப்போது என் பெயர் நந்தி என்று இருக்கட் டும் என மொழிந்துவிட்டு அவ்விடத்தினின்றே மறைந்துவிட்டார்.

எம்பெருமானின் திருவுருவத்தைத் தரி சித்த சிலாத முனிவர், பேரானந்தத்தில் மூழ் கினுர். இச் சம்பவத்தைத் தன் ஆச்சிரமவாசி களான ரிஷிகளிடத்தில் சொல்லி மகிழ்ச்சி யுற்றுர்.

சிலகாலம் சென்ற பிறகு, யக்ஞ வேத்தாக் களில் சிறந்தவரான சிலாதர், ஒரு நாள் யாக பூமியை உழுதுகொண்டிருந்தார். அப்பொழுது ஒரு குழந்தை, சம்புவினுடைய கட்டளையினுல், அவருடைய சரீரத்திலிருந்து உண்டானது. அவ்வமயம் குழந்தையைச் சுற்றி அக்கினி போன்ற பிரகாசம் பரவியது. எல்லாத் திக்கு களிலுள்ளோரும் ஆனந்த பரவச ராயினர், சிலாத முனிவரையும் போற்றினர்.

அக்கினிக்குச் சமமான பிரகாசத்தை யுடையதும், முக்கண்களுடையதும், நான்கு புஜங்களையுடையதும், ஜடைகளைத் தரித்துள்ள தும், திரிசூலத்தோடு கூடியதும் ஆன இக் குழந்தையைக் கண்டதும் சிலாத முனிவரின் மகிழ்ச்சிக்கு வரம்பு இருக்குமோ ? முனிவர் குழந்தையைக் கண்டார். ஆனந்தத் தாண்டவ மாடினுர். அன்று சிவபிரான் காட்சியளித்து, வரமீந்தது முனிவருக்கு ஞாபகம் வந்தது. சாட்சாத் சர்வேசுவரரே தனக்குக் குழந்தை யாக வந்ததை அறிந்து அவர் அடைந்த மகிழ்வை இங்கு வர்ணிக்க இயலுமோ ? குழந்தைக்கு முன் பன்முறை விழுந்து விழுந்து தொழுதார். 'எம்பெருமானே! சிவபிரானே! சர்வேசுவரனே! நீங்களே நந்திகேசுவரராக வந்து அவதரித்தீர். உங்களுக்குப் பன்முறை வணக்கம் செலுத்து கின்றேன்' என்று மீண்டும் மீண்டும் வணங் கினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவரிக்க முடியாத ஆனந்தத்தை அடைந்த சிலாதர், குழந்தையை எடுத்துக்கொண்டு தனது பர்ணகசாலைக்குச் சென்றார். என்ன ஆச்சரியம்! முக்கண்ணராகத் தோன்றிய குழந்தை ஆச்சிரமத்தை அடைந்தவுடன் சாதாரண மனிதக் குழந்தையாக மாறியது. சிலாதர் சர்வேசுவரனே தனக்குக்குழந்தையாக அவதரித்ததை நன்கு அறிந்தவராதலால், குழந்தைக்குச் செய்ய வேண்டிய ஜாதகர்மம் முதலானவைகளைச் செய்யத் தொடங்கினார்.

நந்திகேசுவரருடைய ஐந்தாவது வயதில் முறைப்படிசகலவேத சாஸ்திரப்பயிற்சிகளையும் செய்வித்தார்.

எப்பொழுது நந்திகேசுவரருக்கு ஏழாவது வயது நிரம்பியதோ, அப்பொழுது மித்ரா-வருணர் என்ற பெயர் படைத்த இருவர் வந்தனர். இவர்கள் சிவபெருமானின் ஆக்ஞை பெற்று நந்திகேசுவரரைத் தரிசிக்க வந்தவர்கள். சிலாதர் இவர்களை முறைப்படி உபசரித்து வரவேற்றார்.

மித்ரா — வருணர் ஆகிய இருவரும் நந்திகேசுவரரைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்து விட்டுச் சிலாதரை நோக்கிச் சொல்லலுற்றார். ‘சிலாதரே! உமது புத்திரர் சகல வேத, ஆகம சாஸ்திரங்களையும் நன்றாகக் கற்றுத் தேர்ந்தவராக இருக்கின்றார். ஆனால், இவரது ஆயுள் காலம் மிகவும் குறைவாக இருக்கின்றது. நாங்கள் அனேக விதமாக ஆலோசித்துப் பார்த்தோம். இவர் இனி ஒரு வருடத்திற்கு மேல் உயிருடன் இருப்பதாகத் தெரியவில்லை, என்றார்கள்.

மித்ரா — வருணர்களாகிய அந்தப் புரோகிதர்களுடைய வார்த்தைகளைக்கேட்ட சிலாதர் இடி முழக்கம் கேட்ட நாகம் போல் நடு நடுங்கினர். நந்தியை மார்புடன் கட்டித் தழுவிக் கொண்டு விம்மி விம்மி அழுதார். இதைக்கண்ட நந்தி தேவர், சிவபெருமானைச் சற்று நேரம் தியானித்து, பின்பு தன் தகப்பனாரைப் பார்த்து ‘அப்பா! தாங்கள் என்ன காரணத்தினால் இவ்விதம் அழுகின்றீர்கள்? தங்களுடைய சரீரம் ஏன் இப்படி நடுங்குகின்றது? இந்தத் துக்கம் தங்களை எப்படி வந்து அடைந்தது? இதன் விவரத்தை அறிய விரும்பு கின்றேன்’ என்றார். புத்திரரின் வார்த்தையைக் கேட்ட சிலாதர், ‘மகனே! உன்னுடைய ஆயுள்காலம் இவ்வளவு குறைவாக இருப்பதை அறிந்து வருந்துகின்றேன். என்னுடைய இந்தத் துக்கத்தை நீக்குபவர் யார் என்பதை நீயே சொல். நான் அவரைச் சரணாக அடைகின்றேன்’ என்றார்.

நந்திகேசுவரர், ‘அப்பா! தங்கள் முன்னிலையில் நான் சபதம் செய்வது என்னவென்றால், தேவர்கள், தானவர்கள், யமன், காலன், இன்னும்மற்றவர்களும் ஒன்றுசேர்ந்து என்னைக் கொன்றாலும் நான் சாகமாட்டேன். ஆகையினால், நீங்கள் துக்கப்படாதீர்கள்’ என்றார்.

புத்திரரின் வார்த்தைகளைக் கேட்ட சிலாதர், ‘என் அன்புடைய மகனே! நீ இந்தப் பயங்கரமான துக்கத்தைப் போக்கும்படியாக என்ன தவம் செய்திருக்கின்றாய்? எந்த ஞான யோகத்தினால் இந்தக் கடினமான துக்கத்தை நீக்குவாய்’ என்று கேட்டார்.

‘அப்பா! நான் யோகத்தினாலாவது, வேறு வித்தையினாலாவது மரணத்தை வெல்ல மாட்டேன். ஆனால், நான் மகாதேவரைப் பூஜிப்பதனால் மாத்திரமே யமனை வெல்லுவேன். இதைவிட மேலான வேறு உபாயம் இல்லை என்று சொல்லி,நந்திதேவர் தன் பிதாவை மும்முறை வலம் வந்து, அவரது பாதங்களுக்கு வணக்கம் செலுத்திவிட்டு வனத்திற்குச் சென்றார்.

வனத்திற்குச் சென்ற நந்திதேவர், தனித்த இடத்தில், மிகப்பெரிய முனிவர்களாலும் செய்ய முடியாத கடினமான தபசை மேற்கொண்டு ஆசனத்தில் அமர்ந்திருந்தார். அவர் ஏகாக்ரமடைந்த மனத்தினால் தன் இருதய தாமரையின் நடுவில் மூன்று கண்கள், ஈரைந்து புஜங்கள், ஐந்து முகங்கள் ஆகியவைகளையுடைய சதா சிவனைத் தியானித்துக்கொண்டு ருத்திர மந்திரத்தைச் செபித்துக்கொண்டிருந்தார். நந்திதேவர் ஜெபத்தில் ஈடுபட்டிருப்பதைக் கண்ட பரமேசுவரர் சந்தோஷ மடைந்து உமையோடுகூட எழுந்தருளி அன்புடன் சொல்லத் தொடங்கினார். ‘சிலாதரசுதனே! நீ உத்தமமான தபஸ் செய்திருக்கின்றாய். உன்னுடைய தபசினால் நான் சந்தோஷ மடைந்து உனக்கு வேண்டிய வரமருள வந்துள்ளேன். உன் இஷ்டத்தைத் தெரிவிப்பாயாக! என்று சொன்னார்.

மகாதேவர் சொன்னதைக் கேட்ட நந்தி, அவரது திருப்பாதங்களில் விழுந்து வணங்கித் துதிசெய்தார். அப்பொழுது ரிஷப ஆரூடரான பரமேசுவரர், கண்ணீர் மல்க தன்பாதங்களில் வீழ்ந்திருக்கின்ற பக்தியோடு கூடிய நந்தியைத் தூக்கித் தடவித் கொடுத்தார். பின்பு ஜெகதீசுவரர், பர்வத புத்திரியாகிய பார்வதி தேவியையும் பார்த்துச் சொல்லத் தொடங்கினார். ‘குழந்தாய்! நந்தி! அந்த இரண்டு புரோகிதர்களையும் நானே அனுப்பினேன். பேரறிவுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனே! உனக்கு மரண பயம் ஏது? நீ எனக்குச் சமானமானவனுய் இருப்பாய். இதில் சிறிதும் சந்தேகம் இல்லை. நீ மரண மற்றவன; முதுமை யற்றவன்; துக்க மற்றவன்; என்னும் மாறுதலை அடையாதவன்; எப்பொழுதும் கணங்களுக் கெல்லாம் தலைவனுக இருப்பாயாக! உன்னுடைய தகப்பனுரும், நண்பர்களும் எனக்குப் பிரியமானவர்களாக ஆவார்கள். எனக்குச் சமமான பலம் உன்னிடத்தில் இருக்கும். எப்பொழுதும் எனது சந்நிதியில் ஸ்திரமாக இருப்பாய். என்னுடைய கிருபையினுல் பிறப்பு, முதுமை, மரணம் ஆகியவைகள் தன்னுடைய பிரபாவத்தை உன்னிடத்தில் காட்டமாட்டார் என்று சொல்லி, சிவபெருமான் தன்கழுத்திலுள்ள கமல மலர் மாலையை நந்தியின் கழுத்தில் போட்டார். மாலை போட்ட மாத்திரத் திலேயே நந்திதேவர், முக்கண்ணராகவும், பத்துப் புஜங்களை யுடையவராகவும் காணப் பட்டார். ரிஷயவாகனர் பின்பு பார்வதி தேவியை நோக்கி, 'பிரியையே! நந்திகேசுவரருக்குப் பட்டாபிஷேகம் செய்து, கணங்களுக் குத் தலைவனுக்க விரும்புகின்றேன். உனது அபிப்பிராயம் என்ன?' என்ருர்.

'தேவேசரே! இந்தசிலாதரபுத்திரன் எனது புத்திரனுக்குச் சமமானவன். இவன் எனக்கு மிகவும் பிரியமானவன். கணங்களுக்குத் தலைவனுக்குங்கள்' என்று பார்வதி தேவியார் பகர்ந்தார்.

பின்னர், சிவனுர் தன் பலமிக்க கணங்களை அழைத்துச் சொன்னுர். 'கண நாயகர்களே! என் கட்டளையை நிறைவேற்றுங்கள். இந்த என் பிரிய புத்திரரான நந்திகேசுவரர், எல்லா கணநாயகர்களுக்கும் தலைமை வகிப்பார். கணங்களுக்குத் தலைவராவார். ஆகையினுல், நீங்கள் எல்லோரும் சேர்ந்து இவருக்கு, 'என் கணங்களுக்கு அதிபதி' என்ற பட்டம் சூட்டுங்கள் என்ருர்.

கணங்களும், 'அவ்வாறே செய்கின்ருேம்' என்ற சொல்லி, அதற்குரிய பொருள்களைச் சேகரித்து, தேவர்கள், முனிவர்கள் சூழ நந்திகேசுவரருக்கு முறைப்படி அபிஷேகம் செய்து, 'கணுதிபர்' என்ற பட்டத்தைச் சூட்டினர்.

பிறகு, மருத்துக்களின் பிரிய புத்திரியான 'சுயசா' என்ற கன்னிகையை மணம் செய்வித்தார்.

பரமசிவனும் நந்தியைப் பார்த்து, 'புத்ரா! நீயும், சுயசாவும் நான் சொல்லவதைக் கேளுங்கள். கணேசுவர நந்தி! நாங்கள் இருவரும் உங்கள் இருவர் மேல் பரம பிரீதியுடையவர் களாக இருக்கின்ருேம். உங்களுக்குச் சகல ஐசுவரியங்களும் உண்டாகும். எல்லோரையும் ஜெயிக்கும் சக்தி உண்டாகும். உன்னுடைய பிதாவும், பாட்டன்மார்களும் சகல ஐசுவரியங் களும் பெற்று கணங்களுக்குத் தலைவராக விளங்குவார். முடிவில் நீங்கள் எல்லோரும் என் சாந்நித்தியத்தை அடைவீர்கள்' என்று ஆசீர்வதித்தார்.

நந்திதேவரும், சிவபெருமானுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு, உமாதேவியாரிடமும், 'தாயே! தங்களுடைய திருப்பாதங்களை விட்டு என்றும் என் மனம் மாருமல் மேலான பக்தியுடனிருக்க வரம் தந்தருள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்' என்று சொல்லிப் பணிந்து நின்ருர். உமாதேவியாரும், 'அவ்வாறே யாகுக!' என்று ஆசீர்வதித்துப் பின் சுயசாவை நோக்கிக் 'குழந்தாய்! நீயும் மூன்று கண்களுடன் விளங்குவாய். பிறப்பு, இறப்புத் துன்பங்களினின்று விடுபடுவாய். புத்திர, பௌத்திரர்களுடன் சுகமாக வாழ்வாய். என்றும், என்னிடத்தில் அசையாத பக்தியுடன் இருப்பாய்' என்றும் ஆசீர்வதித்தார்.

பின்பு, மகாதேவ தேவியார் அங்குள்ள அனைவருக்கும் ஆசீர்வாதம் செய்துவிட்டு மறைந்தனர். பின்னர், விஷ்ணு முதலான தேவ கூட்டங்களும் நந்திகேசுவரரையும், சுயசாவையும் வாழ்த்தி, மகாதேவ தேவியை வணங்கி, தம் தம் இருப்பிடத்தை அடைந்தனர்.

நந்திகேசுவரரைத் துதித்துப் பக்தி செய்பவர்கள், இகலோக பரலோக இன்பங்களை அடைவார்கள்.

**அக, புற, அடக்கம்.**

வாழ்க்கையின் நோக்கம் அவனவன் இலக்ஷியத் திற்காகப் போராடுவதேயாகும். இப்போராட்டத்தில் மனிதன் ஒவ்வொரு நிமிஷமும் முன்னேறி கொண்டே இருக்கிருன். இப்போராட்டத்தில் உன்னுடைய முக்கிய எதிரிகள் உன்னுடைய மனமும் இந்திரியங்களுமே. ஆகையால் அவைகளுடன் போராடி வெற்றியடை,

ஜபம், தியானம் மூலம் உன்னுடைய எதிரிகளை விரட்டு.

ஆத்மீகத்துறையில் முன்னேறி ஞானத்தை அடைய முயற்சி செய்.

— சிவானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீக வாழ்க்கை

(அ. செல்வத்துரை)

உலகின் கண்ணுள்ள மக்கள் யாவரும் தெரிந்தும் தெரியாமலும் தெய்வீக வாழ்க்கையையே வாழ்கின்றனர். உலகம் முழுவதும் ஒரு தவச்சாலை. இத் தவச்சாலையில் ஒவ்வொரு உயிரும் தத்தமக்குத் தகுதியான சூழ்நிலையில் பிறந்து தவஞ் செய்து கொண்டே இருக்கின்றது. இப்படித் தவமாற்றும் பொழுது பலர் தம் சிரத்தையீனத்தால் மெய்ப்பொருளை அறியப் பல காலம் எடுக்கின்றனர். எடுத்த கருமத்தைத் தொடுத்துச் செய்யாமல், பலர் போன போன இடங்களில் வேறு வேறு கருமங்களில் ஈடுபட்டுத் தங்கருமத்தை இழந்து விடுகின்றனர். வந்த வரவினை மறந்து மண்ணாசை, பெண்ணாசைகளில் மயங்கி விடுகின்றனர். தான் யார்? தான் எதற்காகப் பிறப்பெடுத்தனன்? என்ற விசாரங்களை விடுத்துத் தான் என்ற அகந்தைக்கும் தமது என்ற மமதைக்கும் ஆளாகி அலைகின்றனர். இவ்வண்ணம் பொய்ப் பொருட்களை நாடி மயங்கி, அதனால் அனுபவத்தில் சலிப்படைந்து பின்பே மெய்ந் நெறியை நாடுகின்றனர். வெய்யிலில் பதைப்புற்றவர் தாமாகவே தன்னிழல் நாடுவதன்றோ! இந்த நிலையில்தான் இவர்கள் தெய்வீகத்தைத் திடசித்தத்துடன் நாடுகின்றனர்.

இற்றைவரை இவர்கள் மெய்யென்று எண்ணியிருந்த பெற்றாரும் உற்றாரும், பெண்டிரும் பிள்ளைகளும் பொய்யாகின்றனர். பாடுபட்டுத் தேடிய பணமும் பண்டமும் கேடுகெட்டுப் போகின்றன. பட்டங்களும் பதவிகளும் பகற் கனவாகி விடுகின்றன. அறிவு பெறுவதற்கு என்று கற்கும் கல்வியிலும் நாட்டம் குறைகின்றது. இப்படி மமதை மாய அகந்தை வெளிப்படுகின்றது. இந்த அகந்தையும் 'நான் ஆர்' என்னும் விசாரணையில் நலிகின்றது. ஐந்து பூதங்களும் ஐந்து புலன்களும், அந்தக் கரணங்களும், மூன்று குணங்களும் நானல்லவென்று வெளிப்படுகின்றன. எமது அறிவும் அறியாமையும் யானல்ல என்று அறிகிறோம். நாம் ஆன்மா என்ற உண்மை உதிக்கிறது. இந்த உண்மையில் நிலைத்திருத்தலே தெய்வீக வாழ்வாகும்.

தெய்வீக வாழ்க்கை நடத்த இன்றியமையாத அம்சங்கள் ஐந்தாகும். (1) மன ஒருமைப்பாடு. (2) ஒழுக்க வாழ்வு (3) சமநோக்கு (4) வைராக்கியம் (5) பயிற்சி ஆகும். ஈண்டு இவற்றை ஒவ்வொன்றாக சிறிது விளக்குவாம்,

(1) மனவொருமைப்பாடு; காலத்துக்குக் காலம் தேசத்துக்குத் தேசம் கல்வியின் நோக்கம் இது என்றும் அதுவென்றும் பல பெரியார்கள் கூறியிருக்கின்றனர். ஆயின் சுவாமி விவேகானந்தர் 'மனவொருமை பெறுதலே கல்வியின் நோக்கம் என்று கூறியது எக் காலத்தார்க்கும் எத்தேசத்தார்க்கும் ஏற்புடைத்தாகும். ஒருவனது மனம் அங்கு மிங்குமாய லைந்து கொண்டிருக்கும் வரை அவன் உண்மையை அணுக முடியாது. உலக விடயங்களிலாயினும் ஆன்மார்த்த விடயங்களிலாயினும் சித்த அமைதியற்றவனால் செவ்வனே தொழிலாற்ற முடியாது.

எவனொருவன் எடுத்த காரியத்தில் மனவொருமைப் பாட்டுடன் தொழிலாற்றுகின்றானோ அவன் வெற்றியும் புகழும் ஈட்டுவது திண்ணம். ஐசாக் நியூட்டன் என்னும் கணித ஞானி மனவொருமைப் பாட்டின் வன்மைக்குச் சிறந்த ஓர் உதாரணராவர். ஒருமுறை ஓர் கணிதத்தைப் பற்றிச் சிந்தித்துத் தெருவில் வரும்போது ஓர் குதிரை வண்டி நிற்பதைக் கண்ணுற்றார். அக் குதிரை வண்டியின் பின்பக்கம் கரும்பலகை போன்று கருமையாக இருந்ததால் அதனைக் குதிரை வண்டி என்று எண்ணாது கரும்பலகையென்று நினைத்துக் கணிதத்தை எழுதி விடுவிக்கத் தொடங்கினார். இப்படி யிவர் ஈடுபட்டு இருக்கையில் நின்ற குதிரை வண்டியின் சாரதி பின்புறம் இவர் நிற்பது அறியானாய் வண்டியைச் செலுத்தினான். ஆரம்பத்தில் குதிரை நடந்து, பின் சிறிது சிறிதாகத் தன் வேகத்தைக் கூட்டிக் கூட்டி ஓடியது. கணிதஞ் செய்து நின்ற நியூட்டனும் வண்டி அசைவதை அறியாராய் செய்த கணக்கை விடாது நடந்தும் ஓடியும் செய்தார். கடைசியில் குதிரை வேகத்தோடு தொடர்ந்து ஓட இயலாதவராய் நடுத் தெருவில் நின்றபோது தான் தன்னிலைமையினை உணர்ந்தார். இப்படியான மன வொருமைப் பாடுடையவர் எஞ்ஞான்றும் தோல்வியுறார். சோக்கிரடீஸ் என்னும் கிரேக்க ஞானியும் இப்படியானவர். ஒருமுறை அவரும் அவர் நண்பருமாக விருந்தொன்றுக்குப் புறப்பட்டனர். போகும் வழியில் ஏதோ நினைத்தவுடன் அப்படியே நின்று விட்டார். அவசர கருமங் காரணமாக அவர் நிற்கிறார். முடித்துக் கொண்டு வருவார்தானே என்று நினைத்துக் கொண்டு நண்பர் விருந்து வீட்டுக்குப் போய் விட்டார். விடியற் காலையில் விருந்து வீட்டிலிருந்து திரும்பும் போதும் முதனாள் நின்ற இடத்திலேயே நின்ற நிலையிலேயே அவரைக் கண்டு ஆச்சரியமுற்றார். இப்படியான உதாரணங்கள் பெரியார் வரலாறுகளில் பரக்கக் காணலாம்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையைக் கூறுகின்றேன். நோய்வாய்ப் பட்டிருந்த பொன்னப்பாச் சாமியாரின் காலொன்றைக் கழற்றி விடுதற்காக வைத்தியாதிகாரி யொருவர் (குளோர போம்) மயக்கும் மருந்தைக் கொடுக்க முயன்றபோது அவர் அதனைத் தடுத்துவிட்டுத் தன் சித்தத்தையொ டுக்கித் தன்னிலே தான் திளைத்திருந்ததாகவும் கால் கழற்றிய பின் பழைய முகமாகி வந்தனர் என்றும் கூறுவதை நாமெல்லாம் அறிவோம். இதிலிருந்து மனவொருமைப்பாடு எத்துணை ஆற்றல் வாய்ந்தது என்பதை யாவருமறியலாம். ஆன்ம சாதனை செய்ப வர் அடிக்கடி கூறும் சுகரிஷியின் கதையும் எடுத்துக் கொண்ட கருத்தினை விளக்கத் தகுந்த வரலாறு ஆகும்,

வியாச முனிவர் தன் மகனாகிய சுகரை ஒருமுறை அழைத்து இராசரிஷி ஜனகரிடம் ஞானம் பெறுதற் காக அனுப்பினர். சுகர் அரண்மனை வாயிலை அடைந் ததும் காவல் வீரர் அவரைத் தடுத்து வந்த கார ணத்தை வினவினர். காரணத்தைக் கூறியதும் காவ லரில் ஒருவன் அரண்மனைக்கு உள்ளே சென்று மீண்டு அரசன் அழைக்கும் வரையும் சுகரை அவ்விடத்தி லேயே ஒரு மூலையில் இருக்கும்படி ஆஞ்ஞாபித்தனன். அன்னந் தண்ணீரின்றி மூன்று நாட்களாகச் சுகரும் அவ்விடத்திலேயே இருந்தனர். ஆயிரக் கணக்கான வாகனங்களில் மக்கள் அவ்வாயில் வழியே போவதும் வருவதுமாக இருந்தனர். சுகரும் அழைப்பு எப்போது வரும் என்ற ஒரே மனத்துடன் வேறொன்றையும் கரு தாமலும் காணாமலும் உட்கார்ந்திருந்தனர். மூன் றும் நாட் கழிந்ததும் ஜனகமகாராசர் தன் மந்திரிக ளும் பிரதானிகளும் புடைசூழ, நாட்டிய மாதர் நட னஞ் செய்ய பெரும் ஆடம்பரத்தோடு சுகரை அழைப்பதற்கு வந்தனர். அந்த ஆரவாரங்களில் கருத்துக் கொள்ளாமலும் மருளாமலும் சுகர் ஜன கன் அரண்மனையை அடைந்தார். அங்கே பலவகை யான உணவுகளும் பானங்களும் வைக்கப் பட்டி ருந்தன. அவற்றைப் பரிமாற அழகிய மாதர் பலர் அமர்த்தப் பட்டிருந்தனர். விழா மிகவும் விமரிசை யாகக் கொண்டாடப் பட்டது. ஏழுநாள் வரை இப் படிக் கொண்டாடியபின் கடைசி நாளில் ஆடல் பாட லில் சிறந்த நாடக மாதர் நடனஞ் செய்ய அமர்த் தப் பட்டனர்.

இவ்வாறு இந்நடனங்கள் நடைபெறும்போது சுகரை யழைத்து ஒரு கிண்ணம் நிறையப் பாலைக் கொடுத்து ஒரு துளியும் கீழே சிந்தாமல் ஏழு தரம் அச் சபையைச் சுற்றி வரும் வண்ணம் கூறினார். சுகர் அவ்வண்ணம் ஒரு துளிக்கூட விழாது ஏழுமுறை வலம் வந்த பின் ஜனகர் அவரைப் பார்த்து நடனம் நல்லதா அல்லதா என்று வினவினர். சுகர் தான் பாற் கிண்ணத்தைக் கவனித்தனரேயன்றிப் பாட லாடல்களைப் பார்க்கவில்லை யென்றனர்.

அப்பொழுது ஜனகர் சுகரை நோக்கி 'ஐயனே பிரம்மானுபவம் பெறுதற்குரிய மனவொருமைப்பாடும் துறவும் உம்மிடம் உண்டு. இதற்கு மேலாக யாம் சொல்லித் தரவேண்டியது வேறில்லை'' யென்று கூறி ஆசீர்வாதத்துடன் அவரைத் தந்தையிடம் போகும் வண்ணம் அனுப்பினர். மனவொருமைப்பாடு எய் திய ஒருவனல் சாதிக்க முடியாத காரியம் எதுவும் இல்லை. ஒருமைப்பாடு உடையானொருவன் வயோதி பம் எய்தினாலும் வாலிபனைப் போல உற்சாகமும் திறமையும் உடையவனாகக் காணப்படுவான். மகாத் மா காந்தி, வினோபாஜீ போன்றவர்கள் இதற்குதார ணர்களாவர்.

## 2. ஒழுக்க வாழ்வு

ஒழுக்க வாழ்வு அல்லது வரம்புள்ள வாழ்க்கையே மேற் கூறிய மனவொருமைப் பாட்டுக்கு உறுதுணை யும் சாதனையும் ஆகும். செய்யுங் காரியங்கள் எல் லாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்துச் செய்தலே வரம்பு பட்ட வாழ்வாகும். கண்ட கண்ட மாதிரிக் காரண மின்றி எதனையும் புலனின்பத்திற்காகவோ பொழுது போக்குக்காகவோ செய்தல் தகாது. இயன்ற அள வுக்கு இயல்பாகவே இழி குணங்களை நாடும் மனத் தினை அடக்கி நல்ல காரியங்களில் ஈடுபடச் செய்தலே முதற்படியாகும். மனம் என்றும் நிலையற்ற தன்மை யது. இங்கும் அங்கும் இதிலும் அதிலும் காடுங் கரையுங் கால் விட்டோடும் குரங்கின் தன்மையது. ஒன்றை விட்டு ஒன்றைத் தாவும் பான்மையது. ஆகவே இதனை வழிப்படுத்த வேண்டுமாயின் அதனைப் போன போக்கெல்லாம் போக விடாது ஈர்த்து ஈர்த்து நல்ல காரியங்களைச் சிந்திக்கவும் செய்யவும் பழக்க வேண்டும். இப்படிப் பழக்கி வர மனந் தூய்மையு றுகிறது. தூய்மையுற்ற மனம் மிக இலகுவில் குவி கிறது. நாம் நாடோறும் செய்யுங் காரியங்களையும் நினைக்கும் நினைவுகளையும் எவ்வளவுக் கெவ்வளவு தூய்மையாக்குகின்றோமோ அவ்வளவுக் கவ்வளவு மனம் தியான வேளைகளில் ஒடுங்குகின்றது. மனத் துக்கண் மாசிலனாய்ச் சொல்லும் செயலும் தூயோ னாய் வாழ்பவனுக்கு தியானம் கை கூடுதல் மிகச் சுல பமாகும் உடலாட்டத்தையும் சொல்லோட்டத்தை யும் கட்டுப் படுத்தினாலும் மனக் குழப்பங்களை அடக் குதல் மிகவும் கஷ்டமாகும். ஆகவே அதிலும் இதி லும் அங்கும் இங்கும் தாவும் மனம் கௌவிக் கொள் ளக் கூடியதாகச் சிவநாமத்தைக் கொடுத்து விட வேண்டும்.

சிவ நாமத்தைச் சிக்கெனக் கவ்வி இரவும் பக லும் நின்றும் இருந்தும், இன்பத்திலும் துன்பத்திலும், இடையறாது செபிக்கச் செபிக்க மனம் லயமாவதோடு ஓரளவிற்கு எடுத்தியம்ப முடியாதவோர் இன்பத்தை யும் சாந்தியையும் எய்துகின்றது. இறைநாம ஜெபத் தால் மனவொருமைப் பாடெய்தியோர் வரலாறுகள் பலவுள. நாயன்மார், ஆழ்வார் ஆதியோரெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலும் இறைநாம ஜெபத்தாலேயே ஈடேறினர்.

ஆகவே மனவொருமைப் பாட்டுக்கு இன்றியமையாத முதற் தேவை கடவுள் நம்பிக்கையும் வணக்கமும் ஆகும். அதன்பின் நற்கருமங்களில் பரநலங் கருதி ஈடுபடுதலாகும். அத்துடன் அளவுக்கதிகமாகப் பொருள் தேடுதலிலும் விவகாரங்களில் ஈடுபடுதலையும் நீக்க வேண்டும். இயன்ற அளவுக்குத் தனித்தும் விழித்தும் வாழ முயல வேண்டும். தனித்திருக்கும் நேரங்களிலேதான் தன் மனத்தின் துடிப்புகளை ஒருவன் உணர முடியும். துடிப்புக்களை உணராதவன் மனவொருமைப் பாட்டினை என்றுமே எய்தான்.

இனி வாழ்வும் அளவுக் குட்பட்டதாக வேண்டும். நோயை மருந்து மாற்ற வேண்டுமாயின் அதனை அளவளவாக உட்கொள்ள வேண்டும். அதனைப்போல உண்பதிலும் உறங்குதலிலும் உழைப்பதிலும் ஒருவன் என்றும் மத்திய பாதையைக் கடைப்பிடித்தல் நன்று. அளவுக் கதிகமாக உண்பவனும்; உறங்குபவனும்; உழைப்பவனும்யோகியாகான். 'யோகமென்பது சித்த விருத்தியை யடக்குதலே' என்பது யோக சூத்திரம். எப்புலனையும் அளவுக்கதிகமாக உபயோகிக்க விரும்பாதே. திரட்டிக் கூறின் தூய ஒழுக்கமான ஒழுங்கான வாழ்வே மனவொருமைப் பாட்டினைக் கூட்டக் கூடியதாகும்.

### 3. சமநோக்கு

இதனைச் சமத்துவ நோக்கென்றும் கூறுப. எல்லாரையும் தன்னிடத்திலும் தன்னை எல்லாரிடத்திலும் காண்பதே சம நோக்காகும். எவ்வுயிரும் தன்னுயிர் போல் எண்ணியிரங்கலே சம நோக்கு. இந்த நோக்கினைப் பெறுத வரை மனவொருப்பாடு சித்திக்காது. இது ஒரு அருமையான உலகம். இங்கு ஒரு பொல்லாப்புமில்லை. முழுதும் உண்மை. நாம் என்றும் உள்ளோம் என்னும் மகா வாக்கியங்களின் உண்மையை அநுபூதியில் அறியும்வரை மனவொருமைப்பாடு கைவராது. மரணம் பிறப்பென்னும் இன்ப துன்பங்களால் நெஞ்சம் புண்ணுகாது. இவையிரண்டும் மயக்கமென்றே மதிக்க வேண்டும். இஃதெல்லாம் எப்பவோ முடிந்த காரியம். அது அப்படியுள்ள காரியம் என்று யாவுக்கும் சாட்சியாக இருத்தலே சம நோக்காகும். எதனையும் இகழாமல் எதனிலும் பற்றுறுது வாழ்வதே சமத்துவ வாழ்வு. உலகிலே கேடு ஒன்று மில்லை. குற்றம் யாண்டுமிலது. கேடும் குற்றமும் பார்க்கும் எங்கள் கண்ணில் உள்ள குறைபாடின்றிப் புறத்திலில்லை. எமது கோணற் பார்வையை, எமது குறுகிய நோக்கை விசாலிக்கச் செய்து யாவும் நாமே; நாமே யாவும் என்ற மனப்பாண்புடையோராய் வாழ்வோமாயின் அதுவே தெய்வீக வாழ்வு. எந்த நிலையில் எந்தப் படியில் நின்று பார்க்கிறேமோ அந்நிலைக்கும் அப்படிக்கும் தகவே உலகமும் காட்சியளிக்கும்.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்துள் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்துள் மறைந்தது பார்முதற் பூதம்
— திருமூலர்.

எல்லாவற்றையும் சிவமாகக் காணும் போது அருமையான உலகம் என்ற உண்மை புலப்படும். எல்லாவற்றையும் வேறுபடுத்திப் பார்க்கும்போது சிவம் மறைந்து விடும். இவ்வுலகில் ஆவது ஒன்றுமில்லை. அழிவது மொன்றுமில்லை, என்ற திடசித்தத்துடன் எவன் பற்றற்றுக் கடமைக்காகக் கர்மஞ் செய்கின்ருனே அவனே சம நோக்குடையான். இவ்வுலகின் தோற்ற வொடுக்கங்கள் யாவும் சமுத்திரத்தில் எழுந்து வீசும் அலைகளுக்கும் அவற்றின் மறைவுகளுக்கும் ஒப்பாகும்.

எல்லாம் கடவுள், எங்கும் கடவுள் என்ற திருஷ்டி கிடைத்து விட்டால் அதுவே பெரும் பேருகும். எமது பார்வையின் கோணற்றன்மையினலேயே பார்த்தவிடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்ற பரம் பொருளைக் காணுது தொல்லைப் படுகிறேம். கண்ணுக்குக் கண்ணுகவும் காதுக்குக் காதாகவும் உயிரெல்லாவற்றிற்கும் உயிராகவும் விளங்கும் மெய்ப்பொருளை உய்த்துணர வுணர நான், நீ, அவள், அவன், அது என்ற வேற்றுமை யொழிந்து எல்லாம் 'அது' ஆகும்.

### 4. வைராக்கியம்.

தீய செயல்களைச் செய்ய மாட்டேன். நல்ல காரியங்களையே செய்வேன் என்று வைராக்கியம் வைத்திருக்க வேண்டும். இப்படிக் கட்டுப்பாடு வளர்ச்சிக்கு இன்றியமையாதது. பயிர் சிறிதாக இருக்கும் போது வேலி எவ்வளவு அவசியமோ அவ்வளவுக்கு ஆரம்ப சாதகனுக்கு வைராக்கியம் வேண்டற்பாலது. வைராக்கியம் அழிக்கும் ஆற்றலுடையது. சமயாசாரங்கள் கிரியைகள் யாவும் வைராக்கியத்துடன் அநுட்டிக்கப்படவேண்டும். இதனிலும்மேலாக மனத்தின்நல்ல காரியங்களையேசிந்திக்கும்படிவைராக்கியமாகவேண்டும்

### 5. பயிற்சி

எந்தப் போதனையையும் வைராக்கியத்தாலும் பலகால் பயிற்சியாலுமே (அப்பியாசத்தாலும்) சாதிக்க முடியும். கண்ணபிரான் கீதை முழுவதையும் அருச்சுனனுக்கு உபதேசம் செய்தார். அப்போது அருச்சுனன் பகவானைப் பார்த்து 'ஐயனே! தேவரீர் சொல்லிய தெல்லாம் சரிதான். ஆனல் என்னைப் போன்ற மதியீனராலும் சோம்பேறிகளாலும் அவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்புறு சைவம்

அ. வி. ம.

உலகத்திலே பல சமயங்கள் உள. எல்லாச் சமயமும் உண்மை வழிகளையே கற்பிக்கின்றன. ஒரு சமயம் மறுசமயங்களிலும் சிறந்த வழியைக் காட்டுகின்றது என்று கருதுவது அறிவு மட்டத்தைக் குறிப்பதாகும். பிற சமயத்திலிருந்து தன் சமயத்திற்கு மதமாற்றஞ் செய்து விட்டதாக மனக் களிப்புக் கொள்ளுவதும் மடைமையைக் குறிக்கும்.

சமயங்கள் எல்லாம் பெருந் தத்துவங்களின் அடிப்படையில் கட்டப்பட்டு அறிவுடையோரால் எழுப்பப் பட்டவை. அவற்றைப் பற்றிக் கொண்டு பெரிய சமூகங்கள் விருத்தியடைந்து, தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து மனச் சாந்தியுமடைந்து செல்லுகின்றன.

அறவழியை வகுத்து அறிவு புகட்டுஞ் சமூகங்களை அழித்து விடவோ, துரிதமாக விருத்தி செய்யவோ எந்தச் சமூகத்தாலும் இயலாது. வரலாற்று வாயிலாக வலிமையைப் பயன்படுத்தி ஒரு சமூகம் பிறிதொன்றனை வதைத்து. அதன் சமயத்தை மற்றையதன் மீது வலிந்து திணித்தமையையும். இன்னும் திணிக்க முயலுவதையும் நாம் கற்றிருக்கின்றோம்; இன்று கண்ணாரக் காண்கின்றோம், இம் முயற்சிகள் மனிதனின் மடமைக்கு உச்ச வரம்பை அமைப்பனவாகும்.

சைவமோ சமயங்களுட் பழையது. மனிதன் தோன்றிய காலந் தொட்டுப் பக்தி சிரத்தையோடு தழுவப் பட்டு வருவது. இது எந்தச் சமூகத்தையும் வலிந்து கட்டுப் படுத்துவதில்லை. மனிதன் விரும்பியவாறு பரம் பொருளைக் காண வழி வகுப்பது. பிற சமயங்கள் தாமாகவே வெள்கி மாழினும் அவற்றையும் அடக்கி அப்பாலும் சென்று தேடி, உள்ள சமயங்களை எல்லாம் தன்னகத்தே அடக்கி அடிசார வைக்கும் ஆற்றல் சைவத்திடை உள்ளமை வியக்கத் தக்கது.

எவரெவர் எவ்வெக் கொள்கையை மேற்கொண்டு ஒழுகுகிறாரோ அது அவ்வவர் சமய வரம்பாகும். அன்றிப் பிணங்கி வாழ்தல் அவர்களுக்கு அறமாகாது. ஒரு சமூகமானது கடைப்பிடிக்கும் அறநிலைகள் சமூகத்தின் சமயத்திற்கு ஏணிப் படிகளாக அமையும். தத்தம் சமயத்தில் நிற்காதாரை அப்படி நிற்கச் செய்வது இம்மையில் அரசனின் கடமை என்னும் சைவசமயம். அப்படியல்லாதாரை சைவசமய வழி நாம் கண்ட கடவுளானவர் மறுமையில் தண்டிப்பர்.

என்ன அற்புதமான அறநிலை! என்ன ஆச்சரியமான சமயக் கொள்கை. தன் சமயத்தில் தவறியவனைப் பின்னும் தண்டனையாற் செலுத்துவது சைவமானால் சைவத்தின் மாண்பினை மறு சமயங்களால் அளந்திடவும் முடியுமோ.

''தத்தஞ்சமயத் தகுதி நில்லாதாரை
அத்தன் சிவன் சொன்ன ஆகமநூல் நெறி
எத்தண்டமுஞ் செயும் அம்மையில்; இம்மைக்கே
மெய்த்தண்டஞ் செய்வது அவ்வேந்தன் கடனே

— திருமூலர் திருமந்திரம்.

முன் பக்கத் தொடர்ச்சி

முறையாக அநுட்டிக்க முடியாது. ஆகவே எனக்கு ஏற்றபடி மிக இலகுவான வழி எது என்று திருவாய் மலர்ந்தருள வேண்டும் என்றனன். அப்போதுதான் பகவான் அவனைப் பார்த்து 'அருச்சுனா! வைராக்கியத்தாலும் இடையறாத முயற்சியாலும் சாதிக்க முடியாத காரியம் எதுவுமில்லை. ஆகவே நீ ஆன்மா என்பதை உணர்ந்து சதா உன்னை உன்னாலே உயர்த்திக் கொள்வாயாக' என்றனர். ஆகவே ஒவ்வொருவரும் தெய்வீக வாழ்வு வாழ்வதற்குச் சிறந்த வழியைச் சுருக்கமாகக் கூறுவோமாயின் மேல் வருமாறு சொல்லி விடலாம்.

'உன்னை ஒருபோதும் மறவாதே'

## நம்பிக்கையே ஜீவாதாரம்

பகவானிடம் தளரா நம்பிக்கை கொள். நம்பிக்கைதான் அவரை அடையும் வழி. நம்பிக்கை மூலம் எக்காரியமும் சித்தி பெறும். எப்பொழுதும் நம்பிக்கையுடனும், உறுதியுடனும் நட. உன் தீர்மானங்களில் தளரா உறுதி கொள்.

மகான்களையும், முனிவர்களையும் ஞாபகத்தில் வைத்துக் கொள். பிரார்த்தனை, ஜபம், கீர்த்தனம் இவைகளை ஒழுங்காகவும் தவறாமலும் செய். கீதை, இராமாயணம், பாகவதம் இவற்றைப் படி. இவைதான் உன்னிடத்தே நம்பிக்கையை உண்டாக்கி, அதை மேலும் மேலும் விருத்தி செய்து அதை உறுதியாகச் செய்கின்றன.

— சிவானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்யுணர்வு

( சுவாமி கெங்காதரானந்தா, சிவயோகசமாஜம் )

உலகம் உணர்வு மயம், உணர்வு பதியில் இருந்து பசுக்கள் வரை சங்கிலித் தொடர்பு போல் நீண்டு விரிந்து நிற்கின்றது. உணர்வின் மாற்றத்திற்குத் தக்கபடி உயிர் பல வடிவங் கொள்ளும். உணர்வு இருவகைப்படும் ஒன்று சிற்றுணர்வு அல்லது பொய்யுணர்வு. மற்றது உள்ளுணர்வாம் மெய்யுணர்வு. சிற்றுணர்வு மனம், புத்தி, காயங்களுடன் சம்பந்தப்பட்டு புறவாழ்வைத் தூண்டி நிற்கும். மெய்யுணர்வு இதயத்தின் ஆழ்ந்த பகுதியில் மெய்ப்பொருளை ஊடுருவி நின்று அறவாழ்வையே உணர்த்தி நிற்கும். அறிவும் உணர்வும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவை. உணர்வு விரிந்து இறுதியில் எப்பொருளிற் கலந்து நிற்குமோ அதில் அறிவும் வளர்ந்து முற்றுப் பெறும் அதாவதுசிற்றுணர்வு மாறி மெய்யுணர்வாகுங்கால் சிற்றறிவு மெய்யறிவாகும். மனிதனில் இந்த இரண்டு வித உணர்வுகளும் கலந்து நிற்கின்றன. சிற்றுணர்வும் மெய்யுணர்வும் கலந்த கலவையின் வடிவமே மனிதன். மனித உணர்வில் ஒளியும் இருளும் அறிவும் அறிவின்மையும் கலந்திருக்கும்.

புற உணர்வின் கிளர்ச்சியிற் சிக்கிய மனம் திரும்பத் திரும்ப யமன் வாயில் அகப்பட்டுத் தவிக்கும்உள்ளுணர்வின் எழுச்சியாற் தூண்டப்பட்ட மனம் மெய்ப் பொருள் நாட்டங் கொண்டு பரமார்த்தீக திசையில் விரைந்து செல்லும் இதனை அருட்தாகம் என்பார்கள். நிலையற்ற பொருளை வருந்திஅடைவதும் பின் இழக்கநேரிடும்போது சினங்கொள்வதும் சினத்தினாற் கோபமும் கோபத்தினால் மனங்கலங்கிப் புத்தி தடுமாறுவதும் புத்தித் தடுமாற்றத்தினால் அழிவும் உண்டாவதற்குச் சிற்றுணர்வின் ஆதிக்கமே காரணம். புன்மையான குணங்களும் கபடமுயற்சியால் வருந் தீவினைகளும் புறவுணர்வின் விளைவால் வருவனவே! வையகத்தை அடக்கி ஆள வலிமை பெற்றாலும் சிற்றுணர்வின் இறுகிய பிடியில் நிற்பவன் தன் நிறைவும் ஒளியும், அமைதியும் காண்பதரிது. புறவுணர்வுக்கும் பின்னால் சத்தியத்தை அணுகி நிற்கும் மெய்வுணர்வின் வழிச்சென்று உட்புருஷனின் தொடர்பு பூண்டு வரும் அருட் சக்திக்கு நம் வாழ்வைத் திறந்து கொடுத்து நிற்போமானால் ஒளியும் ஆற்றலும் தன்னறிவும் நிறைந்த ஒரு பகுதிக்கு உயர்ந்து சென்று அங்கு அத்துவைத இன்பத்திற் கலந்து நிற்கும்.

அநேக குறைபாடுகள் நிறைந்து குளப்ப நிலையிலும் தீராத துன்பத்திலும் திரும்பச் செல்லும் சங்கட நிலை மாற வேண்டுமாகில் உள்ளுணர்வின் வழி ஊடுருவிச் சென்று உட்புருடனைக் கண்டு தெளிந்து அவன் ஆணையின் கீழ் பணிந்து வினையாற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. துவேஷமும் வஞ்சனையும் வேற்றுமைகளும் வளர்ந்து அழிவின் வரம்பை மோதி நிற்கும் மனித குலம் இருளினின்றும் ஒளிக்கும் அறியாமையினின்றும் அறிவுக்கும் வேற்றுமையினின்று ஒற்றுமைக்குச் சென்று பூரண அமைதியும் அன்பும் அருளும் நிறைந்த ஞான ஒளி வீசும் ஒரு புதுயுகத்தைக் காண மெய்யுணர்வை விருத்தி செய்து அதன் வழி சிந்தனையும்செயலையும் ஒன்று படுத்தல் வேண்டும். மனம், புத்தி, பிராணன்களில் வீறிட்டு நிற்கும்சிற்றுணர்வின் தூண்டுதலை ஆத்ம வித்தையால் மெல்ல விலக்கி அப்பகுதிகளை மெய்யுணர்வால்நிரப்பி அதன் சுபாவமான ஞானம், பக்தி, வைராக்கியம் முதலிய அருங்குணங்கள் வாழ்வுடன் சம்பந்தப்படும் போது சீர்திருந்த வேண்டிய சகல துறைகளும் தானாகவே திருந்தும். எங்கும் எதிலும் ஞான ஒளி வீசும். இன்னும் அழுத்தமாகக் கூறின் சாதாரண உலக வாழ்க்கையே ஞானமாய் ஒளிரும் என்பதேயாம். உள்ளுணர்வு அல்லது மெய்யுணர்வின் வழியே அருள்வழி. அருள்வழிச் செல்பவன் அறிவாளன். அவன் தன்னிறைவால் உட்பொலிவுடன் இருப்பான். பந்த பாசங்களைத் தரும் சிற்றுணர்வின் முடிச்சறுத்து உள்ளுணர்வின் வழி நடத்தலுக்கு நெஞ்சம் திறந்து கொடுப்போமாகில் அது நம்மை ஆணவ மலங்கள் நிறைந்த இருள் வழியினின்று விலக்கியெடுத்து அருள் பொழியும் ஒளி பொருந்திய வழியில் நடத்திச் சென்று இறுதியில் தனது இருப்பாகிய மெய்ப் பொருளில் அழுத்தி நிறுத்தும். சத்தியத்தின் அல்லது அந்தராத்மாவின் உணர்வுக்கு இசைந்து நின்று அது வழி வரும் அருட் சக்தி வழி நடத்திச் செல்லும் பொருட்டு நம்மை ஒரு கருவியாய்க் கருதி நிற்பதே ''சும்மா இரு'' என்று சான்றோர்களாற் கூறப்படுவதின் சாரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசையின் வீச்சினால் ஆத்மாவின் அருள் வளையத்திலிருந்து வெகு தூரம் விலகிச் சென்ற மனமும் புத்தியும் தனக்குப் பின்னால் ஆத்மாவின் கண் ஊற்றெடுத்து வரும் மெய்யுணர்வை ஆராய்ந்தறியப் போதிய பக்குவமடையவில்லை எனினும் இயல்புக்கேற்ற ஆத்மப் பயிற்சியினால் மெய்யுணர்வு அல்லது கடவுளுணர்வு விருத்தியடைந்து வருங்கால் பலவீனங்களும் இடர்களும் படிப்படியாய் விலகி நின்று அகபுற வாழ்வில் ஞான ஒளி வீசத் தொடங்கும். மெய்யுணர்வின் எழுச்சியை உட்பார்வையால் உன்னிப் பார்த்து அறிந்து தெளிந்து அது வழி மெய்ப் பொருளின் இருப்பை அகமுகமாய்க் கண்டு அறிவதே தன்னைத் தான் அறிதல் என்பதின் பொருளாம். மெய்யுணர்வு கிளம்பிப் பரவத் தொடங்குங்கால் மனப்பிராணன்களின் கிளர்ச்சி அடங்கி உட்பகுதி அனைத்திலும் விளக்க முடியாத அமைதியும் இன்பமும் தூய்மையும் பரவி நிற்பதை அனுபூதியில் உணரலாம். நிலையான புகலிடம் தேடித் திரியும் ஆசைகள் யாவும் மெல்ல மெல்லத் திரும்பிச் சென்று ஆத்ம லயம் பெறும்.

மெய்யுணர்வின் வெளிப்பாட்டை விழிப்புடனிருந்து கவனித்து வருவோமாகில் பூரண அமைதி நிறைந்த ஒளிமயமான ஒரு அருட் பெருஞ் சக்தி நம்மில் இறங்கி வந்து அல்லது வெளிப்பட்டு நின்று சகல துறைகளிலும் அது தானாகவே நம்மை வழி நடத்திச் செல்வதைக் கண்கூடாகக் காணலாம். இத்தகைய அருட் சக்திக்கு நம்மை முற்றாக அர்ப்பணித்து நிற்போமாகில் அதன் வெளிப்பாடான அன்பு, தயை, கருணை, பேதமின்மை, தன்னல மறுப்பு முதலிய அருட் குணங்கள் சிந்தனையிற் செயலில் ஊறி உறையும் இத்தகைய தெய்வீக குணங்களை ஆதாரமாகக் கொண்டொழுகும் வாழ்க்கையே தெய்வீக வாழ்க்கை. உயர்ந்தவர்களுக்கும் தாழ்ந்தவர்க்கும் வாழ்வு க்ஷணிகமான தென்றறிவோம். மூப்பு, பிணி, மரணம் அனைவரையும் தழுவி நிற்கின்றது. எனினும் இவற்றின் இரகசியம் அறிந்து அவைகளைத் தன்வயப்படுத்தி வாழ்வதே சீரிய வாழ்வு. இதுவே ஆத்மீக வாழ்வின் ஆதார நிலை. வாழ்க்கையின் க்ஷணிக மாத்திரையை எவ்வளவு தூரம் அறிய முடியுமோ அவ்வளவுக்கு ஞான வைராக்கியம் ஓங்கி நிற்கும். மறைந்து நின்ற தெய்வீக குணங்கள் செயலின் அத்திவாரமாக அமைந்து இச்சையைத் தாண்டி நிற்கும் தன்னலமற்ற கருமங்களாக இயங்கும் போது, இன்னும் நுண் பொருட்படக் கூறுமாயின் "சேவை" என்று கூறும் அதி உயர்ந்த இலக்கைத் தொட்டு நிற்கும். இத்தகைய தெய்வீகத் திருக்கூட்டம் அகிலம் எங்கும் தோன்றிப் பரவுவதாக!!

கேவல தேக சுபாவங்கள் நீங்கி ஆத்ம குண விசேஷங்கள் மேலென பேத புத்திகள் அகன்று சமரச நன்னெறி எங்கும் ஓங்கி வளரும். சமரசம் என்பது மனிதனில், மதங்களில் மட்டும் காண்பதன்று. இன்னும் "வரையறுத்துக் கூற முடியாத ஒன்றுக்கு" விரிந்து சென்று எங்கும் நிறைந்த பரம் பொருளை எதிலும் கண்டு களிப்பதேயாகும்.

அக முகப் பயிற்சிகள் எல்லாம் பொய்யுணர்வை விலக்கி மெய்யுணர்வைவெளிப்படுத்தும் பொருட்டே வகுக்கப்பட்டுள்ளன. சிற்றுணர்வாம், பொய்யுணர்வு மெலிந்து மெய்யுணர்வு தடிப்பேற ராஜஸ, தாமஸ குணங்களின் வேகம் தணிந்து அகந்தையின் எழுச்சியும் அரும்பி நின்று தெய்வீக குண விசேஷங்கள் மலர்ந்து நிற்கும். மெய்யுணர்வின் வழி வரும் அருட் பொலிவுக்கு நம்மை முற்றாக அர்ப்பணித்து நிற்போமாகில் பழைய வாசனைகளும் இன்னும் கேடுடைய யாவற்றையும் அதுவே விலக்கித் தந்த நீங்காத அருள் இன்பத்தில் வாரி அணைத்து நிறுத்தும். கேவல புத்தியாற் கற்கும் கல்வியும் தர்க்க நியாய வாதங்களும் முரண்பாட்டை ஆதாரமாகக் கொண்டவை யாகையால் அவை ஆத்மீக ஈடேற்றத்திற்குப் பயன் தரா. வெறும் ஆசாரச் சடங்குகள் வெளி வரட்சியைக் குறைக்குமே தவிர அவற்றால் அத்தியாத்மீக அனுபவத்திற்கு உதவ முடியா. அதற்குப் புலனடக்கப் பயிற்சியிற் தேற வேண்டும். சாதனையாலே சாத்தியம் கை வரும் விதிப்படி இதயத் தியானம் பழகி வருங்கால் மெய்யுணர்வின் வழி தெளிந்து காணும். மெய்யுணர்வின் எழுச்சியாலும் அருளொளியின் பொலிவினாலும் அறிவாற்றலும் ஞான விழிப்பும் சாதாரண வாம்விலும் மலர்ந்து அனைத்திலும் ஆத்மீக ஒற்றுமையை வளர்க்கும். அத்தியாத்மீக வாழ்வு ஒரு சிலருக்கு மாத்திரமன்றி விஞ்ஞான கூடத்திலிருந்து எளிய குடிசை வரையும் ஆத்மீக ஒளி வீச வேண்டும். தீர்வு காண முடியாத பல பிரச்சனைகளும் தீர்ந்து உலகில் சாந்தியும் சமாதானமும் நிலவ இதுவே முடிவான வழி.

நீர்வளம், நிலவளம், பொருள்வளம் முதலியவற்றைத் தாராளமாகப் பெருக்கலாம். வேண்டுமென்றால் பொருள் உற்பத்தியால் வையகத்தில் முதலாளித்துவ ஆதிக்கங் கூடப் பெறலாம். எனினும் இவற்றால் "வாழ்க்கையின் தாகம்" தணியுமா? சுருங்கக் கூறின் பௌதீக வாழ்க்கையிலும் ஆத்மீக விழிப்புணர்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலெழுந்து ஞான ஒளி வீசவேண்டும். வெறும் பௌதீகக் கிளர்ச்சியின் காலம் குறுகியதே! அவை நீடித்து நிற்பதற்கில்லை. முன் இருந்த வை இன்னும் இருக்கின்றன. மேலும் இருந்தே தீரும். லோகாயதத்தவாதம் அதன் அஸ்தமன தண்டவாளத்தில் மெல்ல மெல்லப் பொழுத டைந்து கொண்டிருக்கிறது. ஆத்மீக தத்துவத் தின் உதயதாரகை அஞ்ஞான இருளைக் கிளித் து அகிலமெங்கும் தண்ணொளி பரப்பி மேலெ ழுந்து வருகின்றன.

அச்சத்திற்கும்அச்சுறுத்துவதற்கும்ஒன்றுமில்லை ''பௌதீகம் என்பது ஒன்றில்லை'' என்ற அத் வைத வாதத்தின் முதற்படிக்கு இன்றைய விஞ் ஞான ஆராய்வின் முடிவுகள் வந்து கொண்டி ருக்கின்றன. விரைவில் வேதாந்த உண்மைகளை ''அணுயுகம்'' ஏற்றுக்கொள்ளும் காலம் வெகு தொலைவிலில்லை.

ஓம் தத் ஸத் ஓம்.

## பூவுலகின் பெரும் ஜோதி!

*(பால் ஒளி, எனுகு, நைஜீரியா)*

பூவுலகின் பெரும் ஜோதி என்று தன்னை நிரூபித்துள்ள மாபெரும் துறவி ஒரு வர் குறித்து எழுதுவதில் ஆனந்தம் ஏற்படுகிறது.

ஸ்ரீ சுவாமி சிவானந்தர் எழுதிய சிறியதோர் வெளியீட்டை 1952ல் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. ஆத்மீக அறிவுரைகள் நிரம்பி நின்ற அவ்வெளியீட்டின் வார்த்தைகள் தனது தெய்வீகத் தன்மையை மறந்து நித்திரை செய்பவர்களை விழிப் புறச்செய்வதாக இருந்தன. அந்த வெளியீட்டைப் படித்த பின்னர், நைஜீரியாவி லுள்ள ''யூனிட்டி சர்ச் ஆப் ட்ருத்'தைச் சேர்ந்தவனான நான் பெரிதும் கவரப்பட்டேன் வெளியீட்டிலடங்கியிருந்த கருத்துக்களைத் தியானித்து நிற்கையில் ஒருநாள் ஸ்ரீ சுவா மி சிவானந்தர் தான் எனது ஆத்மீக குரு என்றும் தான் தோன்றிப் பிள்ளைகளைத் திரும்பவும் நித்தியர் தந்தையிடம் அழைத்து வரும் தனித் தகுதி இவரிடம் அமைந் துள்ளதென்றுமுள்ள உள்ளுணர்வு தோன்றியது

எனது ஆத்மீகத் தலைவராக அமைய வேண்டும் என்ற வேண்டுகோளை 1952ல் ஸ்ரீ சுவாமிஜிக்கு நான் அனுப்பி வைத்தேன். உடனேயே என்னைச் சீடனாக ஒப்புக்கொண் டு கடிதம் வந்தது. அந்தக் கடிதத்தில் தேறுதல் நிறைந்திருந்தது. அதில் கடைசி யாக ''பிரார்த்தனை செய்வதில் ஒழுங்காக இருங்கள். ஆத்மீக நூல்களையும் ஒழுங்காகப் படியுங்கள். தைரியத்துடன் சந்தோஷமாக எப்பொழுதும் இருந்து வாருங்கள். எல்லா வழிகளிலும் இறைவன் தங்களுக்குத் துணை புரிவாராக!'' என்று எழுதப் பட்டிருந் தன.

ஸ்ரீ சுவாமிஜியை இதுவரை நான் நேரில் சந்திக்கா விட்டாலும் வாழ்க்கையில் நான் தவறிச்செல்ல முனைந்த போதெல்லாம் குருதேவருடைய தோற்றம் முன் நிற் பதைக் கண்டு காப்பாற்றப்பட்டுள்ளேன்.

ஸ்ரீ சுவாமிஜியின் போதனைகள் காந்த சக்தி வாய்ந்தவை. 'ஆத்மீக டைனமோ' வை அவை கொண்டு விளங்குகின்றன. அவை உலகியல் மனிதனின் உணர்வை ஊடுருவிச் சென்று உலகாயதத் திரையை அகற்றி ஆத்மானுபூதியின் மூலம் தெய் வீக வாழ்க்கையின் லட்சியத்தை அடைய அவர்களுக்கு வழி கோலுகின்றன,

இவ்வரிய மகாத்மா நம்மிடையே வாழ்ந்து வழிகாட்ட வகை செய்த பரம் பொரு ளுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வேட்கைகள் குறைந்த இந்த உல காயத சூழ்நிலையில், நேர்மையை நாடி விடுதலையை அடைய முனையும் மக்களுக்கு வழிகாட்ட இவ்வுயரிய துறவியை அனுப்பி வைத்த எம்பெருமானுக்கு நன்றி செலுத் துகிறேன்

மனக்கண் மயங்கி நிற்பவர்கள் பார்வை பெற்றுத் திகழக் குருதேவர் இன்னும் பல்லாண்டு வாழ வேண்டுமென்று இறைவனை இறைஞ்சுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகக் கலை



1. பத்மாசனத்தில் அமர்ந்து
புருவ மத்ய திருஷ்டியில் தியானம்



2. தனுராசனம்



3. ஹலாசனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



4. கர்ண பீடாசனம்



5. பத்ம மயூராசனம்



6. அர்த்த மத்ஸ்யேந்த்ராசனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



8. ஆகர்ஷண தனுராசனம்



7. சசங்காசனம்



9. கர்ப்பாசனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



10. உத்தித பத்மாசனம்



11. பாதாங் குஷ்டாஞசனம்



12. யோக நித்நிரை



13. உட்யாண பந்தனம்



14. நௌலிக் கிரியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கிய வாழ்விற்கு யோகாஸனப் பயிற்சி.

( யோகாசிரியர் ஸ்ரீ எஸ். ஏ. பி. சிவலிங்கம் )

''உயிர்க்குறுதி யெல்லாமுடம்பின் பயனே
உயர்ப்பின்றி யாதியை நாடு''
''உடம்பினுட் பெற்ற பயனவதெல்லாம்
திடம்பட வீசனைத் தேடு.''

(ஔவைக்குறள் 2-8, 9.)

உள் இயங்கிக் கொண்டிருக்கும் ஆத்ம நிலைக்கு, உறுதியைத் தருவது யாவும் சரீரத்தின் வேண்டுதல். ஆகவே வைராக்கியத்துடன் முழுமுதற் கடவுளான இறைவனை பூரண நம்பிக்கையுடன் தொழுது அவனையடைக.

இவ்வுடலை யாம் எடுத்ததன் பயன் ஏனைய சம்பத்தும் உள் உறுதியாக இயங்கிக் கொண்டிருக்கும் அறிவைப் பெறவே. அவற்றைப் பெறின் இறைவனையடையலாம். இவ்வாறாக ஔவைக் குறள் நமக்குப் போதிக்கின்றது.

இச்சடலம் எடுத்ததன் ப்யன் இறைவனையடைந்து, நிறைந்த எல்லையற்ற பேரின்பத்தையடைந்து, இறைவனுடன் இரண்டறக்கலத்தலே. அவற்றிற்கு முக்யத்துவம் உடலும், மனமும் திடமுடனிருப்பின் எக்காரியங்களையும் சாதித்து, வாழ்க்கையில் முன்னேக்கிச்சென்று, பேரானந்தத்தையெய்தலாம்,

ஆன்றோர்கள் தம் அறிவால், உடலை ஒப்புரவாகவும், திடத்துடனும் வைத்து, உளத்தே ஊக்கத்துடன், ஆத்ம சிந்தனையுடன் அனுதினமும், சாதனை செய்து மெய்யறிவைப் பெற்று மேம்பாடுற்று போந்தனர். உற்ற சுகமும், கோட்டையைப்போன்ற மனே திடமும் இருப்பின் வாழ்நாள் முன்னேக்கி, வாழ்க்கையில் பெரிதும் மேம்பாடுடையவராகத் திகழ்வோம். இவற்றை எவ்வாறு, எம்முறையில் எந்நிலையில் கடைப்பிடித்து அடைய இயலும்பல்லாண்டுகள் வியாதியிலும், மனேஓட்டத்திலும், உடல் வழுவற்ற நிலையிலும், மனிதன் என்று சொல்லக்கூட இயலாத நிலையிலிருந்த காலம் சென்று விட்டது.

இதோ, எத்தனை காலம் இம்மன வியாதி, உடல் வியாதி, இவற்றால் மிகவும் துக்கித்து, அதில்திழைத்து வாழ்நாளை வீழ்நாளாக்கினேம். வியாதி எனின் ஜல்தி, டாக்டரைக் கூப்பிடு, மருந்து வாங்கிவா, இஞ்ஜக்ஸன் போட வேண்டுமென்றும் சொல்லி அவ் வீட்டிலுள்ள அனைவருக்கும் கவலையும், துக்கமும் கொடுத்து மன வியாதிக்காளாகி வாழ்நாளை குறுகியகால அளவில் குறுக்கி விடுகின்றேம். இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பு வைப்பதைப்போன்று, நமக்குப் பெரும் ஆனந்தத்தையும், ஆத்மீக வாழ்க்கையில் முன்னேக்கிச் சென்று, தெய்வீக வழிபாட்டிற்கும், இறைவனுடன் இரண்டறக் கலத்தலுக்கும், ஞான அறிவைப் பெறவும் யோகாஸனம் பெரிதும் உதவுகின்றது.

மனப்பிணி, உடற்பிணி, கவலைப்பிணி, கஷ்டப்பிணி, துக்கப்பிணி, துன்பப்பிணி, காமப்பிணி, மனப்பிணி, மாபெரும் பிணியெனவும், தீர்க்க முடியாதெனவும் டாக்டர்களால் கைவிடப்பட்டதுமான பல பிணிகளையும் இந்த அற்புத ஆஸன மருந்தால் போக்கலாம். இவற்றை வற்புறுத்திச் சொல்வதின் காரணம் கஞ்சிவியைப் போன்றநாக மிளிரும் ஆஸன மருந்தை உபயோகித்தவர்களிடம்தான், இதன் அருமையும், பெருமையும் ஓங்கி நிற்கும். ஓகோ, இந்த யோகாஸனம் செய்வதால் நமக்கு இவ்வளவு நன்மையும், தின்மையும், அறிவும் கிட்டுகின்றதாவென வியப்படையலாம்? உடலை உறுதியுடனும், ஆக்கத்துடனும், வைராக்கியத்துடனும் வைத்து, அஃதிலிருந்து உண்மையறிந்து உலகிற்கு தொண்டாற்றவும், தெய்வீக வாழ்க்கையில் புகவும், திட மனத்துடனிருந்தால் தான் வாழ்க்கையில் முன்னேக்கியும், மேம்பாடடையவும் இயலும். அஃதின்றேல் வாழ்நாள் பூராவும் பிணியில் திழைத்து, விரயம் செய்தவர்களாகின்றேம்.

மூன்று உடற் பிரிவுகள்;

உடலினுள் எண்ணற்ற நரம்புகளிருக்கின்றன. சுரப்பிகளும், எலும்புகளும், உரோமங்களும் இருந்து அதனதன் வேலைகளையும், செவ்வனே செய்து ஆக்கத்துடன் சுறுசுறுப்பையும், இரத்தோட்டத்தையும் கொடுத்து வாழ்நாளில் முன்னேக்கிச் செல்லவும், அறிவையும் கொடுக்கின்றன. உள்ளே எழுபத்திராயிர நாடிகளிருக்கின்றனவென யோக நூல்கள் கூறுகின்றன. இவைகள் யாவும் உடலினுள் இரத்தோட்டத்

திற்கும், எலும்புகட்கும், சதைகட்கும் மிக உறுதுணையாகவும், பாதுகாப்பாகவும் இருக்கின்றது. உடலை தலை, கால்கள் கை, உடல் என முப்பிரிவாகப் பிரிக்கலாம்.

இவற்றில் மார்பறை, வயிற்றறை, ஜீரணப் பிரிவுகள், பெருங்குடல், சிறுகுடல் இவைகள் யாவும் நாம் உண்ணும் உணவையும், கடின பதார்த்தங்களையும் ஜீரணிப்பித்து உடலை வலுவுடன் இருக்கச் செய்விக்கின்றது. இள வயதில் உழைப்புடன் கூடிய நல்ல உணவாகவும், மனக்கட்டுப்பாட்டுடன் இருப்பின் பின் திடத்துடனும், வைராக்யக் கோட்பாட்டுடனும் இருக்கலாம்.

நாக்கு அறுசுவை உருசியறிகின்றது. கால்கள், நடக்கின்றன. கைகள் கொடுத்தல், வாங்கல் முதலிய வற்றைச் செய்விக்கின்றது. கண்கள் நோக்குகின்றன. செவிகள் கேட்கின்றன. வாய் பேசுவதற்கு உதவுகின்றது. விரல்கள் பிடிக்கவும், பற்றவும் உதவுகின்றன. பற்கள் தின்பதற்கும், கடின பதார்த்தத்தை மென்று விழுங்கவும், உதவுகின்றன. குறி, குதத்துவாரம் இவைகள் கழிவுப் பொருள்களை வெளித்தள்ளவும், மூக்கு சுத்த, அசுத்த காற்றை சுவாசிக்கவும் உதவுகின்றது. இவற்றிற் கெல்லாம் உடல் வலுவுடனும், சுத்த இரத்தத்துடனுமிருப்பின் செவ்வையாய், வியாதியற்றிருக்கலாம்.

கால்களின் பெரு விரல் முதல், உச்சந்தலை வரை 96 அங்குலமுள்ளது. உளத்தையும், உடலையும் ஒப்புரவாக்கி வாழ்நாளை திடநாளாகவும், ஆனந்தமுடனும் இருக்கவே நமக்கு அறிவையும், யோகாஸன விளக்கத்தையும் இறைவன் கொடுத்தார். யோக தத்துவத்திலுறைந்தவர்கள், ஆத்மீக வாழ்க்கையிலும், யோகமுறையிலுமான மூன்றும்படியான ஆஸன யோகமேசாலச்சிறந்தது எனக்கூறியுள்ளார்கள்

**சில பயிற்சிகள்:**

உடல், உளம், யௌவனம், இச்சை இவற்றாலுண்டாகும் ரஜோ குணத்தை (சோம்பலை, அசம்பாவிதத்தை) தடுத்து உடலை மலைக்குன்றைப்போன்று யௌவனத்துடன் திகழச் செய்து, சுறுசுறுப்புடன் ஆக்குகின்றது. வைராக்யம் வாழ்வில் வெற்றி, உற்சாகம் இவைகளைக் கொடுக்கின்றது.

''பத்ரங் கோமுகம் பங்கயங் கேசரி
சொத்திரம் வீரஞ் சுகாதனம் ஓரேழும்
உத்தமமாமுது ஆதனம் எட்டெட்டுப்
பத்தொடு நூறு பல ஆனனமே.''
(திருமந்திரம் 3, 563.)

தியானத்திற்கேற்ற பத்ராஸனம், கோமுகாஸனம், பங்கயாஸனம், கேஸரியாஸனம், சொஸ்தியாஸனம், வீராஸனம், ஸுகாஸனம், முதலிய பலவகை ஆஸனங்களுள்ளன. ஜீவராசிகள் எத்தனையோ, அத்தனை எண்பத்தி நான்கு இலக்ஷங்கள் ஆஸனங்களுள்ளன.

வாழ்விற்கு உறுதுணையாயதும், கடைப்பிடிக்கத்தக்கதுமான சில முக்கிய ஆஸனங்களைச் செய்து உடலைப் பேணி வளர்க்கலாம். ஆஸனம் செய்வதால் எண்ணற்ற வியாதிகளையும் போக்கலாம். ஆரம்ப சாதகர்கள் ஆஸன விதிகளை எவ்வாறு கடைப்பிடித்துச் செய்யலாம்.?

அருணோதயதிற்கு முன்பெழுந்து, இறைவன் சிந்தனையுடன், முகம், வாய்கழுவி சிறிது சுத்த நீரருந்தி, மலஜலம் கழித்து,

''ஜீவமணி ப்ராஜத்பண ஸகஸ்ர வித்ருத
விஷ்வம்
பராமண்டலாய அனந்தாய நாகராஜாய
நமஹ''

எனும் யோகத்திற்கு முக்கிய மூலகுரு ஆதிசேஷனை நினைந்து, இம் மந்திரத்தைச் சொல்லி, குருவையும் நமஸ்கரித்து பின் சமதள விரிப்பின் மேல், உள நிறைதலுடன் சந்தோஷத்துடன் ஆஸனம் செய்யவும். உடல் நிலை, உள்ள நிலை இவைகளை சிந்தையுள் வைத்து தினசரி இடைவிடாது விதித்த ஆஸனத்தைச் செய்யவும்.

ஆரம்ப சாதகர்கள் தியானாஸனமான பத்மம், சித்தம், சுகம், பத்ரம், வஜ்ரம், மதாந்த்ர பத்மம், கோமுகம், ஸ்வஸ்திகம் முதலிய ஆஸனங்களில் யாதாவதொன்றைச் செய்து பின் ஏனைய ஆச்சாரியன் கொடுத்த ஆஸனங்களைச் செய்யவும்.

கீழ்க்குறிப்பிட்ட ஆஸனங்களை ஏனையவரும் எளிதில் செய்யலாம்.

பத்மாஸனம், சலபாஸனம், தநுராஸனம், ஆஹர்ஷண தநுராஸனம், புஜங்காஸனம், சக்கராஸனம், கம்ராஸனம், ஹம்ஸாஸனம், பச்சிமோத்தாஸனம், ஹலாஸனம், சர்வாங்காஸனம், மச்சியாஸனம், மரீச்சாஸனம், சிரஸாஸனம். சலாஸனம் இவ்வாசனங்களை இயலுபவர்களனைவரும் செய்யலாம்.

முடிந்த பின்பு சில நிமிடங்கள் ரேசக, பூரகஞ் செய்து விஸ்ராந்தி செய்யவும். பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள் இயங்கிக் கொண்டிருக்கும் ஸ்வாஸ கோஸ பயிற்சியும் செய்யவும்.

1. பத்மாஸனத்திலுட்கார்ந்து உடல், முகம், கழுத்து, மார்பு, இடுப்பு, இப்பாகங்கள் விறைப்புற்று, இரண்டு கைகளும் ஒன்றன்மே லொன்ருக வைத்தமரவும். நெடு மூச்சாக, வெகு மெதுவாக இரு மூக்குத்துவாரங்களிலும், உள்ளிழுத்து அதேபோன்று வெளிவிடவும். இவ்வாறு சுமார் ஆரம்பத்தில் பதினைந்து முதற்கொண்டு எழுபதுவரை செய்யலாம்.

2. அமர்ந்து இடது கையை தொடையின் மேலமர்த்தி வலது கையை மடக்கி நடுவிரல், கட்டை விரல்களால் வலது பக்க நாசித்து வாரத்தை அடைத்து, வயிற்றிலிருக்கும் காற்றனைத்தையும் இடது நாசித்துவாரத்தில் வெளிவிடவும். அவ்வழியிலேயே வெகு மெது வாக உள்ளிழுத்து, இடது நாசியையடைத்து வலது நாசியால் வெளிவிடவும். அது வழியே உள்ளிழுத்து,வலதையடைத்து இடது வழியால் வெளிவிடவும். இது எண்ணிக்கை ஒரு பிராணு யாமமாம். ஆரம்பத்தில் பதினைந்து முதற் கொண்டு எழுபதுவரை செய்யலாம்.

3. அமர்ந்து இடது, வலது கைகளின் மேலொவ்வொன்ருக வைத்து இறுமாப்புற்று தொண்டையைச் சுருக்கி, மூக்குத்துவாரங் களின் வழியாக மெதுவாய் உள்ளிழுத்தும், வெளிவிடவும் செய்யவும். இருபதிலிருந்து 50 வரை செய்யலாம்.

இவைகள் யாவும் இரத்தத்தைச் சுத்த மாக்கி ஆரோக்கியத்தையும்,ஆனந்தத்தையும், கொடுத்து, வியாதிகளை அறவே போக்குகின் றன. ஏனைய வியாதிகளைப் போக்கும் யோகா ஸன மருந்து நம்மிடம் வைத்துக் கொண்டே அறியாமல் துன்பப்படுகின்ருேம். ஆஸனப் பிராணுயாமங்களைக் கொண்டு வியாதிகளைப் போக்குங்கள். ஆயுள் முழுவதும், யௌவனரா கத் திகழலாம்.

ஸ்வாஸத்தை மாற்றி ஓடச் செய்வதால் சில வியாதிகள் நீங்குகின்றன. அவற்றை இங்கு கொடுத்திருக்கின்றேன்.

இடது பக்கமாக நெடு நீட்டமாக கீழே படுத்து, இடக்கையை மடக்கி முழங்கை கீழே தொட்டும், உள்ளங்கையின்மேல் தலையை வைத்து, வலக்கையை நேராக வலது பக்க தொடையுடன் நீட்டி வைத்துக் கொள்ளவும். இவ்வாறு செய்வதால் இடது பக்கத்தில் ஓடும் ஸ்வாஸம், வலப்பாகத்தில் மாறியோடும்.

வீராஸனத்திலுட்கார்ந்து அப்பாகத்தை கையால் அழுத்தவும்,ஸ்வாஸம் மாறியோடும்.

எப்பக்கம் வேண்டுமோ, அதற்கு மறு நாசித்துவாரத்தை பஞ்சடைப்பின் ஸ்வாஸம் மாறியோடும்.

யோக தண்டாஸனம் செய்யின் ஸ்வாஸம் மாறியோடும்.

இவ்வாறு மாற்றத் தெரிந்து கொண்ட பின்பு, ஜுரம், கோபம், கபம், கஷ்டம், இதயத்துடிப்பு, தீய எண்ணங்கள் இவைகள் ஏற்படும் சமயம் இம்மாற்றத்தைச் செய்யின் நல்ல பலனையடையலாம்.

இவற்றையறிந்து வாழ்க்கையில் முன்னேக்கி திடகாத்திரராகவாழ ஆஸனப்பயிற்சிகளையும், ஆத்மீக வாழ்க்கைக்கு உறுதுணையாக பிராணு யாமப் பயிற்சியையும் செய்து ஆனந்தத்துடன் இருங்கள்.

உடல் விழுமுன்பே திடாரோக்யத்துடன் இருங்கள்.

ஆஸனம் செய்து உடலையும், உளத்தையும் இரத்தினம் போன்றதாக்குங்கள்.

மருந்து, ஊசிக்கு உடலையர்ப்பணிக்காதீர் கள்.

ஆஸனம் எப்பாகங்கட்கும், இரத்தம் சென்று புத்துயிரளிக்கின்றது.

ஆஸனத்தைப் பயின்று ஆனந்தத்துடன் இருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சன்மார்க்கம்

(திருமதி. பொன்னம்மாள் கிருஷ்ணபிள்ளை)

எத்தனை கோடி இன்பம் வைத்தாய்! என்று அறிஞர் ஒருவர் கூறிப் போந்தார். ஆம். அவர் கூறியதில் எவ்வளவு உண்மை பொதிந்திருக்கிறது. இப்பரந்த உலகின் கண்ணே இறைவனால் எத்தனை வகையான இன்பங்கள் அளிக்கப் பட்டிருக்கின்றன. அப்படி அளிக்கப் பட்ட இன்பங்களைப் பல வகையிலும் அநுபவித்து இன்பம் அடைகிறோம். அந்த இன்பங்களைத் தந்த இறைவனை இடையறாது எண்ணி நன்றி செலுத்துவதே எல்லாவற்றிலும் மேலான இன்பமும் மக்களாகப் பிறந்த நம் கடமையுமாகும். பரிபூரணனை அந்தஇறைவனை நாம் அடைவதற்கு வழிகாட்டியாயுள்ளது சன்மார்க்கமே.

மக்களின் இருண்ட வாழ்க்கைக்குப் பேரொளியாய் உள்ளது சன்மார்க்கமே.

பயிருக்கு முள்வேலி எத்துணை அவசியமோ மக்களுக்கு சன்மார்க்கமென்னும் வேலி அத்துணை அவசியமானது.

கறியமுதில் உப்பைப் போன்று, கைங்கரியங்களில் கரைந்து நிற்கும் சன்மார்க்கரே இறைவனை அறிய முடியும் என்பது பெரியோர் தம் புனித அனுபவம்.

ஆற்றில் மிதப்போனுக்குப் படகு மட்டும் இருந்தால் போதாது. துடுப்போ, கோலோ தேவையாகும். அவ்வாறே மக்களுக்கும் அருட் துணையும் சன்மார்க்கமுமே பேரின்ப வாழ்க்கைக்கு இன்றியமையாதது.

நாம் நடமாடிக் கொண்டிருக்கும் போதே அரன் பணி செய்வது முறைமையாகும். நரை, திரை, மூப்பு. சாக்காடு நம்மைத் துரத்திக் கொண்டே இருக்கிறது. இளமையும், செல்வமும், யாக்கையும் நிலையாது என்பது நம் ஒவ்வொருவருக்கும் நன்கு விளங்கும். அருள் என்னும் ஆணி வேரைப் பிடுங்கின மக்களின் வாழ்க்கை தழைப்பது எங்ஙனம்? வாய்த்தது நந்தமக்கீதோர் பிறவி மதித்திடுமின்' என்று அப்பர் சுவாமிகள் கூறியிருக்கிறார்கள். ஆகவே நமக்குக் கிடைத்த அரிதான பிறவியை வீணாக்காது, பகவானது உண்மை வடிவத்தை நெஞ்சில் பதித்து துன்புற்றவர்களுக்கு அன்பு காட்டி அறவழியிற் செல்ல சன்மார்க்கமென்னும் பாதையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

தன்னலம், பொது நலமாகிய இரு உருவம் கொண்டவர்களே மக்கள். தன்னலம் கொண்ட மக்கள் பகுத்தறிவு தேய்ந்து, சினம் என்னும் பகைமைப் பேய்க்கு ஆளாகிப் படுகுழியில் வீழ்ந்து எழுவதற்கு வகையறியாது திகைக்கின்றனர். தன்னலத்தால் அறம் வாய்மை, குலப் பெருமை யாவும் அழிந்து விடும். 'அரம் போலும் கூர்மையரேனும் மரம் போல்வர் மக்கட் பண்பில்லாதவர்' என்ற அறிஞரின் வாக்கு எத்துணை அழகானது என்பதை நாமே ஆராய வேண்டும்.

பொதுநலம் - பரந்த உலகிலே விரிந்த மனப்பான்மை கொண்ட பொது நலத் தொண்டர்கள் இறைவனின் பேரருளாய்க் காலத்திற்குக் காலம் அகத்தியெனப் பூத்து இலைமறை காய் போல வாழ்ந்து அவ்வக் காலங்களிலே சன்மார்க்க வழிகளைச் சொல்லாலும் செயலாலும் காட்டி மறைந்து விடுகின்றனர். இப் பெரியார்கள் மறைந்த போதிலும் தேனீக்கள் பல புஷ்பங்களிலிருந்து தேனைச் சேர்த்துத் தாங்களும் உண்டு பிறருக்கும் பயனடையச் செய்வதுபோல் அவர்களுடைய மறை மொழிகளும் சன்மார்க்க வழிகளும் என்றும் பொன்னேபோல் போற்றத்தக்கதாக நிலவுகின்றது.

மனம் ஓர் கத்தியைப் போன்றது. கத்தி பழம் அறுக்கவும் உதவும். பிறரின் தலையை அறுக்கவும் உதவும். அதேபோல் மனம் நல்லதையும் நினைக்கும், தீயதையும் நினைக்கும். மனதைத் தீய வழியிற் செல்லவிடாது தடுத்து சன்மார்க்க வழியிலே நடத்துவதற்குக் குழந்தையிலிருந்தே பழக வேண்டும். ஆகவே சன்மார்க்க நெறிக்கு முதுகெலும்பு போன்றவர்கள் மாதர்களே.

மிகவும் நுண்ணிதான ஆலம் விதறுள் பெரிய சேனை படை தங்கக் கூடிய பெரிய விருட்சம் அடங்கியிருக்கிறது. அதே போலக் கள்ளம் கபடமற்ற சிறு குழந்தையிடத்தில் பெரிய ஒளிமிக்க எதிர்கால வாழ்வு அடங்கியிருக்கிறது. குழந்தை பிறந்தவுடன் அகமகிழ்வெய்தும் தாயானவள் அக் குழந்தை வளர்ந்து உலகத்தவரால் சன்மார்க்கன் என்று போற்றப் படும்போது இம்மையில் வேறு மகிழ்வு அவளுக்கு வேண்டியதே இல்லை. ஓர் தாயிடம் படிப்பும் அறிவும் இருந்தால் மட்டும் போதாது. அன்பும் பண்புமே பிரதானமானது. உலகம் முழுவதையும் அன்பாலே வசப்படுத்தலாம் எனக் கண்ணபிரானே கூறியுள்ளார். கணிகையாக இருந்தாலும் தன் மகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிமேகலையைக் கண்ணகியின் மகள் என்று கூறுகிறாள் மாதவி. என்னே! மாதவியின் அளவு கடந்த அன்பும் பண்பும். இன்னும் ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்பதற்கிணங்க சிறுவயதிலே சன்மார்க்க நெறி புகுத்தப்படாத மக்கள் வாழ்க்கையில் பல இன்னல்களை அடைந்து ஈற்றில் உலகத்தோரால் இகழப் படுவர். தன் குழந்தைகளை மட்டுமன்றித் தாயானவள் அன்பால் தன் கணவரையும் உற்றார் உறவினரையும் சன்மார்க்க வழியில் இட்டுச் செல்லப் பெரிதும் உதவியாய் இருக்க வேண்டும். இல்லற வாழ்வின் பயனாக ரிஷிகளும் மகான்களும், அவதார புருஷர்களும் தோன்றியிருக்கிறார்கள். இத்தகைய மேலோர் தோன்றும் இல்லற வாழ்வு எத்துணை புனிதம் உடையதாக இருக்க வேண்டும் என்பதை நன்கு சிந்திக்க வேண்டும். இதோ வள்ளுவ நாயனார் பொருத்தமாக எடுத்துக் காட்டி இருக்கிறார். 'இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை.'

உலக மாதாவாகிய அன்னை அகில உலக மக்களை அணைப்பது போன்று குடும்பத்திலுள்ள தாயானவள் அக் குடும்பத்தினரை அன்பணைப்பால் ஆதரிக்க வேண்டும். அந்தத் தாய் பேயாக மாறின் அக் குடும்பம் நாயாக அலையும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. ஆகவே சன்மார்க்கமான இல் வாழ்வில் இருந்து கொண்டே மற்றெல்லா வகையாலும் அடையும் பயனிலும் மேலான பயனை அடையலாம் என்பதை நாம் நன்கு உணரலாம்.

பகுத்தறிவற்ற பறவைகள் கூடத் தாங்கள் இருக்கும் சூழ்நிலைக் கேற்றவாறு பழகிக் கொள்ளுகின்றன. ஓர் அரசன் தன்னிடம் இருந்த கிளிகளில் ஒன்றை ஓர் சாதுவிடமும் ஒன்றை ஓர் கசாப்புக் கடைக்காரனிடமும் வளர்க்கும்படி கொடுத்தான். சில நாட் சென்ற பின் அரசன் சாது வீட்டிற்குப் போனான். வாசலில் உள்ள கூண்டிலிருந்த கிளி 'ஐயா வணக்கம் அமருங்கள். பழம் சாப்பிடுங்கள்' என்று சொல்லிற்று. அரசன் மகிழ்வோடு மற்றக் கிளியைப் பார்ப்பதற்குச் சென்றான். அங்குள்ள கிளி 'அடே மடையா வெட்டு கொத்து' என்று சொல்லியது. அரசனும் தன் மனத்தினுள் இரு கிளிகளையும் பற்றி எண்ணியவாறு வீட்டிற்குச் சென்றான்.

ஆதலால் தீயினிடம் ஒப்படைக்கப்பட்ட விறகுக் கட்டை தானே தீயாவது போல் சன்மார்க்கருடன் பழகிக் கொண்டால், நம்மையறியாமல் நாமாகவே சீரிய வழிகளில் செல்ல ஏதுவாகும்.

நாம் கோயிலுக்குப் போவது அவசியமா? என்பது ஒரு பெருங் கேள்வியாகும். அரனை மறவேல் ஆலயம் தொழு. திருமாலுக்கு அடிமை செய். என்ற நம் மூதோர் வாக்கு ஒவ்வொன்றும் நம் கடமையைத்தான் நினைவுறுத்துகின்றன. நாம் வீட்டிலிருந்தே நம் மனதை ஒருவழிப்படுத்தி ஈஸ்வரனுக்குப் பூசை செய்து அர்ப்பணம் செய்ய இயலுமானாலும் கோயிலுக்குப் போவதில் பல விதமான நன்மைகளும் உண்டு. முற்காலத்திலே கோயில் மணி கேட்ட பிறகு சாப்பிடும் பழக்கத்தைச் சில பெரியோர் கைக்கொண்டிருந்தனர். இனி நாம் கோயிலுக்குப் போவதனால் அங்குள்ளோர் சுவாமிக்குரிய நிவேதனங்கள் பூசைகள் சரிவரக் காலாகாலத்தில் செய்கிறார்களா? என்று கவனிக்கவும் நமக்காகவாவது அங்குள்ளோர் சன்மார்க்க நெறிகளைப் பின்பற்றி நல்ல சூழ்நிலைகளை உண்டாக்குவதற்கும் ஓர் இன்றியமையாததாகும்.

தோன்றி மறைந்து போம் மின்னலைப் போன்ற பொய்யான இந்த உடம்புக்கு எவ்வளவு அழகாக ''மெய்'' என்று பெரியோர் பெயரிட்டிருக்கிறார்கள். உலகத்திலே நிலையான பொருள் ஒன்றுமில்லையென்பதையும். 'நிலையாமை' ஒன்றே நிலையானது என்பதையும் எந்தச் சமயத்தவரும் ஒப்புக் கொள்வார்கள். 'நான்' என்பது ஈர வெண்காயத்திற்குச் சமமானது. வெண்காயத்தைச் சில நாட்களுக்கு வைத்து விட்டால், அது காய்ந்து, அதன் மேலுள்ள சருகுகள் ஒவ்வொன்றாக உதிர்ந்து, 'வெண்காயம்' என்ற சொல்லுக்குக் கடைசியில் ஒன்றுமே எஞ்சியிருப்பதில்லை. அதே போல் அழிந்து மடிந்து போகும் இந்த உடம்பு இருக்கும்போதே சன்மார்க்க நெறி நின்று இறைவனைக் கண்டின்புற வேண்டும்.

ஓர் அரசனுக்குத் தேர்ப்படைகளும், மிகவும் அதிக வேகமுடைய குதிரைப் படைகளும், எவரையும் எதிரிட்டுப் போர்புரியும் திறமை வாய்ந்த போர் வீரர்களும் இருந்தாலும் அவனுடைய வெற்றிக்கு அடிப்படையாக விளங்குவதுஅவனுடைய சன்மார்க்கமே.

உலகில் வாழும் மக்கள் அனைவரும் குறிக்கோளுடன் வாழுகிறார்கள். அது பலவாறு அமையும். ஆனால் எல்லோரது எண்ணங்களும் இறைவனை எண்ணி, எண்ணி உருகும் வாழ்க்கையாக அமைய வேண்டும். நம் உடம்பிலே உயிர் இருக்கிறது. உயிரிலே உத்தமன் உறைகிறான். இதனை ''உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன் உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென்று யானிருந்து ஓம்புகின்றேன்'' என திருமூலநாயனார் அருளியுள்ளார். பரிசுத்தமான மனத்துள்ளே பரிபூரணன் அமர்ந்திருப்பான். மக்கட் பிறவியினால்தான் ஈசனின் பெருங் கருணையை அறிந்து உணர்ந்து அடைய முடியும் என்பதை அப்பர் பெருமான் 'மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே' என்று அழகாக இயம்பியுள்ளார். கிடைத்தற்கரிய பிறவியை நாம் அதைத் தக்க வழியில் பயனுறச் செய்ய வேண்டும். குழந்தையுடைய கபடமற்ற தன்மையிலும், யோகியுடைய உறுதிப்பாட்டிலும், ஆகாயத்திலேயுள்ள நீல நிறத்திலும், சுடுகாட்டுப் பயங்கர நிலையிலும் இறைவனைக் கண்டு இன்புற வேண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும். நம் எண்ணமெல்லாம் உயர்ந்த எண்ணமாக வேண்டும்.

எல்லாப் பறவைகளிலும் பார்க்க கழுகு உயரப் பறந்தாலும், நெடுந்தூரம் பார்க்கும் சக்தி இருந்தாலும் அதன் நோக்கம் பிணந் தேடுவதே. ஆகவே அரிய பிறவியாகிய மானிடப் பிறவி எடுத்த நாம் அதை வீணுக்காது சன்மார்க்க உறவு பூண்டு நித்தியானந்தப் பேரின்பத்தை நெஞ்சில் நிறுத்தி, வீடு பேறெய்தும் மார்க்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

சமஸ்கிருத பாஷையிலுள் ஹரி என்ற நாமத்தின் பொருள் எல்லாப் பொருள்களையும் தன்னிடத்தே இழுத்துக் கொள்ளல் என்பதாம். அவர் ஒருவரே மனிதருடைய மனதைக் கவர உரிய பொருள் கருணை மூர்த்தியான அந்த இறைவன் நினைப்பவர் நெஞ்சில் கடைந்த தயிரில் வெண்ணெயைப் போல் திரண்டும் நினையாதவர் நெஞ்சிலே பாலில் நெய்போல் மறைந்தும் இருப்பர். அப்படி இருக்கும் அந்த சச்சிதானந்த சொரூபியைச் சிந்திப்பதை விடுத்துச் சிலர் சன்மார்க்க நெறி என்பதாகச் சொல்லி, பேய் பிசாசு, பூதம் இவற்றுடன் தொடர்பு கொண்டு, மற்றவர்கள் செய்ய முடியாத அற்புதங்களைச் செய்வதாக எண்ணித் தாமும் துன்புற்று, ஏனையோரையும் ஏமாற்றுகின்றனர். அந்தச் செய்கை எப்படி இருக்கிறதென்றுல் சுத்தமான ஜலத்தை விடுத்துச் சாக்கடை நீரில் குளிப்பதற்கு ஒப்பாகும். ஆகவே நிர்மலமான நிமலனின் வடிவத்தில் அன்பு கொண்டு, துன்புற்ற மக்களுக்கு அன்பு பாராட்டி, பணிபுரிதலே, சன்மார்க்கரின் கடமையுமாகும்.

ஒவ்வொரு மனிதரும் தனக்குக் கிடைத்த ஆயுளில் எவ்வளவோ அரும் பெருங் காரியங்களைச் சாதிக்க முடியும். அவற்றை நாம் வாய்ப் பேச்சளவோடு நிறுத்தி விடுவதில் எவ்வித பயனுமில்லை. 'சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்' என்ற பெரியாரின் வாக்குப்படி ஒவ்வொருவரும் தங்களாலியன்ற நற்பணிகளைச் செயலில் நிறுத்தி நம் பிறவியாகிய பெருங் கடலை நீந்திக் கரை சேர்வதற்கேற்ற மார்க்கத்தைத் தேட வேண்டும்.

ஆகவே நமது வாழ்நாளை வீணுக்காது, சிவ கதைகளைக் கேட்டும், பிறருக்குச் சொல்லியும், பசித்தோர்க்கு அன்னம் கொடுத்தும், மெய் சொல்லி வாழ்ந்தும் இறைவனை இமைப்பொழுதும் நெஞ்சை விட்டு நீங்காது நினைத்தும், சன்மார்க்கராக நடந்து, ஒப்பற்ற பரம் பொருளின் அடியைச் சார்ந்து பேரின்பமடைவோமாக.

''சன்மார்க்கஞ் சகமார்க்கஞ் சற்புத்திர மார்க்கந்
  தாதமார்க்கம் என்னுஞ் சங்கரனை யடையும்
நன்மார்க்கம் நால் அவைதாம் ஞானயோக
  நற்கிரியா சரியையென நவிற்றுவதுஞ் செய்வர்''

(சிவஞான சித்தியார்)

## அடக்கத்துடனும், எளிமையுடனும் இரு.

எதிலும் குதூகலிக்கும் சுபாவத்தை அடை. சிநேகப் பான்மை, கர்வமற்ற தன்மை இவைகளைக் கொள். இயற்கையின் இரகசியங்களை அறி. உன் மனோ திட்பத்தை வளர். வியர்த்தமாகும் சக்தியை யெல்லாம் திரட்டு. அறிவுடன் உலகில் நட. நீ பெருஞ் சாந்தி பெறுவாய்.

வீண் பேச்சில் உன் அரிய நேரத்தை வீணுக்காதே. பேச்சுக்களை சுருக்கு. அடக்கம், எளிமை இவற்றைக் கைக்கொள். எதையும் ஈசுவரார்ப்பணமாகவே செய். உன் குறைபாடுகளை வெளிப்படையாக ஒப்புக்கொள். அவற்றை எதிர்காலத்தில் நீக்க முயற்சி செய். இறைவனிடம் உருக்கமாகப் பிரார்த்தனை செய். நீ சீக்கிரமே தெய்வ ஞானம் பெறுவாய்.

- சிவானந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திவ்விய ஜீவனம்

(சிவானந்த சச்சிதானந்த மாதாஜீ)

சிந்தையைச் சிவன்பால் வைத்து வையத்துள் வாழ்வாங்கு வாழும் முறையை மக்களுக்கு எடுத்துக் காட்டுவதே சமயம். மக்கள் புலன்வழிச்சென்று, கடைத்தேறும் வகையறியாது அழிந்தொழிந்து போகாவண்ணம் அவர்களைத் தடுத்தாட் கொள்வதற்கு எண்ணிறந்த மகான்கள் இற்றைவரைக்கும் தோன்றியுள்ளனர். உள்ளிருக்கும் பரம்பொருளை உணர்வதற்கு இம் மகான்கள் அல்லும் பகலும், துடியாய்த்துடித்து, அனலிடைப்பட்ட மெழுகு போல் உள்ளம் கசிந்துருகி, ஆற்ருெணுத் துன்பங்களைச் சகித்திருந்தனர் என்பதை அவர்கள் வரலாறு கூறுகின்றது. ஆத்மீகப் பாதை அவ்வளவு சுலபமானதன்று என்பதை அம் மகான்களே கூறுகின்றனர். சிவனை மகனுகப் பெற்ற சிவநேசச் செல்வர் பட்டினத்தாரே ''வாளால் மகவரிந்தூட்ட வல்லேனல்லேன், மாது சொன்ன சூளால்இளமை துறக்க வல்லேனல்லேன், நாளாறிற் கண்ணிடந்தப்ப வல்லேனல்லேன், நானினிச் சென்ருளாவதெப்படியோ என்று, தமக்கு முன்னிருந்த மகான்களின் திறனை வியந்து தமது நிலையை எண்ணிப் பரிதவிக்கின்ருர். ''ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியான்'' என்கிருர் மாணிக்க வாசகர்.

''உள்ளத் தொருவினை உள்ளிரு சோதியை
உள்ளம் விட்டோரடி நீங்கா ஒருவனை
உள்ளமும் தானும் உடனே இருப்பினும்
உள்ளம் அவனை உருவறியாதே''

என்று அலமருகின்ருர் திருமூலர். இவ்வாருக கூடுமன்பினில் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறலினர் உண்டாக்கிப் பூஜித்துப் போஷித்த சமயம் இன்று இருக்கும் நிலையென்ன?

சமய தத்துவங்களெல்லாம் சாரமிழந்த சக்கைகளாகி, மக்களுக்கு மெய்ஞானம் புகட்டும் வலியிழந்து, பண்டிதர் கையில் மேடைப் பிரசங்கமாகவும், பூசகர் கையில் வரட்டுக் கிரியைகளாகவும், தத்துவஞானி கையில் வாசிகசாலைகளை அலங்கரிக்கும் நூல்களாகவும் தூங்குகின்றது. உலகத்திலே எதையும் சாதிக்கச் சக்தியற்ற வெறும் பத்தாம் பசலிகள் சமயத்தை போலிச் சடங்குகளாக மாத்திரம் ஆக்கிவிட்டனர்.

வீட்டை நாடிய வீரர்களெல்லாம் காட்டை நாடிக் கடுந்தவ மியற்றியும் இலகுவிற் காணப் பெருத அப் பரம்பொருளை இன்று நாடிச் செல்பவர் யார்? கலியாணம் பண்ணும் வாய்ப்பையிழந்த ஆண் பெண் பாலார்க்கு சமயம்ஒரு பொழுது போக்காகிவிட்டது. விதவைகள், அமங்கலர், பலவீனர், போலிவேஷதாரிகள் மாத்திரம் இன்று சமயப் பாதுகாவலர்களாய்த் தோன்றி நிற்கின்றனர். பணம் சேர்க்க வகையறியாத பக்கிரிகளுக்கு சமய சங்கங்கள், பிழைப்புக்காட்டும் கருவிகளாக அமைந்து விட்டன. சமுதாயத்திலுள்ள வேலையில்லா நபர்கள், பரீட்சைக்கு மாத்திரம் சமயத்தைப் படிக்கும் பள்ளி மாணவர், வயோதிபர், வேஷதாரிகள் முதலியோர் கையில் அகப்பட்டுச் சமயங்களெல்லாம் உள்ளேயுள்ள தெய்வீகத்தைப் பொலிவுறச் செய்யும் வலியிழந்த, வெற்றுச் சடங்காய், மதிநுட்பவான்களின் கேலிப்பொருளாய் உயிரிழந்து கிடக்கின்றன.

ஆனுல் மனிதன் எக்காலத்திலும் ஆத்மீகத்திற் பாராமுகமாயிருக்க முடியாது. நோயுற்ற போது, மருந்தைத் தேடியே ஆகவேண்டும். தர்மம் குன்றி அதர்மம் தலையெடுக்கும் போது தாம் திருவவதாரம் செய்வதாகக் கிருஷ்ண பரமாத்மா கூறுகின்ருர். அதே வாக்கிற்கிணங்க உலகில் லோகாயதம் தலையெடுத்து, ஆத்மீகம் நிலை குன்றும் தருணத்தில், மக்களெல்லாம் புலன்வழிச்சென்று, தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, விடுநிலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நிற்கும் நேரத்தில், உலக உயிரனைத்தையும் தாயென அணைக்கச் சற்குரு ஸ்ரீ சிவனந்த மகராஜ் தோன்றியிருக்கின்ருர். சிவனடியார் அப்பைய தீட்சிதரின் வழித்தோன்றலான ஸ்ரீ குப்புசாமி ஐயர், மலேயாவிற் பிரபல்ய ஆங்கில வைத்தியராக இருந்தபோதே பூர்வ புண்ய வசத்தால் ''ஜகத் மித்தியா பரம் சத்யம்'' என்ற ஞானேதயமாகவே, வைத்திய பதவியைத் துறந்து ''தன்னையறியும் தனியறிவைத் தேடி பன்னிரண்டாண்டளவில் ரிஷி கேசத்திற் கங்கைக் கரையிற் கடுந்தவமியற்றினுர். இக்காலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கைலாசம், பத்ரிநாத் முதலிய பலஸ்தல தீர்த்த யாத்திரைகள் செய்து, சன்னியாசம் பெற்று ஸ்ரீ ஸ்வாமி சிவானந்த சரஸ்வதி என்ற தீட்சா நாமமும் ஏற்றுப் பல இன்னல்களுக்காளாக அதன்பயனாகவே அதிவிரைவில் அனுபூதிச் செல்வர் ஆனார்.

'தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற பரோபகார தயாளசிந்தைகொண்டு திவ்விய ஜீவன சங்கத்தை ஸ்தாபித்தார். சங்க தத்துவங்களை ஐந்தே சொற்களிற் கூறி, அவை செயற்படும் வழியைத் தெளிவாக விளக்கித் தான் செய்தும் காட்டிக்கொண்டிருக்கின்றார். சாஸ்திரங்கள் எல்லாவற்றினதும் சாராம்சமே சேவை செய்தல், அன்பு செய்தல், கொடுத்தல், தியானம் செய்தல், தூய்மையுறல். இவ்வைந்தும் வீடுபேற்றின் திறவுகோல்களாகும். மேலும், நல்லவனாயிருந்து நலமே செய்து, தயை காட்டிக் கருணை கூர்ந்து. பிறர் நோக்கங்களை அங்கீகரித்து, இணங்கி நடந்து, இடங்கொடுத்திருப்பதே திவ்விய ஜீவனத்தின் முக்கிய அம்சங்கள். வேதங்கள், புராணங்கள், ஆகமங்கள், திருமுறைகள் முதலியவற்றை, இன்றைய மக்களில் ஒரு சிலர் மாத்திரமே படித்துப் பயன் பெறக் கூடியதாக இருக்கின்றது.

மேலும், சமய தத்துவங்கள் எக்காலத்தும் ஒன்றேயாயிருப்பினும், காலப்போக்கிற்கிணங்க மக்கள் வாழ்க்கைத்தரம் மாறுபடுகின்றது. எனவே, சமுதாயப் பண்பிற்கேற்பச் சாதன மார்க்கம் மாற்றியமைக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது. இன்னும், உலகிலுள்ள சமயங்களெல்லாவற்றினதும் அடைப்படைத் தத்துவங்களும், நோக்கங்களும், ஒன்றாக இருப்பினும், திவ்விய ஜீவன சங்கம், இதே தத்துவங்களை வாழ்க்கையாக மாற்றியமைப்பதையே நோக்கமாகக் கொண்டது. உற்று நோக்கில், இன்றையச் சமயங்களுக்கும், திவ்விய ஜீவன சங்கத்துக்குமுள்ள பேதம் மலையும் மடுவினதளவுமாகும்.

மனிதன் மாத்திரமன்றி உலகிலுள்ள உயிர் வர்க்கம் அனைத்தும் இன்பத்தையே நாடி நிற்கின்றன. திவ்விய ஜீவன சங்கம் தீர்க்கமான இன்பத்தைச், சாந்தத்தைச் சமாதானத்தைப் பெற நேர்மையான பாதையில் இட்டுச் செல்வது. சேவை செய்வதால் மனிதன் தன்னை மறக்கிறான். எங்கும் நிறைந்த நீக்கமற நிற்கின்ற பிரமத்தை, சிற்பாசாரியன் உருவாக்கிக் கூலிக்குப் பூஜை பண்ணும் குருக்கள்மாரால் அர்ச்சிக்கப்படும் மூகூர்த்தங்களில் மாத்திரமல்ல, அப் பிரமனே தளமாகத் தாங்கிக்கொண்டிருக்கும் பிரபஞ்சம் முழுவதிலுமே சக்திமயமாகக் கண்டு தன்னை அர்ப்பணிக்கின்றான். இன்னும், சேவைசெய்யும்பொழுது மேல் மனம் தன்னிலும் அயலிற் செல்கிறது. உள் மனம் உடலைப் பாதுகாக்கின்றது. இதன் பயனாக, உடலில்நோய்கள் தோன்றா. ஏனெனில் உள் மனம் தவறிழைப்பதில்லை. இதுவே இயற்கை நியதி. மேலும், ஒரு தனிமனிதனுக்கும், சமுதாயத்துக்கு மிடையிலிருக்கும் தொடர்பு, ஒரு அவயவத்துக்கும் உடலுக்குமுள்ள தொடர்பு போன்றது. உடம்பிலுள்ள ஒரு சிறு அவயவத்தில் ஒரு சிறு புண் உண்டானால், அது முழு உடலையுமே பாதிக்கும். ஆகவே சமுதாயத்தில் அமைதியுடன் வாழவிரும்பில் சேவை செய்தல் இன்றியமையாததாகின்றது. சேவைசெய்தல் என்ற திவ்விய ஜீவன சங்கத்தின் கோட்பாட்டுக்கும், சமூகசேவை என்று நம்மவர் பகிரங்கப் படுத்துவதற்கு மிடையில் அதிக வேறுபாடுண்டு, ''நான் செய்கின்றேன்'' என்ற எண்ணம் ஒழிந்து, அன்னை பராசக்தியின் கையில் நான் ஒரு ஆயுதமாக விருக்கின்றேன் என்ற எண்ணத்தை உண்டுபண்ணுவதே, பயனை எண்ணாது பணிவுடன் செய்யும் சேவையாகும். சமூகசேவை ''நான் செய்கிறேன்'' என்ற எண்ணத்தை வலுப்படுத்தி, அவர்களின் ஆணவத்தடிப்பை மெனமேலும் கூட்டுகின்றது,

அடுத்தபடியாக, திவ்விய ஜீவனத்தை அடைதற்குரிய வழி அன்பு செய்தல் ஆகும். தனக்கு இதம் செய்பவர்களை நேசிப்பது மனித மனத்தின் சாதாரண பண்பு. கிறிஸ்துநாதர் கூறியதுபோல் பகைவனையும் நேசிப்பதே திவ்விய ஜீவனத்துக்கு இலகுவான வழியாகும். உலகியலிலோ, ஆத்மீகத்துறையிலோ துரிதமாக முன்னேற வேண்டுமானால், நமது மனம் முற்றிலும் பண்பட்டதொன்றாக அமைய வேண்டும். மனம் பண்படுவதற்குத் துன்பம் இன்றியமையாதது. இத் துன்பங்களை நாம் அனுபவிப்பதற்கு உதவுபவர்கள் நமதுபகைவர்கள். ஆகவே அவர்களுக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம் மேலும், பகைவனையும் ஒருவன் நேசிக்க முடியுமானால், அப்பகைவனும் நண்பனாகி விடுகின்றான். ஆகவே உலகில், வெறுப்பு, பயம் முதலிய கெட்ட பண்புகளுக்கிடமில்லாது போய்விடுகின்றது.

திவ்விய ஜீவனத்தின் அடுத்த திறவுகோல் கொடுத்தல். உலகிலுள்ள பொருள் அனைத்துமே இறைவனுக்குச் சொந்தமானது. மனிதன் அதைத் தியாகம்செய்தே அனுபவிக்கவேண்டும் என்று ஈசாவாசிய உபநிஷதம் கூறுகின்றது. ஆகவே, ஒரு மனிதன் தன் தேவைக்கு மிஞ்சிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் சேகரித்து வைத்தல், களவுக்கொப் பாகும் என்று மகாத்மாவே கூறியிருக்கின்றார். உலகியலில் வாழ்பவன் பொருளைத் தேடுவதற்கு எவ்வளவு கஷ்டப்படுகிறானோ, அவ்வளவு கஷ்டம் அப்பொருளைப் பேணிக்காப்பதற்கும் படவேண்டியிருக்கும். மற்றவர்கள் இவன்மேல் பொறாமைகொண்டு தீங்கிழைக்கவும் முற்படு வர். இவன் மற்றவர்களின் அபிமானத்தையும் பெறமுடியாது. அளவுக்கு மிஞ்சிப் பொருளை வைத்திருப்பவனுக்கு, அளவுக்கு மிஞ்சிய செருக்கும் வந்துவிடுகிறது. செல்வச் செருக்கு ஆணவத்தடிப்பை அதிகப்படுத்தி, அவனின் வாழ்வையே சிதைத்துவிடுகிறது. பொருளி லேயே திடமான நம்பிக்கை கொண்டவன் ஆத்மீகத் துறையிலும் முன்னேற முடியாது. எல்லாம் இறைவன் செயல் என்று, முற்றிலும் தன்னை இறைவனுக்கு அர்ப்பணித்து, எல்லா வற்றுக்கும் இறையருளில் தங்கிநிற்கும் தன்மை பொருளுடைமைவாதிகளுக்குப் பெரும்பாலும் ஏற்படுவதில்லை. ஒருதனவந்தன் கடவுளை அடை வது ஒரு ஒட்டகம் ஊசியின் கண்ணுக்குள் நுளைவதுபோல் அரிதானது என்றார் கிறிஸ்து மகான். அளவுக்குமீறிப் பொருள் சேர்க்கும் ஆவலும் சேர்த்த பொருளை தானே வைத்திரு க்க எண்ணும் பேரவாவும், பெருந்துன்பத் தையே கொடுக்கின்றது. இம்மைக்கும், மறு மைக்கும் இன்னல் விளைக்கும் பொருளை, முழு மனத்துடன் பிறருக்களித்தால் கிடைத்தற் கரிய சாந்தி கிட்டும்.

இன்னும், அகமும், புறமும் தூய்மையுற்றி ருத்தலே திவ்விய ஜீவனத்தின் ஆணிவேராகும். தூய்மையான எண்ணங்களினாலும், பக்தி, அன்பு போன்ற தூய்மையான உணர்ச்சிகளினா லும், உள்ளத்தையும், மனத்தையும் எக்கால மும் தூய்மையுறச்செய்தல் அவசியமாகின்றது.

சேவை, அன்பு, அறம் தூய்மை முதலிய வற்றை இடைவிடாது செய்துவரின், மனம் பக்குவப்படுத்தப்படுகின்றது. பக்குவப்படுத்தப் பட்ட மனத்தினாற்றான் தியானத்தில் லயித்திரு க்க முடிகின்றது. இறுதியில் ''தானே அது'' ஆகிவிடுகின்றது. இந்து சமயத்தின் இறுதிப்படி ''தானே அதுவாதல்'' இந்த உயரிய குறிக்கோ ளைக் கொண்டதுதான் திவ்விய ஜீவனம். இந்த நூற்றாண்டில் இவ்வரிய சாதனையில் வெற்றி கண்ட அனுபூதிச் செல்வரே, இன்று இமயத்தில் அருளாட்சிபுரியும் சற்குரு ஸ்ரீ சுவாமி சிவா னந்த சரஸ்வதி அவர்களாவர். அவர் காட்டும் நன்னெறி உலக மக்கள் யாவரும் கடைப்பிடிக் கக் கூடியது. அவர்கட்கு வேண்டியதும் அவர் கள் வேண்டுவதும் அதுவே யாம்.

வாழ்க சிவானந்த மகராஜ்!

## அன்பே தெய்வம்.

உண்மையே தெய்வம். அன்பே தெய்வம். உண்மையே பேசு. ஒவ்வொரு வரையும் நேசி. நீ சீக்கிரமே தெய்வ தரிசனம் பெறுவாய். சாதுக்கள், சன்னி யாசிகள், பக்தர்கள், இவர்களுடன் சத் சங்கம் கொள். இது ஒன்றே உனக்கு விவே கம், வைராக்கியம், ஆத்மீக பலம், மனச் சாந்தி இவைகளை எல்லாம் அளிக்க வல் லது. இதைத் தவிர வேறு வழியில்லை. சாதுக்களைத் தேடியலை. அவர்கள் எங்கு முளர். உண்மை உள்ளமும் ஆவலும் தேவை. அவர்கள் எப்போதும் உன்னை அன்புடன் வரவேற்கத் தயாராயிருக்கிறார்கள்.

சத் சங்கத்தின் மூலம் தெய்வம், அவர் பெருமை, தெய்வ வியாபகம் இவை களைப் பற்றியச் சிந்தனைகளும், உள்ளத்தைத் தட்டி எழுப்பும் தெள்ளிய ஆத்மீகச் சிந்தனைகளும், நீரில் கரைந்திருக்கும் சர்க்கரை போல் நம் மனதில் நிறைந்திருக் கும். அப்போது தான் நீ தெய்வீக உணர்வெய்துவாய். அப்பொழுது ஒரு நொடிப் பொழுதில் நீ ஆத்ம ஞானம் எய்துவாய்.

— சிவானந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோன்றாத் துணை

(அ. சுப்பிரமணியன்)

பெறுதற்கரிய பேறுகள் மூன்று உண்டு. இறைவனது திருவருட் பிரசாதத்தால் அவை பெறப்படுகின்றன. மனிதப் பிறவி, பிறவிப் பயனை அடைய வேண்டுமென்ற ஆர்வம், அதற்கு வழிகாட்டக் கூடிய ஒரு மகானின் பாதுகாப்பு என்பவையே அப்பேறுகள்.

இறைவனருளாலும் முன்னைப் பிறவினைகளிற் செய்த நல்வினைப் பயனாலும் மேற்கூறிய பேறுகளை நாம் பெற்றிருப்பின் அவற்றைப் பூரணமாகப் பயன் படுத்தி வருகிறோமா என்று சிந்தித்துப் பார்ப்பது நலம். ஏனெனில் மனிதப் பிறவி, எடுத்திருந்தும், ஒருபுறம் வாழ்க்கைப் போராட்டத்திலும் மறுபுறம் இலட்சியக் கனவுகளிலும் ஈடுபட்டு இப்பிறவிக்குரிய இரக்கம் நேர்மை போன்ற அடிப்படைக் குணங்களை வளர்க்காமல் மனிதத் தன்மையின்றியே நாம் வாழ்ந்து வரக் கூடும். இனி, தெய்வீக வாழ்க்கை பிறவிப் பயனை அடைய வேண்டும் என்ற ஆர்வம் ஏதோ இடைக்கிடை தோன்றி மறையும் ஒரு மனோ எழுச்சியாகவே இருந்து விடுவதுண்டு. அது போல, ஒரு சீவன் முத்தரையே குருவாக அடையும் பாக்கியம் பெற்றிருந்தாலும் அவரது போதனைகளின்படி வாழத் தீவிர முயற்சிதானும் செய்யாமலே வாழ்நாள் முழுவதும் கழிந்து விடுவதும் சாத்தியமே.

வேண்டுமென்று நாம் இப்படி இருப்பதில்லை. எமது உடலும் உள்ளமும் உறுதியற்றவையாய் உள்ளன. சோர்வும் அசிரத்தையும் அடிக்கடி உள்ளத்தைச் சூழ்ந்து கொள்கின்றன. புறச் சூழலும் நாம் மனித உடலில் நடமாடும் மிருகமாக வாழ்வதற்கே உதவுகின்றன. தெய்வீக வாழ்க்கையில் நன்கு உறுதி பெறும் வரை, ஒரு குருவின் அருகில் வாழ முடிந்தால் இவ்விடையூறுகளை வெல்வது எளிதாயிருக்கலாம். ஆனால் இக்காலத்தில் இங்ஙனம் வாழ்வது மிகச் சிலருக்கே சாத்தியமாகும்.

புறத்திலிருந்து எமது சந்தேகங்களைப் போக்கி, வாழ்வாங்கு வாழ எமக்கு வழிகாட்டும் குருவே எமது உள்ளத்தின் உள்ளிருந்தும் ஒளியூட்டி வழிகாட்டினால் எவ்வளவு உதவியாக இருக்கும்! யாம் சோர்வுற்றபோது எமக்கு உற்சாகமூட்டியும் செய்வதெதுவெனத் திகைக்கும்போது நல்லறிவூட்டியும் புத்தி தடுமாறி வழி தவறும்போது நல்வழிப் படுத்தியும் இடையூறுகளையெல்லாம் வென்று இடையறாது தீவிர சாதனை புரியச் சக்தியளித்தும் இங்ஙனம் எத்தனையோ முறைகளில் எக்காலத்தும் அவர் எமக்கு உதவக் கூடுமல்லவா? ஆனால் இது சாத்தியமா?

இது சாத்தியம் என்பது மட்டுமன்று. இதுதான் யாவரும் உணர வேண்டிய உண்மை நிலை என்பதைச் சைவசித்தாந்தம் எடுத்துக் காட்டுகிறது. எமது உயிர்க்குயிராய் நின்று எமது வாழ்க்கைக்கே ஆதாரமாயிருந்து, எமக்கு அறிவூட்டி வழிநடத்துவது இறைவனின் திருவருட் சக்தி. எமக்கு இம் மனிதப் பிறவியை அளித்து, வாழ்வில் யாம் பலவகை அனுபவங்களைப் பெறச் செய்து, படிப்படியாக எம்மைத் தெய்வீகப் பாதையில் இட்டுச் சென்று, முடிவில் எமக்கு மெய்ப்பொருளை உணர்த்துவது இச் சக்தியே. திருவருட் சக்தியின் துணைகொண்டு திருவருள் வழிச்சென்று அவ்வருளே கண்ணாகக் கொண்டுதான் மெய்ப்பொருளைக் காண முடியும். ஆனால், திருவருட் சக்தி என்பது புலன்களுக்கு எட்டாதது; எமது சிற்றறிவைக் கொண்டு அறிய முடியாதது. எனவே, அச் சக்தியானது எம்மை நல்வழிப் படுத்துவதற்காக, நாம் கண்டு பழகிப் பின்பற்றக் கூடிய ஒரு மனித உருவை எடுத்துக் குருவாக வந்து எம்மை ஆட்கொண்டருள்கின்றது. இங்ஙனம் புறத்தே மானிட உருவிலே தோற்றமளிக்கும் குருவும், எமது உள்ளும் புறமும் விட்டு நீங்காமல் எம்மோடு கலந்து தோன்றாத் துணையாக நிற்கும் திருவருட் சக்தியும் ஒன்றே என்பதைச் சைவசித்தாந்தம் வலியுறுத்துகின்றது.

'அறியாமை உள்நின் றளித்ததே காணும்
குறியாகி நீங்காத கோ'

- திருவருட்பயன் அருளுருநிலை

ஸ்ரீ சுவாமி சிவானந்தர் அருளிய பாடலொன்று இக் கருத்தைப் பிரதிபலிப்பதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ளது.
அப்பாடலின் தமிழாக்கம் வருமாறு;

''அமரத் திருக்குழந்தாய், அமிர்தத்தின் நற்சேயே
அஞ்சுவதும் ஏனோ என் ஆன்மீகக் கண்ணே நீ
உனக்கு மிக அருகில் யானுளதை அறி யாயோ?
உன்னருகே, உன்னோடு, உன்னகத்தே யானுள்ளேன்.
உன் இதயத்திருக்கோயில்தன்னில் யான் உறைகின்றேன்.
உன் அன்புப் பணிபுரிய யானிங்கு வாழ் கின்றேன்.
துணிவும் மகிழ்வும் கொண்டிருப்பாய் எக்காலும்
தியானம் செய், உன்னையறி, விடுதலை பெற்றிடுவாய்.

— சிவானந்தா இலக்கிய விழா நினைவு மலர்.

இவற்றிலிருந்துஒரே மெய்ப்பொருளானது தூல நிலையில் குருவாகத் தோன்றி நின்றும், ஆக்கும் நிலையில் உடனுறையும் திருவருட்சக்தி யாக மறைந்து நின்றும் இரு நிலைகளில் எமக்கு அருள் புரிந்து வருகின்றது என்பது தெளிவாகி றது. தூல நிலையிலே தோற்றமளிக்கும் குரு வானவர் எம்மைப் போன்று மனிதஉருவிலிருப் தால், அவருடன் பழகி, அவரை முன் மாதிரி யாகக் கொண்டு பின்பற்றி, இலட்சிய மனிதர் என்ற முறையில் அவரிடமுள்ள சிறந்த குணங் களை யாமும் வளர்த்துக் கொள்வது சாத்திய மாகிறது, மேலும், அவருக்குப் பணி புரிந்து எம்மைத்தூய்மைப்படுத்திக்கொள்ளவும், அவ ரிடம் எமது சந்தேகங்களைக் கேட்டுக்தெளிவு பெறவும், எமது நிலைக்கேற்ற உபதேசங்களை அவரிடம் பெற்றுக்கொள்ளவும் முடிகிறது. அத்துடன், குருவே ஆக்கும் நிலையில் திருவருட் சக்தியாக எம்முள்ளும் எம்முடனும் எப்போ தும் இருப்பதால், அவருடைய உபதேசங்களைப் பின்பற்றி, அவர் காட்டிய பாதையில் வாழ்க் கையை அமைக்க முயலுங்கால், ஒவ்வொரு படியிலும் அவரது உதவியைப் பெறக் கூடிய தாக இருக்கும். தூல வடிவில் அவர் எமக்கு அருகில் இல்லாத போதும் ஒவ்வொரு கணமும் அவர் எமது உள் நின்றும் உடன் நின்றும் இரட் சிப்பதை உணர்வது சாத்தியமாகும். சுருங்கக் கூறின், திருவருட் சக்தியானது குருவாக வந்து சாதகருக்கு நல்வழி காட்டித் தன்னை உணர்த்து கிறது. குருவானவர் திருவருட் சக்தியாக நின்று சாதகரை நல்வழிப் படுத்தி மெய்ப்பொருளை அறியச் செய்கிறார். சாதகருக்கு ஏற்படும் மெய்ப்பொருள் அனுபவமும் இதே நியதியில் நிகழ்வது இங்கு குறிப்பிடத்தக்கது.

''ஈசுவரனைக் காண்பதற்கு முன்னால் அத் திவ்விய தரிசனத்தின் முதல் அங்கமாகக் குரு வைத்தான் சீடன் காண்கிறான். பிறகு அந்தக் குருவே ஈசுவரனாக மாறி ஈசுவர சொரூபத் தைக் காட்டுகிறார்.''

— ஸ்ரீ இராமகிருஷ்ணர் உபதேசம்

குரு தோன்றாத் துணையாக நின்று புரியும் உதவியை நாம் எத்தனையோ விதங்களிற் பெறக் கூடும். ஆன்மீகத் துறையில் எமது உள்ளத்தை வாட்டிய சந்தேகமொன்று நாம் ஏதும் நூலில் எதிர்ப்படும் ஒரு வாக்கியத்தின் மூலமோ, உற்ற நண்பர் ஒருவர் கூறும் கருத்தின் மூலமோ எதிர் பாராத வகையில் தெளிவடைவதில்லையா? ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில், காரணம் விளங் காமலே ஒரு காரியத்தைச் செய்து, அல்லது செய்ய நினைத்ததைச் செய்யாமல் விட்டு, பின் அதன் விளைவுகள் அறிந்ததும், ஏதோ ஒரு தெய் வீக சக்திதான் அங்ஙனம் நடந்துகொள்ள எம் மைத் தூண்டியிருக்க வேண்டும் என்று உணர் வதில்லையா? இவற்றை எல்லாம் விட நாம் வழி படும் குருவே தோன்றாத் துணையாக இருந்து சதா எமக்கு அருள் புரிந்து வருவதை உணரும் போது, நிகழ்வதெல்லாம் எமது நன்மைக்கே என்ற தெளிவு ஏற்பட்டு, எந்தச் சூழ்நிலையை யும் எமது ஆன்மீக முன்னேற்றத்துக்குப் பயன் படுத்திக் கொள்ள முடிகிறது. அதற்கான ஆற் றலை எமது உள்ளுறையும் அச்சக்தியிடமிருந்தே பெறவும் முடிகிறது.

இங்ஙனம் குருவே எமக்குத் தோன்றாத் துணையாக இருந்து அருள் புரிந்து வருவதை நாம் உணர்ந்து பயனடைய முடியவில்லை யெனில், அதற்கு நாமே காரணமாயிருக்கக் கூடும். அத்தெய்வீகத் துணையை நாம் உள்ளூ ற விரும்பாத விதத்தில் எமது அந்தரங்க வாழ்க்கை அமைந்திருக்கக் கூடும். எனவே, குருவின் புனித சன்னிதியில் நாம் சதா இருப் பதற்கிசைய, எமதுஎண்ணங்களும் சொற்களும் செயல்களும் எக்காலமும் புனிதமாகவே இருக்குமாறு இடையறாது முயல்வது எமது முதல் கடமையாகின்றது. அத்துடன், அக் கருணா மூர்த்தியிடம் தூய அன்பை வளர்ப்பது இம்முயற்சியில் நாம் வெற்றியடைவதற்குப் பெரிதும் துணை புரியும்.

''அருபரந்து ஒருவன் அவனியில் வந்து
குருபரன் ஆகி அருளிய பெருமையைச்
சிறுமை என்று இகழாதே திருவடி இணை
யைப்

# இறை வழிபாடு.

( குல. சபாநாதன் )

''இந்தச்சரீரம்நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம். இன்ன காலத்திலே இந்தச் சரீரம் நீங்கும் என்பது நமக்கு விளங்காமை யால், நாம் எக்காலத்திலும் கடவுளை வழி படல் வேண்டும். சூரியன் உதிக்க ஐந்து நாழி கைக்கு முன், நித்திரையை விட்டு எழுந்து, தந்த சுத்தி செய்து,கடவுளை வணங்கிக் கொண்டு, உன் பாடங்களை கற்பாயாயின், அவைகள் உன் மனசிலே நன்ருகப் பதியும்.

கருணைநிதியாகிய கடவுள் புறத்திலே திருக் கோயிலுள்ளிருக்கும் இலிங்கம் முதலிய திரு மேனியும் தமது மெய்யடியாருடைய திருவேடமும் ஆதாரமாகக் கொண்டு நின்றும்; அகத்திலே உயிர் இடமாகக் கொண்டருளுவர். ஆதலால் அவரை வழிபடும் இடங்கள் இவைகளே யாம். கடவுள் அங்கிங்கெனுதபடி எங்கும் வியாபகமாய் நிற்பினும், இவ்விடங்களின் கண் மாத்திரம் தயிரில் நெய்போல விளங்கி நிற்பர். மற்றையிடங்களெல்லாவற்றிலும் பாலில் நெய் போல விளங்காது நிற்பர். கடவுளுக்குச் செய்யும் வழிபாடுகளாவன, அவரை மனசினுலே தியானித்தலும், வாக்கினுலே துதித்தலும், கைகளினுலே பூசித்தலும், கால்களினுலே வலம் வருதலும், தலையினுலே வணங்குதலும், செவிகளினுலே அவருடைய புகழைக் கேட்டலும், கண்களினுலே இவருடைய திருமேனியைத் தரிசித்தலுமாம்.

ஆன்மாக்களாகிய நாம், பிறர்வயமுடைய வர்களும், சிற்றறிவு சிறுதொழிலுடையவர் களுமாய் இருத்தலினுலே, நன்மைதீமைகளை உள்ளபடி அறியவும், தீமைகளை ஒழித்து நன்மை களையே செய்யவும் வல்லோமல்லேம். ஆதலால், தம் வயமுடையவரும் முற்றறிவு முற்றுத் தொழில் உடையவரும் ஆகிய கடவுளை வணங்கி அவருடைய திருவருள் வசப்பட்டு ஒழுகுவே மாஞல், நாம் தீமைகளினின்று நீங்கி நன்மை களைச் செய்து, தம்மை வழிபட்டு உய்யம்படி அவர் நமக்கு அருள்செய்வார்.''இவ்வாறுவிளக் குகின்ருர் நாவலர் பெருமான் பாலபாடத்தில்.

---

முன் பக்கத் தொடர்ச்சி..

பிறிவினை அறியா நிழலது போல
முன்பின்னுகி முனியாது அத்திசை
என்பு நைந்துருகி நெக்கு நெக்கு ஏங்கி (ச்)
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
சாயா அன்பை நாடொறும் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி.''

— திருவாசகம், போற்றித்திருவகவல்

பொது வழிபாடு.

உலகனைத்தும் வாழ்கின்ற மக்கள் தத்தம் மதக்கோட்பாட்டிற்கேற்ப, ஓர் உருவமில்லாத ஒப்பற்ற கடவுளுக்குப் பேராயிரம் சூட்டி,வழி படுகின்ருர்கள். எல்லா மதத்தினருக்கும் ஒப்ப முடிந்தஉண்மை,கருணையே யுருவாய் கடவுளைத் தியானத்தினுலும் வழிபாட்டினுலும் கண்டு அருள் பெற்றுப் பேரானந்த முறலாம் என்பது. இவ்வுண்மையினைப் பல்வேறு மதத்தினைச் சார்ந்த மெய்யடியார்கள் யாவரும் நன்கு வற் புறுத்திக் காட்டியுள்ளனர். ஆங்கிலப் புலவரா கிய தெனிசன் ''நாம் உலகில் நினைக்க முடியாத பல காரியங்களையும் கடவுளைத் தோத்திரஞ் செய்வதாற் பெறலாம்; தோத் திரமே முற்றறிவுள்ள கடவுளையும் சிற்றறிவும் சிறுதொழிலுமுள்ள எங்களையும் பிணைக்கும் சங்கிலியாகும்'' எனக் கூறியுள்ளார். முஸ்லிம் சகோதரர் 'தொழுகை'யினை எவ்வளவு தூய்மையாகவும் கண்டிப்பாகவும் கடைப்பிடித்து ஒழுகிவருகின்றனர் என்பது உலகறிந்த விடயமாகும். கிறிஸ்தவ சகோதரர்கள் காலை யும் மாலையும் ''செபம்'' செய்வதில் தவறுவ தில்லை. கத்தோலிக்க மக்களும் விடியற்காலையில் சூரிய உதயத்துக்கு முன்னர் ஆலயம் சென்று செபம் செய்வதைச் சர்வசாதாரணமாகக் காணலாம். பௌத்தர்களும் சீலம் அனுட்டித்துத் தோத்திரஞ் செய்கின்றனர். ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற திருமூலர் திருவாக்கு இக்காலத்தில் செல்வாக்குப் பெற்று வருவதை நாம் காண்கின்ருேம்.

சர்வமத சமத்துவம் என்ற நினைப்பு வேண்டுவது தலைசிறந்ததுதான் என்பதிற் சந்தேகமில்லை. ஆனுல் பிள்ளைகள் நிலையில், அதாவது சிறு பராயத்திலே, தங்கள் தங்கள் மதக்கொள்கைகளிலும் தங்கள்சமயத்துக்குரிய அருட்பாடல்களில் நிரம்பிய பயிற்சியும், காத

லாகிக் கசிந்து கண்ணீர் மல்கி, பாட்டின் பொருளுணர்ந்து ஓதும் பழக்கமும் இல்லாது போனால், தமிழராகிப் பிறந்ததினாற் பயன் இல்லை.

சமய பக்தியும் தமிழறிவும் ஒருங்கே பிணைப்புற்றுள்ளன. சைவமும் தமிழும் இரு கண்களாகக் கருதப்படுகின்றன.

''கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்
ஓடுஞ் செம்பொனு மொக்கவே நோக்குவார்
கூடும் அன்பினிற் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினர்''

எனச் சேக்கிழார் சுவாமிகள் போற்றிப் பரவிய திருக்கூட்டத்துள் ஒருவரான அப்பர் சுவாமிகள், மனிதப் பிறவி வேண்டும். அதுவும் தமிழ் நாட்டிலே பிறக்க வேண்டும் என்கிறார். அதற்குரிய காரணத்தையும் நாவுக்கரசர் நவின்றிருக்கின்றார்.

குனித்த புருவமும் கொவ்வைச்
செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்தசடையும் பவளம்போல்
மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமுங்
காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த
மாநிலத்தே

என்கிறார் அப்பர் சுவாமிகள்.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையேன் நெடுங்காலமே.

நின்றுமிருந்துங் கிடந்து நடந்துநினை
என்றுஞ் சிவன் றாளிணை

நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்குநிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவு நீருங்கண்டு
நக்குநிற்பர் அவர்தம்மை நாணியே.

என மெய்யடியார் உணர்த்திய உண்மைகளை ஓர்தல் வேண்டும்.

ஈசன் எந்தை யிணையடி நீழலையடைய இன்றியமையாத சாதனம் தியானம். தியானத்துக்குத் தோத்திரமும் பஜனையும் அத்தியாவசியம். இது எல்லாச் சமயங்களுக்கும் ஒப்ப முடிந்ததொன்று.

இனி, மந்திர வழிபாடும் யந்திர வழிபாடும் சகல சமயத்தவர்களின் தியானத்துக்கு உறுதுணையாய் அமைந்துள்ளன. ஒரு சில சமயங்களில் யந்திர வழிபாடு ஒதுக்கப்பட்டிருந்தாலும், மந்திர வழிபாடு பல்வேறு வகையில் பொதுவாக எல்லாச் சமயங்களிலும் இடம்பெற்றுள்ளது. செவிப்புலன் வழியாக மனக்குரங்கை யடக்க முயலும் வழி மந்திரத்தியானம் எனப்படும். இதுவே மந்திர செபம், பஜனை, தோத்திரம், இறைநாம சங்கீர்த்தனை, காலாட்சேபம் முதலிய முறைகளிற் பல சமயத்தவர்களாலும் சாதனை செய்யப்படும் முறையாகும். இதற்குப் பயன்படுவன சைவத் திருமுறைகள் முதலிய அருட்பாடல்களாகும். நாடோறும் இருபத்து நான்கு மணித்தியாலயத்துள் அற்பநேரமாவது ஈஸ்வர தியானத்துக்காக ஒதுக்கி வைக்க வேண்டியது சைவர்களின் கடமையாகும். படுக்கைக்குப் போக முன்னரும், படுக்கை விட்டெழுந்து பிறகாரியம் பார்க்க முன்னரும் ஐந்து நிமிடமாவது தியானஞ் செய்யப்பழகிக் கொள்ளல் வேண்டும். இவ்வாறு கிரமமாக ஒழுகிவரச் சிறுபிள்ளை தொடக்கம் முதியோர் வரை எல்லாச் சைவர்களும் சங்கற்பம் செய்து கொள்வார்களேயானால், பக்திவலையிற்படும் பரம்பொருள் திருவருள் மழையைப் பொழிந்து நம் நாடும், மொழியும், சமயமும் செழித்து விருத்தியாகும். நாடிய பொருள் கைகூடும். ஞானமும் புகழுமுண்டாம்,

இத்தகைய வழிபாட்டினைத் தினந்தோறும் தனித்தும், ஒருமித்தும் வீடுகளிலும் தேவாலயங்களிலும் மடங்களிலும் நடத்துவது சிறப்புடைத்து. வாரவழிபாடு, திங்கள் வழிபாடு, அயனவழிபாடு, வருடவழிபாடு முதலியவற்றைச் சைவர் பலர் ஒருங்குகூடி நடத்திவரின் பெரும்பயன் வந்தெய்தும்.

''இவ்வழிபாடு எங்கும் நிகழ்ந்துவரின், தனி மனிதன் வாழ்விலும், ஆலயங்களிலும், தெய்வக்கலை மீண்டும் வீசும். உயரிய குறிக்கோள் நம்மவருள்ளத்தைக் கவரும். சாதிகுலம் பிறப்பென்னும் தடுமாற்றம் நீங்கும். உலக வாழ்வில் காணும் செருச்கு, போட்டி, பசி, வறுமை முதலிய சிறுமையெல்லாம் ஒழியும். அறிவும், அன்பும், அறனும், அறஞ்சார் வீரமும், ஒற்றுமையும், பலமும், செழிப்பும் புத்துயிர் பெற்று ஓங்கும். வீட்டு வாழ்வும் நாட்டு வாழ்வும் மாசற்று விளங்கும். காலத்தின் தேவையை உணர்ந்து பலர் ஒன்றுசேர்ந்து, எளியவர்கட்குக் கல்வி, கைத்தொழில் நல்லொழுக்கம், தெய்வ பக்தியாதி நலங்கள் வளர்வதற்கான சீவ காருண்யச் செயல்களைத் திறம்பட மேன்மேற் செய்து வருவர். தெய்வபக்தி மேலிடும்.'' இவ்வாறு வாக்குறுதி யளிக்கின்றார் சைவப் பெரியார் திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள். ஆகவே, ஒரு, சிறிது நேரமாவது இறை வழிபாட்டினைச் சைவ நன் மக்கள் மேற்கொள்வார்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணும் தெய்வம் - சிவானந்தஜி

(ஹரன்)

வாழ்வாங்கு வையகத்தில் வாழும் கோடிக்கணக்கான ஜீவராசிகளில் மனிதன் ஓர் உன்னத ஸ்தானத்தை வகித்து வருகிறுன். இவன் வகித்து வரும் உன்னத ஸ்தானத்திற்குக் காரணம் இவனிடத்திலே இறைவனுல் கொடுக்கப்பட்ட சில இன்றியமையாத நற்குணங்களே. நற்குணங்கள் வாய்க்கப் பெற்றும் அவற்றை நல்ல முறையில் பயன் படுத்தாமல் விடுதல் மிகவும் வருந்தத் தக்கது. பெறுதற்கரிய இவ்வரும் பாக்கியத்தைப் பெற்ற நாம் அவற்றைப் போற்றிப் பேணல் அத்தியாவசியமாகும். கட்டுப் பாட்டுடன் கடமையைச் செய்தல் கருத்திற்கும் ஏற்றது அன்ருே?

இக் கருத்தைக் காலத்திற்குக் காலம் ஞாலத்திற்கு நல்கி வந்தனர் இறைவனின் மெய்யடியார்கள். நாயன்மார், நான்மறை வகுத்த நெறியைப் பின்பற்றி தேவாரங்கள் பாடினர். அவர்கள் செய்த அற்புதங்கள் ஆராயப்படின் அவை சாதாரண மனிதனுக்கு முடியாதவை, அப்பாற் பட்டவை என்பது வெள்ளிடைமலே. சந்தான குரவரும் ஏனைய ஞானிகளும் அம் முதிர்ந்த நிலையில்தான் கடவுளைக் கண்டனர். ஆனுல் காலத்திற் கேற்றவாறு எவ்வகை மனிதனும் இறைவன் இன்னருளை எளிதில் பெறக் கூடிய பாரம்பரிய வழியைக் காட்டினர் இல்லை. 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்பது போல இறைவன் என்ருல் ஞானிகள் மாட்டே என்ற எண்ணம் நிலவி வந்தது. இல்லறத்தில் வாழ்பவன் இகபரப் பிராப்தி அளிக்கும் இறைவனை இறைஞ்சி உய்தல் இலகுவன்று எனக் கருதி மழித்தலும் நீட்டலும் மேற்கொண்டு தம் கருமம் விடுத்துப் பிறர் கருமத்தில் அக்கறை கொண்டவராய் வாழ்ந்தனர். பெருந்தொகை மக்கள் கலியுகத்தில் இன்னல்கள் பல நிகழ்ந்தன — அச் சூழ் நிலையில் மெய்ச் சமயக் கொள்கைகளை எளிய முறையில் பாலர் முதல் விருத்தர் வரை பாமரர் தொடங்கி பார்த்திபர் வரை உய்தி எய்தும் பொருட்டு, பிறவியின் பயனை அனுபவித்தற் பொருட்டு சுவாமி சிவானந்த மஹராஜ் அவதரித்தார். தக்க சமயத்தில் தகுந்த ஒருவரைத் தரணி பெற்றிருப்பது எம் தவப் பயனன்ருே. சுதந்திர தாகம் மேற் கொண்டிருக்கையில் அண்ணல் காந்தி மகான் இறைவனுல் அனுப்பப் பெற்று வெற்றியீட்டிக் கொடுத்தார். அதே போல சுவாமிஜீயும் பாரதம் மட்டுமன்றி அகில உலகமே விமோசனம் பெறும் பொருட்டு மானிட வடிவு பெற்றிங்கு வந்தார். அரண்மனை வாசம், அளவற்ற செல்வம், நற்பண்பு மிக்க மனைவி, குலத்திற்கொரு மைந்தன் ஆகிய யாவரையும் துறந்து சென்ற பௌத்தர் பெருமான் போல சுவாமிஜியும் தனது பதவி துறந்தார்- பந்தம் அறுத்தார். பாருக்குத் தொண்டு செய்வதே பணியெனக் கொண்டார். ஆனுல் தனித் தவ வேடங் கொள்ளவில்லை. வேடத்திலும் பார்க்க வேலை தான் முக்கியம், தொழிலிலும் பார்க்கத் தொண்டு தான் முக்கியம், சின்னங்களைக் காட்டிலும் தூய சிந்தையே சிறப்புடையதென்னும் விழுமிய கொள்கைகளை மலர்தலை யுலகிற்கு மாண்பொடு விளக்கிக் காட்டினுர் ஸ்ரீ சிவானந்தஜி.

அன்னுரின் 75ஆவது பிறந்த தினம் 8-9-61 வெள்ளிக்கிழமை. உலகெங்கணும் இவருடைய ஜயந்தி விழா கொண்டாடப் பட்டது. அன்பர்கள் தம்மைக் காணும் பொருட்டும், சுவாமிஜி அவர்கள் வானளாவும் இமயத்தின் சாரலில், 'ரிஷிகேஸ்' என்னும் இடத்தில் தனிமையாக வசித்து வருகின்ருர். இவர் ரிஷிகளுக்கெலாம் மகரிஷி. குழந்தையைப் பார்த்து நாம், உன் அம்மா யார்? என்று கேட்டால், 'என் அம்மா சிவப்புச் சேலை கட்டி, வெள்ளைச் சட்டை இட்டு, காதிலே தோடு, கையிலே காப்பு முதலியன போட்டு உயரமாக இருப்பார்' என்றெல்லாம் ஏதோ அக் குழந்தை பதில் கூறும். அதேபோல்தான் நாமும் சுவாமிஜியைப் பற்றிக் கூற முடியும். அவர் தினந்தோறும் செய்து வரும் அற்புதங்களோ அளப்பில. பாஷை, சாதி, சமயம், குலம் யாவற்றிற்கும் அப்பாற் பட்டவர் அவர்.

வான்நிகர் இமயத்தின் சாரலில் பொங்கி வரும் கங்கையின் சீதப் புனல் பக்தர்களின் பாவங்களைத் துடைத்து நிற்கையில் கவலை கொள் நெஞ்சினரும், கசப்பு ஏற்பட்டவர்களும், அதே சமயத்தில் நோய் வாய்ப் பட்டவர்களும், நீங்காத இன்பம், வாடாத மலர்ச்சி, தெவிட்டாத இன்பம் பெறுகிருர்கள். சுவாமிஜியின் புனித ஆச்சிரமத்தில். இங்கே ஸ்தல விசேடமும் சேர்ந்து இருக்கிறது.

யாதும் ஊரே யாவரும் கேளிர்,
தீதும் நன்றும் பிறர் தர வாரா''

என்ற புற நானூற்றுக்குஇலக்கணமாகத் திகழ்கின்ருர் மஹரிஷிசிவானந்தமகராஜ் உலகில்அஞ்ஞானம் நீங்கி மெய்ஞ்ஞானம் நிலைக்க, இருட்தன்மை அகன்று ஒத்திதன்மை புக, காரணமற்ற சடங்குகளைக் கருத்திற் கெட்டியவாறு குறைத்து மனுதர்ம சாஸ்திரத்திற் கண்டபடி மனிதனின் அடிப்படைத் தர்மங்களை நிலை நாட்ட அவர் அல்லும் பகலும் அயராது உழைத்து வருகின்ருர். அவர் போதித்து வரும் தர்மங்கள் எம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

M. S. SITHAMPARAPPILLAI



மனிதனுலும் கடைப்பிடிக்கக் கூடியவையே.

Serve, Love, Give, Purify, Meditate, Realize. தொண்டு செய், நேசி, கொடு, புனிதமாக்கு, தியானி மெஞ்ஞானம் பெறு ஆகியவையே நாம் கைக்கொள்ள வேண்டியவை. இவை, சங்கிலிக் கோர்வைபோல் மோட்சத்தை விரும்புபவனுக்கு ஒன்றிலிருந்து ஒன்று தானுகவே கிடைக்கின்றன.

நாவுக்கரசர் நாநிலம் போற்ற உழவாரத் திருத்தொண்டு செய்தார், சம்பந்தர் ஏறிவந்த சிவிகையைத் தாங்கத் தோளையுங் கொடுத்தார். அதேபோல இறைவன் அடியார்க்கும், பெரியவர்களுக்கும் ஏன் உயிருள்ள ஆன்மாக்கள் அத்தனைக்கும் நாம் தொண்டு செய்தல் அவசியம். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' - என்றவாறு மனதில் உறுதி பூணவேண்டும்.

இக் கருத்து மேற்கொள்ளப்படின் நேசம், அன்பு எனும் மலர்கள் அடியாரின் உள்ளத் தடாகத்தில் மலரும். காலைச் சூரியனின் கதிர்களைக் கண்டு மலர்வதும் மாலைச் சூரியனின் மங்கல் ஒளியைக் கண்டு கூம்புவதுமான இயற்கை மலர்களைப்போல நேசமலர் என்றென்றும் அழியாத வாடாமலராக மானச வாவியில் மணம் பரப்பிக் கொண்டிருத்தல் இன்றியமையாதது. பாசத்தின் வழிச் செல்வது கொடை. பயனை எதிர்பாராது கொடுப்பதுதான் ஈகை.

அற்ருர் அழி பசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்ருன் பொருள் வைப்புழி.

என்ற குறளின்படி வறியவர் பசியை நாம் தீர்த்தல் வேண்டும். ஆச்சிரமத்தில் நிதி போதியளவு இல்லாவிடினும் யார் யார் போய் எதை எதைக் கேட்கிருர்களோ அதை அதையெல்லாம் அவர்களுக்கு உவந்தளிப்பார் சிவானந்த சரஸ்வதி. அவர் மறுநாளைக்கு வேண்டுமென்று கொள்ளார். வேறு கதியற்றவர்களும் கூட அவரை யடைந்தால் சிஷ்யர்களாகி அங்கு இருக்கும் பேறு பெறுவார்கள்; நிர்வாகிகள் சுவாமிஜீயை அடைந்து, நிதி குறைந்து விட்டது, நீங்கள் புதிதாக வருபவர்களை யெல்லாம் சேர்த்துக் கொண்டேயிருக்கிறீர்கள்' என்று கேட்டால், புன்சிரிப்போடு ''இவர்களை இங்கு இறைவன் அனுப்புமுன் இவர்களுக்கு வேண்டிய உணவையும் ஏதோ ஒரு விதத்தில் இங்கு அனுப்பி விடுவான். ஆகையினுல் கவலையுருதீர்கள்' என சுவாமிஜீ மகிழ்ச்சியோடு பதிலளிப்பார். அன்று எங்கிருந்தாவது பணம் வந்து சேரும். எனவே தான் கடைப் பிடிப்பதையே சுவாமிகள் மற்றவர்களுக்கும் கூறினர். கொடுப்பதனுலேற்படும் இனிமையைப் பற்றிப் பல புலவர்கள் பலவாருகக் கூறியிருக்கிருர்கள்.

இச் செயல்களை மேற்கொள்ளும் ஒருவனுக்குத் தூய உள்ளம் தானுகவே ஏற்பட்டு விடும். அகங்கார மமகாரம் கிட்டவும் அணுகா. உள்ளத்தில் ஒளியுண்டாகும். யோகாப்பியாசத்தினுலும் நிஷ்டையினுலும் இறைவன் தரிசனம் கிட்டும். இவ்வாறு படிகளையும் சுவாமிஜீ தமது உயிர் நாடியாகக் கொண்டிருக்கிருர். இவற்றிலிருந்து கிளையாகச் செல்பவைதான் ஏனைய தர்மங்கள். இதனுற்ருன் இமயஜோதி இவ்வரும் கொள்கைகளைத் தமது இலச்சினைச் சின்னமாகக் கொண்டனர்.

சிவானந்த மஹரிஷி ஞாலத்திற்கு ஆற்றிவரும் தொண்டுகளோ அளப்பில. இக்கால மக்கட்குத் தேவையான சகல சௌகரியங்களும் ரிஷிகேசத்தில் அமைக்கப் பட்டிருக்கின்றன. கீழைத் தேசத்தவர் மட்டுமன்றி மேலைத் தேசத்தவரும் உண்மைத் தத்துவங்களை வாசித்தறிந்து கொள்ளும் பொருட்டு மகரிஷி தமது நூல்களை ஆங்கிலத்திலேயே வெளியிடுவது வழக்கம். எச்சமயமும் அவருக்கு மெய்ச்சமயந்தான். மனுஸ்மிருதி, பகவத்கீதை, மனுதர்ம சாஸ்திரம், வேதங்கள் ஆகியவற்றில் பொதிந்து கிடக்கும் உண்மைகளை மாநிலத்தோர் கஷ்டமின்றிப் படித்து ஒழுகுதற்பொருட்டு, மருத்துவர் தனது மருந்தை சிறியவர் முதல் முதியவர் வரை எளிதில் சாப்பிடக் கூடிய வில்லை ரூபத்தில் அமைப்பது போல் சிவானந்த மகரிஷியும் மெய்ஞ்ஞானக் கருத்துக்களைச் சிறிய ரூபத்தில் கருத்துச் செறிவோடு நூல் வடிவில் எமக்களித்திருக்கின்ருர். பிரசுராலயத்திலிருந்து தினமும், நூல், செய்திகள் அறிவுரைகள் ஆதியன வெளியாகிக் கொண்டேயிருக்கும். நாள்தோறும் புதினப் பத்திரிகை தவருது வெளிவருவதனுல் நாமும் அதைத் தவருது படிக்கிரேம். அதேபோல உயர்ந்த கருத்துக்கள் சிறிய நூல் வடிவில் தினமும் வெளிவந்தால் மக்கள் அதைப் படியாமலிருக்க மாட்டார்கள். அடிக்கடி ஒரே கருத்தை நாம் செவி மடுக்கவோ படிக்கவோ செய்தால் அவை தாமாகவே மனதிற் பதிந்து விடும். இக் கருத்தைக் கொண்டே சுவாமிஜீ அல்லும் பகலும் அயராது உழைத்து வருகின்ருர்.

சுவாமிகள் எழுதி வெளியிட்டுள்ள நூல்களோ எண்ணிலடங்கா. அவருடைய உள்ளம் வற்ருத இன்பக் கவியூற்று. அவரின் நூலை ஒருமுறை வாசித்தவர்கள் கவரப் பட்டவர் போல் அவரின் இதர நூல்களையும் தேடி வாசிப்பர். புலன்கள் வேறு வழியிற் செல்லா. அவரின் அற்புத சாதனைகளைப் படிக்குந் தோறும் விழிநீர் ஆருகப் பெருகும். அவரின் கவிகளோ கல்லையும் உருக்கும் சக்தி வாய்ந்தன.

உலகில் உள்ள ஜீவன்கள் அசையும் பொருட்டு தான் அசைந்து, உயிர்களை நல்வழிப் படுத்துவான் வேண்டி, பஞ்ச கிருத்தியங்களை ஆற்றும் உருவில் நடராசர் சிதம்பரத்தில் எழுந்தருளியிருப்பது போல் சுவாமிஜீயும் தமது சிஷ்யர்களுக்காக, அவர்களின் உயர் நோக்க ஆசைகள் நிறைவேறும் வண்ணம், உலக ஒப்புமைக்காக தாமரையிலைத் தண்ணிபோல் வாழ்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறார். ஒவ்வொருவர் சமய வாழ்விற்கும் குரு இன்றியமையாதவர். அவர் நன்னெறியைக் காட்டுவது மன்றி அப்பாதையிலுள்ள செடி, முள் ஆதியவை யையும் அப்புறப்படுத்தி விடுகிறார். இதனால் நாம் அடைய வேண்டிய குறிக்கோள் மிக இலகுவிற் கிட்டி விடுகிறது. நாம் இறைமாட்சி எய்துதற்கு இறைவனே மனித வடிவில் வந்து மெய்ந் நெறியைக் காட்டுவதனால் தரணியில் தர்மம் இன்னும் அழியவில்லை யென்பதற்கு இது ஓர் சான்றாகும்.

மானிட உருவில் வந்த இத் தெய்வம், நிலமிசை நீடு வாழ்ந்து மக்களின் அறியாமையைப் போக்கி, இருள் நீக்கி, அவர் தம் உள்ளத்து ஒளியேற்றுந் தீபமாய் மக்களை உய்தி பெறச் செய்ய இன்னும் பல்லாண்டு வாழ வேண்டுமென, எல்லாம் வல்ல பரம் பொருளை இறைஞ்சுவோமாக.

"Be as you are, save the mind with the safety razor of vichara. Shaving the heads is nothing, of course it helps to keep you cool and free. Shaving the egoism and vasanas from the mind, with the gilleej blade of meditation is what is necessary

-Swamygi

## பார்வையின் கோணத்தை மாற்றியமையுங்கள்!

ஸ்ரீ சுவாமி சிவானந்தருக்கு இவ்வுலகம் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ள நன்றியை எளிதிலே வெளிப்படுத்த முடியாது. மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக அவரது தெய்வீக ஸ்தாபனம் பணியாற்றி வருகிறது. இரு வேறு உலகங்கள் போர் தொடுக்கக் காத்திருக்கும் இந்தத் தருணத்தில் தெய்வ நெறிக் கழகமும் அதன் தலைவர் ஸ்ரீ சுவாமி சிவானந்தரும் மக்கள் உள்ளத்தில் அரிய அற்புதங்களை ஆக்கி வருகின்றனர். அவரது பெருந்தொண்டு நம் பார்வையின் கோணத்தை மாற்றியமைப்பதேயாகும். தனிநபரின் சொந்த முன்னேற்றமின்றி, ஆத்மானுபூதியின்றி உலகத்துக்கு விமோசனம் கிடையாது. உலகமனைத்திலும் அமைதியின்மை நிலவுகிறதை நாம் காண்கிறோம். ஆனால் அமைதியுடன் கூடின புதியதோர் சமுதாயம் உருவாகும் எனக் குருதேவர் தெரிவிக்கிறார். உலக குருவாகத் திகழும் ஸ்ரீ சுவாமிஜி மக்கள் சமுதாயத்தைப் புதியதோர் அரிய வாழ்க்கைக்கு இட்டுச் செல்வார். அவரது பெரும் பணிக்கு உதவி புரிவதாக இருந்தால் நாமும் உண்மையை உணர வேண்டும். இது உலகுக்கு நமது பெரும் வெகுமதியாக அமையும். நம் சொந்த விடுதலைக்காக நம் பார்வையை உள் முகமாகத் திருப்ப வேண்டும். உலக மக்கள் விடுதலைக்காக அமையும் அளவிற்கு அதைக் கொணர வேண்டும். உலகிலுள்ள பிராணிகள் எல்லாவற்றினுடையவும் உள்ளமாக எப்பொழுதும் நம்மை உணரத் தியானித்து நிற்க வேண்டும். இதுவே வழி; எல்லா உள்ளங்களும் ஒன்றுபடும் ஒரே வழி இதுதான்!

டாக்டர் அலாயிஸ்
பில் டாவர்,
சாக்ரெப்,
யூகோஸ்லாவியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிகாட்டி.

( பரமானந்தவல்லி அம்மையார் )

சாற்றுகின்றேனெவர்க்குங் கெடுவீர
தப்பியோடு மின்கண்
மூர்க்கனெங்கோன் முன்னகப்படின்
மூவேழ் குலமணைந்தோர்
சேர்க்கை யொன்றாகவளைத்துப்
பிறப்பறுத்துச்சிவத்தே
யேற்றுகின்றானிரங்கானென்றறைரு
யிருண்டவனே.

(பாடுதுறை)

ஒருவனைக் கண்ணைக் கட்டிக் காட்டில் திருடர் கொண்டு போய்விடுவதுபோல் முன்செய்த கருமங்கள் நமது ஞானத்தை மறைத்து ஆசைகளாகிய மோகக்கட்டுகளால் கண்ணைக்கட்டி உலகமென்ற காட்டில் நம்மைக் கொண்டுவந்து விட்டிருக்கின்றன. நாமிருக்குமிடமெது நம்முடைய ஊருக்குத் திரும்பிப்போக வழியெது வென்றறியாமல் பயத்தினால் மயங்கிக் கிடக்கிறோம். தகுந்த ஆசிரியன் கிடைத்துக்கட்டுக்களை அவிழ்த்தால் கண்கள் திறந்து வழிதேடி ஊர் போய்ச்சேரலாம். இது உலகறிந்தவிஷயம்.

தெய்வ மென்பதோர் சித்த முண்டாகி முனிவிலாத தோர்பொருளாகிய கடவுளை நாடி அலைபவர்க்குக் கடவுள் தாமேமானிடச்சட்டை சாத்திவந்து ஜீவர்களைப் பக்குவம் நோக்கி இப்பிரபஞ்ச பந்தமாகிய கட்டுக்களை அவிழ்த்துச் சிவத்தே ஏற்றிடுவார். இது மணிவாசகப் பெருந்தகைக்குக் கிடைத்தவாய்ப்பு. இனித் தெட்சணாமூர்தியாயிருந்து நால்வர்க்கு உபதேசம் பண்ணினார் கடவுள் கல்லாலின் கீழ். இந்த ஞானவள்ளல்கள் பரம்பரையாக இம் மண்ணுலகில் பெரும் ஞானியர்கள் தோற்றிக் கொண்டேயிருக்கிறார்கள்.

ஒரு சிறிதளவேனுமிரக்கமின்றி உயிரையே உண்பவனாகியவன் முன்னிலையில் அகப்பட்டவனை மாத்திரமல்ல அவனை அணைந்தோர் மூவேழ்குலமும் வளைத்துப்பிடித்து சேர்த்து ஒன்றாகக்கட்டிச் சிவத்தே ஏற்றிவிடுவான். இதற்கு யார் தான் அஞ்சாமலிருப்பர் இத்தேகமே யானென்றும், தனுகரணபுவன போகமே என தென்றும் இதை அனுபவிப்பதே முடிந்த முடிபென்றும் எண்ணியிருக்கும் நாஸ்திகர்கள் மத்தியிலும் ஞானவான்கள் காலத்துக்குக்காலமவதரித்து மனித சமுதாயத்தை உருவாக்கிக் கொண்டேயிருக்கிறார்கள். இவர்கள் சுற்றிச் சுற்றி வலைவீசிக் கொண்டிருப்பார்கள். வலையில் அகப்படும் மாந்தரைப் பிடித்து பக்குவம் நோக்கிச் சிவத்தே ஏற்றுவதுதான் குறிக்கோளாயிருப்பர். இந்த லக்ஷியத்துக்கு யாராவது ஒருவர் அகப்பட்டாலும் அவர்கள் வந்த வேலை பூர்த்தியாகிவிடும். இவர்கள் ஆழ்ந்து தியானத்திலிருக்கும்போது பரிசுத்தமான பளிங்கு போன்ற மனத்தில் கடவுளின்அழிவற்ற எண்ணமாகிய சாஸ்திரங்களும் தேவார திருவாசக திவ்வியப் பிரபந்தங்களாகிய பாடல்களும் வெளிவந்தன. அவர்கள் வாக்கிலிருந்து வருவனவெல்லாம் வேத மந்திரங்களாகவே யிருக்கும். பார்வை அருட்பார்வையாயிருக்கும். மற்றவர்களின் சுகத்திற்காகவும் நலனுக்காகவும் தங்கள் உயிரையே தியாகம் பண்ணிவிடுவார்கள் என்றால் இவர்கள்பெருமையைஇவ்வளவென்று அளவிட்டுக் கூறமுடியுமா, இந்த ஞானக்கனிகள் இராப்பகலற்ற ஏகாந்தமான ஆனந்த மோன நிலையில் சதா தூங்கிக்கொண்டிருப்பர். பார்த்தால் பச்சிளங்குழந்தையோ, அல்லதுபித்தரோ என்ற நிலையில் ஆடிப்பாடுவார். எனவே,

சென்றது கருதார் நாளைச் சேர்வது
நினையார் கண்முன்
நின்றது புசிப்பார் வெய்யில் நிலவாய்
விண்விழுது வீழ்ந்து
பொன்றினசவம் வாழ்ந்தாலும்
புதுமையா வொன்றும்பாரார்
நன்று தீதென்னார் சாட்சி நடுவான சிவன்
முத்தர்.

(கைவல்லிய நவநீதம்)

பிரமலாபத்துக்கு மேலானதாக ஞானிகளால் அடையத்தக்க தானலாபம் வேறொன்றுமில்லை. மற்றும் எக்ஞாதிகள், சிரவணம் முதலியன ஞானிக்குச் செய்ய வேண்டுவனவாகவில்லை. எனவே நீர்முகில் நீங்கிய வானெனத் தெளிந்த தினத்தினராய்க்காந்தம் இரும்பைக் கவர்வது போல் இந் நிலைக்கு அதிகாரியாய் இருப்பவர்களைக் கவர்ந்து அவர்களது உயிரை உண்டு சிவமாக்கி விடுவார்கள். மனிதர்கள் விலங்கு நிலையில் நின்று விலகிக் கடவுளாக ஆகவேண்டுமானால் இந்த மகானுபவான்களின் கருத்துக்களாகிய சாஸ்திரங்கள் எப்படி வழிகாட்டுகிறதோ அதைமேற்கொண்டு அழிவற்ற பேரின்பமாகிய இறைநிலையை அடையலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சமே மோக்ஷசத்திற்கு வழிகாட்டி

( ஸ்ரீமத் வடிவேற் சுவாமிகள்)

உலகில் வாழும் ஒவ்வொரு பிராணிகளும் அச்சத்துடனேயே வாழுகின்றன. ஒவ்வொருயிர்களும் தம்மிலும் வலிமை மிக்க சீவர்களுக்கு அஞ்சி வாழ்க்கைநடாத்துகின்றன. ஓரறிவு முதல் ஐயறிவு ஈறாக உள்ள உயிர்களனைத்திற்கும் இந்த அச்சமே வாழ்வாக அமைகிறது. இச் சீவர்கள் முன் சென்மங்களில் செய்த தவப்பயன் காரணமாக மனித சென்மத்தைப் பெறுகிறார்கள். இவ்வரிய மானிட சென்மமும் அச்சத்தோடு கூடியதாகவே அமைந்து விடுகிறது. இப்பயத்திற்கு ஓர் முடிவுகாண்பதும் அரிதாக இருக்கிறது. ஆனால் அதுவே மோட்சம் நல்குவதுமாகும் என்பதை மறக்கற்பாலதன்று.

இந்த முடிவிலா அச்சத்திற்கும் அதனால் விழையும் துன்பத்திற்கும் காரணம் அஞ்சுவதேது அஞ்சாமை ஏது என்பதை மனிதன் உணர முடியாத பேதமை யோடிருத்தலே என்க.

> ''அஞ்சுவதஞ்சாமை பேதமை அஞ்சுவது
> அஞ்சல் அறிவார் தொழில்''.

என்ற வள்ளுவர் பெருந்தகையின் கூற்றும் நோக்குதற் குரியது. அஞ்சுவதற்கு அஞ்சுதலே அறிவார் தொழில், அஞ்சுவதற்கு அஞ்சாமை அறிவிலார் தொழில்பிறப்பெனும் பந்தத்திற்கு அஞ்சும்அச்சமேமோட்சப் நல்கும் சாதனமுமாகும்.

மனிதர்களில் மனிதர்களுண்டு, தேவர்களுண்டு தீயகுணம்மடைத்த விலங்கினம் போன்றவர்களுமுண்டு. மனிதனைக் கீழ்மைப் படுத்தும் அவகுணங்களை மாற்றி மனிதன் மனிதனாக வாழவே இவ்வுலகம் அமைந்திருக்கிறது. இவ்வுலகிலுள்ள எப்பொருளுக்கும் எமக்குத் தீமை விளைவிக்கும் இயல்பே கிடையாவாம்.

உலகம் நமக்கு வேண்டியவற்றை வளங்கிக் கொண்டே நிற்கிறது. இது உலகீன்ற அன்னையின் பேரருள். மனிதன் இப்படிப்பட்ட அருள் திறத்தின் உண்மைகளை உணர்ந்து வாழ்வை பயன்படுத்தி வாழ்வதே மனிதவாழ்வின் குறிக்கோளாகும். இத்தகைய மனித இயல்பு படைத்தவனே தேவனாதற்கும் உரியன். அவனே அஞ்சுவதற்கு அஞ்சி வாழ்மாங்கு வாழ்பவன்.

இம்மனிதன் எதற்குப் பயப் படுகின்றான். (இதுதான் அஞ்சுவதற்கு அஞ்சுதல்) எமக்கு இப் பிறவித்துன்பம் எக்காரணம்பற்றி வந்தடைந்தது. பேதமையால் வந்தது. பேதமை

---

முன் பக்கத் தொடர்ச்சி..

கருவுருவிற்பிறந்தடியேன் கழியாவண்ணங்
கருணைவடிவாய் வந்த கழலே போற்றி
யுருகுமனத்தடியருடன் எனையு மாண்ட
வுண்மயனே கழல் போற்றி யுடையாய்
போற்றி

பொருவதறத் திகழொளியா யுள்ளத்தூறும்
பொற்புடைய பேரமிழ்தே புனிதாபோற்றி
தெரிவருநற்றேவர் கடந்தேவே போற்றி
சிவப்பிரகாசக் கனியே போற்றி போற்றி.
(பாடுதுறை)

மயக்கமற விருந்து மயக்கந்தவிர்
வந்தனையடங்கிற் சிந்தனை சிவமாம்
குரு வொளி பிண்டந்தரு முயிர்க்குணர்வு
கையது கூப்பி மெய்யுற வணங்கு
சிந்தனை யடங்குதல் வந்தனையாகும்
சீதள கமல பாதுகை பணிந்திரு
சைவ நெறியே உய்யும் நெறியது
சொற்க நரக முற்பவ விலங்கு
திடம்பர ஞானி யுடம்பு நற்சிவம்
தூங்கும் யோகம் பாங்கு பெறுது
தெள்ளியறிந்து வள்ளலை வணங்கு
தேசிகன்சிவ மென்று சையற நில்
தொந்தனையறவே நந்தி அர்ச்சனை செய்
நீரும் பூவுஞ் சேரு மன்பிதையம்
நைந்து நைந்துருகிச் சுந்தரனடி தொழு
பசுபதி பாசம் விசுவ மெய்யறிவு
பாசந் தவிர வீசனை வணங்கு
புண்ணியர் மண்ணில் எண்ணிய ஞானியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யென்பது அறியாமை. எதற்கு இந்தஅறியாமை ஏற்படுகிறது? ஆத்மாவாகிய எமக்கா, அல்லது அந்தக் கரணங்களுக்கா? என்று ஆராயும் விவேகமே மனிதனைத் தேவனுக்குகிறது.

நாம் ஏன் எதற்காக வந்தோம் என்பதை ஆராய்ந்தால் எம் அனுதியேயுள்ள சாஸ்வதமான தெய்வீகத்தை விளங்கும் பொருட்டே இம்மண்ணுலகிற்கு வந்தோம் என்பது புலனுகும். சுவர்க்கம் முதலிய மேல்கீழுலகங்களிலும் தேடியும் தோன்ருத பேருண்மையை இப்பூவுலகத்தில் காணமுடிகிறது. இஃது எப்படியாரால் காட்டவும் — காணவும் முடிகிறது என்பது நன்கு சிந்தித்தற் குரியது.

முடியாப் பிறவிப்பெருங் கடல் கண்டு அஞ்ச வேண்டும். ''புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி மலஞ் சோரும் ஒன்பது வாயிற்குடிலை'' ''நான்'' என எண்ணி, மண் பெண் பொன் ஆகியன ''எனது'' என்று அகங்கரித்து, பொறிபுலன் வசப்பட்டு நிற்கும் நிலையே இன்ப நிலையென்று மயங்கி— இமைப் பொழுதும் எந் நெஞ்சில் நீங்காதுறையும் இறைவனடி போற்ருது வாழும் வாழ்வுகண்டு நாம் அஞ்சவேண்டும். பிறர் ஆக்கங்கண்டு பொருமை கொள்ளாமலும், எல்லோரும் இன்புற்றிருக்க நினைத்தும் இருக்க முடியவில்லை என்று அஞ்சவேண்டும். நானுர் — என்னுள்ளமார் — ஞானங்களார் என்னையாரறிவார் என எண்ணி அஞ்சி அஞ்சித் திகைக்கவேண்டும். இத்தகைய சத்தத்தால் வேடுவன் கையிலகப் பட்டுத் தப்பி ஓடும் மான் போல் இவ்வுலக வாழ்வின் பற்றுதலிலிருந்து விடுபடும் விரக்தி நிலை எய்தும். ஞானதாகம் உண்டாகும். இப் பெற்றியுடையார், ''இது உண்மை அது உண்மை'' என்று தத்தம் மதங்களினின்று அரற்றி மலையும் (சமய) வாதநோயாளர் கூற்றுக்களைக் கருத்துறுவர். ஆயினும் அங்கே அவர் தம் தாகம் தீராது. சுருதி — யுக்தி — அனுபவத்துக்கு ஒவ்வாததுகண்டு அஞ்சி அஞ்சி அழுவார். இதுவரை காலமும் தாம் ஈசுவரார்ப்பணமாக இயற்றிய தூய நல் வினைகளின் பயனுல்; அஞ்சுவதஞ்சி அழியாப் பேரின்பம் நல்கும் சச்சிதானந்தப் பெருவாழ்வு பெறுவதெப்போ? என்று துடிதுடிக்கும் வேகம் கெடுத்தாள, விமலனும் சற்குருநாதன் தானே வந்து தலையளித் தாட்கொள்ளுகிருன். இதனுல் அஞ்சுவதஞ்சாப் பேதமை நீங்கி, அஞ்சுவதஞ்சும் அச்சமும் நீங்கி ஆனந்தப் பெருநிலை எய்துகிறது.

அச்சமே! நின்னுலும் இப் பெருவாழ்வு எமக்குக் கிடைக்கிறது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கும் வாய்ப்பையும் நல்குகின்ருய். இப்பிரபஞ்ச அல்லலுட்பட்டு அவதியுறும் மக்கட்குலத்தை உயர் நிலைக்கண் உய்விப்பாயாக! நின் புகழ் வாழி!

உதிரநீர் இறைச்சிக்குப்பை எடுத்ததே
மலக்குகை மேல்
வருவதோர் மாயைக்கூரை, வாழ்வதோர்
வாழ்வு வேண்டேன்
கரியமாலயனும் தேடி கழலிணை காணமாட்டா
தனியனுய்நின்ற ஆரூரப்பனே அஞ்சினேனே.

— சுந்தரர் தேவாரம்

ஓம் சாந்தி!

## வாழ்க்கையைப் பற்றிய உண்மைகள்.

பதவி மோகம், உலக வஸ்துக்களில் ஆசை, புலன் வேட்கை, தன்னலம், காமம், பண ஆசை இவையெல்லாம் மனிதனின் உண்மையான வாழ்க்கையிலிருந்து அவனை இன்றைய உலகின் சீர்கேடான வாழ்க்கைக்குக் கொணர்ந்திருக்கிறது. மனிதன் மட்டும் உண்மையான பக்தி யோகத்தில் இறங்கினுல், அவன் இழந்த தெய்வீகத் தன்மையைத் திரும்பவும் பெற முடியும். மிருகத் தன்மையைத் தெய்வத் தன்மையாக மாற்றி, அத்தெய்வத் தன்மையின் ஜோதி மயமான உச்சிக்கு இட்டுச் செல்லும் சக்தி வாய்ந்தது பக்தி.

இப் பிறவியிலேயே உனக்குத் தெய்வ தரிசனம் கிட்டும்படி செய்யச் சக்தி வாய்ந்த பக்தியை நீ கடைப்பிடிப்பாயாக! ஆன்மீகச் சுடர் உன்னுள் இன்னும் பிரகாசமாக எரியுமாக!!

— சிவானந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினெண் 'மை'கள்

(ஸ்ரீ சுவாமி சிவானந்தர்)

களங்கமற்ற தன்மை, ஒழுங்கு முறைமை, பகட்டின்மை, நேர்மை, எளிமை, உண்மை,

சமநிலைமை, நிலையானதன்மை, முற்கோபமின்மை, அமையுந் தன்மை, தாழ்மை, உறுதித் தன்மை,

முழுமை, பிரபுத் தன்மை, பெருந்தகைமை, கொடைத்திறமை, வள்ளன்மை, தூய்மை.

தினமும் அப்பியசியுங்கள் இப்பதினெண்மைகளை, விரைவில் அடைவீர்கள் அழிவின்மை.

பிரம்மன் மட்டும் உண்மையான பொருண்மை, திரு இன்னுர் என்பது பொய்யான இன்மை.

முக்கால முழுமையிலும் முடிவின்மையிலும் வசிப்பீர்கள். பலவாந்தன்மையில் ஒன்ருந்தன்மை காண்பீர்கள்.

பல்கலைக் கழகத்தில் இதையடைய மாட்டீர்கள். ஆனுல் யோக வேதாந்த ஆரணியப் பல்கலைக் கழகத்தில் இதையடைவீர்கள்.

மறுக்க வொண்ணுத அடிப்படையான அறங்களை விருத்தி பண்ணுவது ஒவ்வொருவரின் வாழ்க்கைச் சித்திக்கும், மேலும் முக்கியமாக ஒரு சாதகனின் ஆன்மீக வாழ்வின் வெற்றிக்கும் இன்றியமையாதது. நற்குணமே வலிமையுந் திறமையும், அமைதியின் திறவுகோலும்,. நன்னெறியில் வாழும் ஒரு மனிதன் அனவரதமும் அமைதியாகவும் செழிப்பாகவும் இருக்கிருன். ஒருவர் விருத்திபண்ண வேண்டிய அறங்களின் திட்டமான குறிப்பை மக்கள் என்னிடம் வினவுகிருர்கள். ஒவ்வொருவரும் பேணி வளர்க்க வேண்டிய அறங்களை 'பதினெண்மைகள்' எடுத்துரைக்கின்றன. யாதேனும் ஓர் அறத்தை மேற்கொண்டு அதை மிகவும் உயர்ந்த அளவான நிறைவிற்கு விருத்தியாக்குங்கள். அதன் எதிரான தீய குணத்தை, அதன் மிகப் பல சூக்கும தோற்றத்தைக் கூட முற்ருக வேரோடழியுங்கள். இந்த அறங்களை, அவற்றை விருத்தியாக்கும் வழிகளைப் பற்றிச் சிந்தியுங்கள்.

## பதினெண்மைகளின் விளக்கம்

### 1. களங்கமற்ற தன்மை:

உள் அமைதியுடன் இருங்கள். அந்த உள் அமைதியும் ஆனந்தமும் ஒரு களங்கமற்ற முகத்தின் மூலம் பிரகாசிக்கட்டும்; ஒரு களங்கமற்ற முகம் அமைதியாயும், புன்முறுவலுடையதாயும், கருத்தொன்றியதாயும் இருக்கிறது. மேலும் உக்கிர உள்ளக் கிளர்ச்சியை வெளிபிடுவதில்லை. அது அசைவில்லாத தடாகத்தின் மேல் பரப்புப் போலிருக்கிறது.

### 2. ஒழுங்கு முறைமை;

உங்களின் தினசரி வழக்கங்கள், பணி, சாதனை முதலியவற்றில் ஒழுங்கு முறையாய் இருங்கள். தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குப் படுக்கை விட்டெழுங்கள். குறிப்பிட்ட நேரத்திற்குப் படுத்துறங்குங்கள். உங்கள் தினசரி முயற்சிகளில் கடிகாரம் போலிருங்கள். தொல்லை, பற்ருர்வம், ஒழுங்கினைச் செயல் முதலியவற்றிலிருந்து சுவாதீனமாயிருப்பீர்கள். சரியானதைச் சரியான நேரத்திற் செய்வீர்கள்.

### 4. பகட்டின்மை-

உங்கள் பிறப்பு, பதவி, யோக்கியதைகள், ஆன்மீகப் பேறுகள் பற்றித் தற் புகழ்ச்சி கொள்ளாதீர்கள். எல்லாத் தோற்றப்பாடான பொருள்களின் நிலையற்ற இயல்பை நினைவில் வையுங்கள். மற்றவர்களைப் பாராட்டுங்கள். அனைவரிலும் நன்மையைப் பாருங்கள். மிகக் கீழ் உயிரினங்களையும் உங்கள் சமமானவரைப் போல் நடத்துங்கள்.

### 4. நேர்மை:

உங்கள் சொற்கள் எண்ணத்துடன் ஒத்திருக்கட்டும். உங்கள் செயல்கள் உங்கள் சொற்களுடன் ஒத்திருக்கட்டும். உங்கள் உள்ளம், உரை, உடலுக்கிடையில் இசைவிணக்கம் இருக்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. எளிமை;

கபடமற்றிருங்கள். உங்கள் உரையில் களங்கமற்றிருங்கள். சொற்களையும் குறித்த பொருள்களையும் மாற்றிக் கூறுதீர்கள். வெளிப்பாடாய் இருங்கள். சூழ்ச்சித் திறம், கபடம், தந்திரம் முதலியவற்றைத் தவிருங்கள். உங்கள் உடையில் அலங்காரமின்றியிருங்கள். உங்கள் உணவில் எளிதாயிருங்கள். குழந்தையைப் போன்ற இயல்பை விருத்தியாக்குங்கள்.

6. உண்மை:

வாய்மையானவராய் இருங்கள். உங்கள் வாக்குறுதிகளைக் கடைப்பிடியுங்கள். மிகைபடக் கூறுதீர்கள். உண்மை நிகழ்ச்சிகளைப் புரட்டாதீர்கள். பேசுமுன் இருமுறை சிந்தியுங்கள், உண்மையாய்ப் பேசுங்கள். இனிமையாய்ப் பேசுங்கள். நீங்கள் சொல்வதில் கண்டிப்பாய் இருங்கள்.

7. சம நிலைமை;

அமைதியாய் இருங்கள். நிந்தை, தீங்கு செய்கை, துன்பம், தோல்வி, அவமதிப்பு முதலியவற்றைப் பொறுமையுடன் தாங்குங்கள். புகழ், இன்பம், வெற்றி, மதிப்பு முதலியவற்றால் தற்பெருமை கொள்ளாதீர்கள். இரண்டையும் சமநோக்குடன் நோக்குங்கள். நண்பருடனும் பகைவருடனும் ஒரே மாதிரி நடவுங்கள். ஒன்றும் உங்கள் உள்ளமைதியைக் குழப்ப விடாதீர்கள்.

8. நிலையான தன்மை:

மாறும் இயல்புள்ள மனம் உள்ளவர்களாயிருந்தால் நீங்கள் ஒன்றும் பெற முடியாதென்பதை நினைவு கொள்ளுங்கள். விசாரணை செய்யுங்கள். உங்கள் அடைவு அல்லது இலட்சியத்தைத் தேர்ந்தெடுங்கள். அதை அனவரதமும் நினைவு கூருங்கள். ஒருகாலும் அதை ஒரு கண நேரமாயினும் உங்கள் மனதை விட்டு விலக விடாதீர்கள்.

9. முற்கோபமின்மை;

சீற்றத்தின் மூர்க்கமான வெடித்தலின் முன்னோடியே எளிதிற் கோபிக்குந் தன்மை அல்லது முற்கோபம். மனச் சமநிலையின் குழப்பத்தைக் காவல் செய்யுங்கள். அவற்றை அப்பொழுதே அவ்விடத்திலேயே வல்லந்தமாக அடக்குங்கள். மிகுதியாகப் பேரளவான படிவிதம் மேற்கொள்ள விடாதீர்கள். அப்பொழுது அமைதியும் அன்புமாகிய முற்கோபமின்றிய நிலையைப் பெறுவீர்கள்.

10. அமையுந் தன்மை:

நீங்கள் தொடர்பு கொள்ளும் மக்களின் இயல்பை ஓர்ந்தறியுங்கள். அவர்களை அணுகும் உங்கள் முறையை, அவர்கள்பால் கொள்ளும் உங்கள் நடத்தையை மகிழ்ச்சியாயிருக்கும் முறையில் அமையுங்கள். மற்றவர்களின் பொதுப்பண்பு மீறிய நடத்தையைச் சகித்துக் கொள்ளுங்கள். அனைவருக்கும் தொண்டு புரியுங்கள். அனைவரிடமும் அன்பு கொள்ளுங்கள். எல்லாரின் ஆன்மாவாய் எல்லாரிடமும் எல்லாரின் ஆன்மாவாய் எல்லாரிடமும் இறைவன் இருக்கிறார் என்னும் பாவனை (உள்ளுணர்ச்சி) யுடன் இருங்கள்.

11. தாழ்மை;

ஒவ்வொருவரையும் நன்கு மதியுங்கள். ஒவ்வொருவருக்கும் முன்னால் கூட்டிய அகங்கைகளுடன் தலை வணங்குங்கள். மூத்தோர் நன்மதிப்புக் குரியவர்கள் முன்னிலையில் உரக்க உரையாடாதீர்கள். நீங்கள் உரையாடும் பொழுது கால் விரல்களைப் பாடுங்கள். எல்லாரிடத்திலும் இறைவனைக் காணுங்கள். உங்களை அவரின் ஊழியனாய் உணருங்கள். அதனால் அனைவரின் ஊழியனாய் உணருங்கள். ஒருவரையும் உங்களுக்குக் கீழ்த்தரமாய்க் கருதாதீர்கள்.

12. உறுதித் தன்மை:

இது நிலையான தன்மையின் இயற்கை உபகாரி. ஒருமுறை உங்கள் இலக்கைத் தீர்மானித்து உங்கள் நெறியைத் தேர்ந்தெடுத்த பின் அதை விடாது பற்றுங்கள். தடுமாறுதீர்கள். உறுதியாய் இருங்கள். உங்கள் அடிப்படையான தத்துவங்களில் விட்டுக்கொடுத்து இணங்காதீர்கள். 'நான் என் உயிரைப் பரித்தியாகம் செய்யலாம். ஆனால் நான் நெறி திறம்ப மாட்டேன்' என்னும் அக நோக்குடன் இருங்கள்.

13. முழுமை:

ஒரு முழுமையான ஆட்பண்பை விருத்தியாக்குங்கள். உங்கள் நடத்தையின் தளர்ந்த தொங்கல்களை முடிச்சிடுங்கள். உயர் ஒழுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத் தத்துவங்களுடைய ஒரு மனிதனுகுங்கள். தார்மீக வாழ்வு நடத்துங்கள். ஒவ்வொருவனும் உங்களை நம்புவான். உங்களுக்கு இணங்கி நடப்பான். உங்களை நன்கு மதிப்பான். உங்களை உயர்வாகக் கருதுவான்.

14. பிரபுத் தன்மை:

அற்ப மனத் தன்மையைச் சாணம் போற் றவிருங்கள். மற்ற மக்மளின் குறைபாடுகளை ஒருகாலும் உற்று நோக்காதீர்கள். ஒவ்வொருவனினதும் நற்பண்புகளைப் பாராட்டுங்கள். காம எண்ணங்கள், உரைகள், செயல்களில் ஒருகாலும் இறங்காதீர்கள்.

15. பெருந் தகைமை:

விஷயங்களைப் பற்றி விரிந்த நோக்கைக் கைப்பற்றுங்கள். மற்ற மக்களின் குறைபாடுகளைக் கவனியாதீர்கள். நீங்கள் செய்யும் யாதிலும் பெருந் தகைமை, மேன்மை உடையவர்களாய் இருங்கள். மடத்தனமான உரையாடலையும் சிறுபிள்ளைத் தனமான பொருத்தமற்ற பேச்சுக்களையும் தவிருங்கள். அற்ப விஷயங்களிலும் சிறுமையான நிகழ்ச்சிகளிலும் மனம் வசியாதிருக்கட்டும்.

16. கொடைத் திறமை:

கொடு, கொடு, கொடு. அன்பு, நல்லெண்ணச் சிந்தனைகளைப் பரப்புங்கள். மற்ற மக்களின் தவறுகளை மன்னியுங்கள். உங்களுக்குத் தீங்கு செய்யும் மனிதனை ஆசீர்வதியுங்கள். உங்களிடம் உள்ளவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். அனைவருக்கும் ஆத்மீக அறிவு புகட்டுங்கள். உங்களிடமுள்ள பொருட் செல்வம், அறிவு, ஆன்மீக ஞானம் முதலியவற்றைக் கடவுள் தன் குழந்தைகளிடம் ஒப்படைத்த தெய்வீக அடைக்கலச் சொத்தாகப் பாவித்துக் கொள்ளுங்கள்.

17. வள்ளன்மை;

நீங்கள் வழங்கும் யாதிலும் வள்ளன்மையுடையவராய் இருங்கள். விரிந்த இருதயம் வைத்திருங்கள். கஞ்சத்தன முடையவராய் இராதீர்கள். மற்றவர்கள் இன்புறுவதிலும் அவர்களை இன்பமாக இருக்கச் செய்வதிலும் மகிழ்ச்சி கொள்ளுங்கள். வள்ளன்மை தர்மத்தின் ஒரு சகோதர குணமே. தர்மம், பெருந் தகைமை, பிரபுத் தன்மைகளை நிறைவு செய்தலே வள்ளன்மை.

18. தூய்மை:

இருதயத்தில் தூய்மையா யிருங்கள். காமம், குரோதம், மற்றுந்தீய நாட்டங்களையும் வேரோடழியுங்கள். உங்கள் எண்ணங்களிற் றூய்மையாயிருங்கள். மனதில் தீய எண்ணம் புகாதிருக்கட்டும். எப்பொழுதும் கடவுளைப் பற்றிச் சிந்தியுங்கள். அனைவரினதும் நன்மையைப் பற்றி எண்ணுங்கள். உங்கள் சொற்களில் தூய்மையாயிருங்கள். ஒருகாலும் கொச்சையான, கரடு முரடான, அல்லது அன்பில்லாத சொற்களைக் கூறுதீர்கள். உடலிலும் தூய்மையராயிருங்கள். உங்கள் உடுப்புகளையும் சுற்றுப் புறத்தையும் தூயதாய் வைத்திருங்கள். உடல், உள்ள, ஒழுக்க ஆன்மிக நலவியலின் விதிகளைக் கவனித்துப் பின்பற்றுங்கள்.

இப் பதினெண் மைகளும் கடவுளின் இராச்சியத்திற்குள் நீங்கள் புகுவதற்கு வழி வகுக்கும். ஆயத்தப் படுத்தும் உங்களுக்கு அழிவின்மையின் வாயிற் கதவுகளைத் திறக்கும். இப் பூமியில் இல் வாழ்விலும் பெருஞ் சித்தி பெறுவீர்கள். இந்தப் பண்புகளை மிக வதிக அளவிற்கு உடமையாகப் பெற்றிருக்கும் ஒரு மனிதன் உண்மையில் திருத்தொண்டரே. அவர் அனைவராலும் நன்கு மதிக்கப் படுவர். போற்றிப் பேணப் படுவர். பூசிக்கப் படுவர். நீங்கள் அனைவரும் ஜீவன் முக்தர்களாகவும் இந்த அறங்களின் திருவுருவங்களாகவும் ஆகுவீர்களாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திவ்ய ஜீவன சங்கம்

(சைதன்யர்)

ஸ்ரீலஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி மகராஜ் அவர்களால் நிறுவப்பட்ட திவ்ய ஜீவன சங்கம் சென்ற இருபத்தாறு வருடங்களாக மனித வர்க்கத்திற்கு மிகப் புகழக் கூடிய தொண்டாற்றி வருகின்றது. அது, 1960, ஏப்றில் மாதந் தொடக்கம் இருபத்தைந்து மாதங்களாகத் தனது பலவகைப்பட்ட செயல்களைத் தீவிரப் படுத்துவதனுல் தன் வெள்ளி விழாவை இணையற்ற முறையில் கொண்டாடி வந்திருக்கிறது. உண்மை, அன்பு, தூய்மையே இச் சங்கத்தின் அடிப்படையான இலட்சியங்கள். சுவாமி சிவானந்தர் இவ் இலட்சியங்களின் தோற்றமாய் விளங்குகிருர். திவ்ய ஜீவனம் பேரண்ட அன்பு, மனிதனின் சர்வான்ம சகோதரத்துவம் முதலியவற்றின் நற்செய்தியை உலகத்தின் ஒவ்வொரு வீட்டிலுமுள்ள ஒவ்வொரு தனியனுக்கும் எடுத்துச் செல்வதே திவ்ய ஜீவன சங்கத்தின் முக்கியமான இலக்கு.

இச் சங்கம் புதிய ஒன்றையும் அல்லது குறிப்பிட்ட ஒரு வழிபாட்டு முறையையோ அல்லது சமயக் கோட்பாட்டையோ விளங்கக் கூறவில்லை. உண்மையைத் தரிசித்த பண்டைய தீர்க்கதரிசிகளின் குரலையே, தற்காலத்திற்குப் பொருந்தும் வகையில், திரும்ப எதிரொலி செய்கின்றது. அது எல்லாச் சமயங்களின் சாரத்தையும் தழுவுகின்றது. அது ஒருவரையும் தன் சமயத்தை மாற்றும்படி வேண்டவில்லை. ஆனல் ஒருவரின் சமயத்தின் படிப்பினைகளைச் சிறப்பாய்ப் பின்பற்றுபவராய் இருக்கும்படி வேண்டுகிறது. அது ஒவ்வொரு தனியான்மாவும் தன்னியல்புக்கும் தன் வளர்ச்சியின் ஒழுங்கு முறைக்கும் இணங்கத் தனக்குப் பொருத்தமான நிலத்தில் வளர வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கிறது. மிக அதிகமாகச் செயல் முறையில் இருக்க வேண்டியதினதும், அறிவு, கனிவு, கைத்திறனை விருத்தி பண்ண வேண்டியதினதும் அவசியத்தை அது அழுத்திக் கூறுகின்றது. அது உன்னைத் திவ்ய ஜீவனம் நடாத்தும்படியும், மற்றவர்களை நாயகமாய் நடத்தும்படியும், எளிய வாழ்க்கையும் உயர் சிந்தனையும் என்றும் முன்னேர்களின் உறுதி மொழியை மேற்கொள்ளும்படியும், கடவுளாய் இருக்கும்படியும் கடவுளை ஆக்கும்படியும் அறிவு புகட்டுகிறது.

செயற்படுத்தலிற் பொதுவான, நிலையான மனுஷ, சதாசார, ஆன்மீகக் கருத்துகள் அல்லது தத்துவங்களைத் திவ்ய ஜீவனம் ஆதாரமாகக் கொண்டுள்ளது. அது பற்பல சமயக் கோட்பாடுகளின் முடி, பொதுநிதி. அது பற்பல சமயக் கோட்பாடுகளை ஒன்று சேர்க்கிறது. அது, ஆன்மா, உள்ளுயிர் அல்லது பிரம்மனை, எப் பெயராற் குறிப்பிட்டாலும் ஒப்புக் கொள்கிறது. அதுவே தனி உண்மை, ஒரேயொரு உள்பொருள், மெய்ப்பொருள், பரம்பொருள். 'உண்மையொன்றே' அறிவர் பற்பல பெயராற் கூறுவர். 'இருக்கும் ஒன்றே பலவாய்க் கருதப்படுகிறது'. பல 'ஒரேயொரு மெய்ப் பொருளே தன்னைப் பல வகையிலும் வெளிப்படுத்துகிறது'. பல சமயங்களும் விரோதமானவையன்று; ஆனல் நிறைவுறுப்பானவை. அவை ஒரு நித்திய சமயத்தின் பற்பல தோற்றங்களே. ஒரு அனந்த சமயம் தன்னைப் பற்பலவாய் வெளிப்படுத்துகிறது. உண்மையொன்றே. ஆயினும் அது ஒரே நேரத்திற் பலவாயிருப்பதனுல் யாம் ஒரே உண்மையின் காட்சிகளை வேறுபாடான நோக்கும் நிலைகளிலிருந்து பெறுகிறேம். 'சிலர் ஒரு பொருளின் ஒரு பக்கத்தைப் பார்க்கிறர்கள். மற்றவர்கள் இன்னென்றைப் பார்க்கிறர்கள். ஆனல் எல்லோரும் ஒருமித்து எல்லாப் பக்கங்களையும் பார்க்க முடியும்' என்று மேல்நாட்டு அறிஞர் அரிஸ்தோத்தில் சொல்கிறர். இதை விளங்கினல் வெறுப்புக்கும் எதிர்ப்புக்கும் பதிலாக அனுதாபமும் நன்மதிப்பும் மற்ற ஒவ்வொருவரின் சமயத்துக்கு இருக்கும்.

ஒருவர் சொந்தச் சமயத்தின் சாதனங்களைப் பயிற்சி செய்து உண்மையை உணர முயற்சிக்க வேண்டுமென்று திவ்ய ஜீவன சங்கம் கருதுகிறது. ஒருவரின் சமயந்தான் உண்மையானது அல்லது மற்றதிலும் பார்க்க சிறந்தது என்று வாதாடுவதில் ஒரு பிரயோசனமுமில்லை. 'நான்', 'எனது' என்னும் மன மாசுக்களை அகற்றுவதனுல் மிகச் சிறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசு அல்லது அடைவு - அதாவது நித்திய விடுதலை, நிரதிசயானந்தம் — தானுய் வரு கிறதென்று எல்லாச் சமயங்களும் பறை சாற்றுகின்றன. வெளிப்படையான உண்மை தானுய் வெளிப்படுகிறது. அவையெல்லாம் ஆன்மீக முன்னேற்றம், பண்பாடு, அனுபூதி முதலியவற்றிற்குத் தன்னலமற்ற சேவை, தன்னலமின்றிய அன்பு, சாதுசங்க மூலம் மனத் தூய்மையை விருத்தி பண்ணுவதின் அவசிய த்தை வற்புறுத்துகின்றன. இதில் ஒரு வாத முமில்லை. ஆகையால் எல்லாச் சமயிகளும் ஒரு பயனுடைய நோக்கமின்றிச் சமயங்களின் முக்கிய மல்லாதவற்றை அல்லது ஆன்மீக சாதனங்களின் பலனை அல்லது மோட்சத்தைப் பற்றிச் சச்சரவு செய்வதற்குப் பதிலாக எல்லாரும் ஏற்கத்தக்க சாதனைகளைப் பயிற்சி செய்ய வேண்டும்.

'ஒருவர்க் கொருவர் தொண்டு செய்யுங்கள். ஒருவரோ டொருவர் ஒத்துழையுங்கள். ஒருவரை யொருவர் ஓர்ந்தறியுங்கள். ஒருவர்க் கொருவர் நல்லெண்ணம் வைத்திருங்கள். அனைவரிலும் கடவுள் இருப்பதை யறிந்து தன்னலத்திலிருந்து பொது நலத்திற்கும், பூத வாதத்திலிருந்து ஆன்மீக ஆற்றலுக்கும் நோக்கத்தை மாற்றுங்கள். முழு உலகுடன் நீங்கள் ஒன்ருய் உள்ளீர்கள் என்பதை யுணருங்கள். உங்கள் நோக்கத்தைப் பரந்ததாக்குங்கள். உங்கள் கீழான இயல்பைத் தூய்மைப் படுத்துங்கள்.' இதுவே சுருக்கமாகச் சுவாமி சிவானந்தரின் சொற்களில் திவ்ய ஜீவன சங்கத்தின் நற்செய்தி. திவ்ய ஜீவனம் எல்லாரும் பின்பற்றக் கூடிய வாழ்க்கை நெறி. அது சாதி, சமயக் கோட்பாடு, வர்ணம், நாடு சமூகம், நிலைமை முதலியன எப்படியிருப்பினும், பொது முறைமையானது,

வாழ்க்கையாகிய யாத்திரையின் அடைவு அல்லது தன்னிறைவுப் பேற்றிற்குத் துறைத் தீபம் அல்லது மலைமேல் விளக்கம் போல் விளங்கும் சுவாமி சிவானந்தர் நீடூழி வாழ்க! அன்பு, அறிவு, தொண்டின் கோயிலாய் இருக்கும் திவ்ய ஜீவன சங்கம் மனித வர்க்கத்தின் அமைதி, ஆனந்த வாழ்விற்காக நீண்டகாலம் தொண்டு புரிக!! திவ்ய ஜீவனம் எங்கும் பரவி பரலோக இராச்சியம் இவ்வுலகில் நிலவுக!!!

## பற்றுதலை விட்டொழி

பற்றுதல் தான் மாயையின் முதல் குழந்தை. பற்றுதலின் சக்தியால் தான் இறைவனின் லீலா விநோதங்கள் நடைபெறுகின்றன. மனதில் ஒட்டிக் கொள்ளக் கூடிய பசை போன்ற ஒரு வஸ்து இருக்கிறது. ஆமணக்கெண்ணெய், வச்சிரப்பசை, வேலமரப்பிசின், மூக்குச்சளி- கோழை போன்ற பசையைக் கொடுக்கக் கூடிய ஒருவகை மரங்களில் பிசின், தேன், பலாப்பழ ரசம், கிளிசரின் மற்றும் உலகத்திலுள்ள இதர பிசின்கள் இவைகள் எல்லாவற்றையும் சேர்த்தால் எம்மாதிரியான பிசின் ஏற்படுமோ அம்மாதிரியான ஒரு பசையைப் போன்றதாகும் மனத்தின் இப்பசை. மனது விஷயங்களில் ஒட்டிக் கொள்ளுதற்குக் காரணம் இக் கலப்புப் பசையே. எனவே பற்றுதல் மிகவும் சக்தி வாய்ந்தது.

சுயநலமே பற்றுதலை விளைவிக்கிறது. இவ்வுலகின் துன்பங்களுக் கெல்லாம் மூல காரணம் இப் பற்றுதலே.

சேவை செய்யும் பொழுது அத்துடன் சம்பந்தப் படுத்திக் கொள்ளாமல் செய். அப்பொழுதுதான் நீ உண்மையான சந்தோஷமனுபவிப்பாய். நீ அப்பொழுது 'பழைய மனிதனல்ல, முற்றிலும் மாறுபட்டவன்' என்பதை நீயே உணர்வாய். பிரம்மானந்தத்தை அனுபவிக்க இதுவே தகுந்த உபாயம்.

— சிவானந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவ பிரம்ம ஐக்கிய ரகசியம்.

( தி. கி. லக்ஷ்மி — மதுரை. )

**நண்பர்:-** அன்பரே வெகு நாட்களாகவே தங்களிடம் என் மனக்குறைவைத் தெரிவிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருக்கிறேன். அதற்கு இன்று தான் தக்கதருணம் வாய்த்தது தங்களுக்குத் தடையேதுமில்லையென்றால் கூறுகிறேன்.

**அன்பர்:-** நண்பரே சிறிதும் தயங்காது தங்கள் மனக்குறையை என்னிடம் தெரிவிக்கலாம்.

**நண்பர்:** அன்பரே! எனக்கு இல்லற வாழ்க்கையானது கசந்து விட்டது. இனி தங்களைப் போன்று பிரம்மசர்யத்துடன் விளங்கி தெய்வீகத் தொண்டில் ஈடுபட்டு ஸ்வாமி சிவானந்த சரஸ்வதி மகராஜ் அவர்களின் பரிபூரண ஆசியைப் பெற என்மனம் துடிக்கின்றது. அதற்குத் தங்களுடைய ஆதரவும் கிடைக்குமேயானால் நான் மஹா பாக்கியவானவேன்.

**அன்பர்:** நண்பரே! மிக்க சந்தோஷம். ஸ்வாமி சிவானந்த சரஸ்வதி மகராஜ் அவர்களின் சீரிய, அரிய கொள்கைகளை உலகெங்கும் பரப்ப நம் போன்ற உண்மையான பிரம்ம சாரிகளே தேவை. ஆகையால் இனி சிறிதும் தாமதியாது ஓர் ஆசிரமத்தை இவ்விடத்தில் நிறுவி தெய்வ நெறித் தொண்டில் ஈடுபட முயல்வோம். அது சரி! தங்களுக்கு இதுவரை திருமணம் ஆகவில்லை அல்லவா?

**நண்பர்:** அன்பரே அதை யேன் கேட்கிறீர்கள்! முதல் மனைவி இறந்த நான்கு வருடங்கள் ஆகின்றன. இன்னும் எனக்குப் பெண்கொடுக்க எத்தனையோ தனவந்தர்கள் காத்திருக்கிறார்கள். மேலும், என் முதல் மனைவியின் தங்கையே என்னைத் திருமணம் செய்துகொள்ளக் காத்திருக்கிறாள். ஆனால் ஒரு தரம் இல்லறத்தில் நுழைந்து தோல்வியுற்ற பின் மறுபடியும் இல்லற வாழ்வில் நுழைய என் மனம் இசையவில்லை. ஆகையால் என்னிடம் இருக்கும் ஐந்து லக்ஷம் ரூபாய் பெறுமானமுள்ள ஆஸ்தியை ஸ்வாமிஜியின் ஆசிரமத்திற்கு எழுதிவைத்து விட்டு சன்யாஸம் பெற்று நற் தொண்டில் ஈடுபட எண்ணியுள்ளேன். இதற்குத் தாங்களே உதவி செய்ய வேண்டும்.

**அன்பர்:** நண்பரே! தங்களுடைய எண்ணம் மிக்க உயர்வானது. இதைப் பாராட்டுகின்றேன். தங்களுடைய இந்த தியாக புத்தி தெய்வ நெறித் தொண்டில் தாங்கள் ஈடுபடத் தகு தியானவர் என்று எடுத்துக் காட்டுகின்றது. தங்களைப்போன்று இன்னும்சிலபேராவது ஒன்று சேர்ந்தால், நம்முடைய இம்மாபெரும் முயற்சி வெகு சீக்கிரமாகவே வெற்றி பெறுவதுறுதி. தங்களின் இவ்வெண்ணம் வெகு சீக்கிரமாகவே செயலில் ஈடேற ஈசன் அருள் புரிவாராக.

**நண்பர்:** அன்பரே கூடிய சீக்கிரத்தில் வெற்றி பெறுவோம்.

இது உறுதி சென்று சில தினங்களில் வருகிறேன் வணக்கம்!

**அன்பர்:** நண்பரே சென்று வாருங்கள். முயற்சி மெய்வருந்தக் கூலிதரும். ஓம் சிவானந்தாய நம.

* * *

**நண்பர்:** அன்பரே அன்று தங்களிடம் கூறிச் சென்றபடி சில நாட்களில் வராமல் சில மாதங்களும் ஆகிவிட்டன. மன்னிக்கவும். காரணம் என் மனது சில மாதங்களாகவே ஒரு விஷயமாக இங்கும் போராடிக்கொண்டிருக்கின்றது. காரணத்தைத் தங்களிடம் கூறவே வெட்கமாக இருக்கிறது.

**அன்பர்:** நண்பரே என்னிடம் எதையும் மறைக்காமல் கூறலாம். அஞ்ச வேண்டாம் தயங்காது தெரிவியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நண்பர்:** அன்பரே! வெளியிலிருந்து எத்தனை யோ தனவந்தர்கள் பெண் தரவந்த போது மணம் செய்து கொள்ள முடி யாது என்று துணிந்து கூறி அவர்களை அனுப்பிவிட்டேன். ஆனால்...ஆனல் ....என் மைத்துனி என்னைத் தவிர வேறு ஒருவரையும் மணம் செய்து கொள்ள மாட்டேன் என்று ஒரே பிடி வாதமாய் ஊண், உறக்கமின்றி, ஏங்கி நிற்கும் பொழுது அவளை நிராகரிக்க மனம் துணிவுகொள்ள அஞ்சுகின்றது. என்னல் ஒரு முடிவுக்கும் வர இயல வில்லை. தயவு செய்து தாங்களே இதற்கு முடிவு கூறவேண்டும்.

**அன்பர்:** நண்பரே தங்களுடைய இப் பெரும் மாறுதலைக் கண்டு நான் பெரும் ஆச் சரியத்தையும், வியப்பையும் அடை கின்றேன். சிலமாதங்களுக்கு முன்னல் தாங்கள் என்னிடம் கூறிச்சென்ற அரிய பெரிய காரியத்திற்கும், இப் பொழுது தாங்கள் கூறும் விஷயத் திற்கும், மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் அல்லவா இருக்கின்றது? என்னே மனதின் மாறுதல். ஒரு நல்ல காரியம் செய்யும்பொழுது பல இடை யூறுகள் தோன்றி,எடுத்த காரியத்தை முடிக்கவிடாது தடுப்பது இயல்பு. ஆனல் உண்மை ஊழியனுன ஒருதீரன் இதற்கெல்லாம் அஞ்சாது இடையூறு களை வெகு சாமர்த்தியத்துடன் எதிர் த்து எடுத்த காரியத்தில் வெற்றிபெற முயல வேண்டும்.

**நண்பர்:** அன்பரே! ''கல்யாணம் செய்து கொள்ள விருப்பமில்லாத ஒருவனை கல்யாணம் செய்து கொள்வதை விட தக்க புருஷனைப் பார்த்து, நிறைய பணம் சிலவழித்து வெகு சிறப்பாக உனக்குத் திருமணம் செய்து வைக் கிறேன் என்று மன்ருடிக் கேட்டும் ஒரே பிடிவாதமாக, மணந்தால் தங் களையே மணப்பேன் இல்லையென்ருல் ஊண் உறக்கமின்றி உயிர் விடுவேன் என்று கூறிக்கொண்டு இருக்கின்ருள். என் செய்வேன். கல்யாணம் செய்து கொள்ள உத்தரவு கொடுக்க வேண்டும்.

**அன்பர்:** நண்பரே சிறிய பெண்ணுகிய அவளே தன்னுடைய எண்ணத்தில் ஒரே பிடி வாதமாக இருக்கும்பொழுது, அதைக் கண்டாவது தங்களுக்கு நற்புத்தியும், விடாமுயற்சியும் உண்டாகவில்லையா. இதைப்போல் பல பெண்கள் தங்களை யே திருமணம் செய்து கொள்வேன் இல்லையென்ருல் உயிர் விடுவேன் என்றுகூறினல் அவர்களுக்காக இரங்கி எல்லோரையும் மணம் செய்துகொள் வீர்களா? சிந்தித்துப் பாருங்கள் வீர னுக்கு அழகு விடாமுயற்சியுடன் வெற்றி பெறுதல். ஆகையால் உம் முடைய மைத்துனியின் மனவலிமை யை உதாரணமாகக் கைக் கொண்டு உங்கள் திட்டத்தில் வெற்றி பெறுங் கள்.

**நண்பர்:** அன்பரே நான் எவ்வளவோ சிந்தித்து சிந்தித்து ஒரு முடிவும் செய்ய முடியா மல் திரிசங்கு சொர்க்கத்தில் திண்டா டிக் கொண்டிருக்கிறேன். கடைசியாக ஒரு முடிவான எண்ணம் தோன்று கின்றது. இதன் முடிவை ஸ்வாமி சிவானந்த சரஸ்வதி மகராஜ் அவர் களிடமே நேரில் சென்று தெரிந்து கொள்ளலாம் என்பதை தங்களுடைய பதிலும் அதுவாகவே இருக்குமென்று எண்ணுகிறேன்.

**அன்பர்:** நண்பரே தங்கள் உசிதம் போலவே செய்யுங்கள்.

* * *

**நண்பர்:** அன்பரே ஸ்வாமிஜீ அவர்கள் என் மைத்துனியையே திருமணம் செய்து கொள்ளும்படி உத்தரவு அளித்து விட்டார்கள். ஆகையால் ஸ்வாமிஜீ முன்னிலையிலேயே திருமணத்தை முடி த்துவிட எண்ணி விட்டேன். அதற்குத் தாங்களும் உடன் நின்று ஆசி அளிக்க வேண்டும்.

**அன்பர்:** மிக்க சந்தோஷம். கணவனும், மனைவி யுமாக ஒன்று சேர்ந்து தெய்வநெறித் தொண்டில் ஈடுபட்டின்புற ஈசன் ஆசி அளிப்பாராக.

* * *

**சிஷ்யன்:** ஸ்வாமிஜீ அடியேன் ஒரு சிறிய கேள் விக்கு விடைதெரியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறேன். தயவு கூர்ந்து தாங்கள் அருள் செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிஜீ: தயங்காமல் உன் மனத்திலுள்ள சந்தேகத்தைத் தெரிவி. எனக்கு விடை தெரிந்தால் கூறுகிறேன்.

சிஷ்யன்: ஸ்வாமிஜீ!! இதுவரையிலும் எத்தனை எத்தனையோ திருமணங்களும், பூணூல் கல்யாணமும், பெயரீட்டுக் கல்யாணமும், மற்றும் சமயச் சடங்குகள் எல்லாம்இங்கிருக்கும் விச்வநாதர் ஆலயத்தில் வைத்துத் தான் நடைபெறுவது வழக்கம் அப்படியிருக்க சமீபத்தில் பொன்னம்மாளுக்கும், நண்பர் ராமநாதனுக்கும் நடந்த திருமணம் ஸ்வாமிஜீ குடிரில் வைத்து நடைபெற்றதற்கு விசேஷகாரணம் யாதும் இருக்க வேண்டும். இதற்கு தயை செய்து விடை கூறவேண்டும்.

சுவாமிஜீ: இந்தக் கேள்வி உங்கள் மனதில் எழவேண்டும்; அதற்குத்தகுந்த விடையை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதே என் கருத்து. அதை இதோ தெரிவிக்கிறேன். சிஷ்யர்கள் எல்லோரையும் இங்கு அழைத்து வாருங்கள். விடையை எல்லோர் முன்னிலையிலும் தெரிவிக்கிறேன்.

சிஷ்யன்: சரி ஸ்வாமிஜீ!

சுவாமிஜீ: சிஷ்யர்காள்! சமீபத்தில் பொன்னம்மாளுக்கும், ராமநாதனுக்கும் வழக்கம் போல் விச்வநாதர் ஆலயத்தில் வைத்துத் திருமணம் நடைபெருமல் எனது குடீரத்தில் வைத்து நடத்தியதின் காரணம் யாதென்றுல், ராமநாதன் அவர்கள் முதல் மனைவி இறந்தபின் இனி யாருடைய வற்புறுத்தலுக்கும் செவிசாய்க்காது, இனி மறுமணமே செய்து கொள்வது இல்லையென்று சபதம் செய்து கொண்டு அதன்படி மனஉறுதியுடனிருந்தார்; ஆனுல் அவர் மைத்துனியாகிய பொன்னம்மாள், ராமனுதனைவிட அழகிலும், பணத்திலும், யௌவனத்திலும், சிறந்த வரன் கிடைத்தாலும் எனக்கு வேண்டாம். நான் ராமனுதனையே மணப்பேன் என்று பிடிவாதத்துடனிருந்தாள். ஏகாக்கிர சித்தத்துடனும், மனவுறுதியுடனும், இருந்து, தான் நினைத்த காரியத்தில் வெற்றியையும் பெற்ருள். இவளை உதாரணமாகக் கொண்டு யாரொருவர் ஏகாக்கிர சித்தத்துடனும், மனவுறுதியுடனும், இருந்து கடவுளைத் தியானிப்பார்களோ அவர்களுக்கு நிச்சயமாகக் கடவுள் தெரிசனமளிப்பார். இந்த உயரிய உண்மையை அனுபவ பூர்வமாக நேரில் தெரிந்துகொள் வதற்கே இவர்களுடைய சிறப்புவாய்ந்த திருமணத்தை நமது குடீரத்தில் வைத்து நடத்தினேம்.

சிஷ்யர்கள்: ஸ்வாமிஜீ புரிந்து கொண்டோம். சிறிய பெண்ணுகிய பொன்னம்மாளே தான் நினைத்த காரியத்தை சாதித்துக் கொள்ள ஏகாக்கிரசித்தத்துடனிருந்த பொழுது ஆண்மக்களாகிய நாங்கள், சன்யாசிகளாகிய நாங்கள், பிரம்மசாரிகளாகிய நாங்கள், பெருமை மிகும் தங்களுடைய சிஷ்யர்களாகிய நாங்கள், இவளை உதாரணமாக எடுத்துக் கொண்டு, ஜீவாத்மாவாகிய நாங்கள், பரமாத்மாவோடு இரண்டற கலக்க முயலுவோம்.

ஸத்குரு நாதருக்கு ஜே!

நமது நிமித்த குருவாகிய பொன்னம்மாளுக்கு ஜே!!

## இந்திரிய சுகங்களைப் புறக்கணி.

எல்லையற்ற, மேலான ஆனந்தத்தையும் அந்த ஆனந்தத்தை அளிக்கக்கூடிய மாறுபாடற்ற, நித்தியவஸ்துவையும் தேடு. இவ்வாறு தேடி அலைந்து நீ அந்த மெய்ப்பொருளைக் கண்டுபிடிப்பாயானுல் அதனிடமிருந்து பெருகும் பேரானந்தத்தையும் அநுபவிப்பாய். இந்திரிய சுகத்தினுல் அநேக கெடுதல்களும் ஏற்படுகின்றன பலவிதமான பாபங்கள், தேகஉபாதைகள், பலக்குறைவு, பற்றுதல், அடிமை மனப்பான்மை, பலம்குன்றிய மனத்திட்பம், அதிகமான உழைப்பு, கெட்ட வழக்கங்கள், அநேக ஆசைகள், மன அமைதியின்மை ஆகியவை அதைத் தொடருகின்றன. எனவே எல்லாவிதமான இந்திரிய சுகங்களையும் விட்டு விடு.

— சிவானந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்வாமி சிவானந்தா வாழ்த்திசைப் பாடல்கள்

[ த. வீ. சுப்பிரமணியம் ]

இராகம்: கம்சத்வனி — தாளம்: ஆதி

வருகை 1.

பல்லவி

ஸ்வாமி சிவானந்த ஜோதியே வருக
மாநிலம் போற்றும் மங்கள ஜோதியே (ஸ்வாமி)

அனுபல்லவி

ஒன்றே குலம் ஒருவனே தேவ னென்று
நன்றே நானில மெங்கும் நாட்டிடும் ஜோதியே (ஸ்வாமி)

சரணம்

இல்வாழ்வு தன்னிலே நல்லாத்மீகம் ஈடேற
நல் வாழ்வு காட்டிடும் நன்னெறி ஞானியே
வல்ல வரே வாழும் எல்லையில் இமயத்தில்
சொல்லற்கரிய சுப்ரம் மணியாய் இலங்கிடும்
செந்திருவே — நம்குருவே
வந்தெமையாளும் — எம்பரனே (ஸ்வாமி)

இராகம்; சரஸ்வதி — தாளம்; ஆதி

தோற்றம் 2.

பல்லவி

சுந்தர சிவானந்த சரஸ்வதியே — எங்கள்
பந்த மகல அருள் பாலிக்கும் ஜோதியே (சுந்தர)

அனுபல்லவி

சந்ததம் நின்நாமம் சிந்தனை பிருத்தியே
உன்றன் மலர்ப்பாதம் என்றும் ஆரத்திசெய்வோம் (சுந்தர)

சரணம்

சொந்தம் சுற்றமெனும் பந்தம் பாசமகற்றி
இந்த நற்பிறப்பினில் இருள்மாயை தனையறுத்தே
கந்தனும் சுப்ரமண்ய கலியுக வரதனுய்
அந்தமில் அருள்மழை பொலிந்திடும் ஜோதியே (சுந்தர)

இராகம்; மால்கோஷ் — தாளம்; ஆதி

வாழ்த்து 3.

பல்லவி

வாழ்க சிவானந்த குருமகராஜ்
சற்குருமகராஜ் நம் மகராஜ் (வாழ்க)

அனுபல்லவி

கண்ணிமைதான் நம்மைக் காப்பதுபோலவே
உண்மையில் நம்துயர்தீர்த்திட உத்தமர் வந்தார் (வாழ்)

சரணங்கள்

அன்பெனும் சிவமே ஆனந்த ஜோதியே
ஆரணப் பொருளாகும் அற்புத வித்தகனே
காரணப் பொருளாகிய கண்ணனைக் கூடியே
கைவல்ய சுகவழி காட்டிய ஜோதியே (வாழ்க)

வாழ்க சிவா னந்தஜோதி வாழ்க வாழ்கவே
சூழ்க தியானம் அன்பு சேவை அனுபூதிகள்
நாடியே நின் நாம பஜனை பாடி வாழ்த்தவே
நீடாழி உலகிலே நீடூழி வாழ்கவே (வாழ்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீக வாழ்க்கைச் சங்க வெள்ளிவிழா.

( சுவாமி சுப்பிரமணியானந்தா )

கற்றதனுலாய பயனென்கொல்
வாலறிவன் நற்ருள் தொழா அரெனின்.

பல நூல்களைப் படிப்பதனுல் மேலான பயன் எதை ஒருவன் அடையவல்லன். சர்வவல்ல பியாயும் வியாபியாயும் இருக்கும் பரும் பொருளை உணர்ந்து அவரை வழிபடத் தெரியாத படிப்பைப் படிப்பாளுகில் பயன் ஏதும் இல்லை. கற்றகலைகள் அவமே.

உலகப் பிரசித்தி பெற்று வடஇந்தியாவில் ரிஷிகேசில், புண்ணிய தீர்த்தத் தலங்களில் மேன்மையான இத்தலத்தில் இமைய சோதியாய் விளங்கும் உயர்திரு சுவாமி சிவானந்த சரஸ்வதி மகாராஜ் அவர்களால் 1936-ம் ஆண்டில் ஸ்தாபனமாகி நாளதுவரை நற்பணியாற்றிக் கொண்டிருக்கும் (Divine Life Society) தெய்வீக வாழ்க்கைச் சங்கம் இதுவரை இருபத்தைந்தாண்டுகளாகத் தொடர்ந்து உலகம் சுற்றிவர மக்களிடையே சாதி நிறமத பேதமின்றி அவரவர் பண்பிற்கேற்க ஒருமித்த மனப்பான்மையான பஜனை, பிரார்த்தனை சத்சங்கம், சாதுசங்கம், ஆயின நற் பண்புகளையெல்லாம் இலகுவில் கையாளக்கூடிய நடைமுறையில் பரப்பிவருகின்றது.

மனுஷன் மிருக வர்க்கத்தினனுயிருந்தும் ஜீவராசிகளுக்குள் உள்ளொளியாயிருந்து நடமாடும் ஆத்ம சக்தியையும் அதின் ஆற்றல்களையும் தனக்குக் கிடைத்துள்ள ஆறும் அறிவின் துணையாக, விசாரணை, உணர்ச்சி உள்தெளிவில் தனக்குள் கண்டறிந்து, மனுஷன் கடவுளே என்னும் தன்மையில் தெளிவுபெற்று, இந்த ஆத்ம சக்தியே உலக அனுபவங்களனைத்திலும் சாட்சி ரூபமாக இருந்து செயலாற்றுவதும், மற்றைய எல்லாரிடமும் துலங்குவதான தன்னைக் கண்டறிந்து யாபேரும் ஒரே அம்சம் பெற்றவர்கள் பாகுபாடின்றிப் பரம்பொருளின் அணுத்தோற்றங்கள், சகோதரத்துவ உரிமைக்குப் பாத்திரமானவர்கள், தம்தம் உணர்ச்சிகளுக்கேற்க நன்முறைகளைக் கையாளுல் சுதந்திர முடையவர்கள் என உணரவேண்டும்.

எவரும் தமக்கென்று சுயநல பான்மையாய் வாழாது, நாடு, சமுதாயம், உலகம் முழுமையுமே ஒருகுலம், ஒன்றிலிருந்தே தோற்றம் பெற்றவை அதிலேஒடுக்கம் பெறுவன என்னும் உண்மையை வாழ்க்கையில் கையாண்டு, பக்தி வைராக்கியம் பெற்றுப் பரமனடியில் தங்கள் வாழ்வையே அர்ப்பணம் செய்து நித்திய ஆனந்தம் பெற்று வாழக்கலியுகத்தில் கையாளும் நல்முறையே இவ்வாழ்க்கைப் பெருமை.

தெய்வீக வாழ்வை அபேட்சிப்பவர் அப்பியசிக்கவேண்டியன முறையே:—

பிரமச்சாரியம்:— சுகபோக இச்சை யடக்கம், மனதைக் கண்ட ஆசை இச்சைகளில் செல்லவிடாது அடக்கமாயிருக்கப் பழகுதல்.

அகிம்சை:— சீவராசிகளில் அன்பு கருணை அவர்களின் சஞ்சல நிலைகளில் மனக்கசிவு கொண்டு தயவாக நடைமுறை நடத்தல்.

சத்தியம்:- நடை, பேச்சு, நினைவுகளில் எவரையும் வஞ்சிக்காத தர்மவழிப்படி நடந்து அகச்சுத்தம் புறச்சுத்தமுறைகளைத் தவமாகக் கொண்டு அனுசரித்தல்.

இம்முறைகள் சுத்த சாத்வீக குணத்தைப் பெலம்பெறச் செய்வதோடு தெய்வீகவாழ்வில் தீவிர நாட்டம் கூட்டிப் பரமனின் பேரருள் பாவிப்பதை உணர்ச்சியால் தெரிந்துகொள்ள அனுகூலமாகும்.

உலக சிற்றியல்புகளின் ஆசாபாசங்களே நற்பண்புகளில் நாட்டங் கொள்ளாமைக்குக் காரணம். அல்லாமலும் இச்சிற்றியல்புகளன்றே உலக வாழ்க்கைக்கும் அதில் தோற்றிவரும் நோய், சஞ்சலம், ஆறுதலின்மை, அதிருப்தி மனச்சோர்வு, கஷ்டங்கள் மரண பயம் ஆயின வற்றின் மூலகாரணம்.

இந்நிலையைச் சற்று உற்று நோக்கி ஆராயுமிடத்த உண்மை புலப்படும். அதன் பயனுக அதர்ம முறைகளை விலக்கித் தர்மமென்று, மனுநீதி, இயற்கைநீதி, சர்வலோகநீதி, அரசியல் நீதி இவையெல்லாவற்றிலும் மேலான தெய்வநீதி முறைகளை நாளாந்த சீவிய முறைகளில் பழகி மனச்சாந்திபெற்று அனுபூதிமான்களாகி நித்தியானந்தத்தைப் பெறக்கூடிய மார்க்கத்தைத் தேடி நடந்துகொள்ள வேண்டியதே ஒவ்வொரு மனிதனுடையவும் பெருங்கடமை. குருதேவர் சிவானந்த மகாரிஷியின் பேரருளால் உலக மக்களனைவரும், ஒரே குடும்பத்தினர் ஒரே சகோதரத்துவ உரிமை யுடையவர்கள் ஆனபடியால் தெய்வீக வாழ்வை வாழ்ந்து சிரஞ்சீவிகளாய் நித்தியானந்தம் பெற்றுப் பரமனின் திருவடியையடைந்து பெருவாழ்வையெய்துவார்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலில் கிறித்துவ மதம்.

( ரெவரெண்ட் ஆர். எஸ். பிட்-கெத்லே, D. Litt, Ealiry Common, லண்டன். )

ஸ்ரீ சுவாமி சிவானந்தரை நேரில் காணும் பாக்கியத்தை இதுவரை யான் பெற்றிலேன். நாங்கள் அவரைப் பத்திரிகைகள் மூலமாகவே அறிந்திருக்கிறோம். அவரது புனித தெய்வீக எழுத்தோவியங்கள் மூலமாகவே அவர்பால் என் கவர்ச்சி பதிந்தது. அவர் விரும்பினாலும் விரும்பா விட்டாலும், என்னிடம் அவர் கிறித்துவ வேதாந்தியைப் போன்றே எழுதியும் பேசியும் வந்தார். கிறித்துவ மதத்தில் எனக்கு அதிகப் பற்றுண்டு. நான் அதைக் கடைப்பிடித்தொழுக முயற்சித்திருக்கிறேன். ஆனால் செயலில் ஈடுபடுதலைக் கடினமாகக் காண்கின்றேன். ''தன்னைப்போல் அயலானையும் நேசிப்பது என்பது எளிதானதொரு காரியமல்ல. ஆனால் உண்மைக் கிறிஸ்துவனுதற்கு ஒருவன் அது மட்டுமல்லாது இன்னும் பல செய்தல் வேண்டும். பத்துகட்டளைகள் குரிசின் போதனையை விடக் கடைபிடிப்பதற்கெளிது. எக்காலத்தும் செயலில் கிறித்துவமதத்தையே ''மலைமேல் போதனை'' தெரிவிக்கிறது.

மக்கள் இதை அறிந்து உணருங்கால், உண்மையறிவு, உண்மைவாழ்க்கை பொருந்திய சமாதான உலகை நாம் பெறுவோம். தற்சமயம் மேலைநாடுகள் உலகியலில் அழுந்திக் கிடக்கின்றன.

ஆத்மாவில் திளைத்திருத்தலே உண்மையின்பம், நம்மில் இதை உணர்த்துவதற்கு சுவாமி சிவானந்தரைப் போன்று பலர் நமக்குத் தேவை. தன்னை அவர் கிறித்துவன் என்று சொல்லிக்கொள்வதில்லை. ஆனால் மதிப்புக்குரிய மகாத்மா காந்தியைப் போன்று கிறித்துவக் கொள்கைகளுடன் ஒன்றித்த வாழ்க்கை அவர் வாழ்கிறார். தன் வாழ்நாள் முழுதும் கிறித்துவத் தலைவரையே அவர் பின்பற்றுகிறார். கிறித்துவ மதக் கொள்கைகளை அவர் உணர்ந்த விதமானது ஒருவரை மிகவும் பணிவுடையராக்கிறது. நடைமுறைக் கிறித்துவ மதத்தைக் காணவேண்டுமாகில் மேல்நாட்டிலுள்ளோர் கீழ் நாட்டிற்கு வந்துதான் ஆகவேண்டும் என ஒருவன் உணர்வதில் ஆச்சரியம் ஏதுமில்லை. நாம் கடைபிடித்தொழுகவேண்டிய வழியை சுவாமி சிவானந்தர் காட்டுகிறார். அவர் நீடு வாழ்வாராக! அவரது போதனை உண்மை மதத்தின் உயரிய அர்த்தத்தை அறிய நமக்கு உதவி புரியுமாக!!

---

# அமைதிக்கான வழி.

( ரெவரெண்ட் ஜோங்மர்பி, D.D. Phd., LL. D., லாஸ்ஏஞ்சல்ஸ், கலிபோர்னியா. )

தன்னையறிந்த மாமுனி சுவாமி சிவானந்தரால் நடாத்தப்பெறும் யோகவேதாந்த ஆரண்யக் கழகத்தில் பேசும் பேறு பெற்றது யான் செய்த புண்ணியமே. அவரது வார்த்தைகள் ''வெள்ளி ஓவியங்களில் தங்கக் கனிகள்'' போன்றவை. அவரது உச்சரிப்புகள் ''காதுக்கினியதும், நரம்புகளுக்கு கந்த துமான தேனடை'' போன்றவை.

சுவாமி சிவானந்தரது நூலான 'மதங்களின் உலகப் பொதுச்சபை' மிக உயரிய தொன்றாகும். அவரது கருத்துக்களும் கட்டுரைகளும் உணர்ச்சியூட்டுகின்றன. அவைகளது ஆழ்ந்த பொருள் இதய வீணையின் கம்பிகளை மீட்டி நிலைத்த நம்பிக்கை எனும்நாதத்தை இசைத்து, அமைதி, இன்பம், உண்மையழகின் ஒப்பற்ற ஒளியினிடத்தில் இட்டுச்செல்லும்பாதையிடம் நம்மை அழைத்துச் செல்கிறது.

அழியாத பொக்கிஷங்களின் உதவிகொண்டு அமைக்கப்பட்டு புனிதத்தன்மை பூண்டு விளங்குவதால் தெய்வநெறிக் கழகத்தைத் தன் வழிகாட்டியாக நாடுதல் யாவருக்கும் சாலச் சிறந்தது. நல்லுணர்வு, பரமானந்தம், அமைதிக்கான வழியை அது அகலத்திறந்து விடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமாத்மனின் உயர் தோற்றம்.

( ஸ்ரீ பார்பரா மேயர், மிண்டல்ஹெய்ம், ஜெர்மனி. )

பூமியில் மிகப் பெரும் ஆத்மீக சக்தியாக விளங்கும் அடக்கமே உருக்கொண்ட ஸ்ரீ சுவாமி சிவானந்தரை இந்தியா உலகுக்கு ஈந்திருக்கிறது. அவரது சக்தி மிகும் 'ஓம்' எனும் ஒலியானது உலகெங்கும் எதிரொலிக்கிறது. இந் நாதம் அருள் பெற்றவர் காதுகளுக்கு மட்டுமல்லாது எல்லாத் தேசங்களிலும் எல்லா மதத்தினராலும் செவி மடுக்கப்படுகிறது. இறைவனை நாடிநிற்போர் இன்னும் உயர்ந்த பல அற்புதங்களைக் காண்கின்றனர். அன்பு வாழ்க்கை, தன்னலமற்ற சேவை, அறிவு, ஆற்றல் இவைகளின் கருவூலமாக விளங்கும் காரணத்தினால் இந்தியாவின் உன்னத புருஷரான சுவாமி சிவானந்தர் உலகுக்கே ஒரு புதுத் தோற்றத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார். சுவாமி சிவானந்த சரஸ்வதி மஹாராஜ்—மிக உயரிய, அழகிய, ஒப்பற்ற தொன்றை இவ் வார்த்தைகள் குறிக்கின்றன.

''அறிவு, ஆற்றல், ஆத்மீகம் இவை ஒருங்கே பொருந்திய மகான்கள் ஏன் இவ்வளவு காலம் எல்லாமதங்களின் அடிப்படையாக அமையும் ஒரே உண்மையை மக்களுக்கிடையே போதித்து பல்வேறு மதங்களுக்கிடையே நிலவும் பூசல்களையும், பிணக்குகளையும் போக்க முற்படவில்லை?'' என்பதோர்கேள்வி எல்லோர் மனத்திலும் எழுவது இயற்கை. ஸ்ரீ சுவாமி சிவானந்தர் தனது உயர் ஞானத்தாலும் தெய்வீகப் பேரின்பத்தை அனுபவித்த காரணத்தாலும் இக்கேள்விக்கு ஒரு முடிவு கண்டிருக்கிறார். மனித சமுதாயத்தை சர்வமத சமரஸத்துக்கும் அதன் மூலம் அகில உலக சாந்திக்கும் இட்டுச் செல்லும் உலக குரு இவரே. மக்கள் மனம் மலர்தல் வேண்டும். வேற்றுமையுள் உறைந்திருக்கும் ஒற்றுமையே உணர குறுகிய மனப்பான்மையை ஒழிக்க முற்படுதல் வேண்டும். நம்மால் புரிந்து கொள்ள முடியாத அளவுக்குப் பரந்து விரிந்திருக்கும் சுவாமி சிவானந்தரது உள்ளுணர்வே உலகத்தை இன்று நடாத்திச் செல்கிறது என்று கூறினால் அது மிகையாகாது.

மனித உருக்கொண்டு விளங்கும் இத் தெய்வாத்மனுக்கு அனந்த கோடி நமஸ்காரங்கள்! நிலையற்ற இவ்வுலகில் அவரொருவரே உண்மை. அவரே ஒளி, வழியும் அவரே. அவரே எல்லை, நல்லாட்டிடையனும் இவரே. வாழ்வின் ஒளியும்,உயிரும்,ஏன், உலகின் உயிரும்அவரே. நம்மிடையே திரும்பி வருவதாகச் சொல்லிச் சென்ற ஒருவரே ஸ்ரீ சுவாமி சிவானந்தர். அவரதுசகிப்புத்தன்மை பூரணமானது;அவரது அடக்கம்ஆற்றல் அடங்கியது; அவரது போதனைகள் கிறித்துவ குருக்களாலும் பிரசாரம் செய்யப் படுகிறது. வேதாந்தத்தை அடிப்படையாகக் கொண்டு, தற்காலக் கொள்கைகளையும் இடையிடையே தன்னுள்கொண்ட அவரது போதனைகள் உலகெங்கும் எண்ணற்றவர்களால் சொற்பொழிவுகள், கட்டுரைகள், நடைமுறை போதனைகள் மூலமாகப் பரப்பப்படுகின்றன. தனது ''சர்வமத சமரஸம்'' என்னும் நூலில் எவ்வாறு எல்லா மதங்களும் ஒன்றிலிருந்தே தோன்றின என்பதையும், தவிர தோன்றியதிலேயே போய்ச்சேரப் போவதாகவும் அவர் தெரிவிக்கிறார். இது அவரது தோற்றத்தின் மற்றுமோர் உயர்வைத் தெரிவிக்கிறது.

அன்று ஏசு சொன்னார்: ''இன்னும் பல ஆட்டுக்கூட்டங்களை நான் கண்காணிக்கவேண்டியதிருக்கிறது. ஆட்டிடையன் ஒருவனும், ஆட்டக்கூட்டம் ஒன்றும் மாத்திரம் மிஞ்சும் வரை இவற்றை வீடுபொய்ச் சேர்ப்பதில் நான் கவனம் செலுத்துவேன்''. இந்த உறுதிமொழியை இன்று சுவாமி சிவானந்தர் மெய்ப்பித்திருக்கிறார். ''எல்லா மதங்களும் அடிப்படையில் ஒன்றே. முக்கியமல்லாதவைகளிலும், பழக்கவழக்கங்களிலுமே வேற்றுமைகள் நிலவுகின்றன'' என்று கூறுகையில் அவர் அரிசியிலிருந்து உமியைப் பிரித்து வேற்றுமையின் உட்காணும் ஒற்றுமையை நோக்குகிறார். பயத்தாலும், போர்களாலும் பிரிந்துகிடக்கும் உலகில் ஆத்மீக மறுமலர்ச்சியை ஏற்படுத்த வழிகோலும் ஸ்ரீ சுவாமி சிவானந்தரை இவ்வெண்ணங்கள் சமாதானத் திருத்தூதராக ஆக்குகின்றன. இந்நேரத்தில் தனியொரு சாதகனுக்கு எது உண்மையெனப் படுகிறதோ அதுவே மனித சமுதாயத்துக்கும் உண்மையாகும்.

சுவாமி சிவானந்தருடன் பேரொளியும் உலகில் வந்துற்றது. பழங்கால போதனைகளுடன் நவீன எண்ணங்களை ஒன்று படுத்தி திருத்தூதராக வந்திருக்கும் ஸ்ரீ சுவாமி சிவானந்தர் மிகுந்த சக்தியுடன் உலகத்தின் க்ஷேமத்திற்காக அவதரித்திருக்கிறார். கடவுள் தமது அறிவு, அன்பு, ஆற்றல் முதலிய வலிமிகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதமாற்றமும் - மனமாற்றமும்.

( தி. கி. நாராயணன் B.Sc. )

மனிதனை மனிதனுக்குவது மதம். மிருக நிலையிலிருந்து மனித நிலைக்கு உயர்த்தி மேலும் பிறப்பு இறப்பற்ற தெய்வீக நிலைக்கு மனிதனை இட்டுச்செல்வதே மதம். மனிதனில் ஆழ்ந்திருக்கும் அக்ஞான இருளை அகற்றி மெய்ஞானத்தை நல்குவதுமதம்.மனிதத்தன்மையை அழித்து தெய்வத்தன்மையை நல்குவது மதம். மண்ணுலக வாழ்வின் இன்ப துன்பங்களில் அழுந்தி அழிவது அறிவீனம், ஆனால் வாக்குகளுக் கப்பாற்பட்ட மிக உயரிய என்றுமழியா ஆனந்தத்தை அடைவதே அவனத மண்ணுலக வாழ்க்கையின் மிக உயரிய குறிக்கோள் என உணர்த்வது மதம். அவன் உண்மையில் இப் பஞ்சபூதங்களாலாக்கப்பட்ட ஆக்கையல்ல, ஆனால் இவ் வழியும் தன்மையதான ஆக்கையினுள் பிரகாசித்துக் கொண்டிருக்கும் அழிவற்ற ஆத்மனே அவனதுநிஜசொரூபம் எனஉணர்த்துவது மதம். பல்வேறு வியாதிகளுக்கு இலக்காகி அழியும் தன்மையதான இவ்வுலகை அலங்கரிப்பது அவன் கடமையல்ல, ஆனால் விண்ணுலகப் பெருவாழ்வை யடைவதே அவன் தலையாய கடமை என வலியுறுத்துவது மதம்.

ஆகவே மனிதனைக் கீழ்நிலையிலிருந்து மேல் நிலைக்கு இட்டுச் செல்வதொன்றே மதத்தின் குறிக்கோளாக அமைகிறது. கிறித்துவ மதமாகட்டும், இஸ்லாமிய மதமாகட்டும், பௌத்த மதமாகட்டும், இந்து மதமாகட்டும் எம் மதமாயினும் அவைகள் அடிப்படையில் ஒரே உண்மையைப் போதிக்கின்றன என்பது சான்றோர் கூற்று. இதையே, ''ஏகம் சத் விப்ரோ பஹுதா வதந்தி'' என்ற வாக்யத்தில் காண்கிறோம். உண்மை ஒன்றே. அது பலவாறாகப் பகரப்படுகிறது. தண்ணீர், ஜலம், வாட்டர், பாணி முதலிய பல வார்த்தைகளால் குறிக்கப்படுவது நிறமும் மணமும் அற்ற ஒரு திரவப் பொருளேயாம். இதைப் போன்று அல்லா, ஏசு, கிருஷ்ணர், ஜெஹோவா முதலிய பல பெயர்கள் குறிப்பது நாமம், ரூபம், குணம், தன்மை முதலியவற்றிற்கப்பாற்பட்ட ஒரு பரம்பொருளையேயாம்.

மெய்ப்பொருளை அறிவதே மனித வாழ்க்கையின் குறிக்கோள், எப் பொருளிலிருந்து எல்லாம் உண்டாகியிருக்கின்றனவோ, அப் பொருளில் தன்மய மாவதே மனித வாழ்க்கையின் லட்சியம் என்பதையே பல்வேறு மதங்களும் பல்வேறு விதங்களில் வலியுறுத்துகின்றன. பசுக்களின் நிறம் பலவாயிருக்கலாம், ஆனால் அவைதரும் பாலின் நிறத்தில் ஒருவித மாறுதலுமில்லை. அதுபோன்று மதங்கள் பலவாறாயினும் அவை தெரிவிக்கும் உண்மை ஒன்றே.

அக்ஞானத் திரையால் மூடப்பட்டு தினசரி வாழ்க்கையில் சுழன்று தத்தித் தடுமாறிக் கொண்டிருக்கும் மனிதனொருவனை அவனது உண்மைநிலையை அறியச்செய்து பேரின்பத்தை அடைய வழிகோலுவதே உண்மை மதத்தின் குறிக்கோளாகும். எப்பேர்ப்பட்ட கீழ்நிலையில் இருந்தாலும் அவனுக்கு நம்பிக்கையூட்டி, அவனது வாழ்க்கையின் குறிக்கோளான பேரின்பப் பெருவாழ்வை அவனால் அடைய முடியும் என்ற ஊக்கமளித்த அவனை உயர்த்தி விடுவது உண்மை மதம். மனிதனது தற்சமய வாழ்வு அவனது பூர்வஜன்ம கர்மங்களால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதை வலியுறுத்தி, அவனது எதிர்காலவாழ்வை வளப்பமாக்க வேண்டிய கடமை அவன் கையில்தான் இருக்கிறது என்பதை அச்சுறுத்துவது உயரிய மதம். மனிதன் நிரந்தர பாபியல்ல, நல்லன செய்தால் நல்லதை அடையலாம் என்பதைக் கூறி நம்பிக்கையற்றவனுக்கும் நம்பிக்கையூட்டி அவனது வாழ்க்கையை இன்பமாக்குவது உண்மை மதத்தின் தன்மை. எம் மதத்தைச் சார்ந்தாலும் சரி, கடவுளை எந் நாமத்தாலும் வழுத்தினாலும் சரி அவனது வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்படும் என்று பறையறைவதே உண்மை மதத்தின் தன்மை. அதுவே உயரிய மதம் என்பதில் சிறிதும் ஐயப்பாடுண்டா?

மனித வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு அவனது மனத்தில் மாற்றம் ஏற்படுவது இன்றியமையாதது.

---

முன் பக்கத் தொடர்ச்சி..

கதிர்களைச் செலுத்தும் படிகம் அவராவார், அக் ஞானமாகிய இருளிலும், பயத்திலும், உலகம்வாழுவதைத் தடுப்பதற்கென வந்துதித்தவர் அவர். கடவுளை அடைய முயலும் சாதகர்கள் அவரையணுகி வணங்குகிறார்கள். மிக உயரிய வணத்துக்குரியவர் ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதியவர்களே!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வெள்ளத் தனையது மலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு''
— குறள்

என்பதுபோல் மனமலர்ச்சியே மனித வாழ்க்கையின் மறுமலர்ச்சியாம். பல்வேறு மலங்கள் பொருந்திய மனதை யம, நியம, ஆசன, பிராணுயாம, பிரத்யாகார, காரண, தியான, சமாதி முறைகளால் பக்குவப் படுத்துவது பேரின்பப் பெருவாழ்வு அடைய முயலும் முயற்சியின் சீரிய அம்சம். மனமே மனிதன் என்பதை வலியுறுத்தி அகத் தூய்மையே பரமானந்தத்தின் அடித்தளக் கல் என எடுத்துக் கூறி மனத் தூய்மையை ஏற்படுத்துவதே முக்கியம். இதுவல்லாமல் வெறும் மதம் மாற்றம் முக்கியமல்ல. மதமாற்றம் என்பது ஒரு போலிப் புறச் சடங்கு. அதனுல் புறத் தூய்மையோ அகத் தூய்மையோ ஏற்பட முடியாது. உண்மையில் தங்கள் மதத்தின் கொள்கைகளைத் தாங்களே நன்கு அறியாதவர் தாம் மதமாற்றம் பற்றிப் பிரசாரம் பண்ணத் தலைப்படுவர்.

உதாரணமாக ஒருவன் பசியினுல் வருந்துகிருன் என வைத்துக் கொள்வோம். நம் கடமை முதலில் நல்லுணவினுல் அவனது பசியை யாற்றுவதே யாகும். அவனிடம் சென்று நல்லுணவுப் பதார்த்தங்களைத் தயார் செய்யும் விதத்தைப் பற்றியும், அவற்றின் ருசி இன்னின்னவாறு இருக்கு மென்பதைப் பற்றியும் சொற்பொழிவு செய்வோமேயாகில் அவனது பசித் துன்பம் பன்மடங்கு அதிகரிக்குமே யொழிய சிறிதேனும் குறையாது. அவ்வாறு பிரசங்கம் செய்தல் மிகவும் பாபச் செயலல்லவா? அது போன்று வாழ்க்கையில் முன்னேற்றமடைய வேண்டும். பிறப்பு இறப்பு என்ற சக்கரத்திலிருந்து விடுபட வேண்டும். பேரின்பப் பெருவாழ்வு பெற்று பரமானந்தத்தை அடைய வேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கும் ஒருவனுக்கு நம் பிக்கை யூட்டி இறைவனை எந்நாமத்தால் நீ இறைஞ்சினுலும் அவன் உனக் கருள் புரிவான் என்று கூறி அவனது வாழ்க்கையை வளப் படுத்துவது சிறந்ததா? அல்லது ''நீ பாபி. எங்கள் கூட்டத்தில் நீ சேர்ந்து விடு. எங்களிடம் தான் சுவர்க்கத்தின் திறவுகோல் இருக்கிறது. எங்களால்தான் சுவர்க்க பதவியை உனக்களிக்க முடியும். இந்தச் சிறிய ஆயுளில் நீ எங்கள் நாதரை வழுத்தினுல் முக்தி பெறுவாய். இல்லையேல் என்றென்றும் நரகத்தில் உழல நேரிடும்'' என்று அதைரியப் படுத்தி அவனிடத்திலிருந்த சிறிது நம்பிக்கையையும் போக்கடிப்பது சிறந்ததா?

'எங்கும் நிறைந்துள்ள கடவுள் உன் மனத் தகத்தும் எழுந்தருளியிருக்கிறுர். படிப்படியாக உன் நிலையை உயர்த்த அவர் உனக்கு உறுதுணையா யிருக்கிறுர். ஆகவே ''உத்தரேத் ஆத்மனுத்மானம்'' என்பதற்கேற்ப நற்செய்கைகளாலேயே நீ உன்னை உயர் பதவிக் குள்ளாக்கிக் கொள்ளலாம்'' மனமாற்றத்தை ஏற்படுத்தி உயர்வோனுக்கு வது உண்மை மதமா? அல்லது உனக்குக் கொடுக்கப் பட்டது இந்தச் சொற்ப ஆயுள். உன் மரணத்திற்குப் பின் நெடுங்காலம் கழித்து வரும் நாளாகிய தீர்ப்பு தினத்தில் பகவான் உன் செய்கைகளுக் கேற்ப மீளாத நரகத்திற்கோ அல்லது தீராத சுவர்க்கத்திற்கோ அனுப்புவார்'' என்று கூறி வெறும் மதம் மாற்றத்தைப் பற்றிப் பிரசாரம் செய்யும் மதம் உண்மை மதமா?

ஈண்டு நாம் சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். வாசா மகோசுரமாகவும், அனிர்வசனீயமாகவும் பரிணமித்துக் கொண்டிருக்கும் இறைவனைத் தீனதயாளன், கருணுமூர்த்தி ஏழை பங்காளன் எனப் பலவாருக அழைப்பது வழக்கம். எவ்வாறு தாயொருத்தி தன் மகவு துன்புறக் காணச் சகியாளோ அது போன்று நம்மைப் படைத்த இறைவன் நமக்கு எந்தவித உதவியையும் செய்யக் காத்துக் கொண்டிருக்கிருள். 'த்வாரகாவாஸீ' என்ற திரௌபதியின் கூக்குரலைக் கேட்டு ஓடோடியும் வந்து உதவிய இறைவன் நம்மைச் சிறிதேனும் துன்பத்திற்குள்ளாக்குவாரா? 'ஆதிமூலமே' என்று கத்திய பொழுது முதலையின் பிடியில் அகப்பட்டுத் தவித்துக் கொண்டிருந்த கஜேந்திரனுக்கு விடுதலையளித்த அக் கருணுகர மூர்த்தி நாம் படும் துன்பத்தைச் சகிப்பாரா? ஒருபொழுதும் மாட்டார். நாம் அவரை நெஞ்சார வழுத்தினுல் ஓடோடியும் வந்து உதவி புரியக் காத்து நிற்கிருர். இதையே அப்பர் தெரிவிக்கிருர்.

விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல் நாட்டி உணர்வு கயிற்றினுல்
முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே
— அப்பர்

இது இவ்வாறிருக்கத் தெரிந்தோ தெரியாமலோ நாம் செய்யும் சிறிய தவறுகளுக்காக மீளாத நரகத்தில் நம்மை இறைவன்

ஆழ்த்துவார் என்று கூறின் இதைவிட விந்தை வேறுண்டோ?

ஆகவே மனித குலம் உண்மையாகவே மாண்படைய வேண்டும், சம்சார சாகரத்தில் வீழ்ந்து மீளவழி தெரியாதவர்களை ஈடேற்ற வேண்டும் என்ற விருப்ப மிருக்குமேயாகில் ஒருபொழுதும் மதத் தலைவர்கள் மதமாற்றச் செயல்களில் ஈடுபடமாட்டார்கள். தவிர 'எப்பொருள்எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்ற வள்ளுவர் வாக்கிற்கு இலக்காக நாம் சார்ந்திருக்கும் மதம் எத்தன்மை யுடைத்தாயிருக்கட்டும், அதில் பொதிந்திருக்கும் உண்மையைத் தெரிந்து உயர் பதவியை யடைய முயற்சிப்பது நம் கடமையா? அல்லது இதில் குற்றம் உளது, ஆகவே நான் பிற மதத்தைத் தழுவுவேன் எனக் கூறி அதிலும் இதே போல் நிலையை உணர்ந்து வாழ்க்கையை வீணாக்குவது சிறந்ததா? எவ்விதம் இரண்டு முயல்களைத் துரத்தி ஓடும் வேடன் ஒருவனால் ஒன்றையும் பிடிக்க முடியாதோ அதே போன்று ஒரு மதத்திலிருந்து பிற மதம் மாறின ஒருவன் இரண்டிலும் நம்பிக்கை யிழந்து வாழ்க்கையை வீணாக்குவது திண்ணம்.

எனவே மக்கள் குலம் உயர வேண்டின், மனிதன் தெய்வீக சாந்நித்தியத்தை உணர வேண்டின் இச் சம்சாரக் கடலிலிருந்து விடுபட்டுப் பேரின்பத்தை அனுபவிக்க வேண்டுமானால் மதத் தலைவர்கள் மதமாற்ற செய்கைகளைக் கைவிட்டு மனமாற்றச் செய்கைகளில், அதாவது காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாச்சரியம் போன்ற விக்ஷேபங்களை அகற்றி அவனை உயர்பதவிக் கடைவிக்கும் முயற்சிகளில் ஈடுபட வேண்டும். அதுவே அவர்கள் தங்கள்மதப் பிரசாரத்திற்கு தாங்கள் செய்யும் ஒப்பற்ற உபரிய தொண்டாகும். அவ்வாறு அவர்கள் செய்வார்களே யானால் மதங்களுக் கிடையே யிருக்கும் வேறுபாடுகளும், மதவெறியும், பூசல்களும் மறைந்து விடும். மனித குலம் தழைக்கும். ஏன் மண்ணுலகம் விண்ணுலகமாகத் திகழும் என்பதிலும் ஐயமுண்டோ?

இன்றைய உலகில் இந்த வித சர்வமத சமரஸத்துக்காகவும், மக்களுடைய ஆத்மீக முன்னேற்றத்திற்காகவும் உண்மையாகப் பாடுபடும் ஸ்தாபனம் ஒன்றுள்ளதா, மக்களை மக்களாக மாற்றி, மற்றும் தெய்வீக நிலைக்கு உயர்த்தப் பாடுபடும் பெரியார் ஒருவர் நம்மிடையே உளரா என்றதோர் கேள்வி நம் அடிமனத்தில் எழுவது சகஜம். இக் கேள்வி எழுங்கால் நம் எண்ணம் இந்தியாவின் வட எல்லையாம் இமய மலையின்பால் திரும்புகிறது. ஆம்! உண்மையிலேயே இமய மலையிலிருந்து கிளம்பும் ஒரு ஜோதி உலகனைத்தும் பிரகாசப் படுத்திக் கொண்டிருக்கிறது. இன்று சர்வ மத சமரசத்துக்காகப் பாடுபடும் ஸ்தாபனம் தெய்வ நெறிக் கழகம். மக்களின் உண்மையான முன்னேற்றமாம் ஆத்மீக முன்னேற்றத்திற்கு அல்லும் பகலும் அயராது உழைத்து வரும் ஒரே பெரியார் சுவாமி சிவானந்த சரஸ்வதி யவர்களே.

யஞ்ஞங்களில் தலை சிறந்தது ஞான யக்ஞம். பகவான் கீதையில் தெரிவிக்கிறார்.

பஹூனாம் ஜன்மனாமந்தே ஞானவான் மாம் ப்ரபத்யதே''

அதாவது, பல பிறவிகளை எடுத்தபின் ஞானம் பொருந்திய ஒருவன் என்னை அடைகிறான். ஆகவே மக்களை ஞான சீலர்களாக்க இன்று சுவாமி சிவானந்தர் முயன்று வருகிறார். தனது ஒப்பற்ற பொக்கிஷமாம் ஆத்மீக அறிவுக் களஞ்சியத்திலிருந்து உயர் செல்வமான தெய்வீக அறிவை அள்ளி அள்ளிக் கொடுத்து வருகிறார். இன்று உலக மக்கள் அனைவரும் அவருக்குக் கடமைப் பட்டிருக்கின்றனர் என்று கூறினால் அது மிகையாகாது.

ஸ்ரீலஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி யவர்களிடம் கட்புலனாகும் பல்வேறு உயர் குணங்களுள் ஒன்று அரும் பெரும் ஆத்மீகக் கருத்துக்களை எல்லா மதத்தினருக்கும் ஒத்தவாறு எளிய முறையில் எடுத்தியம்பி (மத மாற்றத்தை ஏற்படுத்தாமல்) மன மாற்றத்தை ஏற்படுத்துவதாகும். அமெரிக்கரென்ன, ஐரோப்பியரென்ன, இந்துக்களென்ன, முஸ்லிம்களென்ன — எல்லா தேசத்தவரும் எல்லா மதத்தினரும் சுவாமி சிவானந்த சரஸ்வதியைத் தங்கள் தேசத்தலைவராகவும் தங்கள் மதத் தலைவராகவும் பாவிக்கின்றனர். புத்தர்கள் அவரைப் புத்த பெருமான் ரூபத்தில் வழிபடுகின்றனர். கிறித்தவர்கள் அவரை எம்பெருமான் ஏசுகிறிஸ்து வடிவத்தில் பணிந்தேற்றுகின்றனர். பல்வேறு நாட்டிலிருக்கும் அவரது சீடர்கள் குருதேவரருளால் தாங்கள் அனுபவித்த அற்புதங்களைக் கூறக் கேட்குங்கால் மயிர் சிலிர்க்கிறது. இதுவரை சுவாமிஜியைப் போன்ற ஒரு பேரவதாரம் தோன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏசுநாதரின் தோற்றம்

(திருமதி. ஹிலரி பெரிகின், இங்கிலாந்து)

ஸ்ரீ சிவானந்தரின் இதயம் ஒரு கருணைக் கடல். தன்னலமற்ற தூய அன்பின் சமுத்திரமே அது அவரது ஆத்மா சர்வ வியாபியும், சர்வஞ்ஞனும், சர்வ சக்தி வாய்ந்ததாக அமைவதால் தான் உலகெங்கிலுமுள்ள பக்தர்களின் உள்ளங்களோடு அவரால் தொடர்பு கொள்ள முடிகிறது; மேலும் எனக்கு உதவியது போல் அனைவருக்கும் அவரால் உதவ முடிகிறது. ஏசுநாதரும் கருணையின் சிறந்த தோற்றமாக அமைந்திருந்தார். அன்பின் உருவாகத் திகழ்ந்து வந்தார்; தெய்வீக சக்தி நிறைந்தவராகக் காணப்பட்டார். எனவேதான் ஏசு நாதருக்கு அடுத்தாற்போல் சிவானந்தர் கிறிஸ்தவர்கள் எண்ணற்றவர்களுக்குத் தோற்றமளித்தார்.

வைதீகக் கிறிஸ்தவர்கள் ஏசுநாதர் ஒருவரேதான் என்று எண்ணுகின்றனர். அத்தகையவர்கள் கூடச் சிவானந்தர் ஏசுநாதரின் மறு தோற்றம் என்று எண்ணத் தொடங்கியுள்ளனர். வேற்றுமைகளைக் குறித்து அவர்கள் ஆராயும் பொழுது எங்ஙனம் பெத்தலேமில் தோன்றிய ஏசுநாதர் எதிர்பார்த்த மாதிரி செல்வத்தின் சிறந்த சீமானாக எங்ஙனம் அமையவில்லையோ அதேபோல வெளித் தோற்றத்தில் இன்று பல கிறிஸ்தவர்கள் எதிர்பார்க்கிற மாதிரி தாடியும் நீண்ட ரோமமும் கொண்ட எளிய தச்சு யுவாவாகச் சிவானந்தர் காட்சியளிக்கவில்லை என்பதையும் நினைவுபடுத்துகின்றனர். அன்று பொது மக்கள் ஏசுவை எங்ஙனம் ஒப்புக் கொள்ளவில்லையோ அதிலும் விசேஷமாக மத வெறி பிடித்த சமயத் தலைவர்கள் தாங்கள் எண்ணிய மாதிரி அல்லாமல் ஏசுநாதரை அவர் உண்மை உருவத்தில் பார்க்காமல் எங்ஙனம் இருந்தனரோ அதேபோல் மீண்டும் ஏசுநாதர் இவ்வுலகில் தோன்றினால் தாங்கள் எண்ணுகின்ற பிரகாரமே அவர் தோன்ற முடியும் என்று கருதுகின்ற மத வெறி பிடித்த கிறிஸ்தவர்கள் ஏசுநாதர் உண்மையில் நம்மிடையே மீண்டும் தோன்றும் பொழுது, நம்மிடையிலே உண்மையாகவே அவர் வசிக்கும் பொழுது அவரை ஒப்புக் கொள்ள மறுப்பது இயற்கை. அதேபோல் நம் உள்ளத்திலும் ஏசுநாதரை வரவேற்க நாமும் ஏமாளித்தனமாக இருந்து விடக் கூடும்!

# ஏசுநாதரின் செய்தி

ஏசுநாதருக்குப் பின்னர் சில நூற்றாண்டுகளில், தாங்கள் அன்றுள்ள பாமர மக்களின் நலனுக்கு எனக் கருதிய மாதிரி கிறிஸ்தவர் கிறிஸ்தவ மதத்தின் போக்கைப் பாதிரிமார்கள் மாற்றியமைத்தார்கள். ஆனால் இன்று காலம் மாறி விட்டது. உண்மையான மூலக் கருத்துக்களைத் தெரிந்து கொள்ளுவதற்குரிய பகுத்தறிவை நாம் இழந்து விடவில்லை. பிற மதங்களைப் பற்றிச் சற்றேனும் தெரிந்து கொள்ளாமல் அவற்றைக் கண்டிக்கும் கிறிஸ்தவர்கள் எத்தனை பேர்! அன்று பொதுமக்களின் நன்மைக்காகப் பைபிளில் குறிக்கப்பட்டுள்ள விஷயங்களைத் தவிர ரகசியமாக ஏசுநாதர் தம் சீடர்களுக்குப் பல விஷயங்களைப் போதித்துள்ளதாக அவரே கூறியுள்ளார் .ரகசியமாக அவர் போதித்த விஷயங்கள் பைபி

---

முன் பக்கத் தொடர்ச்சி

யதில்லை எனவும், இதுவரை தோன்றியுள்ள அவதாரங்களின் சேர்க்கையாக சுவாமிஜி விளங்குகின்றார் என்ற ஒரு உறுதிப் பாட்டுக்கு நாம் வருகிறோம். சுவாமிஜியின் உயர் கொள்கை எம் மதத்தவராயினும் தம் தம் மதக் கொள்கைகளை நன்கு கடைப் பிடித்தொழுகுவார்களாயின் உயர் நிலை யெய்துவர் என்பதேயாம்.

இவ்வுயரிய கொள்கையைத் தமதாகக் கொண்ட ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதியவர்கள் இன்னும் பல்லாண்டுகள் நல்லாரோக்கியத்துடன் நம்மிடையே வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளில் கூறப்படாதவை. ஏனைய மதங்களில் கூறப்படுபவையாக இருக்கக் கூடாது அறிவு மிகும் கிறிஸ்தவர்கள் அவற்றைத் தெரிந்து கொள்ளும் காலம் வந்து விட்டதாக ஏன் கருதக் கூடாது.

''நானே வழி; என் மூலமன்றி பிதாவை யாரும் அடைய முடியாது'' என்று ஏசுநாதர் கூறுவதாகத் தற்போதைய உருவத்திலுள்ள பைபிள் கூறுகிறது. இதன் காரணமாக ஏசுநாதரைத் தவிர ஏனைய மகாத்மக்களைக் கிறிஸ்தவர்களில் பெரும்பாலோர் கௌரவிக்கிறதில்லை. ஆனால் இதையும் இன்னொரு விதமாகப் பொருள் கூறலாம். உதாரணமாக முட்டாள் சிறுவன் ஒருவன் வாழ்க்கையில் வெற்றி பெற நல்ல கல்வி ஒன்றே துணையாக இருப்பதாக எடுத்துக் கொள்வோம். அவனது கல்லூரித் தலைவர், 'பையனின் ஒரே நம்பிக்கை நான்தான். பையன் என்னிடம் வராதவரை அவனுக்கு வெற்றி கிடைப்பதற்குரிய நம்பிக்கை கிடையாது' என்று கூறுவதாக வைத்துக் கொள்வோம். இப்பொழுது அவர் சொல்வதற்கு நாம் எங்ஙனம் பொருள் தெரிய வேண்டும்? கல்வியின் சின்னமான கல்லூரியின் பிரதிநிதியாகிய நான் பையனின் ஒரே நம்பிக்கை. கல்லூரிப் படிப்பைப் பெறுவதன் மூலம் பையன் கல்வியில் சிறப்பு அடையாத வரை அவனுக்கு வெற்றிக்கான வாய்ப்புக் கிடையாது' என்றும் பொருள் கூறலாம். வேறு ஒரு சிறந்த கல்லூரியிலும் அவன் தனக்கு வேண்டிய கல்வியைப் பெறலாம் என்பதை இது மறுக்கவில்லை.

# ஏசுவின் மறு தோற்றம்

இதே போன்று உண்மைக்குப் பல பாதைகள் இருக்குமானால் 'நான்' பிரதிநிதித்துவம் வகிக்கும் உண்மையின் தரத்திலல்லாது லட்சியத்தை யாரும் அடைய முடியாது என்று ஏசுநாதர் திட்டமாகத் தெரிவிக்கலாம். அடுத்து ஆராய்ச்சி செய்யுமுடத்து ஏனைய மதங்களும் ஏசு கூறும் உண்மையையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றதாகக்காணப்படுமானால்' அவையும் ஏசுவின் பாதையைப் போன்றவைகளின்றி வேறில்லை.

மேலும், ஏசுநாதரின் ஆத்மீகத் தன்மைகளைக் கொண்டு விளங்கும் மற்றொருவர் ஏசுநாதரல்ல என்று நாம் தீர்மானமாக எங்ஙனம் கூற முடியும்? எவ்வளவு எளிதிலே பகுத்தறிவை நம்மிடமுள்ள பொய்யான கருத்துக்கள் மழுங்கச் செய்து விடுகின்றன. ''ஏசுநாதரின் மறு தோற்றத்திற்''காகக் கிறிஸ்தவர்கள் எல்லோரும் என்றும் விழிப்புடன் காத்திருப்பது நல்லது.

எனவே ஏசுநாதரின் தோற்றம் எனக்குக் காணப்படினும் சரியே, எந்த மதத்தைச் சேர்ந்திருந்தாலும் சரியே, அவரது தன்மைகள் ஏசுவின் அரிய தன்மைகளோடு ஒத்திருக்குமானால் அவரே ஏசுநாதர் என்று எல்லா மதத்தவர்களும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்! ஆம்! அவர் ஏசுநாதரின் மறு தோற்றமேதான் என்பதில் என்ன சந்தேகம்!

# தெய்வ நெறிக் கழகத்தின் முக்கியத்துவம்!

(திரு ஒல்சர்ட்ஸ் சாகட்ஸ், மெல்போர்ன், ஆஸ்திரேலியா.)

தெய்வ நெறிக் கழகம் அதன் சரித்திரத்தில் அரியதோர் கட்டத்தைத் தாண்டிச் சென்று கொண்டிருக்கிறது. பொதுவாக அகில உலகத்திற்கும், விசேஷமாக இந்தியாவிற்கும், இந்தக் கழகம் தனது 25 வருட சேவையை முடித்துக் கொண்டுள்ளது. ஸ்ரீ சுவாமி சிவானந்தரால் எளிய முறையில் தொடங்கப் பட்ட இந்தக் கழகம் அவருடையவும் அவர் சீடர்களுடையவும் அரும் பணியால் அகில உலக ஸ்தாபனமாக வளர்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யடைந்துள்ளது. இதன் காரணம் ஆத்மீக அறிவுப் பிரசாரமெனும் அதன் நோக்கத்தில் தான் அமைந்துள்ளது. இல்லையென்றால் தற்கால உலகத்தின் இவ்வளவு அதிகமான ஆதரவை அது பெற்றிருக்க முடியாது. இன்பத்திற்கான வேட்கை எனும் ஒவ்வொருவருடையவும் சீரிய விருப்பத்தை நிறைவேற்றி வைக்கும் முறையில் கழகத்தின் செயல் முறைகள் அமைந்துள்ளன என்பதை அனைவரும் தெரிந்து கொள்ளலாம்.

அதிகமான வசதிகளைப் பெறுவதற்கு ஒவ்வொருவரும் தங்களுக்குரிய வழிமுறைகளைக் கொண்டு நிற்கின்றனர். ஆனால் சிலர் தாங்கள் எண்ணியவற்றைப் பெறுகின்றனர். சரீர ரீதியான போகங்களில் அதிருப்தி கொண்ட நிலையில் பலரும் தவறான வழியில் முயற்சி செய்து பூவுலகில் சொர்க்கத்தைத் தோற்றுவிக்க முயலுகின்றனர். ஆனால் சரியான வழிகாட்டி இல்லாத காரணத்தினால் அவர்கள் லட்சியத்தை அடைய முடிகிறதில்லை. நம் வாழ்விலுள்ள நிலைத்த மதிப்புகளைச் சீர்தூக்கி ஆராய்வதற்கு அனுமதியாத அளவு மக்கள் பெரும்பாலோரின் மனவிரிவு சுருங்கிக் கிடக்கிறது. உலகியல் பொருள்களிலிருந்து புலன்வழி இன்பங்களைப் பெறுவதில் அவர்களுக்குச் சிறந்த அனுபவம் உண்டு. ஆனால் உணர்ச்சிகள், மனம் ஆத்மா மற்றும் இவ்வண்டத்தில் அவற்றிற்குள்ளதும் ஆகிய மனிதத் தோற்றத்தின் நுண்ணிய உறுப்புக்களின் இயக்கத்தைக் குறித்து அவர்கள் அறிவது மேலெழுந்த வாரியாகவேதான். ''எங்கிருந்து வருகிறேன்? எங்கு செல்கிறேன்?'' என்ற கேள்விகள் யாவருக்கும் எப்பொழுதாவது ஒரு சமயம் எழுகின்றதென்றாலும், இதற்கான விடைகளைத் தெரிந்து கொள்வதற்குரிய வழிகளைச் சிலரே தெரிந்திருப்பதாகத் தெரிய வருகிறது. தகுதி வாய்ந்ததோர் நபர் அல்லது தகைமை பெற்றதோர் நூலைக் காணும் பாக்கியம் ஒருவருக்குக் கிடைத்தால், அவர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் பொதுரீதியில் அமைந்திருப்பதால் தவறான விளக்கங்களுக்கு இடம் தருகின்றன. எனவே உண்மையைத் தேடுவதற்குரிய இருளாகிய பாதையில் சொந்த முயற்சியையே நம்பியிருப்பவன் வீணாக சக்தியையும் நேரத்தையும் செலவு செய்ய வேண்டியிருக்கிறது.

இந்தக் குறைகள் தெய்வ நெறிக் கழகத்தின் சீரிய தொண்டுகளால் எளிதிலே நீங்கி விடுகின்றன. எல்லா வகையிலுமுள்ள ஆத்மீக அறிவால் உலகத்தை நிரப்புவதன் மூலம் ஸ்ரீ சுவாமி சிவானந்தர் எல்லா நாட்டிலும் உள்ள மக்கள் வாழ்க்கையின் லட்சியத்தைக் குறித்தும் அதற்கான பாதைகள் குறித்தும் தெரிந்து கொள்ள வழி வகுத் தருளியுள்ளார். வெறும் புத்தக அறிவு மட்டுமல்லாமல், நடைமுறையில் எங்ஙனம் நடந்து காட்டுவதென்பதையும் அவர் போதித்துள்ளார். கழகத்தின் சீரிய தலைவராக விளங்கும் மாபெரும் துறவி ஸ்ரீ சுவாமி சிவானந்தரின் தகுதி வாய்ந்த உதவியுடன் அவரது அற்புத ஆத்மீக சக்தி சாதகரின் முன்னேற்றத்திற்கு உத்திரவாத மளிக்கிறது. நவீன மனிதன் முறைப்படி சுருக்கமாகத் தயாரிக்கப் பட்டுள்ளவைகளால் பரிமாறப் படுகிறான். அதே போல் போதனைகளும் நடைமுறைகளுக் குகந்த முறையில் அமைந்திருப்பதனாலும் திட்டவட்டமான உருவத்தில் அமையும் போதனைகளாலும் பலரும் கழகத்தை நோக்கி ஈர்க்கப் படுகிறார்கள். பொதுமக்களுக்கு ஆத்மீக அறிவைப் பரப்புவதெனும் ஸ்தாபகத் தலைவரின் நோக்கத்தின் பிரகாரம் ஆத்மீக மறுமலர்ச்சி இயக்கத்தில் கழகம் ஒரு பெரும் அமைப்பாக ஆகியுள்ளது. மனிதன் தெய்வீக மனிதனாக வளர்ச்சி யடைவதற்குரிய காலம் வந்து விட்டதென்று ஸ்ரீ சுவாமி சிவானந்தர் பறை சாற்றியுள்ளார். இவ்வரிய சிகரத்தை அடைவதற்கான கருவிகளைக் கழகம் அனைவருக்கும் கொடுத்துதவுகின்றது.

# இலங்கையில் திவ்ய ஜீவன சங்கம்

இறைவன் திருவருளும் ஸ்ரீசற்குரு சிவானந்த மகரிஜிகளின் நல்லாசியும் மெய்யன்பர்களின் பேருதவியும் துணையாகக் கொண்டு இலங்கையில் திவ்ய ஜீவிய சங்கக் கிளைகள் பல தோன்றிப் பணியாற்றி வருகின்றன. அவனியில் புற இருளை நீக்க ஆதவன் கிழக்குத் திசையில் உதயமாகிறான். அதுபோல் இலங்கை மக்களின் அஞ்ஞான இருளை நீக்கி தெய்வீக ஒளியை வீச திவ்ய ஜீவன சங்கம் இலங்கையின் கீழ்த் திசையில் 1953ம் ஆண்டு உதித்த பெருமை திருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணமலைக்கே உரியது. திருக்கோணமலையில் முதன் முதலில் உதித்து பரந்த திசையெல்லாம் தி. ஜீ. சங்க கிளைகள் இன்று இலங்கையில் சிறந்த பணிகளை ஆற்றி வருகின்றன.

## சங்கங்களின் பொதுப் பணிகள்

### அந்தர் யோகம்

ஆத்மீகத்தாகங் கொண்டோருக்கு அந்தர் யோகசாதனைதினம் பெரிதும் பயன்படுகின்றது. இத்தினத்தின் சிறப்பைப்பற்றி அறிந்த அன்பர்கள் எங்கு அந்தர்யோகம் நடைபெறுகின்றதோ அங்கே தவருது சென்று தவப்பயனைப் பெறுகின்றனர். உலக விவகாரங்களில் நான் எனது என்னும் எண்ணங்களோடு சதாகாலமும் செயல் புரிந்து வருபவர்கள் அவ்வப்போது அம் முயற்சிகளிலிருந்து பூரணமாக விலகி, இரண்டொரு நாட்களுக்காவது இரவும் பகலும் இடையீடின்றி, மனதை உள்முகப்படுத்தி, தெய்வீக சிந்தனையிலேயே லயிக்கப் பழகுதல் வேண்டும். இதனுல் அவர்கள் மனம் தூய்மையும் திடமும் பெற்று வாழ்வை வளம்படுத்தும் இத்தகைய வாய்ப்பை அன்பர்களுக்கு அளிக்கும் நோக்கத்தோடு அந்தர் யோக சாதனை தினங்கள் அங்கங்கே ஒழுங்கு செய்யப்பட்டு நடைபெற்று வருகின்றன.

கண்டியில் சச்சிதானந்த தபோவனத்தில் வருடமொருமுறை கொழும்பு, நாவலப்பிட்டி திருக்கோணமலை; யாழ்ப்பாணம் முதலிய பல ஊர் அன்பர்களும் ஒன்று சேர்ந்து நான்கு அல்லது ஐந்து நாட்களுக்கு வெளி யுலக விவகாரங்களை மறந்து அந்தர்யோக சாதனையில் தனி யின்பங் காண்கின்றனர்.

## சர்வமத குருவழிபாடு

அஞ்ஞானத்தைப் போக்கி ஞானத்தை ஆக்குபவர் குரு. குருவின் ஆசியில்லாத வித்தை குறை வித்தை. எல்லா மதத்தவரும் தத்தம் குருவை வழிபட்டு ஆசிபெறும் பண்பாடு பண்டு தொட்டு இன்று வரை நிலவி வருகிறது. ஒவ்வொரு மதத்தவர்களும்தமது மத குருமாரைப் போற்றும் நன்னுள் ஒரே நாளாக அமைவதில்லை அமைந்தும் வராது; அன்றியும் ஓர் மதத்தவன் தனது மத மல்லாத பிறிதோர் மதத்துப் பெரியோர் பாராட்டுகின்ற பண்பும் மிக மிகக் குறைவே. சமய சரித்திரத்திலே புதிய திருப்பத்தை இலங்கைத் திவ்ய ஜீவன சங்கம் ஸ்ரீ யோகிராஜ் அவர்களது முயற்சியால் ஏற்படுத்தி யிருக்கின்றது. அதுதான் குரு பூர்ணிமா தினத்தை சர்வ மத குரு வழிபாடாகக் கொண்டாடும் முறையாகும்.

குருநாதனை வழிபடும் குருபூர்ணிமா தினம் ஆண்டு தோறும் ஆடி மாதம் பௌர்ணமியிற் கொண்டாடப் படுகிறது. இவ் விழாவை இலங்கையில் மட்டுமன்றி இந்தியாவிலும் பல இடங்களிற் கொண்டாடுகின்றனர். எனினும் இலங்கையிற் குரு பூர்ணிமா கொண்டாடுவதைப் புதுமுறையில் யோகிராஜ் அவர்கள் அமைத்துள்ளார்கள். எல்லா மதத் தலைவர்களும் விழாவில் பங்கு பற்றுவர். கிறிஸ்துவ மதத் தலைவர் யேசுநாதரின் அன்பினை எடுத்துரைப்பார். பௌத்த மதத் தலைவர் புத்த பகவானின் அஹிம்சையை விரித்துரைப்பார். இஸ்லாம் மதத் தலைவர் முகம்மது நபியின் சகோதர தத்துவத்தை விளக்கிக் கூறுவர். இந்து மதத் தலைவர் வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை தரும் ஞான வாழ்க்கையை எடுத்துரைப்பர். இவ் விதம் எம் மதத்தவரும் சம்மதமாகி ஒரே மேடையில் தத்தம் சிறந்த கருத்துக்களை எடுத்துரைக்கவும் மற்ற மதத்தவர்களின் கருத்துக்களை அறிந்து கொள்ளவும் சந்தர்ப்பத்தைக் கொடுத்து சர்வமத சமரசத்தை ஆக்கிய பெருமை யோகிராஜ் அவர்களுக்கே உரியது. சர்வமத சமரசத்தை உணர விழாக் கொண்டாடுவது இலங்கை மக்களுக்கே தனிப்பெருமை கிடைப்பதாகும்.

## சிவானந்த ஜெயந்தி

செப்டம்பர் 8-ந் திகதி உலகெலாங் கொண்டாடும் புனித நாள்; இமாசல ரிஷிகேச மகா மண்டலேஸ்வர ஸ்ரீலஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்கள் பூமியிலே அவதரித்த பொன்னுள். அந்நாளை அகில உலகத் திவ்ய ஜீவன சங்கக் கிளைகள் அனைத்தும் கொண்டாடுகின்றன. ஒவ்வோர் சங்கமும் யோகிராஜ் சச்சிதானந்தா அவர்களே முன்னின்று விழாவை நடத்தி வைக்க விரும்புகின்றனர். ஆனுல் ஒரே நாளில் பல வேறு இடத்தில் ஒருவர் எவ்வாறு விழாவை நடத்த முடியும்? அதனுல் செப்டெம்பர் மாதம் 8-ந் திகதியிலிருந்து அம்மாத இறுதிவரை சிவானந்த மகரிஷியின் பிறந்த தினம் ஒவ்வொரு சங்கங்களிலும் வெவ்வேறு திகதிகளில் கொண்டாடப் பட்டு வருகிறது.

மகரிஷி அவர்கள் தமது ஆசிச் செய்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைத் திவ்ய ஜீவன சங்க அன்பர்களுக்கு அனுப்புகிறார். அச் செய்தி அச்சிடப்பட்டுச் சங்கச் சார்பில் அனைவருக்கும் விநியோகிக்கப் படுகின்றது. அந்நாளில் குருமகராஜ் அவர்களின் சுக சேவைக்காகவும் வாழ்த்தி, விசேட பிரார்த்தனை செய்தும் மகராஜ் அவர்களின் அறிவுரைகளையும் சிறந்த பணிகளையும் பாராட்டிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் ஜெயந்தி விழாக் கொண்டாடப் படுகிறது.

## தோட்டப் பகுதிகளில்

தெய்வம் உண்டு என நம்பினாலும் தெய்வீக வாழ்க்கையை அறியாத பாமரர் பலர் வாழும் தோட்டப் பகுதி மக்களுக்கு சுவாமிகள் கண்கண்ட தெய்வமாக விளங்குகின்றார். அம் மக்களின் பக்தியும், பணிவும், நேரிற் கண்டு அனுபவிக்க வேண்டியதொன்றன்றிச் சொல்லி விளக்க வொண்ணாது 'மாமிசம் புசியோம் என்று பிரதிக்ஞை எடுத்து தூய உணவினை உண்ண ஆரம்பித்தோர் பலர். மதி கெடுக்கும் 'மதுவை அருந்தோம்' என்று பகிரங்கக் கூட்டங்களிற் சத்தியஞ் செய்து கொடுத்து விட்டுச் சற்குண சீலராய் வாழ்பவர் பலர். சண்டை சச்சர வொழிந்து சமாதான வாழ்வுக்கு வழிகாட்டுகிறார். அன்பர்கள் வேண்டும் போதெல்லாம் சென்று தம் அருளுரை கூறி, ஆசி புரிந்து அரும்பணி புரிகிறார். குருதேவரின் சேவை பற்றிப் பத்திரிகைச் செய்தி அவ்வப்போது எடுத்துரைக்கின்றது.

## விசேஷ தினங்கள்

புது வருடம், தைப் பொங்கல், நவராத்திரி, சிவராத்திரி, கந்தசஷ்டி, ஸ்ரீ ராமநவமி முதலிய விசேஷ தினங்களில் சங்கங்கள் தோறும், பஜனை விசேட பூசைகள் நடைபெறுகின்றன. அன்பர்கள் சுவாமி சிவானந்த மகரிஷிகளின் சிஷ்யர்களினதும், மற்றும் பெரியார்களினதும் அருளுரைகளைக் கேட்டு, ஆத்மீக ஒளியைப் பெறுகின்றனர்.

## இலவச வெளியீடுகள்

சுவாமி சிவானந்தா அவர்கள் அருளுரைகளில் முக்கிய பகுதிகள், சுவாமி சிவானந்தா அவர்கள் குரு பூர்ணிமா, ஜெயந்தி ஆகியவற்றிற்கு அனுப்பும் ஆசிச் செய்திகள் சுவாமி சச்சிதானந்தா அவர்களின் ஆசிச் செய்திகள், பிரார்த்தனைப் பாடல்கள், யோகப் பயிற்சிக் குறிப்புகள் என்பன அச்சிடப்பட்டு ஆங்கிலத்திலும் தமிழிலும் விநியோகஞ் செய்யப் படுகின்றன.

## கூட்டுப் பிரார்த்தனை

திவ்ய ஜீவன சங்கங்கள் ஆங்காங்கே வாரந்தோறும் கூட்டுப் பிரார்த்தனை நடத்தி வருகின்றன. இடையிடையே இல்லங்களிலும் பொது இடங்களிலும் அகண்ட நாம பஜனையும் நடத்தி வருகின்றன.

## வைத்தியம்

சங்கம் ஏழைகளுக்கு இலவச வைத்தியம் அளித்து நோயற்ற வாழ்வாகிய குறைவற்ற செல்வத்தைக் கொடுக்கிறது, இருஷிகேசத்திலிருந்து மருந்து வகைகளை வருவித்து வேண்டுவோருக்குக் கொடுத்து உதவி செய்கின்றது.

# தி. ஜீ. சங்கக் கிளைகளின் விசேஷ பணிகள்

## தி. ஜீ. ச. திருக்கோணமலைக் கிளை

1953ம் ஆண்டு இச்சங்கம் ஆரம்பமாகியது. இது சிறந்த பணியாற்ற ஆதிகாரணமாக இருந்து அதன் வளர்ச்சிக்காக அயராது உழைத்து வருபவர்கள் ஸ்ரீ சுவாமி சிவானந்த மாதாஜி அவர்களும், ஸ்ரீ சுவாமி யோகிராஜ் அவர்களுமாவர்.

8–11–53ல் திருகோணமலைத் தி. ஜீ. சங்கச் சார்பில் தபால், தந்தி இலாக்கா மந்தியாரிய் இருந்த திரு. சு. நடேசபிள்ளை அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் சிவானந்த தபோவனந்தைத் திறந்து வைத்தார்கள்.

தபோவனத்தில் இலவச நூல் நிலையம், இலவச வைத்தியசாலை என்பன விசேஷ ஆரம்ப பணிகளாய் அமைந்தன. ஆயுள் வேத இலவச வைத்தியத்தை வைத்திய கலா நிதி ஆ. சின்னத்துரை அவர்கள் மிகவும் ஆர்வத்துடன் செய்து வந்தார். ஹோமியோ பதி இலவச வைத்தியப் பணிக்கு டாக்டர் ஞானப்பிரகாசம் உதவி புரிந்தார். திரு. பொ. மயில்வாகனம் ஓவசியர் அவர்களின் பெரு முயற்சியால் வைத்தியசாலைக் கட்டிடம் ஒன்று கட்டப்பட்டு சுவாமி இராமதாஸ், அன்னை கிருஷ்ணுபாய், அவர்களாற் திறக்கப் பட்டு, ஆசீர்வதிக்கப் பட்டது.

கீதை வகுப்பு, ராஜ யோக வகுப்பு, ஆசன வகுப்பு, சத்சங்கம் என்பவற்றால் பல அன்பர்கள் பயன் பெறுவாராயினர்.

நெசவுத் தொழில், கைத்தொழில் என் பன காலத்திற்குக் காலம் நடைபெற்று பல ருக்குத் தொழில் காட்டியுள்ளது.

இன்று சிவானந்த தபோவனத்தில் முக் கியத்துவம் வகிப்பது அனாதைகளின் இல்லம். சிறு குழந்தை முதல் திக்கற்ற பிள்ளைகள் அனைவரையும் போஷித்து, கல்வி யூட்டி, ஆத்மீக நெறிமுறையில் வளர்ச்சி பெற ஆத ரவளிக்கிறது. சிறுவர்கள் தோட்ட வேலை, பசு வளர்த்தல், கைத்தொழில் முதலியவற் றில் பயிற்சி பெற வழிவகைகள் கையாளப் படுகின்றன. திருமுறைகள் ஓதியும், பஜனை செய்தும், ஈஸ்வர சேவை, ஜெபம், தியானம் செய்தும் அனுகூலம் அடைகின்றனர்.

தி. ஜீ. சங்கச் சார்பில் நடைபெறும் விசேஷ வைபவங்களுக்குத் திருகோணமலைப் பகுதிகளிலுள்ள திருவள்ளுவர் கழகம், அருள் நெறி மன்றம், விவேகானந்த சங்கம், விபு லானந்த கழகம், முருகன் தொண்டர் சபை, நடராஜ பஜனை கோஷ்டியினர், திரு அருட் பிரகாச வள்ளலார் சத்சங்கம், தட்சண கான சபை, சக்தி நிலையம், சிவயோக சமாஜம் என்பன தங்களால் இயன்ற உதவிகளைச் செய்து வருகின்றன.

தி. ஜீ. ச. சார்பில் அழைக்கப்படும் பெரி யோர்கள் நிலாவெளி, குச்சவெளி, தம்பல காமம், மூதூர் ஆகிய கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு அறிவுரை புகட்டி வருகின்றனர்.

சமய பாடம், பஜனை ஆகியவற்றில் திற மை காட்டும் மாணவர்களுக்கு ஆண்டு தோ றும் பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

எல்லாப் பணிகளும் சிறப்பாக நடப்ப தற்கு அயராது உழைத்து வருபவர்களில் திரு. பொ. கந்தையா ஆசிரியர் குடும்பமும் திரு. பொ. கணநாத பிள்ளை ஆசிரியர் அவர் களும் குறிப்பிடத் தக்கவர்கள். அவ்வக் காலத்து நகராண்மைக் கழகத் தலைவர்க ளாய் இருப்பவர்களும் திருமலைக்குநீதிபதியாக உள்ளவர்களும் பாராளுமன்ற அங்கத்தவர்க ளாய் இருப்பவர்களும் இந்துக் கல்லூரி முகா மைக்காரரும், அதிபரும் உதவியாசிரியர்களும் ஸ்ரீ சண்முக வித்தியாலய முகாமைக் கார ரும், அதிபரும், உதவி ஆசிரியர்கள் ஆகி யோரும் மற்றும் தனித்தனிப் பிரமுகர்களும் சங்கத்தின் வளர்ச்சிக்கு உதவி புரிந்து வரு கின்றனர்.

இந்தியாவிருந்து பல பெரியோர்கள் தி. ஜீ. சங்கச் சார்பில் அருளுரைகள் ஆற்றியுள் ளனர்.

## தி. ஜீ. ச. கொழும்புக் கிளை

இச் சங்கம் கொச்சிக்கடை அந்தோனி யா மாவத்தையிலுள்ள ஸ்ரீ தம்பையா சத் திரத்தில் 13–5–1956ம் ஆண்டு யோகிராஜ் தலைமையில் ஆரம்பமமாகிப் பணியாற்றுகின் றது.

1. வாரந்தோறும் புதன்கிழமை பி. ப. ஆறு மணி தொடக்கம் யோகாசனப் பயிற்சி வகு ப்பு நடத்தப் படுகின்றது.

2. அன்பர்களிடமிருந்து சமய நூல்களும், சஞ்சிகைகளும் சேகரித்து காங்கேசன்துறை கயரோக ஆஸ்பத்திரி, ஹெந்தலை தொழு நோய் ஆஸ்பத்திரி முதலியவற்றிலுள்ள நோ யாளிகளுக்கு விநியோகிக்கப் படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. வாரந்தோறும் புதன்கிழமை பிற்பகல் ஆறு மணிதொடக்கம் நடைபெறும் சத்சங்கத்தில் பஜனை, தியானம், லிகித ஜெபம், ஆத்மீக சொற்பொழிவுகள், ஆத்மீக நூல் வாசித்தல் என்பன நடைபெறுகின்றன.

4. உபதலைவர் ஸ்ரீ. A. சுப்பிரமணியம் அவர்களால் ஞான வேள்வி நடைபெற்று வருகின்றது. குருதேவருடைய நூல்களிலிருந்து முக்கியமான பகுதிகள் அச்சிட்டு இலவசமாக வழங்கப் படுகின்றன. இச் சங்கத்தின் வளர்ச்சிக்கு சேர் கந்தையா வைத்தியநாதன், திருமதி சிவானந்தம் தம்பையா, ஸ்ரீ. கே. பிஹரன், ஸ்ரீ. K. இராமச்சந்திரன், ஸ்ரீ. R. சிவஞானசோதி, ஸ்ரீ. எஸ். பாலசுப்பிரமணியம், ஸ்ரீ. அ. சுப்பிரமணியம், ஸ்ரீ. ப. வடிவேலு ஆகியவர்களும் இன்னும் பல அன்பர்களும் உழைத்து வருகின்றனர்.

தெய்வ நெறிபற்றி அருளாளர்களிற் பலர் கொழும்புக் கிளையால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டங்களில் சொற்பெருக்காற்றி யுள்ளார்கள். கொழும்புக் கிளையின் போஷகர் ஸ்ரீ சுவாமி சச்சிதானந்தஜி, திரு ஈங்கோய்மலை சிவானந்தா சாதனு நிலைய ஸ்தாபகர் ஸ்ரீ சுவாமி அத்வயானந்தஜி, ரிஷிகேசம் திவ்ய ஜீவன சங்க தலைமை நிலையத்தைச் சேர்ந்த ஸ்ரீ சுவாமி வெங்கடேசானந்த சரஸ்வதி, தென் இந்தியா திருநெல்வேலியைச் சேர்ந்த திரு. கி. வானமாமலை முதலியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

## சாம்பல் தீவு திவ்ய சேவா சங்கம்

20-7-59ல் இச் சங்கம் சுவாமி சச்சிதானந்த யோகிராஜ் அவர்கள் தலைமையில் ஆரம்பமாகிப் பணியாற்றி வருகின்றது.

மாங்கனும் மாரியம்மன் கோவில் மண்டபத்தில் வாரந்தோறும் ஞாயிற்றுக் கிழமை கூட்டுப் பிரார்த்தனையும் சமயபாட வகுப்பும் நடை பெறுகிறது.

வைத்திய கலாநிதி ஆ. சின்னத்துரை அவர்களால் சாம்பல்தீவு சிவானந்த வைத்திய சாலையில் தினந்தோறும் பி. ப. 3 மணிக்கு இலவச வைத்தியம் செய்யப் படுகின்றது.

சங்கம் மாதம் ஒருமுறை தம்மை அழைக்கும் இல்லங்களில் சென்று கூட்டுப் பிரார்த்தனை நடத்தியும் சங்கத்தின் இலட்சியத்தை எடுத்துரைத்தும் சற்குரு சிவானந்த மகரிஷியின் திருவுருவப் படங்களை ஸ்தாபித்தும் பணியாற்றியது.

வருடந்தோறும் கொண்டாடப்படும் குரு பூர்ணிமா தினத்தன்று மாரியம்மன் கோவிலில் அகண்ட நாம பஜனையும், விசேட பூசையும் அன்னதானமும் நடைபெறுகின்றன.

இச் சங்கத்தின் வளர்ச்சிக்கு டாக்டர் R. சின்னத்துரை, திரு. பொ. மயில்வாகனம், திரு. நா. தம்பிராசா, திரு. தம்பியையா அவர்களும் இன்னும் பல அன்பர்களும் உழைத்து வருகின்றனர். சமய பாட வகுப்பு நடப்பதற்கு ஸ்ரீமதி கற்பகம், செல்வி இராசலட்சுமி, செல்வி தனலட்சுமி, செல்வி இராஜேஸ்வரி ஆகியவர்கள் உதவி செய்கின்றனர்.

## தி. ஜீ. ச. பருத்தித்துறைக் கிளை

1960ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8ந் திகதி சுவாமி சிவானந்த மகரிஷி அவர்களின் தினத்தன்று இச் சங்கம் தொடங்கியது. பருத்தித்துறை நீதிபதி திரு. S. N. இராசதுரை அவர்கள் திறந்து வைத்தார்கள்.

ஒவ்வொரு ஏகாதசி தினத்தன்றும் விசேஷ கூட்டுப் பிரார்த்தனை நடாத்தப்படுகின்றது.

இச் சங்கத்தின் வளர்ச்சிக்கு சுவாமி சுப்பிரமணியானந்தா, ஸ்ரீ. P. கணபதிப்பிள்ளை, ஸ்ரீ. V. சுப்பிரமணியம், S. நாகலிங்கம், T. செல்வராசா, K நாகலிங்கம் முதலிய அன்பர்கள் உழைத்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தி. ஜீ. ச. இளங்கோ மன்றம் பம்பரப்பன

30–10–60ல் சுவாமி சச்சிதானந்த யோகிராஜ் அவர்களின் தலைமையில் ஆரம்பமாகியது. முன்னர் ஏழு வருடங்கள் சமயப்பணி ஆற்றிய இளங்கோ மன்றமே, தி. ஜீ. சங்கமாகிப் பல பணிகளைச் செய்து வருகின்றது.

பிரார்த்தனைகள் நடத்தியும் பெரியார்களைக் கொண்டு போதனை செய்வித்தும், சைவ ஆகம நெறியில் தோட்ட மக்களை வாழச் செய்கிறது. சமயப் பணி வளரவும், சுகாதாரம், கைத்தொழில் முதலியன முன்னேறவும் பெரும்பணி யாற்றுகிறது. நோயாளிகளுக்கு பிணிபோக்கிப் பணி செய்கிறது.

தமிழ்க் கலவன் வித்தியாசாலை ஒன்றையும், ஹோமியோபதி வைத்தியசாலை யொன்றையும் நடத்தி அனாதைக் குழந்தைகட்கு இலவசக் கல்வியும், ஆதரவற்றவர்களுக்கு இலவச வைத்தியமும் கொடுக்கப் படுகின்றன.

தெய்வத்தின் பெயரால் கோயில்களில் நடைபெறும், கோழி, ஆடுகளைப் பலியிடுதலை தடுத்து நிறுத்தி வருகின்றது.

ஒன்பது ஆண்டுகளாக பாடசாலை மாணவர்களுக்குக் கூட்டுப் பிரார்த்தனையும், சமய பாட வகுப்பும் நடத்தி வருகிறது. இச் சங்கத்தின் வளர்ச்சிக்கும் சிறப்பிற்கும் உதவி தந்து உறுதுணையாக நிற்பவர்கள் திரு M.K.V. நடராஜா, திரு V. S. கந்தையா, திரு பழ. வேலாயுதம் என்போர் ஆவர்.

## நனு ஓயாக் கிளை

31–5–57ல் இச் சங்கம் ஆரம்பிக்கப் பட்டது. சங்கப் பணிகள் காந்தி மண்டபத்தில் நடைபெறுகின்றன; வாரந்தோறும் கூட்டுப் பிரார்த்தனை நடை பெறுகின்றது. கதிர்காம யாத்திரிகர்கள் இங்கு தங்கிச்செல்வதற்கான வசதிகளைச் செய்வது குறிப்பிடத் தக்கது.

சலங்கண்டி, பூண்டுலோயா, நனுஓயா ஆகிய இடங்களிலுள்ள தி. ஜீ. சங்கங்களின் வளர்ச்சிக்குப் பணி புரிபவர்களில் ஸ்ரீ. நா. சி. சிவரத்தினம் அவர்கள் குறிப்பிடத் தக்கவர்.

## கலஹாக் கிளை

28–4–56ல் யோகிராஜ் சச்சிதானந்த சுவாமிகள் இச் சங்கத்தை ஆரம்பித்து வைத்தார்கள்.

வாரந்தோறும் வெள்ளிக் கிழமைகளில் கலகாவிலுள்ள அம்பாள் ஆலயத்தில் கூட்டுப் பிரார்த்தனை நடைபெறுகின்றது. அன்று கடைவீதிகளை விடுமுறை நாளாக்கி அன்பர்கள் பிரார்த்தனையில் கலந்து கொள்ளத்தக்க ஒழுங்குகளைத் தி. ஜீ. சங்கம் செய்து வந்தமை குறிப்பிடத் தக்கது.

இச் சங்கத்தின் வளர்ச்சிக்கு ஸ்ரீமான் ப. செல்லத்துரை ஸ்ரீ. கந்தசாமி, ஸ்ரீமான் நாராயணசாமி, ஸ்ரீ. முருகையா ஆகியோரும் மற்றும் பல அன்பர்களும் பணியாற்றி வருகின்றனர்.

அறுபத்து மூன்று நாயன்மார்களின் திவ்ய வாழ்க்கையைக் குழந்தைகள் அறிந்து பாராட்டிப் போற்றுவதுடன் வாரந்தோறும் இரண்டு நாயன்மார்களுக்கு விசேஷ பூசை நடத்துகின்றனர்.

இச் சங்கத்தின் வளர்ச்சிக்கு ஸ்ரீமான் சோமசுந்தரமும் முதலியார் ஸ்ரீ முத்துத்தம்பி அவர்களும் மற்றும் அன்பர்களும் பணியாற்றி வருகின்றனர்.

## தி. ஜீ. சலங்கண்டிக் கிளை

9–2–1958ல் ஸ்ரீ. J. K. M. கில்பேட்துரை அவர்கள் தலைமையில் யோகிராஜ் சச்சிதானந்த சுவாமிகள் ஆரம்பித்து வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் சங்கம் டிக்கோயா, ஹற்றன் ஆகிய இடங்களில், வாரந்தோறும் இல்லங்கள் தோறும் கூட்டுப் பிரார்த்தனை நடத்தியது. இன்றும் ஹற்றனில் புறக்டர் ஸ்ரீமான் பொ. விஜயரத்தினம் அவர்கள் இல்லத்தில் வாரந்தோறும் கூட்டுப் பிரார்த்தனை நடைபெற, திருமதி விஜயரத்தினம் அவர்கள் அதிக சிரத்தை எடுத்து வருவது குறிப்பிடத் தக்கது.

சலங்கண்டியில் திவ்ய ஜீவன சங்கத்தின் அங்கத்தவர்களும் மற்றும் அன்பர்களும் எடுத்துக் கொண்ட பெரும் முயற்சியால், சிவ சுப்ரமணிய ஆலயம் ஒன்று கட்டப்பட்டது. அங்கு சுவாமி சச்சிதானந்த யோகிராஜ் அவர்கள் கும்பாபிஷேகம் செய்து வைத்தார்கள். அன்று திரு. நா. முத்தையா ஆசிரியர் அவர்களும்; திருமதி. கி. பொன்னம்மா அவர்களும் பேச்சாளர்களாக இருந்தனர்.

சிவசுப்ரமணிய ஆலயத்தில் வாரந்தோறும் வெள்ளிக்கிழமையில் கூட்டும் பிரார்த்தனை நடைபெறுகின்றது. சங்கத்தின் ஆண்டு விழாவும் கொண்டாடப்பட்டு வருகிறது.

## தி. ஜீ. ச. பூண்டுலோயாக் கிளை

30—5—59ல் பூண்டுலோயா தி. ஜீ. சங்கக் கிளை சுவாமி சச்சிதானந்த யோகிராஜ் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது.

அன்பர்களின் பெரு முயற்கியால், பூண்டுலோயாவிலிருந்த முருகன் கோவில் புனருத்தாரணம் செய்யப்பட்டு, வாரந்தோறும் கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்று வருகின்றது,

## தி. ஜீ. ச. கட்டுவன் கிளை

20-3-1961ல் கட்டுவன் தண்ணீர் தாழ்வு ஞான வைரவர் ஆலயத்தில் சுவாமி சுப்பிரமணியானந்தா அவர்களின் தலைமையில் இச் சங்கம் ஆரம்பமாகியது.

ஒவ்வொரு சனிக்கிழமை தோறும் சங்க அங்கத்தவர்களினதும் ஏனைய அன்பர்களதும் இல்லங்களில் கூட்டுப் பிரார்த்தனை நடத்தப் படுகின்றது.

வெள்ளிக் கிழமை தோறும் கட்டுவனிலுள்ள கோயில்களில் ஒழுங்காகக் கூட்டுப் பிரார்த்தனை நடைபெற உதவி செய்கின்றனர். ஞாயிற்றுக்கிழமை தோறும் கூட்டுப் பிரார்த்தனை நடத்தப் படுகின்றது.

இங்குள்ள பாலர் ஞானோதய சங்க அங்கத்தவர்களதும் இந்து சமய விருத்தி அங்கத்தவர்களதும் ஒத்துழைப்புடன் ஆலயங்களில் நடக்கும் உற்சவ காலங்களில் விசேட பிரார்த்தனைகளும் பிரசங்கங்களும் நடாத்தப் படுகின்றன.

இச் சங்கத்தின் வளர்ச்சிக்காக சுவாமி ஸ்ரீலஸ்ரீ சி. கந்தையா, ஸ்ரீ செ. கோவிந்தசாமி, ஸ்ரீ க. பொன்னம்பலம், ஸ்ரீமதி சு. அழகம்மா, ஸ்ரீமதி கனகம்மா ஆகியவர்களுடன் மற்றும் அன்பர்களும் உழைத்து வருகின்றனர்.

## தி. ஜீ. ச. தொண்டைமானாறு கிளை

1961ம் ஆண்டு இச்சங்கம் ஆரம்பித்துப் பணியாற்றுகின்றது.

செல்வச் சந்நிதியின் ஆலயத்தில் கூட்டுப் பிரார்த்தனை நடைபெறுகிறது.

செல்வச் சந்நிதியின் உற்சவ காலத்தில் பல பெரியோர்களின் அறிவுரைகளைச் சேகரித்து செல்வச் சந்நிதி மலர் என்ற சஞ்சிகை வெளியிடப் பட்டது. வருடந்தோறும் இது போன்ற பணிகளைச்சங்கம்தொடர்ந்துசெய்யும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் சங்கத்தின் வளர்ச்சிக்கு ஸ்ரீ இ. சிவகுமாரன், ஸ்ரீ வி. வீ. சாமி ஆகியவர்களும் மற்றும் அன்பர்களும் உழைத்து வருகின்றனர்.

## தி. ஜீ. ச. இளங்கதிர் மன்றம் அத்தியடி, யாழ்ப்பாணம்

1962 ஆம் ஆண்டு சுவாமி சச்சிதானந்த யோகிராஜ் அவர்களின் தலைமையில் ஆரம்பித்து இச் சங்கம் பணியாற்றுகிறது.

வாரத்தில் வெள்ளிக் கிழமை தோறும் அத்தியடி விநாயகர் ஆலயத்தில் கூட்டுப் பிரார்த்தனையும், சமயபாட வகுப்பும் நடைபெறுகின்றது.

மாதத்தில் ஒருமுறை இளங்கதிர் மன்றக் குழந்தைகள் பேச்சு, ஆடல், பாடல், நாடகம் என்பன நடத்தி சமய அறிவை வளர்த்து வருகின்றனர்.

வருடப் பிறப்புப் போன்ற விசேஷ நாட்களில் காங்கேசன்துறை சீமேந்து தொழிற்சாலை, சுசரோக ஆஸ்பத்திரி ஆகிய இடங்களுக்குச் சென்று கூட்டுப் பிரார்த்தனை, சமய சம்பந்தமான பேச்சு, ஆடல், பாடல், முதலியவற்றை நடத்தி அன்பர்களை மகிழ்விக்கின்றனர்.

இச் சங்கத்தின் குழந்தைகள் ஆலயத்தைச் சுத்தஞ் செய்தல், நந்தவனம் அமைத்தல் முதலிய திருப்பணிகளைச் செய்து வருகின்றனர்.

## தி. ஜீ. ச. யாழ்ப்பாணக் கிளை

யாழ்ப்பாணம் திவ்விய ஜீவன சங்கக் கிளை 1960ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ம்திகதியன்று யோகிராஜ் ஸ்ரீ சுவாமி சச்சிதானந்தஜி அவர்களால் அங்குரார்ப்பணம்செய்து வைக்கப்பட்டது.

1. வாரந்தோறும் சனி, வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் நல்லூர், அத்தியடி, கந்தர் மடம் ஆகிய பகுதிகளில் கூட்டுப் பிரார்த்தனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மாதத்துக் கொருமுறை யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவிலுள்ள பெண்கள் தையற் பாடசாலையில் கூட்டுப் பிரார்த்தனை நடத்தப்பட்டு வருகிறது.

2. யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெரு பெண்கள் தையற் பாடசாலை, திருநெல்வேலி இளைஞர் இந்து மன்றம்,, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, கில்னர் கல்லூரி மண்டபம் ஆகிய இடங்களில் சுவாமி சச்சிதானந்தஜி அவர்களின் மேற்பார்வையின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட யோகாசன வகுப்புகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

தனிப்பட்ட முறையில் நோயாளிக்ளுச்கு ஸ்வாமிகளினுல் யோகசான சிகிச்சையும் அளிக்கப் பட்டு வருகிறது.

3. யோகிராஜ் ஸ்வாமி சச்சிதானந்தா அவர்களின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட யாழ்ப்பாண திவ்விய ஜீவன சங்க ஆச்சிரமக் கட்டிட வேலை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

4. நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழாவின்போது முன்னூற்றுக்கு மேற்பட்ட அன்பர்களுக்கு இலவச முதல் சிகிச்சை அளிக்கப்பட்டது'

5. யாழ்ப்பாணத்தில் பாடசாலைகள் உட்பட பல இடங்களில் யோகிராஜ் ஸ்வாமி சச்சிதானந்தஜியின் யோக, சமய சம்பந்தமான உபன்னியாசங்கள் யாழ்: திவ்விய ஜீவன சங்கத்தின் ஆதரவில் நடைபெற்று வருகின்றன.

6. கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார், ஈங்கோய்மலை ஸ்ரீ சுவாமி அத்வயானந்தஜீ, திருமலை ஸ்ரீ சிவானந்த சச்சிதானந்த மாதாஜீ தினமணி பத்திரிகை முன்னுள் ஆசிரியர் திரு கி. வானமாமலை ஆகியோரைக் கௌரவிக்கு முகமாக விசேஷ கூட்டங்கள் நடத்தப்பட்டன.

7. இலங்கை திவ்விய ஜீவன சங்கத் தலைமை ஆச்சிரமமாகிய தென்னக்கும்புரை சச்சிதானந்த தபோவனத்தில் நிகழ்கின்ற நிகழ்ச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகள் யாவற்றிலும் யாழ்ப்பாண திவ்விய ஜீவன சங்கக் கிளைப் பிரதிநிதிகள் தவறாது கலந்து கொள்கின்றனர்.

8. யாழ்ப்பாண திவ்விய ஜீவன சங்கக் கிளையின் வளர்ச்சிக்கு சுவாமி சுப்பிரமணியானந்தஜி, திரு. சி. தனபாலசிங்கம், திரு. எஸ். கனகரத்தினம், திரு. சாமுவேல் தம்பையா திருமதி என். இராசையா உட்படப் பல அன்பர்கள் உறுதுணையாக இருந்து வருகின்றனர்.

# தி. ஜீ. ச. கண்டிக்கிளை

1955ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 29ந் திகதி தன்னக்கும்பற பிள்ளையார் கோயில் மடாலயத்தில் சுவாமி சச்சிதானந்த யோகிராஜ் அவர்களால் இச் சங்கம் ஆரம்பிக்கப் பட்டது. சங்கத்தின் பணிகள் சிறப்பாக நடப்பதற்கும், யோகிராஜ் அவர்கள் இலங்கையின் மத்திய பகுதியில் தங்கி பல இடங்களுக்கும் சென்று பணியாற்றவும் ஏற்றதாக சச்சிதானந்த தபோவனம் ஸ்தாபிக்கப் பட்டது.

ஸ்ரீ சற்குரு சிவானந்த மகரிஷியின் உபதேசங்களைப் பின்பற்றி ஆன்ம நெறியில் இகம், பரம் இரண்டிலும் நல்வாழ்வு வாழ ஆண், பெண் அனைவருக்கும் ஜாதி, மத, நாடு, நிற, பாஷை, பதவி, வேற்றுமைகள் சிறிதுமின்றிப் பணியாற்றி வருகின்றது.

ஆசனம், பிராணுயாமம், பந்தம், முத்திரை, கிரியை, ஜபம், தியானம் ஆகிய யோகப் பயிற்சிகளைப் பல அன்பர்கள் பெறுகின்றனர். ஆசன வகுப்பு சனிக்கிழமை ஞாயிற்றுக்கிழமை புதன்கிழமைகளில் வாரந்தோறும் நடைபெறுகின்றது. நோயாளிகளுக்கு சச்சிதானந்த யோகிராஜ் அவர்கள் விசேஷ யோக சிகிச்சை அளித்து வருகின்ருர். அன்பர்கள் தபோவனத்தில் தங்கி யோகப் பயிற்சிகளைப் பெறுவதற்கான வசதிகள் செய்து கொடுக்கப் படுகின்றன.

ஆன்ம போதனைகளை புத்தகங்கள், பத்திரிகைகள், துண்டும் பிரசுரங்கள் மூலம் மக்களிடையே பரப்பி வருகிறது. கூட்டும் பிரார்த்தனைப் பாடல்கள் யோகப் பயிற்சி முறைகள் ஆகியன இச் சங்கச் சார்பில் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன.

வருடந்தோறும் மக்களை ஆத்ம சாதனையில் ஈடுபடுத்தும் அந்தர் யோகம் மூன்று நாட்களுக்குக் குறையாமல் நடைபெறுகின்றது. இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் அன்பர்கள் வந்து பங்குபற்றிப் பயனடைகின்றனர்.

சர்வ சமயங்களிலுமுள்ள புனித நாட்கள் தபோவனத்தில் கொண்டாடப் படுகின்றன. வருடந்தோறும் அகில இலங்கையிலுமுள்ள அன்பர்களுக்கு யோகப்பயிற்சி போட்டி நடாத்தி பரிசில்கள் வழங்கப்படுகின்றன. போட்டியில் திறமை காட்டுபவர்களுக்குப் பாராட்டுப் பத்திரங்கள் வழங்கப் படுகின்றன. சிங்கள அன்பர்களும் இஸ்லாம் அன்பர்களும், தமிழ் அன்பர்களும் யோகப் பயிற்சியில் பரிசு பெறுவது குறிப்பிடத்தக்கது.

யோகிராஜ் அவர்கள் இலங்கையின் மத்தியில் விளங்கும் கண்டி நகரில் இருந்தபோதும் எல்லாத் திவ்ய ஜீவன சங்கக் கிளையின் வளர்ச்சிக்காகவும் அவ்வப்போது அழைக்கும் சங்கங்களுக்குச் சென்று பணியாற்றி வருகின்ருர். மலைநாட்டு மக்கள் சுவாமிஜி அவர்களின் சேவையால் பெற்ற பயன் பெற்றுக் கொண்டு இருக்கும் பயன் அளப்பரியது.

தைப்பொங்கல், வருஷப் பிறப்பு, தீபாவளி போன்ற விசேஷ தினங்களில் பல அன்பர்கள் தபோவனத்திற்கு வந்து பிரார்த்தனை செய்தும் சற்குருவின் ஆசியைப் பெற்றும் மகிழ்ச்சி அடைகின்றனர்.

நோயாளிகளுக்கு இலவச வைத்தியம் செய்யப்படுவதுடன் சிவானந்த நகரிலிருந்த மருந்து வகைகள் வரவழைக்கப்பட்டு விற்கப் படுகின்றன.

இந்துப் பெண்களுக்கு இதுவரையில் இலங்கையில் ஒரு ஆசிரமமும் இல்லாதது பெருங் குறையாக இருந்தது. அக்குறை நிவர்த்தியாக இச் சங்கம் மாதர் இல்லம் ஒன்றை அமைக்கப் பெரு முயற்சி எடுத்து வருகின்றது. தற்காலிகமாகத் தபோவனத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களும் தங்கி சாதனை செய்வதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்து கொடுக்கப் பட்டிருக்கின்றன.

சங்கத்தின் பொறுப்பாளராகிய யோகிராஜ் அவர்கள் இலங்கையில் மாத்திரமல்ல சைனா, சிங்கப்பூர், மலாயா ஆகிய இடங்களுக்கும் சென்று ஆத்மீகப் பணிகளை ஆற்றி வருகிறார்.

இச் சங்கத்தின் வளர்ச்சிக்காகக் கண்டியிலுள்ளவர்கள் அன்பும் ஆதரவும் காட்டி வருகின்றனர்.

## யோகா சங்கம்: வெள்ளவத்தை

22-3-57ல் வெள்ளவத்தை பலநுண் தொழிற் பயிற்சி நிலையத்தில் யோகா சங்கம் திவ்ய ஜீவன சங்கத்தோடு இணைக்கப்பட்ட சங்கமாக ஸ்வாமி சச்சிதானந்த யோகிராஜ் அவர்களின் மேற்பார்வையின் கீழ் இயங்கி வருகின்றது. சங்கத்தின் தலைவராக திரு. டி. சி. ஆர். குணவர்த்தன பணியாற்றி வருகிறார். இச் சபையில் திரு. பேட்ராம் ஜெயதிலகா அவர்கள் காரியதரிசியாகக் கடமையாற்றுகிறார். சங்கத்தின் வளர்ச்சிக்கு உழைத்து வரும் அன்பர்களில் திருவாளர்கள் ஒஸ்மன் டி சில்வா, டிக்கர் முத்துக்கிருஷ்ணா ஆகியவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள்.

## சர்வ சமய சன்மார்க்க சக்தி நிலையம் கொட்டக்கலை

28-3-57 தொடக்கம் சர்வ சமய சன்மார்க்க சக்தி நிலையம் தி. ஜீ. சங்கப் பணிகளை ஆர்வத்துடன் ஆற்றி வருகிறது.

## தி. ஜீ. ச. சுன்னாகம் கிளை

1961ம் ஆண்டில் இச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. சுவாமி சச்சிதானந்த யோகிராஜ் அவர்களை அழைத்து யோகப் பயிற்சி வகுப்புகளை நடத்துவதை விசேஷ பணியாகக் கொண்டுள்ளது.

## தி. ஜீ. ச. பலாங்கொடை குறுப்

மற்றறீன் பகுதி, டெட்னகலா பகுதி, பின்னவலா பகுதி, பம்பஹலா பகுதி, சிசில்ரன் பகுதி, றம்லன்ட்றிக் பகுதி அபம்பகல பகுதி, ஆகிய இடங்களில் திவ்ய ஜீவன சங்கக் கிளைகள் பணியாற்றுகின்றன. தோட்ட மக்களுக்குக் கூட்டுப் பிரார்த்தனை நடத்தப்படுகிறது. சுவாமி சச்சிதானந்த யோகிராஜ் அவர்களை அழைத்து அங்குள்ள மக்களுக்கு அறிவுரைகளைப் புகட்டி சமாதானமாக.வும் சந்தோஷமாகவும் வாழ வழிகாட்டுகிறது

சங்கங்களின் தலைவர்களாக திரு. இரத்தினசிங்கம், திரு. நல்லையா, திரு. சிவராஜன், திரு. சிவப்பிரகாசம், திரு. சிவகுரு, திரு. இராசலிங்கம், திரு. இராமையா ஆகியவர்கள் பணியாற்றுகின்றனர். மற்றும் பல அன்பர்கள் சங்கத்தின் வளர்ச்சிக்காக உழைத்து வருகின்றனர்.

## யோகாசன வகுப்பு களுத்துறை

9-12-57ல் களுத்துறை பொலீஸ் பயிற்சிச் சாலையில் யோகாசன வகுப்பு சுவாமி சச்சிதானந்த யோகிராஜ் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. சுவாமிஜி அவர்களிடம் பல 'பொலீஸ்' அன்பர்கள் யோகப் பயிற்சி பெறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ மகாசபை குருநாகல்

சமயப் பணிகளை ஆர்வமுடன் செய்து வரும் சைவமகா சபை 1957 ல்இருந்து திவ்ய ஜீ. சங்கப் பணிகளை மிக ஊக்கமுடன் செய்து வருகின்றது. சங்கத்தின் வளர்ச்சிக் காக சைவமகாசபை அங்கத்தவர்களும் ஸ்ரீமதி தம்பிராசா ஸ்ரீமான் விசாகப் விசாகப் பெருமாள், ஸ்ரீமான் சச்சிதானந்தம் ஆகியவர்களும் உழைத்து வருகின்றனர்.

1956ல் மாத்தளை, 1960ல் தம்பலகாமம் நிலாவெளி, குச்சவெளி, பளை, சாவகச்சேரி 1961ல் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் ஆரம்பமாகிய தி. ஜீ. சங்கக் கிளைகள் ஆத்மீகப் பணிகளை ஊக்கமுடன் ஆற்றி வருகின்றன.

# இலங்கையில் நடைபெற்ற வெள்ளி விழா நிகழ்ச்சிகளின் விபரம்

**1960 ஏப்ரல் – 1960 மே வரை**

இமாலயம் இருஷிகேசம் ஸ்ரீலஸ்ரீ சுவாமி சிவானந்த மகரிஷி அவர்களால் ஸ்தாபிக்கப் பெற்ற திவ்ய ஜீவன சங்கத்தின் வெள்ளி விழாவை 1960 ஏப்ரல் மாதத்திலிருந்து ஈழநாட்டு அன்பர்கள் கொண்டாடினர்.

இலங்கையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள்

## 1. விசேஷ பிரார்த்தனை

1960 ஏப்ரல் 3ந் தேதி முதல் பிரதி ஞாயிறும் நடைபெற்றது.

மாலை
6.00 மணிக்கு தீபாராதனை காட்டல்
6.05 வரை – ஜெயகுரு சிவகுரு ஹரிகுருராம் ஜெகத்குரு பரங்குரு சத்குரு ஸ்யாம்

6.10 வரை – ஜெய கணேச ஜெய கணேச ஜெய கணேச பாஹிமாம் ஸ்ரீகணேச ஸ்ரீகாணச ஸ்ரீகணேச ரக்ஷமாம்

6.15 வரை – சரவணபவ சரவணபவ சரவணபவ பாஹிமாம் சுப்ரமண்ய சுப்ரமண்ய சுப்ரமண்ய ரக்ஷமாம்

6.20 வரை – ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய

6.25 வரை – ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே

6.30 வரை – ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி ஓம் ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்

6.35 வரை – ஓம்சாந்தி ஓம்சாந்தி ஓம்சாந்தி ஓம் ஓம்சாந்தி ஓம்சாந்தி ஓம்சாந்தி ஓம் ஓம்சாந்தி ஓம்சாந்தி ஓம்சாந்தி ஓம்

6.40 வரை – ஓம் த்ரியம்பகம் யஜாமஹே சுகந்திம் புஷ்டி வர்த்தனம் உர்வாருக மிவ பந்தனத் மிருத்தியோர் முக்ஷிய மாமிருதாத்

முடிவு ஜெயகோஷம் – ஜே! ஸ்ரீ சத்குரு மகாராஜுக்கு – ஜே! (எல்லாரும்)

6.40-7.00 வரை – சத் சம்பாஷணை – திவ்ய ஜீவன குருமகராஜ் சுவாமி சிவானந்தா

7.00 – தீபாராதனை: வாழ்த்து.

இவ் விசேஷ பிரார்த்தனையை ஆலயம், சங்கம், இல்லம், பாடசாலை ஆகிய இடங்களில் ஆங்காங்குள்ள திவ்ய ஜீவன சங்க அன்பர்கள் நடத்தி வந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. லிகித ஜெப யக்ஞம்

1960 ஏப்ரல் மாதத்திலிருந்து அன்பர்கள் தமது இஷ்ட தெய்வத்தின் நாமத்தைத் தினமும் எழுதினர். மந்திரம் எழுதிய கொப்பிகளைக் கண்டித் தபோவனத்திற்கு அனுப்பி வைத்தனர். மாதந்தோறும் எழுதப்பட்ட மந்திரங்களின் தொகை விபரம் ஆத்மஜோதியில் வெளியிடப்பட்டது. இதுவரை எழுதிய லிகித ஜெபத்தின் தொகை 3 கோடி

பின்வரும் ஊர்களிலிருந்த அன்பர்கள் லிகித செபத்தில் பங்குபற்றினர்.

திருக்கோணமலை, பருத்தித்துறை, வெள்ளவத்தை, கட்டுவன், திமிலைத்தீவு, சென்ஜோட்ஜ் தோட்டம், மதுகெதறத் தோட்டம், மத்துகம. பாந்திய தோட்டம், கல்வயல், நாகெனித் தோட்டம், நல்லூர், மத்துகம பட்டினம், இயக்கச்சி, கந்தர்மடம், பென்ரேஸ் கலபொட, ஆனைக்கோட்டை, உடுப்பிட்டி, பதுளை ஊரெழு, ஆலம்பட்டி, நாவலப்பிட்டி, கல்மடு, மிருசுவில், உசன், சாம்பல் தீவு, டம்பாறைத் தோட்டம், கெந்தக்கடுவு, கார்த்திகை, கீக்கிஞகந்த, அடப்பத்துறை, பள்ளக்கொடை, சண்டிலிப்பாய், கங்கரனோயா சச்சிதானந்த தபோவனம், திருக்கோணமலை, மானிப்பாய், மூதூர் ஓமாங்கந்தைத் தோட்டம், கலேவத்த தோட்டம், யட்டதொள தோட்டம், டம்பாறைத் தோட்டம், இலம்பந்துறைப் பட்டினம் டெனிஸ்ரன் தோட்டம், மதுரை, லேன்ட்ஸ் டவுண் தோட்டம், கண்டி, கொக்குவில், கற்றன், இலம்பந்துற தோட்டம், ஸ்ரீ கந்துற தோட்டம், பல்வில, கெலன்டா, புலோலி, முள்ளியவளை, காங்கேசன்துறை, மஸ்கேலியா, உடுவில்

1960 மே மாதம் கண்டி சச்சிதானந்த தபோவனம் சத்சங்க பவனத்தில் இருபத்தைந்து மணித்தியாலங்கள் அகண்ட நாம பஜனை நடைபெற்றது.

11–5–60 புதன்கிழமை கண்டி தபோவனம் சத்சங்க பவனத்தில் சுவாமி சச்சிதானந்த யோகிராஜ் அவர்களின் தலைமையின் கீழ், வெள்ளி விழா சபையொன்று ஸ்தாபிக்கப் பட்டது. அச்சபை அகில இலங்கை வெள்ளி விழா நிகழ்ச்சிகளை நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்டது.

## 3. அருளுரை விநியோகம்

சுவாமி சிவானந்தர் பொன்மொழிகளைத் தபாலட்டையில் வரைந்து அன்பர்களுக்கு அனுப்பினர். ஒவ்வொரு அன்பர்களும் மாதமொன்றுக்குப் பத்துக்குக் குறையாமல் அனுப்பியதோடு ஒரு பிரதி கண்டித் தபோவனத்திற்கும் அனுப்பினர். பொன் மொழிகளை எழுதி, அவை இருக்கும் புத்தகமும், பக்கமும் குறிப்பிடப் பட்டது. அனுப்பப்பட்ட பொன் மொழிகளின் சில மாதிரி கீழே தரப்படுகின்றன.

ஓம்

ஸ்ரீ சண்முக வித்தியாலய
விடுதி,
திருக்கோணமலை,
23-5-60

1. தன்னைச் சீர்ப்படுத்துங்கள். சமூகம் தானுகவே சீர்ப்படும்.
2. வாழ்வில் நாடுவதற்குரிய பொருள் கடவுள் ஒன்றே.
3. ஒழுக்கம் ஒருநாளில் வளர்க்கப்படுவதில்லை
4. உங்களிடம் உயரிய ஒழுக்கத்தை வளருங்கள். உங்கள் வாழ்வை நன்கு அமைக்க உங்களால் முடியும்.
5. அன்பு, அறிவு, ஆனந்தம் இம் மூன்றினுடையவும் தோற்றமே கடவுள்
6. எல்லோரிடத்திலும் அன்பு பூண்டு நில்லுங்கள். அனைவரையும் போற்றுங்கள்.
7. கடவுளே சத்தியம்; சத்தியமே கடவுள்.
8. நல்லவனுக இரு, நல்லதையே செய், இது தெய்வீக வாழ்க்கை.
9. அஹிம்சை, சத்தியம், பிரமச்சரியம் என்னும் மூவிரதங்களையும் போற்றுங்கள்.

மேலேயுள்ள நன்மொழிகளை நீங்களும் பத்து அன்பர்களுக்கு எழுதி அனுப்பி இறைவன் பணியில் இன்புறுக!

சி. இரர்ஸ்,

நன்மொழி நானூறு 1–9
ஆங்கிலத்தில். மொழிபெயர்ப்பு

சுவாமி சிவானந்தர். கி. வானமாமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

சாம்பல் தீவு
25-5-60.

1. தியானம் இருதயத்தில் பிரகாசத்தை ஏற்படுத்துகிறது.

2. அமர பதவியை அடைவதே வாழ்க்கையின் நோக்கம்.

3. தெய்வீகத் தனி மொழியில் உங்களைப் பயிற்றுவியுங்கள். மௌனமே தெய்வீகப் பாஷை.

4. ஆண்டவனின் திருநாமமே சர்வ ரோக நிவாரணி.

5. பகவானின் திருநாமத்தை விடச் சிறந்தது கிடையாது,

6. நாவை அடக்கி விட்டால் புலன்களை அடக்கினவர்களாவீர்கள்.

7. உண்மை அன்பே உலகின் மிகப் பெரும் சக்தி.

8. ஒருபொழுதும் சும்மா இராதீர்கள்.

9. வாழ்க்கையின் இலட்சியத்தை அடைவதற்கான உபாயமே மதம்.

மேலேயுள்ள மொழிகளை நீரும் 10 அன்பர்களுக்கு எழுதி அனுப்பி இறைவன் பணியில் இன்புறுக.

ம. அன்னம்மா

நன்மொழி நானூறு
ஆங்கிலத்தில் — சுவாமி சிவானந்தர்
மொழிபெயர்ப்பு — கி. வானமாமலை

ஓம்

வீச்சுக்காரத் தெரு
திருமலை,
30-5-60.

1. சோதனைகளைப் பொறுமையுடன் சகித்துக் கொள்ளுங்கள்.

2. பெற்றோரின் புத்திமதிகளை மதியுங்கள்.

3. வாழ்க்கைப் போராட்டங்களில் தைரியமுடன் ஈடுபட்டுப் போரிடுங்கள்.

4. நன்னயத்துடன் மரியாதையைப் போற்றுங்கள். நன்னடத்தையைக் கொள்ளுங்கள்.

5. மற்றவரின் கீர்த்தியைக் கெடுக்கத் துணியாதீர்கள்.

6. ஒருபொழுதும் பிறரை ஏமாற்ற முனையாதீர்கள்.

7. சிநேகிதர்களைப் பெருக்காதீர்கள்.

8. தீய எண்ணங்களிலிருந்தும் உங்கள் மனதை அகற்றி நில்லுங்கள்.

9. எந்நிலையிலும் பொய்யுரை கூறுதீர்கள்.

மேலேயுள்ள நன்மொழிகளை நீங்களும் பத்து அன்பர்களுக்கு எழுதிஅனுப்பி இறைவன் பணியில் இன்புறுக.

இராஜம்.து.

நன்மொழி நானூறு 78-86
ஆங்கிலத்தில் — சுவாமி சிவானந்தர்
மொழிபெயர்ப்பு — கி. வானமாமலை

## 4. அந்தர் யோகங்கள்

நடத்தப்பட்டன.

கண்டி சச்சிதானந்த தபோவனம், கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமம், குச்சவெளி செம்பீஸ்வர ஆலயம், யாழ்ப்பாணம், கீரிமலை முதலிய இடங்களில் அந்தர் யோகம் நடாத்தப்பட்டது.

## திவ்ய ஜீவன சங்கங்கள்

பின்வரும் இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டன.

தம்பலகாமம், நிலாவெளி, குச்சவெளி, சாவகச்சேரி, பளை, பருத்தித்துறை; கட்டுவன் தொண்டமனாறு, சுன்னாகம் ஆகிய இடங்களில் திவ்ய ஜீவன சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன.

யோகிராஜ் அவர்கள் தலைமையில் கீழ்க்கண்ட பல்வேறு இடங்களில் வெள்ளி விழா கொண்டாடப் பட்டது.

கண்டி சச்சிதானந்த தபோவனம், நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி மண்டபம், சாமபல் தீவு தி. ஜீ. சேவா சங்கம், உப்புவெளி சிவானந்த தபோவனம் ஸ்ரீ சண்முக மாணவர் இல்லம், நிலாவெளிப் பிள்ளையார் கோவுல்,இந்துக்கல்லூரி, தம்பலகாமம்திருக்கோண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயகர் கோவில், தம்பலகமம் புதுக் குடியிருப்பு அரசினர் பாடசாலை, ஸ்ரீ சாரதா வித்தியாலயம், அரசினர் சிரேஷ்ட பாடசாலை, திருகோணமலை சிவயோக சமாசம், கோணேஸ்வர வித்தியாலயம், ஸ்ரீ சண்முக வித்தியாலயம். திருக்கோணேஸ்வராலயம், குச்சவெளி சித்தி விநாயகர் ஆலயம், சாவகச்சேரி தெய்வீக வாழ்க்கைச் சங்கம், சரசாலை கி. மு. சங்கம், க. சே. சங்கம், கிளிநொச்சிப் பகுதியில் கந்தசாமி கோவில், மகாதேவ ஆச்ரமம், உருத்திரபுரம் பிள்ளையார் கோவில், பரந்தன் சைவ வித்தியாலயம், தருமபுரம், காந்தி நிலையம், வன்னேரிக் குளம், கிருஷிக பாடசாலை, முருகன் ஆலயம், நந்தவனப் பிள்ளையார் கோவில், சமய சேவை ஊழியர் வகுப்பு, கனகபுரம் குழு வாழ்க்கைப் பண்ணை கட்டுவன் ஞானோதய வித்தியாசாலை, பழை பழனி ஆண்டவர் ஆச்சிரமம், வயாவிளான் மானம்பிராயப் பிள்ளையார் கோவில், பருத்தித்துறை சித்தி விநாயகர் பாடசாலை, யாழ்ப்பாண மாநகர சபை மண்டபம்.

## மனதைத் தட்டிக் கொடுத்து உன் வழிக்குக் கொண்டு வா.

சோதனையைக் கண்டு நெஞ்சம் கலங்காதே. உன்னுடைய ஆத்மீகச் சாதனையில் கவனமாக இரு. நல்லது இது, கெட்டது இது என்று பாகுபடுத்தப் பழகு. ஞானிகளுடன் பழகி நிலையான உண்மையான வைராக்கியத்தைப் பெறு.

விஷயங்களின் நிலையற்ற தன்மையையும், இந்திரியங்களினல் ஏற்படும் கெடுதல்களையும், உன்னுடைய மனதிற்கு எடுத்துக் காட்டு. மனத்துடன் பரிவாகப் பேசி, பின் அதை உன் வழிக்குக் கொண்டு வா. அப்பொழுது அது உன் வார்த்தைகளுக்குச் செவி சாய்க்கும். மெதுவாக மனதின் சஞ்சலம் அடங்கி விடும். பிறகு மனம் உறுதியாய் இறைவனிடம் நிற்கும்

நீ ஒரு யோகியாகி விடு. எல்லாக் கஷ்டங்களையும் துக்கங்களையும் இது நீக்கி விடும். யோகத்தைப் பயில்வாய்.

## மனதை ஒழுங்கு படுத்து

மனதில் சங்கல்பங்களை ஒழி. பாகு படுத்தும் அறிவு, விசாரம், வைராக்கியம், ஆத்மா பற்றிய தியானம் இவற்றின் மூலம் மனதை நன்ருகப் பாகுபடுத்து.

வாழ்க்கையில் பரந்த நோக்கம் கொள். எல்லாவற்றிலும், எல்லா ஜீவன்களிடத்திலும் இறைவனைக் காண். பொய்யானவற்றை யெல்லாம் விட்டு விடு. உருக்கமான பிரார்த்தனை செய். நல் வாழ்க்கையை நடத்தி சந்தோஷத்தை அடை.

உன் வருத்தங்கள், பயங்கள், கவலைகள் இவற்றை விட்டொழித்து வேதத்தில் கூறியுள்ளபடி நட. நீ பரம சாந்தியையும் என்றும் சாசுவதமாகவுள்ள பரமானந்தத்தையும் அடைவாய்.

— சிவானந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலையில் - அகில இலங்கைத் திவ்ய ஜீவன சங்க வெள்ளி விழாவில்

## i ஆனந்தமான காட்சி

அன்றுமை தைத் திங்கள் வெள்ளிக் கிழமை பத்தொன்பதாந் திகதி; திரிகோணமலை, சிவானந்த தபோவனத்தில் கலைக் கோவில் மண்டபம் நிறைந்து காணப்பட்டது. பக்தர்கள் செய்த பஜனையின் ஓசை கேட்போரைப் பரவசப் படுத்தியது. மங்கள வாத்தியங்கள் ஒலித்தன. மக்கள் மனதில் மகிழ்ச்சி பொங்கியது. தி. ஜீ. ச. தொண்டர்களிடம் உற்சாகம் கரை புரண்டோடியது. ஒருவர் அடிக்கடி மணிக்கூட்டை நோக்கினுர். அவர்தான், அங்கு நடக்கும் நிகழ்ச்சியின் பொறுப்பாளியென்பது சொல்லாமலே விளங்கிற்று. மணிக்கம்பி நாலைத் தொட்டது. 'நமப் பார்பதி பதயே' என்ற குரல் வானைத் தொட்டது. அதனைத் தொடர்ந்து 'அரஹர மஹாதேவா' என்ற ஓசை ஒருகணம், நாற்றிசையும் பரந்து ஓய்ந்தது. மறுகணம் நிசப்தம், எல்லோர் கண்களும் மேடையை நோக்கின; அங்கே எழுந்தருளியிருந்த சுவாமி சிவானந்த மகரிஷியை நோக்கின. ஆம் எல்லா அடியார்களினதும், அன்புக் குரல் அவரை அங்கு அழைத்தால் அவர் வராதிருக்க முடியுமா? பக்தியற்றவர்களுக்குச் சுவாமிஜீயின் தோற்றம் படமாகத் தெரிந்திருக்கும். ஆனுல் பக்தர்கள், தமது சற்குருவையே அங்கு கண்டனர்.

சுவாமிஜி சச்சிதானந்த யோகிராஜ் தமது சற்குருவிற்குத் தீபாராதனை காட்டினர். எங்கும் ஜோதி மயம், எல்லோர் உள்ளத்திலும் சோதியின் தோற்றம் எல்லோர் வாயிலும் சோதிப் பாடல். சுவாமி சுப்பிரமணியானந்தா குரு ஸ்தோத்திரம் சொன்னுர். அவரைத் தொடர்ந்து எல்லோரும் ஸ்தோத்தரித்தனர். ஊர்வலம் ஆரம்பமாகியது. சற்குரு எழுந்தருளிய சப்பறத்தின் அழகு கண் கொள்ளாக் காட்சி; மெல்லிய மஞ்சள் நிறத் தோரணங்கள், ஆனந்தக் களிப்புடன் அசைந்தன; பல நிற மலர்கள் ஆண்டவன் முன் பேதமற்று அன்பு செலுத்தி மகிழும் அன்பர்கள் உளம் போல ஒன்று சேர்ந்து பின்னிப் பிணைந்து மாலையாகத் தொங்கின. பூங்கொத்துகள் குருமகராஜ் திருப்பாதத்திற் குவிந்து 'நாம் உமது கொத்தடிமை' என்று கூறின. தோன்றி மறையும் வாழ்க்கையை மின்னி மறையும் மின்சார வெளிச்சம் கண் சிமிட்டிக் காட்டியது. "எங்கெங்கு எது நடந்தாலும் சாந்தியுடன் வாழ்க! இன்ப துன்பச் சுழல்சுளுக்குட்பட்டு மனச் சலனம் ஏற்படாது சாந்தியுடன் வாழ்க' என்று தன் அருள் முகப் பொலிவால் உபதேசித்துக் கொண்டே சுவாமி சிவானந்த மகரிஷி அன்ன வாகனத்தில் எழுந்தருளியிருந்தார். குருமகராஜின் திருப்பாத நிழலிலே, யோகிராஜ் சச்சிதானந்த சுவாமி; ஸ்ரீமத் சுப்பிரமணியானந்த சுவாமிகள், ஸ்ரீமத் ஞானனந்த சுவாமிகள், ஸ்ரீமத் வடிவேற் சுவாமிகள் ஆகியோர் அன்பின் உருவங்களாய், தியாகத்தின் சின்னங்களாய், சேவையின் இருப்பிடங்களாய், அமர்ந்திருந்தனர். சற்குருவும், சீடர்களும் அமர்ந்திருக்கும்போது தன் அகங்காரத்தைக் காட்ட முடியாத நிலையோ, பெரியோர்களுக்கு அடிமைப் பட்டால் பணிந்து நடக்க வேண்டிய பண்பா? துறவிகளைத் தாங்கி நிற்கும் பெருமையோ? தனது அலங்காரச் சிந்தனையில் ஒய்யாரப் பவனியோ தெரியவில்லை; மிக வேகமாய்ப் பறந்து செல்லும் அந்த மோட்டோர் ரதம் மெதுவாகப் பவனி வந்தது.

திருகோணமலையிலுள்ள பஜனைக் கோஷ்டிகள் முன்னே பாடிச் சென்றன. வீதியின் இருமருங்கும் அணிவகுத்துச் சென்ற பாலர்கள் உபதேச மொழிகள் பொறித்த அட்டைகளைத் தூக்கிச் சென்றனர். 'அன்பு செய், சேவை செய், தியானம் பயில், அனுபூதியடை இத்தகைய எத்தனையோ பொன் மொழிகளைத் தூக்கிச் சென்றனர். சாம்பல்த் தீவுத் திவ்ய ஜீவன சங்கக் குழந்தைகள், கின்னஞ்சிறு காலால் அன்று தமது கிராமத்திலிருந்து சுமார் ஐந்து மைல் நடந்து வந்து திரிகோணமலை ஊர்வலத்திலும் மிக உற்சாகத்தோடும் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

மங்கள வாத்தியங்களின் இன்னிசையும் பக்திப் பாடல்களின் ஓசையும் வீதியருகே குடியிருந்த மக்களை உள்ளே யிருக்க விடவில்லை: வெளியே அழைத்தன. அனைவரும் ஆர்வமுடன் வந்து ஊர்வலத்தைப் பாரித்துச் சென்றனர் என்று மாத்திரம் கூறிவிட முடியாது. சற்குருவின் நல்லாசியைப் பெற்றுச் சென்றனர் என்றே கூற வேண்டும்.

பிரமாண்டமான பவனி சுமார் ஆறுமணியளவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சங்சுத்தைச் சேர்ந்த இந்துக் கல்லூரி மண்டபத்தை அடைந்தது. மக்கள் கூட்டம் ஆர்வமுடன் வழிமேல் விழிவைத்து நின்றது. ஸ்ரீ சற்குரு சிவானந்தர் திருஞானசம்பந்த மண்டபத்திலே அலங்கரிக்கப்பட்ட மேடைமீது எழுந்தருளினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று மகாநாட்டின் முதல் விழா; எல்லாரும் பெருவிருந்து. முத்தமிழ் மணி, புலவர் மணி எஸ். எஸ். மணிபாகவதர் அவர்களின் இன்னிசையுடன் சேர்ந்த கதாப் பிரசங்கத்தை அள்ளி உண்டு மாந்தினர். தெய்வீக வாழ்க்கைச் சங்க வெள்ளி விழாவிலே 'தெய்வநீதி' என்ற விடயம் பேசப்பட்டது. சற்குரு சுவாமி சிவானந்தாவின் ஆசியைப் பெற்றவரும், கதாப்பிரசங்கங்களால் மக்கள் கருத்தைக் கவர்ந்து, சமய போதனைகளைச் செய்பவருமாகிய முத்தமிழ் மணிபாகவதர் அவர்களுக்கும்; அன்று வெள்ளி விழா; அவர் தம் கதாப் பிரசங்கத்தை ஆரம்பித்து இருபத்தைந்து வருடங்கள் நிறைவுற்றிருந்தது. ஒரு வெள்ளி விழா வைபவத்திலே பங்கு பற்ற பாகவதர் அவர்களின் வெள்ளி விழாவையும், தி. ஜீ. சங்கம் பாராட்டி, பொன்னுடை போர்த்திக் கௌரவித்தது. விழாவுக்குத் தலைமை வகித்த யோகிராஜ் ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் பிரம்மஸ்ரீ மணிபாகவதருக்கு, ஸ்ரீ குருதேவரது ஆசியோடு 'பிரசார ப்ரவீன' என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார். இரு சமயப் பணியும் இன்னும் பல்லாண்டு வாழ்க!

## ii வெள்ளி விழாவில் அற்புதமான யாகம்

காலை நேரம். மணிக்கம்பி ஏழு மணியை எட்டிப் பிடிக்கப் பத்து நிமிஷந்தான் இருந்தன. ஏழு மணி ஆகப் போகிறதே என்றார் சுவாமி சுப்பிரமணியானந்தா. அர்ச்சனைக்குரிய ஆயத்தங்கள் ஆகியிருக்குமோ? என்றார் சுவாமி சச்சிதானந்தா. இதோ அங்கு சென்று பார்த்து வருகிறோம் என்றனர் இரு சகோதரிகள். உடனே இருவரும் புறப்பட்டு, ஐந்தே நிமிஷத்தில் இந்துக் கல்லூரியை அடைந்தார்கள். அங்கு அனைத்தும் ஆயத்தமாகி இருப்பதைக் கண்டார்கள். அச் செய்திகளைச் சுவாமிகளுக்குத் தெரிவித்தனர். சுவாமிகளும் கல்லூரியை அடைந்தார்கள்,

மணி ஏழாயிற்று; சுவாமி சுப்பிரமணியானந்தா அவர்கள் அர்ச்சனையை ஆரம்பித்தார்கள். ஓம் நம சிவாய என்ற மந்திர ஓசை மண்டபத்தினை நிறைக்கத் தொடங்கியது. இருபத்தைந்து வருடங்கள் நிறைவுற்றதனால் கொண்டாடப் படும் வெள்ளி விழாவல்லவா? இருபத்தைந்து பூரண கும்பங்கள் இரு வரிசையாகப் பொலிந்தன. அவற்றின் ஒரு மருங்கில் குத்து விளக்குகள் பிரகாசித்தன' மறுபக்கத்தில் மலர்த் தட்டுகள் நிறைந்திருந்தன. அவற்றின் முன்பிருந்த அன்பர்கள் ஸ்ரீ பஞ்சாட்சரத்தை ஓதிக் கொண்டே பக்தி சிரத்தையோடு அர்ச்சனை செய்தனர். ஒரு அன்பர் கண்ணும் கருத்துமாக விளக்குகளுக்கு எண்ணெய் ஊற்றிக் கொண்டே இருந்தார். ஆம்; எமது ஆத்மீக தீபம் இடையறாது பிரகாசிக்க வேண்டுமெனில் பக்தி சிரத்தையோடு சாதனையிற் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும், என்பதை அங்கே உணரக் கூடியதாயிற்று.

ஓரிடத்தின் நடுவிலே பச்சிலைகள் குவிந்திருந்தன. அவற்றைச் சுற்றிவர மங்கையர் இருந்தனர். வில்வம் துளசி ஆகியவற்றைத் தனித்தனி இலைகளாக்கிக் கொண்டிருந்தனர். அவ்வடியார் கூட்டம் 'ஓம் நமசிவாய' என்று ஒதிக் கொண்டே காரியம் செய்தனர். ஒரு இளைஞனின் கண்கள் மலர்த் தட்டுக்களிலேயே பதிந்திருந்தன. மலரும் வில்வமும் குறைந்து போகாவண்ணம் ஆங்காங்கே அள்ளி நிறைத்துக்கொண்டே இருந்தான். மணி பத்தாயிற்று. அங்கு குவிக்கப்பட்டிருந்த வில்வத்திற் பெரும் பகுதி அர்ச்சிக்கப்பட்டு விட்டது. மிகக் குறைவாகவே வில்வம் இருந்தது. இந்த வில்வம் இன்னும் இரு மணித்தியாலங்களுக்குப் போதுமா என்று கேட்டது. அவ்வளவுதான்; அரைமணி நேரத்தில் வேண்டிய வில்வத்தை அங்கே கொண்டு வந்து குவித்து விட்டனர் இரு சகோதரிகள். அங்கு பணியாற்றிய எல்லோரும் தெய்வீக சக்தியால் ஆட்டப் பட்டனர் என்றுதான் சொல்ல வேண்டும்.

பெண்களும், ஆண்களும், சிறுவர், சிறுமியரும், மிக ஆர்வமுடன் அர்ச்சனையிற் கலந்து கொண்டனர். மணி பன்னிரண்டாயிற்று. அர்ச்சனையை நிறுத்த விருப்பமின்றி அன்பர்கள் நிறுத்தினர். விரும்பினும், விரும்பாவிடினும் காலத்திற்கு அமைந்து காரியம் நடத்துவதுதானே தெய்வீக வாழ்க்கை.

அடுத்து அங்கே யாகம் ஆரம்பமாயிற்று. சமித்துகள் அடுக்கப்பட்டன, நெய்யும், பிறவும் ஊற்றப்பட்டன. சோதி ரூபமாகிய அக்கினி பகவானை ஆத்ம ஜோதி ஆசிரியர் அன்புடன் அழைத்தார். அக்கினி பகவானும் ஆனந்தம் பொங்க ஓங்கி ஒளிதந்து வந்தான். ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்கள் இனிக்குந் தமிழ் மொழியிலே அக்கினி தேவனைப்போற்றி வழிபட்டார். அவரைப் பின்பற்றி அன்பர்கள் அனைவரும் பாடிப் பரவினர். சகலமும் அங்கித் தேவனிடமும் அர்ப்பணித்து ஆசி பெற்றனர்.

வெள்ளி விழாவின் இரண்டாம் நாள் காலை நிகழ்ச்சியில் அழகுற்ற தீபமும், அன்பு நிறை அர்ச்சனையும், அற்புதமான யாகமும் எல்லோர் உள்ளங்களையும் நிறைவித்தன.

**வளர்க நற்பணி! வாழ்க! வையகம்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளி விழாவில் அமுத மொழிகள்

## வேற்றுமையில் ஒற்றுமை கண்டு ஒன்றுபடுங்கள்

(சுவாமி சச்சிதானந்த யோகிராஜ் 21–1–62)

திவ்ய ஜீவன சங்கத்தின் வெள்ளி விழா மூன்று நாட்களாய் நடைபெற்று வருகிறது. பல பெரியோர்கள் சிறந்த அரும் பெரும் கருத்துக்களைக் கூறியுள்ளார்கள். கால நிலையை ஒட்டி அவர்கள் கருத்துக்களை ஞாபகப் படுத்தும் வகையில் நான் விழாவின் கடைசிப் பேச்சைப் பேச விரும்புகிறேன். எல்லா அறிவுரைகளையும் ஒன்று சேர்த்து நோக்கும் போது வேற்றுமையில் ஒற்றுமை காண்க என்ற கருத்தே தோன்றுகின்றது. அதுவே திவ்ய ஜீவன சங்கத்தின் நோக்கமாகும்.

இன்று உலகில் எத்தனையோ சங்கங்கள் இருக்கின்றன. பல சங்கங்கள் ஆத்மீகத் துறையில் ஆர்வத்துடன் உழைத்து வருகின்றன. ஒருவரே பல சங்கங்களில் அங்கத்தவராகி பணியாற்றி வருவதும் உண்டு. இந்த நிலையில் இன்னும் புதுச் சங்கங்கள் தோன்ற வேண்டுமா? ஆம். வேண்டும் என்பதே என் கொள்கை. அச் சங்கத்தால் எல்லோரும் பயன்பெற வேண்டும். அத்தகைய ஒரு சங்கம் உண்டோ எனில் உண்டு என்கிறேன். அதுவே திவ்ய ஜீவன சங்கமாகும்.

திவ்ய ஜீவனம் என்பது பொதுப் பெயர். திவ்யமான ஜீவிதம் உலகில் அனைவர்க்கும் பொதுவானதே. அத் தெய்வீக வாழ்க்கையில் சமய வேற்றுமை, மொழி வேற்றுமை, நாட்டு வேற்றுமை என்பன கிடையா. தன்னை உணர்ந்து இயற்கையோடு இணைந்து இன்புடன் வாழும் தெய்வீக வாழ்க்கை எக்காலத்தும் எல்லோருக்கும் பொதுவானது. அதற்கு வழி காட்டும் சங்கத்தில் சிறுவர், பெரியோர், ஆண்கள். பெண்கள், பகைவர், நண்பர், லோபி, கொடையாளி அனைவருமே இடம் பெறுகின்றனர். ஏன்? திருடனுக்குக் கூட திவ்ய ஜீவன சங்கத்தில் அங்கத்துவம் உண்டு. களையை நீக்கி நெல்லை வளர்க்கும் கமக்காரர் போல மக்களிடமுள்ள குறையை நீக்கி நிறைவை ஆக்குவதே திவ்ய ஜீவன சங்கத்தின் பணி. அது ஒரு சமரச சன்மார்க்க சங்கம். அங்கே சகல மதத்தவர்களும் சேர்ந்து வாழ்கின்றனர். இத்தகைய சிறந்த சங்கம் 25 வருடங்களுக்கு முன்பு ரிஷிகேசத்தில் ஸ்தாபிக்கப் பட்டது. இன்று அகில உலகத்திலும் கிளைச் சங்கங்கள் தோன்றிப் பணியாற்றுகின்றன.

மதப் பற்று உள்ளவர்கள் சிலர் திவ்ய ஜீவன சங்கத்தின் நோக்கம் என்ன? அது எந்த மதத்தைச் சேர்ந்தது? ஒரு குறிப்பிட்ட சமயமின்றி எல்லாச் சமயத்தையும் கதம்பமாய்க் கொண்டிருக்கிறதே? மத போதனை செய்யத் தோன்றிய சங்கம் மனதைக் குழப்புகின்றதே? எனச் சிந்திக்கலாம். மலையில் நாலு திசைகளிலும் நதிகள் ஊற்றெடுக்கின்றன. கங்கை என்றும், காவேரி என்றும், ஜமுனை என்றும், சரஸ்வதி என்றும் பல பெயர்களைப் பெற்றுப் பல நூறு மைல் தூரம் ஓடி வந்து சமுத்திர ராசனைச் சேர்ந்ததும் ஒன்றாகி விடுகின்றன. நதிகள் சமுத்திரத்திற் சேர்ந்த பின் அவற்றின் பெயர்கள் மறைந்து போகின்றன. எல்லாம் ஒன்றாகி ஒரே நீர் மயமாகவே காட்சி தருகின்றது; திவ்ய ஜீவன சங்கம் பெரியதோர் சமுத்திரம். அங்கு பலவேறு மதக் கொள்கையினர் வருகின்றனர். அனைவரும் அன்பெனும் சமுத்திரத்தில ஒன்று படுகின்றனர். இங்கே அவர்கள் கொள்கைகள், மதப் பெயர்கள், வெளித் தோற்றத்தில் மறைவதில்லை. ஆராய்ந்து பார்த்தால் உண்மை யுணர்ந்து வேற்றுமை அற்ற நிலையில் அனைவரும் அங்கே ஒன்றுபட்டிருப்பதைக் காணலாம்.

உலகில் உள்ள மனங்கள் பல. அவை ஒரே மாதிரியிரா. ஒன்று போன்ற இரு மனங்கள் இருப்பதில்லை. இந்த நிலையில் உலகில் வேறுபாடு இருக்கவே செய்யும். அதனால்தான் நடை, உடை, உணவு, மொழி, மதம் எல்லாமே வேற்றுமைப் பட்டுத்தான் காணப்படுகின்றன. இந்து மதமும், இஸ்லாமிய மதமும் கிறிஸ்தவ மதமும், புத்த மதமும் போதிப்பது வேறுபட்டு இருக்கலாம். சாதனை முறைகள் வேறுபட்டிருக்கலாம். ஆனால் ஆத்மீக வாழ்வின் முடிவு நிலை அனைவர்க்கும் ஒன்றே. எனவே ஆத்மனை உணர்ந்து எல்லோரும் ஒன்று படுங்கள் என்று கூறுகிறேன். பிறரிடம் இருந்து தன்னைத் தனிப் படுத்திக் கொள்வது சிறந்த இலட்சியம் ஆகாது. திவ்ய ஜீவன சங்கத்தைச் சேர்ந்த நாமும் மற்றவர்களைப் பிரிக்க முன் வரவில்லை. ஒன்றுபட வந்துள்ளோம். (ஒன்று படுத்த முன் வந்துள்ளோம் என்று கூடச் சொல்வதற்கில்லை. எல்லோரையும் ஒன்று சேர்க்க வரவில்லை. நாம் அனைவருடனும் சேர வந்துள்ளோம். காலத்துக்கும் சூழ் நிலைக்கும் ஏற்ப விட்டுக் கொடுத்து வாழ வேண்டும்

ஒன்று சேர்ந்து வாழ்வது மேலானது. உதாரணமாக

வான் முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க
மன்னன் கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க

என்ற அடிகள் எல்லோர்க்கும் பொதுவாய் அமைந்துள்ளன. கடைசி அடியாகிய 'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்' என்பது மாத்திரம் சைவ மதத்தைப் பிரித்துக் காட்டுகிறது. இந்தப் பிரிவினையை நீக்கி 'சைவ நீக்கி 'தெய்வ நீதி' என மாற்றி எல்லோர்க்கும் பொதுவாக்கித் 'தெய்வ நீதி விளங்குக உலகமெல்லாம்' என்று பாடுவதில் பிழை ஒன்றும் இல்லையே. அது எல்லோரையும் ஒன்று படுத்துகிறதல்லவா?

உள்ளத்தில் உண்மையின்றி உண்மையின்றிக் கூறும் வெறும் சொற்களாலும், சமயப் புறச் சின்னங்களாலும் பிரயோசனமில்லை. சைவர்களே இல்லாத ஜப்பானில் கொங்கொங் நாடுகளில் உள்ள மக்கள் சைவத்தை அனுஷ்டிக்கின்றனர் என்றால் ஆச்சரியப் படுவீர்கள். அங்கு நாம் சென்றிருந்த போது சைவம் என்ற மதத்தின் பெயரைச் சொல்லி அவர்களுக்குப் போதனை செய்யவில்லை. சிவ சின்னங்களை அணியும் படி கட்டாயப் படுத்தவில்லை. ஆனால் ஸ்ரீ பஞ்சாட்சரத்தைப் பக்தி சிரத்தையுடன் ஜெபித்து வருவோர் இன்று அங்கு பலர். சிவராத்திரியைச் சிறப்பாக அனுட்டிக்கின்றனர். நாங்கள் நித்திரையை கட்டுப் படுத்துவதனால் உண்டாகும் நன்மையை விளக்கினோம். விழித்திருக்கும்போது தெய்வீக சிந்தனையால் உண்டாகும் சிறப்பை உணர்த்தினோம். கொங்கொங் மக்கள் எமது கருத்தை ஏற்றார்கள். ஆர்வமுடன் சிவ ராத்திரியில் கண் விழித்தார்கள். அதனால் ஆனந்த மடைந்தார்கள். அங்கே சிவராத்திரியென்னும் பெயரை வைத்துக் கொண்டு சினிமாப் பார்க்கும் ராத்திரியோ சூதாடும் ராத்திரியோ இருக்கவில்லை.

ஜப்பானிய மக்கள் சமய ஆசாரங்களை என்ன வென்றே அறியார்கள். ஆனால் அங்கு சத்தியதேவன் நடமாடக் கண்டான். பெரும் பணம் படைத்த வீடுகளும், கடைகளும் கடதாசிகளால் கட்டப்பட்டிருக்கின்றன. அந்தக் கடுதாசிச் சுவர்களை உடைப்பதற்கு ஒரு விரல் போதுமானது. ஆனால் அங்கு திருடரில்லை. அதனால்தான் கொங்கிறீட் கட்டிடங்களும் இல்லை. டொகியோவில் சுதந்திர பஸ் ஓடுகின்றது. சாரதி பஸ்சை ஓட்டிச் செல்வான். பஸ்சில் ஏறும் பிரயாணி அங்கு ஒரு பக்கம் தொங்க விடப்பட்டிருக்கும் பட்டியலைப் பார்ப்பான். தான் போகும் தூரத்திற்குரிய கட்டணத்தை அங்குள்ள திறந்த பெட்டியில் போட்டு விட்டு ஆசனத்தில் அமர்ந்து விடுவான். சாரதி ஒவ்வோர் சந்தியிலும் பஸ்சை நிறுத்திச் செல்வான். இறங்க வேண்டிய இடத்தில் பிரயாணி இறங்கிக் கொள்வான். அங்கே பிரயாணச் சீட்டுக் கொடுப்போரும் இல்லை. பணம் சேர்ப்போரும் இல்லை. இத்தனை நீதி நேர்மையும் நிலவுவதற்குக் காரணம் அவர்களின் தேசப்பற்றே. ஜப்பானியர் தம் தேசத்தைத் தாயெனப் போற்றுகின்றனர். மக்களது நாட்டுப் பற்று உலகப் பற்றாக விரிந்திருக்குமாயின் அதுவே தெய்வீக வாழ்க்கையாகும். நாட்டுப் பற்று உலகப் பற்றாக வேண்டும் என்பதே விநோபாஜியின் நோக்கமாகும். இன்று பலருக்கு வீட்டுப் பற்றே இல்லை. மனைவி மக்களிடையே போராட்டம் உற்றார் உறவினரிடையே சண்டைகள்; இவை ஒழிந்து அன்பு வீட்டுள் அரும்பி, அது விரிந்து நாட்டில் மலர்ந்து நன்கு பொலிந்து உலகெலாம் மணம் வீச வேண்டும். அப்பொழுதாவது நாடு நிற மத, மொழி வேற்றுமைகளின் மத்தியில் ஒற்றுமை காணலாம்.

இறைவன் படைத்த தோற்றத்தில் தந்த தொழிலில், மொழியில் தேசத்தில் எமக்கிடையே வேற்றுமை யிருக்கலாம். ஆனால் நாம் காணும் ஆத்மீக ஒளியில் அனைவரும் ஒன்றே. ஏன் ஒலியிற் கூட நாம் ஒன்று பட்டவர்களே. பல மதத்தவர் கூறும் ஓம் என்பதும், ஆமென் என்பதும், ஆமீன் என்பதும், ஒன்று பட்ட ஒலிகள் தானே. 'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே' என்பது அருட் பாடல். எல்லாம் அவனாகியபோது வேற்றுமை யேது? எனவே, எல்லோரும் வேற்றுமையில் ஒற்றுமை கண்டு ஒன்று படுவோமாக!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

---

## விழித்தெழு!
## இலட்சியத்தை அடை!

நீ இந்த மனித சரீரம் எடுத்ததின் பயன் நோக்கம் இவற்றை மனதில் வைத்துக்கொள். மனதை விஷயங்களில் செல்லவிடாதே. அதற்கு அதிக சுதந்திரமும் கொடாதே. விருத்திகள் அல்லது எண்ணங்களின் போக்கைக் கவனி. அவைகளை விரட்டு. கோட்டையினுள் எதிரி புகுந்ததும் அவர்களை ஒவ்வொருவராகத் தன் வாளினால் நமனுலகுக்கனுப்பும் ஒரு போர் வீரனைப் போல், நீயும் மனதிலிருந்து விருத்திகள் வெளிக் கிளம்பும் பொழுதெல்லாம் விவேகம் என்னும் தண்டத்தினால் அடித்து அதை அடக்கிய வண்ணமாகவே இரு. எண்ணங்களை அறவே ஒழி.

- சிவானந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் யார்?

(அன்பர் பூபதி தாசர்)

இறைவன் உயிர்ப்புத் தந்துள்ளான்! அதனல் நாம் பேசுகிறேம். உள்ளிருந்து பேசுவது எது? அதனை உணர வேண்டும். குயில் காக்கைக் கூட்டில் பிறக்கிறது. உருவம் காக்கை போலவே இருக்கிறது. அது சுயமான குரல் எடுத்துக் கூவும் வரை காக்கைக் கூட்டத்துள் வசிக்கிறது. என்றாலும் காக்கைக் குயில் காக்கையாவதில்லையே! இது போன்றதுதான் மனித வாழ்வும். மனித உடம்புள் இருக்கும் 'நாம் யார்' என்று சிந்திக்க வேண்டும். 'மனிதனை மண்ணினல் படைத்தோம், உயிரை என்னிலிருந்து ஊதினேன்'' என்றான் ஆண்டவன்.

நாம் யார்? அன்பின் வழியது உயிர்நிலை என்றார் திருவள்ளுவர். அந்த அன்பின் வழியாய் விளங்கும் ஒளியே நாம். சர்வமும் சோதி மயமே; நாம் வெறும் இரத்தம் தோல் தசைகளாலான உடம்பல்ல. ஒளியிலிருந்து வந்தோம். பேச்சு, மூச்சு, பார்வை எல்லாம் ஒளி மயம். 'ஒளி படைத்த கண்ணினய் வா வா' என்றார் பாரதியார். நாம் யார் என்றுணர அகக் கண் ஒளி பெற்று விட்டால் புறத்திலேயும் அனைத்தும் ஒளி மயம் என்பதைக் கண்டு களிப்போம். அந்தப் பேரொளியை மனிதன் ஏன் காணமல் இருக்கிறான். போகமாகிய மாயை இருக்கும் போது ஒளித் தன்மையை எவ்வாறு அறிய முடியும். மேகத்தைப் பனிப்புகை மறைப்பது போல எமது இயல்பான பிரகாசத்தைப் போக மாயை மறைக்கிறது.

மாயை நீங்கி விட்டால், மனிதன் பெறுவது ஆனந்தம், அதுவே மனிதனின் சுபாவம். நாம் ஏன் கூடியிருக்கிறேம்? ஏன் கூடி வாழ்கிறேம். என்று சிந்தித்தால், ஆனந்தம் பெறுவதற்கு என்பது தெளிவாகும். அனந்தத்தை வேண்டுவதே அனைத்துயிரினதும் வாழ்வின் நோக்கம். நாம் எப்படிப் பிறந்தோம்? எமது பிறப்புக் கூட ஆனந்தத்தில்தான் தோன்றியது. ஆண் பெண் நின்ற ஆனந்தத்தில் தோன்றிய நாம் ஆனந்தமாய் வாழ்ந்து நித்திய ஆனந்தத்தைப் பெற வேண்டாமா? ஆனந்த வாழ்வு அன்புள்ளத்தில் தான் அரும்புகின்றது. அன்பு வாழ்வு இயற்கையான இன்ப வாழ்வு. இஸ்லாம் என்பது என்ன? இயற்கையோடு இணைந்த இன்ப வாழ்வேயாம். முகமது ஏன் இங்கு அனுப்பப் பட்டார்? என்று கேட்டால் அகில அண்ட கோளஉயிர்களுக்கும் அன்பு போதிக்க வந்தார் என்கிறது இஸ்லாம்; அன்பே சிவம் என்பது இந்து மதத்தின் தத்துவம் அன்பே கிறிஸ்தவ மதத்தின் அடிப்படையுமாகும். எல்லா மதமும் போதிப்பது அன்பு மார்க்கமே. ஆனல் இதனை மறந்து விட்டோம். 'அங்கிங் கெனுதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி' என்கிறார் தாயுமானவர். அன்பர் பணிசெய்ய என்னை ஆளாக்கி விட்டு விட்டால் இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே' என்று பரிவுடன் வேண்டுகிறார். 'என்னை ஆளாக்கிச் சுதந்திரமாய் விட்டு விடு. அதுவே இன்ப நிலை தரும்' என்கிறார். இறைவனுக்காக வாழ்பவன் இறைவனுக்கே உரியவனுகிறான். அவனே 'நான் யார்' என விசாரித்து அதை அறிந்து அவனுக்காக வாழ்பவன்.

மக்கள் ஓரிடத்திலிருந்து இன்னொரிடத்திற்குப் பஸ்ஸில் ஏறிச் செல்கின்றனர். ஒரு குறித்த இடத்தைச் சேரமுன் பஸ் பழுது பட்டுப் போகவும் கூடும் அதற்காக உள்ளிருக்கும் மனிதன் தனது பயணத்தை அந்த இடத்திலேயே நிறுத்தி விடுகிறானு? இல்லை' வேறு வாகனத்தைத் தேடி நோக்கத்தை முடித்துக் கொள்கிறான். நாம் செல்லுகின்ற பொல்லாப் புழுமலி நோய்ப் புன்குரம்பை ஆகிய இந்த பஸ்ஸும் ஒரு நாளைக்குத் திடீரென இயங்காது நின்று விடும். அப்போது எண்ணிப் பார். நான் யார் என்று. நான் தேகியல்ல, மனசல்ல. அவற்றுக் கெல்லாம் அப்பாற்பட்ட ஒன்று என்பது புலனுகும்.

இவ்விதம் தன்னை உணர்ந்து விட்டால் நாட்டில் மதச் சண்டை இனச் சண்டை எல்லாம் மறைந்து போகும். நாம் எதில் தோன்றினேம்? அன்பில் தோன்றினேம். அதில் ஒன்று சேர்வோம். அன்பு ஒன்றே எல்லோர்க்கும் பொது. எலலோரும் ஒரே நேரத்தில் ஒரே மதமாக முடியாது. ஆனல் எல்லோரும் ஒரு நேரத்தில் அன்பர்களாகலாம். அன்பு மதத்தில் எல்லாரும் ஒன்றே. அதற்குக் குறிப்பான உடையில்லை. உணவில்லை, அடையாளங்களில்லை. உணவு முறை மனிதன் வசிக்கும் இடத்தைப் பொறுத்ததேயன்றி, மதத்தைப் பொறுததது அன்று. அன்பு வாழ்விலே அஹிம்சை இணைந்து நிற்கிறது.

இஸ்லாம் மதத்தில் இறைச்சி சாப்பிடு என்று சொல்லப்படவில்லை ஒருவன் ஒருணவும் அற்ற நேரம் அவனுற் பசியைப் பொறுக்க முடியாதிருப்பின் மாமிசம் தான் சாப்பிட வேண்டி ஏற்பட்டால் இறைவனுக்கு அர்ப்பணித்து உண்ணலாம் என்கிறது இஸ்லாம் மதம். ஒரு உயிரை உணவின் பொருட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதேவரைப் பற்றி எம் உளத்தே பதிந்தவை.

( சி. கனகரத்தினம் — வழக்கறிஞர் )

கடந்த 1960ம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் யோகிராஜ் ஸ்ரீ சுவாமி சச்சிதானந்தா அவர்களது பெருந்துணையுடன் ரிஷிகேசம் சென்று ஆண்டு ஒருவார காலம் சுவாமி சிவானந்தஜியின் பேரரும் வாழ்வினைக் கண்டு களிக்கும் பேறு பெற்ருேம். வாழ்வில் மறக்கவியலாத இவ்வொரு வாரகாலமும் ஞானவெள்ளத்திலே மூழ்கித் திளைத்தோம். சுவாமி அவர்களது பரிசுத்த ஞானத்திலே ஆசிரமம் முழுக்க உண்மை ஒளிகான்றது, அன்பின் செயல் பரிணமித்தது, சுத்தத்தின் சோதி சுழன்றது. அமைதி சாந்தம் திகழ்ந்தது, பிரம்மத்தின் ஒளியாக ஆத்மீக வாழ்வின் சகல அமிசங்களையும் கரை கடந்த சோதியாகக் குருதேவர் விளங்கிஞர்.

தமது அன்புச் சீடர்களுக்குக் குருதேவர் தானம் அளிப்பார். சீடர்களோ கடவுள் சமூகத்திலே தாம் இருப்பதாக உய்த்துணருவர். அவரால் கையாளப்படும் எச் செயலும் மனத்தாலோ, வாயாலோ அல்லது உடலாலோ செய்யப்படும் எதுவும் ஒரு பரமஹம்சராலோ பூரணத்துவம் பெற்ற யோகியாலேயோ செய்யப்படவல்லது என்பதை யான் அவதானித்தேன். குருதேவர் தமது 74வது பராயத்திலும் சுகதேகியாக இன்முகத்தோடு, புன்சிரிப்புக் காட்டி எந்நேரமும் எல்லோருடனும் அளவளாவும் தகையைக்கண்டு இன்புற்றேன். அவரைத் தரிசனம் செய்ய வந்தோர் எல்லோருடனும் ஒரே முறையால் அன்பொழுக நடந்ததைக் கண்டேன். சமார்த்த யோகி இவர் என்று எம் உளத்தே ஒரு ஒளி பதிந்தது.

இவரது முகத்திலே ஒரு அன்புக் கவர்ச்சி அதனுலேயே உலகமக்கள் இவர்பால் பற்றுடன் இழுபடுவதைக் கண்டேன். மனிதகுல சேவையை சற்றும் இளைப்போ களைப்போ அசதியோ அசட்டையோ இன்றித் தொடர்ந்து செய்து வருகின்ருர், ஆத்மீக வழியில் இப் பிறப்பில் மட்டுமன்றி முன்னைய பிறப்புகளிலும் இவர் தமதுவாழ்வை வழிநடாத்தி வந்துளாரென்றே எம் உள்ளம் கொண்டது. தமது முன்னைய பிறப்பு வாழ் நாட்களில் ஆற்றிய நற்பணிகளுக்குரிய அறுவடையினை இன்று இவர் அனுபவிக்கின்ருர் என்றே எம் உள்ளம் கூறியது.

விரிந்த மனப்பான்மையும் தாராள மனதும், சமன் தூக்கியாராயும் மனநிலைமையும் எல்லாவற்றுக்கும் ஈடு கொடுக்கும் திறனும் இவர்

---

முன்பக்கத் தொடர்ச்சி

கொலை செய்ய நேரிட்டால் சூரான் வேதத்திலுள்ளபடி மந்திரங்களைச் சொல்லி இறைவனை வணங்கிக் கொலை செய் என்று சொல்லப் பட்டிருப்பதை சிந்திக்கும்போது கொலையே செய்ய வேண்டாம் என்பது புலப்படுகிறதல்லவா? வேடர் குலத்திற் பிறந்த கண்ணப்பர் இறைவனுக்கே இறைச்சியை வைத்தார். நாம் ஏன் சாப்பிடக் கூடாது? என்று கேட்பவர்களுண்டு. நியாயமான கேள்விதான். அவர்களுக்கும் கண்ணப்பரைப் போல் கண்ணை இடந்து அப்பக் கூடிய தீவிரமான அன்பு உண்டா என்று நாம் கேட்கிருேம்.

'உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை' என்ற திடமான அன்பு நிலை வேண்டும் அப்போது மரணமேயில்லை. கால தூதுவன் மார்க்டயருக்குப் பாசம் வீச ஓடிச் சென்ருன். மார்க்கண்டேயர் அழிவற்ற பிறப்பிறப்பற்றவன் காலைச் சிக்கெனப் பிடித்தான். அவனைக் கண்டவன் பல்லுக் காட்டிப் பயந்து ஓட்டம் பிடித்தனன். மார்க்கண்டேயரைப் போல் இறைவனை அன்பினுல் சிக்கெனப் பிடித்து 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' என்று உறுதி கொண்டு போக மாயைகள் அ-சைவம் அல்லோம் என்று வாழ வேண்டும். அவ் வாழ்வே சைவவாழ்வு.

பற்றற்ற ஒருவனைப் பிடி. அங்கேதான் ஆக்கமும் உண்டு. பற்றற்ருன் தாளினைப் பற்றி வாழ மனம் அழியும். ஆசை அழியும். பாசம் அழியும். நான் யார் என்ற தெளிவுண்டாகும். மரணமிலாப் பெருவாழ்வு வரும்.

மன மற்றவர்களுக்கு மரணமில்லை
ஆசை அற்றவர்களுக்கு மரணமில்லை
பாசம் அற்றவர்க்கு மரணமில்லை

என்பது சூரான் வாக்கியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசம் இலங்கக்கண்டேன், இவரது போதனைகள் சாதாரணமானவை, ஆனால் நேரடியாக உண்மை உணர்த்துபவை. ''சேவை, அன்பு, நடுவு நிலை, உண்மையுணர்'' ஆகிய நான்கு வழியினை அடிப்படையாகக் கொண்டு நான்கு யோகங்களையும் அடக்கி வாழ்வதற்கு வழி காட்டுபவை.

இந்த முதிர்ந்த வயதிலும் அவசியமற்ற போதிலும் சாதனை மூலம் கிரமமாகத் தமது செயல்களை ஆற்றி வருகின்றார். இப் படிப்பினை மிகவும் கணிக்கத்தக்கதாகும். இவரது வாழ்வே உதாரணம். ஆசிரம வாசிகளுக்கும் வரும் விருந்தினருக்கும் நேரடியாக அன்னவர் காட்டும் அன்பும் பரிவும் அரவணைப்பும் ஆழ்ந்த உணர்வைத் தொடுபவை. இங்கு நடக்கும் செயல்கள் யாவும் இவரது பரிசுத்த நோக்கை அபிவிருத்தி செய்பவைகளாகவே இருக்கின்றன.

ஆத்மீக மலர்ச்சியும் உலக சமாதானமும் நிலவ வேண்டி நின்று திவ்ய ஜீவன சங்கத்தின் மூலம் குருதேவர் உலகுக்கு மிகம் பெரும் சேவை புரிகின்றார். நெருக்கடிகளும் ஆபத்துகளும் மாற்றங்களும் நடந்து கொண்டிருக்கும் புரட்சியுலகில் நாம் வாழ்கின்றோம். சுவாமி அவர்களது போதனைகளை நாம் பின்பற்றி வாழ்ந்தோமானால் உலகிலே சகோதரத்துவம், நல்லெண்ணம், சமூக நலம் ஆயின தளப்பமின்றி நிலவும் இவரதுபோதனைகள் ஒற்றுமைச் சக்தியை யுடையன.

ஆசிரமத்திலே நாங்கள் தங்கியிருந்த காலையில் தினமும் எங்களது சுகநலங்களையும் தேவைகளையும் நேரில் விசாரித்தார். எங்கள் மீது அவர் பார்வை படும் போதெல்லாம் மகிழ்ச்சியால் நாம் திளைத்தோம். நட்புரிமைப் பேச்சும் அன்புக்குரலும் எங்களை ஆழ்ந்த உணர்ச்சியில் ஈடுபடுத்தின. உண்மையைப் பற்றியும் அன்பைப் பற்றியும் அன்னார் பேசிய போதெல்லாம் கேட்டு அளவிலா மகிழ்ச்சியடைந்தோம். அந்த ஆசிரமம் முழுமையும் தெய்வ மணம் கமழ்ந்தது. ஈண்டு உண்மையை நாடினோரும் உலகாயதத்தை நம்பினோரும் எல்லையிலா உபசாரத்தில் கட்டுண்டு அன்பு வழி சமாதானத்தையும் அமைதியையும் பெற்றனர்.

பற்றுத் துறந்து திண்மையுரம் பெற்று உலக மக்களுக்காக ஆத்மீக வாழ்வை வழி வகுக்க முடிவில்லா உழைப்பையாற்றும் குரு தேவரது வாழ்வை ஈண்டு கண்டோம்.

வனப்பு மிகுந்த இடம் ரிஷிகேசம். சிறு சிறு குன்றுகளும் பச்சைப்பசேலென்ற பற்றைக் காடுகளும், அரைஒட்டியாணம் பூண்டதுபோல வளைந்துபாயும் கங்கா நதியும் இந்தஇடத்துக்கு அழகையூட்டின. கங்கா நதி தீரத்திலே ஆசிரமம் அமைந்துளது. வந்த முதல்நாளே சுவாமியவர்களைச் சந்தித்தோம். தமது காரியாலயத்திலே புத்தகங்களை விநியோகிப்பதில் சுவாமியவர்கள் ஈடுபட்டிருந்தார்கள். கங்கையில் நீராடி, உணவுண்டு, சிறிது நேரம் ஓய்வெடுத்தோம். ஆசிரம வாழ்வு நிருவாகம் முழுமையும் சாதுக்களால் திறம்பட அமைக்கப்பட்டு நடாத்தப்பட்டு வந்தன. எந்நேரமும் பல்வேறு பொதுச் சேவைத்துறைகள் மூலமும் ஆசிரமம் சுறுசுறுப்பாக இயங்கி வந்தது. ஆண்டு விருந்தினருக்காக விசேட ஒழுங்குகள், இடவசதிகள் செய்யப்பட்டிருந்தன. மாலையில் வழமையான பிரார்த்தனைக் கூட்டங்களுக்கு நாம்சென்றோம். எல்லா விருந்தினரும் இதில் கலந்து கொண்டனர். அந்நிய நாட்டினரும் பலர்கூடியிருந்தனர். சிலர் சந்நியாசம் வாங்கியவர்களாக இருந்தனர். சுவாமிகள் கீர்த்தனமும் பாடல்களும் பாடினார். அவரது குரல் மதுரமாக இனித்தது. அவர் முகம் எப்போதும் போல ஒளியுடன் பிரகாசித்தது.

ஆசிரமத்தில் எனது வாழ்வு மிகச் சொற்ப நாட்களே. ''மீண்டும் வாருங்கள், வந்து கூடுதலாகத் தங்குங்கள்'' என அன்புக் கட்டளையிட்டார் குருதேவர். படிப்பதற்கு நிறைய நூல்களும் தந்தார்கள். ஈழத்திற்கு நான் திரும்பி விட்ட போதிலும் எனது உளமானது ஆசிரமத்திலே சுழலுகின்றது. ஆசிரமத்தில் தங்கிய அந்த நாட்கள் என் வாழ்விலே மங்காத ஒளியூட்டும் பொன்னாட்களாகும். என் வாழ்வில் அமைதியையும் ஆனந்தத்தையும் அடைந்த புண்ணிய இடம் அதுவே.

அச்சுப் பதிப்பு:
ஆதமஜோதி அச்சகம்,
நிர். 15, சொய்சாக்கலை - நாவலப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Balm for




COLDS, CATARRAH, HEADACHES
SKIN IRRITATION, MINOR BURNS, CUTS AND BRUISES.

**MENTHOLATUM**
REG'D TRADE MARK

Sole Distributors: Phone: 3672

**THAMBYPILLAI BROTHERS,**
53, MAIN STREET, COLOMBO-11.

---

## M. SINNADURAI
74, Hatton Road,
GINIGATHENA.

எங்களிடம் யாழ்ப்பாணம்
திறம் புகையிலை, சுருட்டு
மற்றும்
சாய்ப்புச் சாமான்களும்,
பத்திரிகைகளும்
சகாயமான விலைக்குப்
பெற்றுக்கொள்ளலாம்.

## மு. சின்னத்துரை,
74, ஹற்றன் ரோட், கினிகத்தேனை.

---

## புதுமாதிரியான டிசைன்களில்
### பவுண் தங்க நகைகள்
உத்தரவாதத்துடன் சகாயமாய்
எங்களிடம் கிடைக்கும்.
*
### ஒருமுறை விஜயம் செய்யுங்கள்
*

பி. ஆர். எஸ்.
## செல்லமுத்து பிள்ளை
அன் கோ.
நிர் 5, நாவலப்பிட்டி ரோட்,
கினிகத்தேனை.

---

## ஆத்மஜோதி நிலைய வெளியீடுகள்.

| | | |
|---|---|---|
| வழி பாடு | | -25 |
| திருமுறைக் காட்சி | (நா. முத்தையா) | 1-50 |
| கேதார் பத்திரி யாத்திரை | ,, | -75 |
| ஸ்ரீ கதிரைமணி மாலை | (பரமஹம்சதாசன்) | -50 |
| அறிவுரைக் கதைகள் | (சுவாமி சிவானந்தர்) | -65 |
| ராதையின் காதல் | ,, | 1-00 |
| இளங்கோவின் கனவு | (செ. நடராசன்) | 2-25 |
| ஆத்மநாதம் | (சுத்தானந்த பாரதியார்) | அச்சில் |

# அச்சகங்கள்

★ தாள்கள்
★ அட்டைகள்
★ மைகள்
★ உறைகள்

மற்றும் தேவைகளைப் பெறுமிடம்:

## RAVILUX COMPANY

63, Keyzer Street,
COLOMBO-11.

Telephone: 2269 Grams: "RAVILUX"

ஜெர்மனியில் உற்பத்தி செய்யப்பட்ட

## தமிழ் டைப்ரைட்டர்

எரிக்கா போட்டபிள் டைப்ரைட்டர்

இந்த கனம் குறைந்த மெஷீனில் நடுத்தர டைப்ரைட்டர்களிலிருக்கும் சகல அம்சங்களும் உள்ளது. கந்தோரில் அல்லது வீட்டில் பாவிப்பது போன்று பிரயாணத்தின் போதும் அதே பிரயோசனமானது.

ரூ. 460

நேரில் இயக்கிக் காட்ட வருக
அல்லது விளக்கப் பிரசுரத்திற்கு எழுதுக.

## ஆவ்ரா லிமிட்டெட்.

அலுவலக சாதனப்பகுதி

செட்டியார் தெரு, கொழும்பு.

போன்: 7211 & 7212


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோஜாப் பூ மார்க்

# பனியகாட் சாரங்கள்

சாயத்திற்கு உத்தரவாதமானவை

எங்கும் கிடைக்கும்

# வேலவர் பனியகாட் கொம்பனி

90, 2ம் குறுக்குத் தெரு - - கொழும்பு



## நீங்கள் தேர்ந்தெடுப்பதற்குச் சிறந்தவை
## ஆறுதல் மலிந்தவை

கீழ்க்காணும் உயர்தரமான துணிமணிகள்

| | | |
|---|---|---|
| சேலைகள் | அச்சடித்த பளப்பளப்பான பருத்தியாடைகள் | சேட் துணிகள் |
| பட்டுக்கள் | | சேட்டுக்கள் |
| ஜோர்ஜெட்டுக்கள் | ஆடை நெசவுமானப் பொருள் | தட்டுமுட்டுப் பொருள்கள் |
| சாற்றின்கள் | பெண்கள் கைப் பைகள் | வீட்டுப்பாவிப்புக்கான துணிகள் |
| சோளிகள் | உடுப்புத் துணிகள் | வேட்டி சால்வைகள் |

முதலியவற்றைப் பெறுமிடம்

# பிரீட் டோஸ்

148, மெயின் வீதி, கொழும்பு - 11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Use . . .

# "ELEPHANT"

## ASBESTOS-CEMENT ROOFING SHEETS

Saves Labour

Saves Timber

Lasts a Life Time

Available from all Dealers

---

# "DALMIA"

Brand

## Best Portland Cement

conforming to BSS 12/1958

Available at competitive rates from

IMMEDIATE STOCK

## Chettinad Corporation Private Limited

116/118, Keyzer Street,

COLOMBO.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE VANGUARD

**transacts**

**Motor: Workmen's Compensation Insurances.**

PROMPT SETTLEMENT OF CLAIMS
COMPETITIVE RATES

K. KRISHNASAMY

*CHIEF AGENT.*

## VANGUARD INSURANCE CO., LTD.

MUNSOOR BLDG., MAIN STREET,

COLOMBO.

Phone: 5054 Grams: VANGUARD


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீடிகளில் புகழ்பெற்றது

ராஜா பீடி ஸ்பெஷல்

சிந்தனைக்குரியது

ராஜா பீடி ஸ்பெஷல்

எல்லோரும் விரும்புவது

ராஜா பீடி ஸ்பெஷல்

# ராஜா பீடி கம்பெனி,

நிர் 399, பிரின்ஸ்ஒவ் வேல்ஸ் அவனியு,

## கொழும்பு

டெலிபோன்: 2739.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் செலவு செய்யும் பணத்திற்கு பெறுமதியான பிடவைகள் வாங்கக்கூடிய ஒரே இடம்

## ரஞ்சனு ஸ்டோர்ஸ் தான்.

ஜூனியர் மணிப்புரியில்:-

மல்டிசெக் டிசைன்கள், ஸ்டிரைப் டிசைன்கள், உடல் கோல்ட் ஒர்க் டிசைன்கள் ஜரிகைகுஞ்சத்துடனும்

சாரிகளுக்கேற்ற

பட்டர் நைலான், பிளேன் நைலக்ஸ், பிரிண்டெட் பெதரட் நைலான், ஸ்விஸ் எம்ராயிடரி வாயில் கட்டாவ் வாயில்களும்

கவுன் பிடவைகள்:–
பர்கூசன் இளேஸ் காட்டன், பிரிண்டெட் டுபெரல்கோ, ரிவரினு, ரோபியா வாயில்களும்

சூட்டிங்:-
டெக்கரான், இங்கிலீஷ் டகூர், இந்தியன் டகூர் ஹாங்ஹாங் டிரில்களும்

ஷேட்டிங்:–
இங்கிலீஷ் 2 x 2 ரஞ்சனு பப்ளின், சீப்பியா டிரிக்கோலின், லான்சில், பேன்சி புஷ் ஷர்ட்டிங்களும் கிடைக்கும்.

# ரஞ்சனு ஸ்டோர்ஸ்

52, பேங்ஷால் வீதி கொழும்பு.

போன்: 6551.



## உங்களின் திருப்தியே எங்களின் நிறைவு

கடித்தொழிலுக்கா?
கட்டிடங்களுக்கா?
நீர்வினியோகத்திற்கா?
மின்சார இணைப்பிற்கா?
வெள்ளையடிப்பிற்கா?

அத்தனைக்கும் வேண்டிய நம்பிக்கைக்கு உகந்த பொருட்களை அளிப்பதே எமது குறிக்கோள்.

# எஸ்ரேட் சப்ளைஸ் கோப்பரேசன் லிமிரெட்.

(நம்பிக்கைக்குப் பாத்திரமான இரும்புப் பொருட்களுக்கு மலைநாட்டில் உள்ள ஒரே இடம்)

**கண்டி.**

போன்: 448 தந்தி: இஸ்கோர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் உல்லாசமாக புகைப்பதற்கு இலங்கையின்
எப்பாகத்திலும் வாங்கக் கூடியது

## 786 கல்கி பீடிகளே

பாவனையாளரின் நலனை கருதி திறம் புகையிலை இலைகளை கொண்டு, கைதேர்ந்த தொழிலாளர்கள் தயாரித்தவை

## 786 கல்கி பீடிகள்

ஊக்கம் பெற, உணர்ச்சி பெற எல்லோரும் பாவியுங்கள்

# 786 கல்கி பீடிகளை

— தயாரிப்பாளர்களும், உரிமையாளர்களும் —

**சி. சின்னத்துரை அன் பிரதர்.,**

*44, 3ம் குறுக்குத் தெரு,*
கொழும்பு—11,

*தொழிற்சாலை:- 118/21. ஆதிருப்பள்ளி வீதி,*
கொழும்பு.

# விலாசினி

## என்றால் என்ன?

அதுதான் நம்பிக்கைக்கும் உத்திரவாதத்திற்கும், உங்களது தேவையான பிடவை தினுசுகளும், சாரி வகைகளும் மற்றும் ஆடவருக்கும் மகளிருக்கும்

ஏற்ற இடம்

# விலாசினி அன் கோ,

148, கெய்சர் வீதி கொழும்பு.

தொலைபேசி: 7196.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீடி புகைப்போருக்கு ஒரு அரிய வாய்ப்பு!

# யானை பீடி ஸ்பெஷல்




குணம், மணம், நிறைந்தது
ஸ்பெஷல் யானை பீடி
ஒன்றே

இலங்கையில் தரம் குறை
யாமல் தயாரிக்கப்படுவதும்

தனக்கென ஒரு தனி இடத்தை வகுத்துக் கொண்டதும்

*ஸ்பெஷல் யானை பீடி ஒன்றே*

எல்லோரும் விரும்பிப் புகைப்பதும்

எங்கும் சுலபமாகக் கிடைக்கக் கூடியதும்

ஸ்பெஷல் யானை பீடி ஒன்றே

உள்நாட்டுக்கைத் தொழிலுக்கு ஊக்கமும் ஆதரவும் அளியுங்கள்.

*தயாரிப்பாளரும், விநியோகஸ்தர்களும்;*

# யானை பீடி கம்பெனி,

62, மெசஞ்சர் வீதி, கொழும்பு.

தொலைபேசி: 7651.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. வே. சிவக்கொழுந்து

அவர்களின்

## 30 வருடச் சேவை

## 1931 - 1961

ஆசிரியர் உரிய முறையில்
பாடங்களைப் பயிற்ற

மாணவர் சுலபமாய்ப்
பாடங்களைப் பயில
உதவுவன

## திரு. வே. சிவக்கொழுந்து

பிரசுரங்களாகும்
நூல்களைப் பயிற்றும் ஆசிரியரும்
நூல்களைப் பயிலும் மாணவரும்
கடந்த 30 வருடங்களாக

**ஏமாற்றமடையவில்லை. இனியும் அடையப்போவதில்லை.**

''சென்ற ஆண்டு எங்கள் பாடசாலையில் நீங்கள் குறிப்பிட்ட பாடத் திட்டத்தின்படி ஒழுங்கான முறையில் உங்கள் பிரசுரங்களையே ஐந்தாம் வகுப்பில் உபயோகித்து வந்தேன். பரீட்சைக்கு 6 பேரை விட்டோம். அவர்களில் நால்வர் A. பிரிவிலும், ஒருவர் B. பிரிவிலும், ஒருவர் C. பிரிவிலும் சித்தி எய்தினர், இம்முடிவு யாழ்ப்பாண மாவட்டத்திலே ஒரு திறமான போற்றக்கூடியதொன்றாகும் என்று நினைக்கிறோம். இம்முடிபின் பயனாக ஆரம்ப பாடசாலையாக இருந்த எங்கள் பாடசாலை கனிஸ்ட பாடசாலையாக உயர்த்தப்பட்டிருக்கிறது. வணக்கம்.''

—சி. துரைராசா
ஆசிரியன்
ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை
வரணி.

*10-1-62.*

---

*பிரசுரம்:*

# வடலங்கா புத்தகசாலை

**பருத்தித்துறை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




SOLE AGENTS:

**MAHADAVANS LTD.,**

MAHARAJA BUILDINGS,

**COLOMBO.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org